72/23

# திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

158
437
08

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்

# திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை
வெள்ளிவிழா நினைவுச் சொற்பொழிவுகள்
(1973—1974)

'அருங்கலைக்கோன்', பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்
M. A., B. Sc., L. T., Ph. D.,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்,
திருப்பதி.

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு : ஜூலை 1975
உரிமைச் செறிவு

© டாக்டர் ந. சுப்புரெட்டியார்.

விலை : 12-00

THIRUVENKATAMUM
THAMIZH ILAKKIYAMUM

---

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600014.

தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்
52ஆவது பிறந்தநாள் விழாவின் நினைவாக

## அன்புப் படையல்

*பொற்புறு தமிழ்த்தாய் மலரடி பிணித்த*
*புல்லிய விலங்கினைத் தகர்த்து*
*நற்புகழ்த் தமிழர் இதயமாம் அணையில்*
*நாவலர் போற்றிட அமர்த்திச்*
*சிற்பவண் குறளாம் ஆணையெப் புறத்தும்*
*திகழ்ந்திடத் தமிழ்ப்பணி புரியும்*
*அற்புதக் கருணா நிதியெனும் தலைவர்*
*அன்பினுக் குரியதிந் நூலே.*

தாமரைச் செல்வர்
நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்
(துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்)

# அணிந்துரை

சென்னைப் பல்கலைக் கழகம் மூத்த இந்தியப் பல்கலைக் கழகங்கள் மூன்றினில் ஒன்று. அது நூற்றுப் பதினெட்டு வயதானது. அதன் நீண்ட வரலாற்றில் பெற்ற அறக் கட்டளைகள் பலப்பல. அவற்றுள் ஒன்று சொல்லின் செல்வர் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா அறக்கட்டளையாகும். அக்கட்டளையின் சார்பில் பல நல்லறிஞர்கள் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றி யுள்ளனர்.

அம் மரபினை யொட்டி, திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்கள் 1973-74 ஆம் ஆண்டிற்கான மூன்று சொற்பொழிவுகளை ஆற்றினர்.

டாக்டர் ந. சுப்புரெட்டியார் முறையாகத் தமிழைக் கற்றுத் தேறிய அறிஞர். ஆழ்ந்த புலமையும் கட்டுரைத் திறனும் சொல்லாற்றலும் மிக்கவர்.

'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' என்னும் தலைப்பில் டாக்டர் ரெட்டியார் ஆற்றிய சொற்பொழிவுகள், நம்மைச்

சங்ககாலத்திற்கு அழைத்துச் செல்கின்றன; இடைக்காலத்திற்கு இட்டு வருகின்றன; பிற்காலத்திற்கும் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

விரிந்த தமிழ் இலக்கியத்தின் பல்வேறு இடங்களை அறிமுகப்படுத்தும் இச்சொற்பொழிவுகள் தமிழ்ப் பற்றுளார்களுக்குத் தித்திக்கும். அதுமட்டுமா? பெரிதும் சமயத் தொடர்புடைய திருவேங்கடத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் பக்தர்களுக்கும் பரவசமூட்டும்.

எனவே, 'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' என்னும் தொடர் சொற்பொழிவுகள் நூலாக வெளிவருவதைப் பலரும் வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

நெ. து. சுந்தரவடிவேலு.

# நூல்முகம்

"வெற்பென்று வேங்கடம் பாடினேன்; வீடாக்கி
நிற்கின்றேன்; நின்றுநினைக் கின்றேன்—கற்கின்ற
நூல்வலையிற் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண்."[1]

—திருமழிசையாழ்வார்

எம் பெருமான் கோயில் கொண்டிருக்கும் திவ்விய தேசங்களில் வாழ்வதே ஒரு பெரும்பேறு என்பது வைணவர் களின் நம்பிக்கை. கடந்த பதினைந்து ஆண்டுகளாக அத் தகைய பேறுபெற்றவன் யான். இந்நிலையில் வேங்கடத்து மேயான் "அன்பனே, என்னையும் என் ஊரையும் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் நீ, என்மேலும் என் ஊரின் மேலும் எழுந்த தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் சிறிது சிந் திப்பாயாக" என்று பணிப்பது போல் சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து கடிதம் வந்தது. அதில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா அறக்கட்டளையின்கீழ் "தமிழ் இலக்கியத்தில் திருவேங்கடம்" என்ற தலைப்பில் இரண்டு அல்லது மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு குறிப் பிடப் பெற்றிருந்தது.

இங்ஙனம் ஒரு பெருங்கடமையை எங்ஙனம் ஆற்றுவது என்று திகைத்துக் கொண்டிருக்கும் பொழுது, நம்மாழ்வார் இறைவனின் இருப்பைப்பற்றிக் கூறியுள்ள,

"கறந்தபால் நெய்யே நெய்யின்இன் சுவையே
கடலினுள் அமுதமே அமுதில்
பிறந்தஇன் சுவையே சுவையது பயனே"[2]

---

1. நான்முகன் திருவந்–40
2. திருவாய்—8.1:7

என்ற பாசுரப்பகுதி நினைவிற்கு வந்தது. தமிழ் இலக்கியக் கடலிலும் திருவேங்கடத்தைப்பற்றிய குறிப்புகள் அங்ஙனமே இருப்பதாக எண்ணினேன். எள்ளினுள் எண்ணெய் போல் இருக்கும், 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலின்'[3] இருப்பிடமும் அங்ஙனம் தானே இருக்க முடியும்? கடிதம் பெற்ற நாள் தொட்டு சிலவாரங்கள் இப் பொருள்பற்றியே என் சிந்தனை ஓடிய நிலையிலிருந்தது. இறுதியில் 'சங்ககால வேங்கடம்', 'இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம்', 'திருவேங்கடத்தின்மீது எழுந்துள்ள நூல்கள்' என்ற மூன்று தலைப்புகளில் என் பொழிவுகளைத் திட்டமிட்டேன். இங்குள்ள வசதிகளுக்கேற்பவும், என் ஓய்வுக் கேற்பவும், என் அறிவிற்கேற்பவும் இப் பொழிவுகள் அமைந்தன. இதற்குமேலும் திருவேங்கடத்தைப்பற்றிய செய்திகளைத் திரட்ட இப்பொழிவுகள் ஒரு தூண்டுகோலாக அமைதல் கூடும் என்ற நிலையில் அமைதி பெறுகின்றேன்.

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் ஆராய்ச்சி உலகிற்கும் பொதுமக்கள் உலகிற்கும் இடையே ஒரு பாலம்போல்—சேதுபோல்—அமைந்து திகழ்ந்ததைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு அறியும். பிள்ளை அவர்கள் அறிஞர்கள் ஆராய்ச்சியால் கண்டறிந்த கருத்துக்களை யெல்லாம் பொதுமேடையில் எளியமுறையில் வாரிவழங்கிப் பொது மக்களிடையே ஆராய்ச்சி மனப்பான்மைக்கு வித்திட்டு அதனை வளர்த்தவர். தம் சொல்வன்மையால் பொதுமக்களிடம் அழகிய குழைவுத் தமிழில் இலக்கியச் சுவையை நன்குஊட்டியதால் இன்று அவர்கள் உள்ளத்தில் 'சொல்லின் செல்வராக' நிலையான இடம்பெற்றுத் திகழ் கின்றார்கள். அத்தகைய பெரியார் அவர்களின் நினைவுச் சொற்பொழிவுகளை ஆற்றும் பேறு பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன்.

---

3. மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்-செய் 1

என்னை இம்முறையில் சிந்திக்க வைப்பதற்கு முதற் காரணமாக இருந்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும், என் ஆசிரியப் பெருந்தகை பேராசிரியர் மு நடேச முதலியார் அவர்களின் அருமைத் திருமகளுரு மாகிய டாக்டர் ந. சஞ்சீவி அவர்கட்கும், கரும்பு அயிரற்குக் கூலி கொடுக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தினருக்கும் என் உளம் நிறைந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின் றேன்.

தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கல்வித்துறை ஜாம்பவான். தம் வாழ்நாள் முழுவதும் கல்விப் பணி ஒன்றிலேயே தம் கவனத்தைச் செலுத்திப் பெரும்புகழ் பெற்றவர். தமிழகக் கல்வி இயக்குநராகப் பணியாற்றிய பல்லாண்டுக் காலத்தில், தொடக்க நிலை, உயர்நிலை, கல்லூரி நிலைக் கல்வியில் ஊக்கமும் ஆக்கமும் தந்து 'பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' அந்நிலைக் கல்விகளின் ஆழத்தையும் அகலத்தையும் பெருக்கி, அவற்றின் தரத்தையும் உயர்த்திய பெருமகனுர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றுண்டுக்கு மேற்பட்ட வரலாற்றில் தமி ழறிந்த, தமிழரார்வம் மிகுந்த ஓர் அறிஞர்—தமிழ்க் கல்வித் தொண்டர்—முதன் முதலாகத் துணைவேந்தராக அணி செய்த பெருமை இவரைச் சாரும். இங்ஙனம் பணியாற்றிய ஆறுண்டுக் காலத்தில் பல்கலைக் கழகக் கல்வித் தரத்தைப் பல்லாற்ருனும் உயர்த்திய பெருமை இவருக்கே உரியது. இவரது கடைக்கண் பார்வை தமிழ்த்துறைக்கு இருந்ததனுல் அது மிக விரிவாக வளர்ந்து சிறப்புற்றது. இத்தகைய பெரியார் மிகப்பெரிய பொருள்பற்றிச் சிறியேனுல் ஆக்கப் பெற்ற நூலுக்கு அணிந்துரை நல்கி ஆசி கூறியமைக்கு என் உளங்கனிந்த நன்றியைப் புலப்படுத்திக்கொள்ளுகின்றேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணுநிதி அவர்களின் பீடும் பெருமையும் நிறைந்த ஆட்சி இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமிருந்தும் ஒரே கருத்துடன் பாராட்டைப் பெற்றுத் திகழ்கின்றது. கலைச்சுவையும்

தமிழ்ச் சுவையும் சுத்துவக்கும் இன்பமும் ஒருங்கே நிறைந்த இவரிடமிருந்து கருணை வெள்ளம் பல்வேறு துறைகளில் இவர் மேற்கொண்ட சமூக நலத் திட்டங்களில் பாய்ந்து செல்கின்றது. பிச்சைக்காரர்கள், கண்ணிழந்தோர், உடல் ஊனமுற்றோர், ரிக்ஷா வண்டிக்காரர்கள், சாலையோரம் வாழ் ஏழை மக்கள் ஆகியோர் இவர் கருணையின் பலனைத் துய்த்து இவரை வாழ்த்துகின்றனர். இவர் ஆட்சியில் தமிழும் திருக்குறளும் ஏற்றமான உரிய இடங்களைப் பெற்றன; தமிழாசிரியர்களின் நிலையும் உயர்ந்தது. இவரது ஆட்சிக்காலத்தில்தான், இவருடைய கடைக்கண் பார்வையினால்திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை எம். ஏ., பி எச். டி. அளவில் விரிந்து பெருகிச் செழிப்புடன் வளர்ந்து வருகின்றது. கருணாநிதியாகிய இவரது கருணை என்றுமே இத்துறைபால் உண்டு என்ற நம்பிக்கை நிலையாகவே என்னிடம் உளது. தமிழகத்தின் எல்லையாகத் திகழும் 'வட, மாலவன் குன்றத்திற்கும்' தமிழுக்கும் உள்ள உறவினைக் காட்டும் இந்நூலை, அவரது 52-வது அகவை நிறைவின் நினைவாக அன்புப் படையலாக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

இந்த மூன்று பொழிவுகளையும் நூல்வடிவில் என் பொறுப்பில் வெளியிட்டுக் கொள்ள இசைவுதந்த சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைச் செல்வர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்கட்கும், இந்தத் தொடர் சொற்பொழிவுகளை ஆற்றவும், அப்பொழிவுகள் அச்சுவடிவம் பெறவும் இசைவுதந்த திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் D. சகந்நாத ரெட்டி அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

காலத்திற்கேற்ற பல அரிய இன்றியமையாத உயர்ந்த தமிழ் நூல்களை வெளியிட்டுப் பெரும் புகழ்பெற்ற பாரி நிலைய உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பன் அவர்கட்கும், இந்த நூலை விரைவில் அழகுற அச்சிட்டுக் கற்போர் கரங்

களில் தவழச் செய்த மாருதி அச்சகத்தினருக்கும் என் இதயம் நிறைந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

என்னுள்ளே தோன்ருத் துணையாக நின்று என்னை இயக்கியும், எனக்கு உடல்நலனும் மனவளமும் நல்கியும் வரும் ஏழுமலையான் பொன்னுர் திருவடிகளை நினைந்து,

"சேயன் அணியன் என்சிந் தையுள்நின்ற
மாயன், மணிவாள் ஒள்வெண் தரளங்கள்
வேய்விண் டுதிர்வேங் கடமா மலைமேய
ஆயன் அடியல்லது மற்றறி யேனே."[4]

என்ற திருமங்கை மன்னனின் வாக்கால் வழுத்தி வணங்கு கின்றேன்.

திருப்பதி
15-7-75

ந. சுப்புரெட்டியார்

4. பெரிய திருமொழி 1. 10 : 8

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சங்ககால வேங்கடம் | 1— 53 |
| 2. | இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம் | 55—144 |
| 3. | திருவேங்கடத்தின் மீது எழுந்துள்ள நூல்கள் | 145—285 |
| 4. | பின்னிணைப்பு-1; பயன்பட்ட நூல்கள் | i — ii |
| 5. | பின்னிணைப்பு-2; பொருட்குறிப்பு அகராதி | iii—x |

# 1. சங்ககால 'வேங்கடம்'

முதற் பொழிவு                                   மார்ச்சு 7, 1974

பேரன்பர்களே,

வணக்கம். சில ஆண்டுகட்கு முன்னே நம்மிடையே வாழ்ந்தவர் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள். கற்றவர்க்கு இனியராகவும் மற்றவர்க்குப் பெருமையுடையவரர்கவும் எல்லோர்க்கும் நல்லவராக வாழ்ந்து இப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகட்குமேல் தமிழ்ப் பணியாற்றியவர், இன்று நம் எல்லோர் சிந்தையிலும் வீற்றிருக்கும் பெருமகனார் சேதுப் பிள்ளையவர்கள். இப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக (Professor of Tamil) அணி செய்த பெருமை இவரைச் சாரும். லாஸரஸ் பெருமாட்டி அவர்கள் அளித்த நன்கொடையால் அவர்கள் தந்தையார் பெயரால் 'லாஸரஸ் தமிழ்ப் பேராசிரியர்' என்ற பதவியை முதல் முதலாக ஏற்ற பேறு நம் சொல்லின் செல்வர்க்கே உரியது. அன்னாரது பணியினை நினைவூட்டும் வண்ணம் ஏற்படுத்தப் பெற்ற வெள்ளிவிழா அறக்கட்டளையின்கீழ் இந்த ஆண்டிற்கு (1973-74) உரிய சொற்பொழிவுகள் ஆற்றும்படி பணித்த பல்கலைக் கழகத்தினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் 'ஊரும் பேரும்' என்ற ஆராய்ச்சி நூல் வெளியிட்ட டாக்டர் பிள்ளையவர்கட்கு உகப்பான இடம் 'திருவேங்கடம்' என்ற திவ்விய தேசம் ஆகும்.

வேங்.—1

குலசேகராழ்வாரின் திருவேங்கடம் பற்றிய திருமொழியில் ஆழங்கால்பட்டு உயர்ச்சியுடன் அடிக்கடி பேசுவதை நான் நேரில் கேட்டு அநுபவித்ததுண்டு. அவர்கள் எழுதிய பல கட்டுரைகளிலும் திருவேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் வருங்கால் இந்த திவ்விய தேசத்தின் மீது அவரது ஈடுபாட்டைக் காணலாம். எனவே, 'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' என்ற தலைப்பில் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தத் திட்டமிட்டேன். "சங்ககால வேங்கடம்" என்ற தலைப்பில் இன்றைய என் பேச்சு அமைகின்றது.

**இன்றையோர் கருதும் வேங்கடம்:**

இன்று பொது மக்களும் கற்றறிந்த புலவர்களும் திருப்பதி மலையையே 'வட வேங்கடம்' என்று கருதுகின்றனர். தேசியகவி பாரதியாரும் வடவேங்கடத்தை 'வட மாலவன் குன்றம்' என்றே வழங்குவர். இதனை,

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு!"[1]

என்று தமிழ் நாட்டு எல்லையை வகுத்துக் காட்டும் பாடலில் கண்டு தெளியலாம். தொல்காப்பியப் பாயிரத்தில் கூறப்பெற்ற 'தமிழ் கூறு நல் உலகமே' பாரதியின் கருத்தில் புதிய வடிவம் கொண்டு நிற்பதை எளிதில் கண்டு தெளியலாம். தொல்காப்பியப் பாயிரமேயன்றி சங்க இலக்கியங்களில் வேங்கடத்தைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன என்பதை அந்த இலக்கியங்களை ஆழ்ந்து கற்றோர் நன்கு அறிவர். இந்தக் குறிப்புகளைத்

1. பாரதியார் கவிதைகள்—செந்தமிழ் நாடு—5.

தெளிந்து சங்கப் பாடல்களில் வரும் வேங்கடம்பற்றிய வருணனைகளைக் கொண்டு சீர்தூக்கி ஆராய்வோமானால், திருப்பதி மலையைத் தொல்காப்பியர் கூறும் 'வடவேங் கடம்' என்று அறுதியிட்டு உரைப்பதில் பல்வேறு இடர்ப் பாடுகள் உள்ளன என்பதை அறிவார்கள். இந்தப் பொழிவில் அத்தகைய இடர்ப்பாடுகள் இன்னவை என் பதைத் தெளிவுறுத்துவேன். சங்க இலக்கியங்கள் குறிப் பிடும் 'வடவேங்கடம்' இன்னதுதான் என்று இனங்காட் டவும் முயல்வேன்.

முதன்முதலில், இன்று 'திருப்பதி' என்று வழங்கப் பெறும் நகரத்தின் இருப்பையும், இயற்கைச் சூழல்களை யும் தெளிவாக அறிந்து கொள்வோம். அதன் பிறகு அவற்றைச் சங்க இலக்கியங்களில் வேங்கடத்தைப்பற்றி வரும் வருணனைகளுடன் ஒப்பிட்டு நோக்குவோம். இன்று பெரும்பான்மையோர் திருப்பதி மலையைத் 'திருப்பதி' என்றே வழங்குகின்றனர். விவரம் அறிந் தோர் அதனைத் 'திருமலை' என்று கூறுகின்றனர்.[2] இன்று 'திருமலை' என்று வழங்கப்பெறும் மலை தமிழ் கூறும் நல்லுலகத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒழுங்கற்ற தாழ்வான சில குன்றுகளின் கூட்டமாகும். இம்மலை 14° வட குறுக்கையுள்ளும் (North Latitude) 80° கிழ் நெடுக்குக் கோட்டிலும் (Longitude) அடங்கி, சென்னைக்கு வடகிழக்குத் திசையில் சுமார் 85 கல் தொலைவில் அமைந்துள்ளது. இம் மலை 'ஏழுமலை' என்றே வழிவழி வழங்கப்பெற்று வருகின்றது. இந்த மலைக் குன்றுகள் நேராக ஓர் ஒழுங்கில் அமையவும் இல்லை; ஒன்றை யொன்று தொடர்ந்த நிலையில் ஒரு சங்கிலி போலவும்

2. மலையைத் '**திருமலை**' என்றும், மலையின் கீழுள்ள நகரைத் '**திருப்பதி**' என்றும் வழங்குவதே சரியாகும்.

அமையவில்லை. அவை ஒன்றையொன்று தழுவிய நிலையில் ஒன்று சேர்ந்த கூட்டம்போல், ஒரு குழப்பமான சுருள்போல் அமைந்து கிடக்கின்றன என்பதாகக் கூறுவர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள்[3].

இந்தக் குன்றுகள் கடல் மட்டத்திற்குமேல் 1000 அடி முதல் 2,500 அடி வரை உயரமுள்ளனவாக அமைந்துள்ளன. மலையெங்கும் புல் பூண்டுகள் காணப் பெறுகின்றன. இங்கும் அங்குமாகச் சிறுசிறு மரங்கள் தென்படுகின்றனவே அன்றி, பெரிய மலைகளைக் கொண்ட அடர்ந்த காடுகள் இல்லை. மலையின் உயரங்காரணமாக தட்ப வெப்ப நிலையில் சிறிது மாற்றம் காணப்படுகின்றதேயன்றி, பெரும்பாலும் அந் நிலை மலையைச் சூழ்ந்துள்ள சமவெளியின் தட்ப வெட்ப நிலையையே ஒத்துள்ளது என்று கூறலாம். இன்று வனப்பாதுகாப்புத் துறையினர் பல இடங்களில் யூகலிப்டஸ் மரங்களை வளர்த்து வருகின்றனர். தேவையான மழையின்மை காரணமாக அவை நீலகிரி மலையிலுள்ளவை போன்று செழித்து உயர்ந்து வளரவில்லை. இருபது முப்பது ஆண்டுகட்கு முன்பு ஆண்டின் சில திங்களில் மலையின் மீது மலேரியா நோய் தலைகாட்டிக் கொண்டிருந்ததாகக் கருதப் பெற்றது. ஆயினும், திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தார் மேற்கொண்ட அரிய முயற்சியினால் மலேரியா நோய் நிலைகள் முற்றிலும் இல்லாதொழிந்தன. இன்று எம்மருங்கிருந்து வரும் அடியார்கட்காக இருக்கை வசதிகளும், நீர்வசதிகளும் இயன்றவரை நல்ல முறையில் செய்யப்பெற்று வருகின்றன. ஆண்டுதோறும் அடியார்களின் கூட்டம் பெருகிக்கொண்டே வருகின்

3. A History of Tirupathi vol I, பக்கம்—1.

றது. இறைவனின் கருவூலமும் பொங்கி வழிந்து கொண்டே உள்ளது. இந்த ஆண்டு சனவரி முதல்நாள் அன்று உண்டியில் விழுந்த தொகை இரண்டு லட்சத்துக்குமேல் சென்றுவிட்டது என்றும், இதுகாறும் திருக்கோயில் வரலாற்றிலேயே ஒருநாளில் இந்த அளவு சேர்ந்ததில்லை யென்றும் கூறப்பெறுகின்றது.

## சங்க இலக்கியக் குறிப்பு:

இனி, சங்க இலக்கியங்களில் வடவேங்கடத்தைப் பற்றியுள்ள குறிப்புகளை ஆராய்வோம். அங்குக் காணும் வருணனைகள் இன்று நாம் வேங்கடத்தில் காணும் காட்சிகட்கு முற்றிலும் வேறுபட்டனவாகவே உள்ளன. பத்துப் பாட்டில் பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை இவற்றில் உள்ள ஒருசில குறிப்புக்களையும், எட்டுத்தொகையில் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களில் வடவேங்கடத்தைப்பற்றிப் பல குறிப்புகளையும் காண்கின்றோம். புறப்பொருள் வெண்பா மாலையிலும் சங்கமருவிய நூலாகிய சிலப்பதிகாரத்திலும் இம்மலையைப் பற்றிய குறிப்புக்கள் காணப் பெறுகின்றன.

கண்ணனார் பாடியுள்ள அகப்பாடலில் 'வேங்கட நெடுவரை' என்ற தொடர் காணப் பெறுகின்றது. இச் சொற்றொடர் 'நீண்ட மலைத் தொடர்' என்ற பொருளில் வருகின்றது. தலைமகன் பிரிவினால் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்திக் கூறியதாக அமைந்தது இப் பாடல் இதில் வடவேங்கடத்தைப் பற்றி வரும் பகுதி இது :

"சாரல்
ஈன்றுநாள் உலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்

வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை
நன்ஞட் பூத்த நாகிள வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறுசினை யிருந்து
துணைப்பயிர்ந் தகவும் துனைதரு தண்கார்
வருதும் யாம்எனத் தேற்றிய
பருவம் காண்;அது பாயின்ருல் மழையே.''[4]

[ஈன்றுநாள் உலந்த-ஈன்று அணிமை கழிந்த; பிடி-பெண் யானை; யானை-களிறு; தருபு-கொணர்ந்து; நாகு இள-மிக இளைய; நறுவீ-நறிய பூக்கள்; மஞ்ஞை-மயில்; நனை-தேனையுடைய; நாறுசினை-நறுமணம் வீசும் கிளை; பயிர்ந்து-அழைத்து; அகவும்-கூப்பிடும்; துனைதரு-விரைந்து வரும்; தண்கார்-குளிர்ந்த கார்ப் பருவம்; பாயின்று-வாரா நின்றது.]

''ஈன்று அணிமை கழிந்த மெல்லிய நடை வாய்ந்த இளைய பெண் யானையினதும் அதன் கன்றினதுமான பசியைப் போக்குவதற்குப் பசிய கண்ணினையுடைய ஆண்யானை மூங்கிலின் முற்ருத முளையினைக் கொண்டு உண்பிக்கும் மலைச்சாரலையுடையது திரையனது வேங்கட மலை. அந்த மலையில் நல்ல நாட்காலையில் மலர்ந்த வேங்கை மரத்தின் நறிய பூக்களின் துகளை அளைந்து தேனையுடைய பசிய குருந்த மரத்தின் நறுமணம் வீசும் கிளையிலிருந்துகொண்டு பொறிவரி மஞ்ஞையானது தன் துணையினை அகவி அழைக்கும் குளிர்ந்த கார்ப் பருவமே தலைவன் வருவதாகக் கூறிச்சென்ற பருவ மாகும். அதற்கேற்றவாறு மழையும் பரவி நின்றது. அதனைக் காண்பாயாக'' என்று கூறித் தலைவியைத் தேற்றுகின்ருள் தோழி.

---

4. அகம்-85.

நக்கீரர் இந்த மலையை 'நெடுவரைப் பிறங்கிய வேங்கட வைப்பு' என்று குறிப்பிடுவர் தம் பாடலில். இவர் 'பிரிவிடை ஆற்ருள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்ததாகப்' பாடியுள்ளார். பொருள் வயிற் பிரிந்த தலைவன் சென்ற சுரநெறியைக் குறிப்பிடுங்கால் வடவேங்கடமலையின் குறிப்பு வருகின்றது.

"பல்பொறிப்
புலிக்கேழ் உற்ற பூவிடைப் பெருஞ்சினை
நரந்த நறும்பூ நாண்மலர் உதிரக்
கலைபாய்ந்து உகளும் கல்சேர் வேங்கைத்
தேங்கமழ் நெடுவரைப் பிறங்கிய
வேங்கட வைப்பிற் சுரன்இறந் தோரே."[5]

[பொறி-புள்ளிகள்; புலிக்கேழ்-புலியின் நிறம்; நரந்தம்-நாரத்தை மரம்; நாள் மலர்-புதிய பூக்கள்; கலை-முசுக்கலை; உகளும்-தாவும்; தேம் கமழ்-தேன் நாறும்; பிறங்கிய—விளங்கிய; வேங்கட வைப்பு-வேங்கட மலை; சுரன் இறந்தோர்-சுரநெறியைக் கடந்து சென்ருேர்.]

என்ற பாடற் பகுதியில் அக் குறிப்பினைக் காண்க. வேங்கை மரத்தின் பூக்கள் பல புள்ளிகளையுடைய புலியின் நிறத்தையொப்பக் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. வேங்கை மரங்களின் இடையே நாரத்தை மரங்களும் காணப் பெறுகின்றன. இவற்றினிடையே முசுக்கலைகள் பாய்ந்து தாவுவதால் நாரத்தையின் புதிய மலர்கள் உதிர்கின்றன. இத்தகைய சூழ்நிலையையும் தேன் நாறும் சிமையங்களையும் கொண்டது வேங்கட வைப்பு என்று இந்த மலையை நமக்குக் காட்டுவர் நக்கீரர் பெருமான்.

5. அகம்-141.

இனி, மாமூலனார் காட்டும் வேங்கடத்தைக் காண்போம். இவர், ''கோடுயர் பிறங்கல் குன்று பல நீந்தி... ...தேன்தூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர் வேங்கடம்'' என்று காட்டுவர். இவர் பாடல் 'பொருள் தேடும் பொருட்டு வேற்றுப்புலம் அடைந்த தலைவன் விரைந்து திரும்பிவிடுவான் என்று கூறித் தலைவனது பிரிவால் வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுவதாக' அமைந்துள்ளது.

''கோடுயர் பிறங்கல் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
இதைச்சுவற் கலித்த ஈரிலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி
கவட்டடிப் பொருத பல்சினை உதிர்வை
அகன்கட் பாறைச் செவ்வயிற் றெறீஇ
வரியணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்
பண்ணை வெண்பழத் தரிசி ஏய்ப்பச்
சுழல்மரஞ் சொலித்த சுளகலை வெண்காழ்
தொடிமாண் உலக்கை ஊழிற் போக்கி
உரல்முகங் காட்டிய சுரைநிறை கொள்ளை
ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவாக்
களிபடு குழிசிக் கல்அடுப் பேற்றி
இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதிற்
குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம் இறந்தனர் ஆயினும் ஆண்டவர்
நீடலர்.''[6]

6. அகம்-393.

[கோடு-சிகரம்: பிறங்கல்-பாறை; புலம்-நாடு; ஆறு-வழி; வம்பலர்-புதியர்; காய்பசி-மிக்கபசி; இதை சுவல்-புதுக்கொல்லை; கலித்த-தழைத்த; கவர்த்த அடி-பிளவுபட்ட குளம்பு; தெறீஇ-குவித்து; வார்செவி-நீண்ட செவி; தன்னையர்-தாய்மார்; பண்ணை-ஒருவகைக் கீரை; வெண்காழ்-வெள்ளிய அரிசி; ஊழில் போக்கி-முறையாகச் செலுத்தி; சுரை-உரலின் குழி; களிபடு-மண்ணுல் செய்த; குழிசி-பானை; இணர்-கொத்து; கடுக்கை-கொன்றை; குடவர்-இடையர்; புன்கம்-சோறு; பகுக்கும்-அளிக்கும்; நெடுமொழி-மிக்க புகழையுடைய; தேன் தூங்கு-தேன் இருல் தொங்கும்; உம்பர்-அப்பாற்பட்ட; இறந்தனர்-கடந்து சென்றனர்; ஆண்டு-ஆங்கண்; நீடலர்-தாழ்ந்திருப்பாரல்லர்.]

இதில் பொருள் தேடும் பொருட்டுச் சென்ற தலைவன் **புல்லி** என்பானது நாட்டைக் கடந்து சென்ருன் என்று குறிப்பிடும் மாமூலனர், புல்லி ஆண்ட நாட்டைப் பற்றிக் கூறுகின்ருர். சிகரம் உயர்ந்த பாறைகளையுடைய மலைகள் பலவற்றைக் கடந்து செல்கின்ருன் தலைவன். வழியில் காடுதிருத்திய மேட்டுநிலமாகிய புதுக்கொல்லையில் வரகின் கதிர்கள் தட்டைகளுடன் கொய்து குவிக்கப் பெற்றுள்ளது. அவற்றுள் ஒரு பகுதியின்மீது மாடுகளை விட்டுத் துவைக்கப் பெற்றதால் உதிர்ந்த வரகு மணிகள் அகன்ற பாறையின்மீது செவ்விய இடத்தில் குவிக்கப் பெற்றுள்ளன. அந்த வரகினைத் தாய்மார்கள் உரலில் போட்டுத் தீட்டி அரிசியைச் சுளகினுல் புடைத்துப் பிரிக்கின்றனர். அந்த அரிசியை மண் பானையில் பெய்து கற்களை அடுக்கி அமைத்த அடுப்பின்மீது அப் பானையை ஏற்றிச் சோருக்கி அச் சோற்றை நல்ல பசும் பாலுடன் கூட்டி வழங்குவர். அதற்கேற்றவாறு அந் நாட்டில் கறவைப் பசுக்கள் மலிந்து காணப் பெறுகின்றன. அங்குள்ள மலைகளின் இடுக்குகளில் தேன்

கூடுகள் தொங்குகின்றன. இத்தகைய நாட்டைக் கடந்து தலைவன் சென்றனனாயினும் அங்கிருந்து திரும்புவதில் காலந் தாழ்த்தமாட்டான் என்று குறிப்பிடுகின்றார் மாமூலனார்.

கல்லாடனார் என்ற செந்நாப் புலவரும் வேங்கட மலையை, 'காம்புடை நெடுவரை வேங்கடம்' என்று குறிப் பிடுகின்றார். இதுவும் 'யாதோ ஒரு நிமித்தத்தின் பொருட்டுத் தலைவன் பிரிவுற்றதனால் வேறுபட்ட தலை மகளைத் தோழி தேற்றுவதாக' அமைந்த பாடலாகும் இப்பாடலில் தலைவன் பிரிந்து சென்ற இடத்தைக் குறிப் பிடும்,

"அவரே
மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறையிறந் தகன்றனர் ஆயினும் நிறையிறந்து
உள்ளா ராதலோ அரிதே."[7]

[அவர்-தலைவர்; மால்-பெரிய; மறப்போர்-வீரத் துடன் புரியும் போர்; காம்பு-மூங்கில்; நெடுவரை-நீண்ட சாரல்; அறை-குன்றுகள்; இறந்து-கடந்து; உள்ளார் ஆதல்-நினையாராதல்.]

என்ற பகுதியில், வேங்கட மலை குறிப்பிடப் பெற்றுள்ள தைக் காண்க.

பிற்கால இலக்கியம் போலன்றி சங்க இலக்கியத்தில் அதிகமான கற்பனையின்றிக் கவிஞர்கள் இயற்கையை வருணித்திருப்பார்கள் என்பதை நாம் அறிவோம். வரம் பிகந்து உயர்வு நவிற்சியாகக் கூறப்பெறும் இடங்களைச் சங்கப் பாடல்களில் யாங்கணும் காண்டல் அரிது என்ப

7, அகம்-209.

தும் நாம் அறிந்ததே யாகும். மேலே குறிப்பிட்ட நான்கு பாடல்களிலும், சாதாரணமாகக் கவிஞர்களிடம் காணப் பெறும் கற்பனை கூட இல்லை. மலைகளைக் கடந்து செல்லல் மட்டிலும் 'குன்று பல நீந்தி' என்று கற்பனை நயம் தோன்றக் கூறப் பெற்றுள்ளதேயன்றி, பிற செய்திகள் உள்ளது உள்ளவாறே இயம்பப் பெற்றிருத்தலைக் காணலாம். ஈண்டு 'வரை' என்பது 'கோடு' அல்லது 'வரம்பு' என்று பொருள்படும் சொல்லாகும். இச் சொல்லுக்கு 'மலை' என்ற பொதுப்பொருளும் பொருந்தலாம். ஆயினும், 'வரை', 'நெடுவரை' 'நெடுவரைப் பிறங்கிய வேங்கட வைப்பு' என்ற சொல், சொற்றொடர்களைக் கூர்ந்து நோக்குங்கால், இவற்ருல் குறிக்கப்பெறுவது 'மலை' என்ற பொதுப் பொருள் மட்டும் அன்று என்பதும்; அது குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த 'மலைத் தொடர்களைக்' குறிக்கின்றன என்பதும் புலனுகும். 'நெடுவரை' என்பது 'குன்று' அல்லது 'குன்றம்' என்பதினின்றும் பெரிதும் வேறுபட்டது. பிற்கால இலக்கியங்கள் இச் சொற்களைக் குழம்பிய நிலையில் தாறுமாருக் கையாண்டமையால் இன்றைய வழக்கில் அவை 'ஒருபொருட் பன்மொழிகளாக' வழங்கி வருகின்றன. ஒன்ருேடொன்று ஒழுங்கற்ற நெருங்கிய நிலையில் இன்று நாம் காணும் திருப்பதி மலையைக் 'குன்றம்' அல்லது 'குன்று' என்று கூறலாம்; வேண்டுமானுல் 'மலை' என்ற பொதுப் பெயராகச் சொல்லி வைக்கலாம். ஆயின் எவ்வாற்ருனும் அதனை 'நெடுவரை' என்று சொல்லுவதற்கில்லை என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும். இதனுல்தான் மகாகவி பாரதியார் 'மாலவன் குன்றம்' என்று கூறுகிருர் போலும்!

மேற்கூறிய வருணனை விவரங்களைக் கைவிட்டாலும் திருப்பதி மலையை 'வடவேங்கடம்' என்று இனம் காண்

பதில் மேலும் ஓர் இடர்ப்பாடு உண்டாகின்றது. நாட்டின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒரு சிறிய இடத்தை தமிழகத்தின் இரு கடல்கட்கும் இடையே நீண்டு கிடக்கும் நிலப்பகுதியின் வடஎல்லையாகக் கூறுதல் யாங்ஙனம் பொருந்தும்? இதனைப் பேராசிரியர் டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், இங்ஙனம் கூறுவது பொருந்தாமையை முன்னரே நன்கு உணர்ந்து, தம்முடைய நூலில்[8] இங்ஙனம் கூறுவர்: "தமிழர்களின் தலைசிறந்த இலக்கணமாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும். இது காலத்தால் மிகவும் முற்பட்ட நூலாகும். இதில் தமிழகத்தின் எல்லை கூறப் பெற்றுள்ளது. இதில் வட எல்லையாக வேங்கடமும் தென் எல்லையாகக் குமரியும் கூறப் பெற்றுள்ளன. அக்காலத்தில் மேற்கிலும் கிழக்கிலும் கடல்களே தமிழகத்தின் எல்லைகளாக அமைந்திருந்தன. ஆகவே, 'வடவேங்கடம்' என்று அடிக்கடிக் கூறுவதே ஒரு மரபாகி விட்டது. இதைத் தெளிவாக உணர வேண்டுமாயின், வேங்கடத்தைப்பற்றி இலக்கியங்களில் குறிப்பிடப் பெறும் இடங்களைக் கூர்ந்து நோக்கிப் பொருள் காண்டல் வேண்டும். ஒருவர் வடக்கிலுள்ள வேங்கடத்தைக் கடந்து சென்றால் அப்பகுதிகளில் மக்கள் பேசும் மொழி முற்றிலும் வேறுபட்டிருக்கும் என்ற போக்கிலேயே அவ்விடங்கள் குறிப்பிடப் பெற்றிருப்பதை அறியலாம். சங்க இலக்கியங்களில் "மொழி பெயர் தேஎம்"[9] என்ற தொடர் எங்கணும் பெருவழக்காக ஆளப்பெற்றிருப்பதினின்றும் இதனைத் தெளியலாம். ஆகவே, அக் காலத்தில் தமிழர்கட்கு நன்கு பழக்கமுடைய திருப்பதி மலையையே 'வேங்கடம்' என்ற

---

8. A History of Tirupathi-vol 1

9. (எ-டு.) குறுந். 11; ஐங்குறு. 321; அகம். 67 முதலியவை,

பெயரால் குறித்தனர் என்று கருதலாம். இது நாளடை வில் கிட்டத்தட்ட ஓர் எல்லைக் குறியாகவே அமைந்து விட்டது. இதனைக் கடந்து அப்பாற் சென்றால் அங்கு மக்களிடம் தமிழ் பேசப் பெறுதலை அறியலாம்.[10] பிறிதோர் இடத்தில் அப் பேராசிரியர் தமது நூலில் "வட எல்லையின் மிக முக்கியமான எல்லைக் குறியாக (Land mark) இருப்பது வேங்கடம் என்பதற்கு ஐயமில்லை"[11] என்பதாகக் கூறியிருப்பதும் சிந்திக்கத் தக்கது.

### திருப்பதி புகழோங்கிய காலம்:

இங்ஙனம் வட எல்லையின் முக்கிய எல்லைக் குறியாகத் திகழும் வடவேங்கடம் (திருப்பதி) எக்காலத்தில் தமிழர் கள் யாவரும் சிறப்பாகக் கருதும் இடமாக அமைந்தது என்பதை ஆராய்தல் மிகவும் பொருத்தமாகும். திருப்பதி மிகவும் புகழ் அடைந்தது சமயச் சார்பு பற்றியதேயாகும் என்பதை நாம் நன்கு அறிவோம். இடைக்காலத்தில் தான் தல யாத்திரிகர்களின் முக்கிய இடமாக அமைந்ததற்குக் காரணம் சமயச் சார்பு பற்றியதே யாகும். சங்க காலத்தில் இச் சமயச் சார்பு இவ்விடத் திற்கு ஏற்படவில்லை; அத்தகைய சார்பு ஏற்பட்டது பிற்காலத்தில்தான். இதனை இரண்டாவது பொழிவில் தெளிவாக்க முயல்வேன். ஆயின், திருப்பதி பற்றிய சமயச் சார்பான குறிப்பு புறப்பொருள் வெண்பா மாலையிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றது. இதனையே முதன்முதலாகக் கூறப்பெறும் மிகப் பழைய குறிப்புகளாகக் கருதலாம்.

---

10. A History of Tirupathi Vol I — பக் 4, 5.
11. ஷை நூல் — பக் 7.

முதலில் ஐயனாரிதனார் வாக்கினைக் காண்போம் :

"வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்(கு)
இருளீயும் ஞாலத்(து) இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்.[12]"

[வெறி-வாசனை ; அறை-ஒலிக்கும் ; நெறி-முறைமை.]

என்ற பாடலில், 'வேங்கடம்' குறிப்பிடப் பெற்றிருப்ப துடன் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவாழியைத் தரித்துக் கொண்டிருக்கும் குறிப்பும் 'ஆழியவன்' என்ற சொல்லால் காட்டப் பெற்றிருத்தல் நோக்கத்தக்கது.

இனி, சிலப்பதிகாரத்தில் வரும் 'வடவேங்கடம்' பற்றிய குறிப்பில், நம் கருத்தினைச் செலுத்துவோம். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பெறும் மாங்காட்டு மறையோன் தலயாத்திரை செய்து வருகின்றான். உறையூரையடைந்த கோவலனும் கண்ணகியும் கவுந்தி யடிகளுடன் வைகறை யாமத்து அவ்வூரைக் கடந்து தென்திசையை நோக்கிச் செல்லுபவர்கள், கனன்று எழும் கதிரவன் வெப்பத்தைப் பொறுக்கலாற்றாது வழியில் ஒரு மருதநிலப் பரப்பில் வனப்புற்றுத் திகழாநின்ற ஓர் இளமரக்காவில் வழிப்போக்கர் தங்கு வதற்கென்று அமைக்கப்பெற்றிருந்த இருப்பிடத்தில் இளைப்பாறுதற் பொருட்டுச் சென்று புகுகின்றனர். அப்பொழுது தென்றிசையினின்றும் வடதிசை நோக்கிச் செல்லும் மறையோனும் அவ்விடத்தில் வந்து புகுகின்றான் ; வருகின்றவன் 'தீது தீர் சிறப்பின்

12. புறப்பொருள் வெண்பா மாலை, பாடாண் படலம்—புலவர் ஆற்றுப்படை (43) உதாரணச் செய்யுள்.

தென்னனை' வாழ்த்திக்கொண்டே வருகின்றான். அங்ஙனம் வருகின்றவனைக் கோவலன்,

''யாது நும்மூர்? ஈங்கென் வரவு?[13]''

என்று வினவுகின்றான். இந்த இரண்டு வினாக்களில் முன்னதினும் பின்னது சிறப்புடைத்தாதலின், அதற்கு விடை கூறும் இடத்தில் திருவரங்கம், திருவேங்கடம் இவற்றின் வருணனைகள் வருகின்றன. அந்த வருணனைகளை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

''நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்;
வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்;
என்கண் காட்டென்று என்னுளம் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்.''[14]

---

13. சிலம்பு, காடுகாண் காதை-வரி, 32.
14. சிலம்பு, காடுகாண் காதை-வரிகள் 35-53.

[குன்றம்-மலை; பால்விரிந்து-பக்கங்களில் விரிந்து; விரித்து-படம் விரித்து; திறல்—ஆற்றல்; திரை-அலை; துருத்தி-ஆற்றிடைக் குறை (அரங்கம்); கிடந்த வண்ணம்-அறிதுயில் கொண்டு கிடக்கின்ற அழகு; வீங்குநீர்-மிகவும் பெருகி வீழாநின்ற நீர்; மின்னுக் கோடி-மின்னலாகிய புத்தாடை; பகை அணங்கு-பகை வரை வருத்துகின்ற; ஆழி-திருவாழி; பால் வெண்சங்கம்-பால் நிறத்தினையுடைய சங்கு; நலம்-அழகு; ஆரம்-கௌத்துவ மணிமாலை; பொலம் பூவாடை-பொற் பூவாடை; நெடியோன்-திருநெடுமால்; நின்ற வண்ணம்-நின்ற கோலம்.]

இதனைத் தவிர, சிலப்பதிகாரத்தில் வேறு இரண்டு இடங்களில் வேங்கடத்தைப்பற்றிய குறிப்பு காணப் பெறுகின்றது.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் புறுத்த தண்புனல் நல்நாடு."[15]

என்றும்,

"வேங்கட மலையும் தாங்கா விளையுள்
காவிரி நாடும்."[16]

என்றும் வருதலைக் காண்க.

உறையூர் காவிரியின் தென்பால் உள்ளது. திருப்பாணாழ்வார் திருவவதரித்த திவ்விய தேசமாகும் இது. உறையூருக்கு நேர்வடக்கில் காவிரி நதியின் வட கரையில் திருவரங்கம் என்னும் திருப்பதி உள்ளது.

"கொண்டல் வண்ணனைக்
கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என்
உள்ளம் கவர்ந்தானை,

---

15. சிலம்பு, வேனிற் காதை—வரி. 1-2.
16. சிலம்பு, கடலாடு காதை—வரி. 30-31.

அண்டர் கோன்அணி
யரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்,மற்(று)
ஒன்றினைக் காணாவே"[17]

என்று பாண் பெருமாள் அநுபவித்த அழகிய மணவாளன் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசமாகும் இது. உள்ளத்தை உருக்கும் இந்த ஆழ்வாரின் வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று இப்பொழுது நம் மனத்தில் எழுந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றது. அது கிடக்க. இந்தத் திருவரங்கத்திற்கு மிக அண்மையிலுள்ளதும் தான் தங்கியிருந்ததுமான உறையூரிலுள்ள மாங்காட்டு மறையோன் திருவரங்கத்தை விவரித்துக் கூறுவது மிகவும் பொருத்தமேயாகும். இங்கு திருவரங்கத்தைப் பற்றிய அவன் கூறிய செய்தி ஆறு வரிகளில் மிகச் சுருக்கமாக உள்ளது. ஆனால், அவன் இன்னும் நேரில் கண்டறியாத வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் சற்று விரிவாகப் பதினொரு வரிகளில் கூறப்பெற்றுள்ளன. கோவலன் பூம்புகாரில் வாழ்ந்த பெருவணிகன். திருவேங்கடம் மலைநாட்டைவிட பூம்புகாருக்கு மிக அண்மையிலுள்ளது. ஆதலின், அவன் வேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தலும் கூடும். மிகத் தொலைவில் மலைநாட்டிலுள்ள மாங்காட்டு மறையோன் அறிந்திருப்பதைவிட கோவலன் திருவேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் கூடும் என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை; இஃது அறிவுக்குப் பொருத்தமான ஊகமே யாகும். அதுவும் இன்று திருப்பதி புகழ் அடைந்திருப்பதுபோல் அன்றும் அனைவருக்கும் தெரிந்துள்ள ஊராக

17. அமலனாதி பிரான்-பாசுரம் 10.

இருந்திருப்பின், கோவலன் இந்த ஊரைப்பற்றி நன்ருகவே அறிந்திருப்பான் என்றும், அதுவும் தமிழகத்தின் வட எல்லையின் முக்கியமான ஓர் இடம் என்று அறியும் அளவுக்குத் தெரிந்திருப்பான் என்றும் கருதுவது இந்த ஊகத்தை மேலும் வலியுறச் செய்கின்றது. திருப்பதிக்கு நேரில் சென்று அதனைக் கண்டறியாத மாங்காட்டு மறையோன், அவ்வூரைப் பற்றி ஓரளவு நன்கு அறிந்திருக்கக்கூடிய கோவலனுக்கு மிக விரிவாக அத் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருமேனியை நேரில் கண்டதுபோல் விவரமாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. இது கொல்லத் தெருவில் ஊசி விற்கும் கதை போன்றதாக நினைக்கவும் தூண்டுகின்றது.

மேற்கூறியவாறு ஆராய்ந்து முடிவு கூறுகின்ருர் இராவ் சாகிப் K. கோதண்டபாணி பிள்ளை.[18] இந்த ஆராய்ச்சியின் முடிவு சரி என்று தோன்றவில்லை. காவியப் போக்கினைக் கவனித்தாலும் வேங்கடம்பற்றிய குறிப்பு காவிய நிகழ்ச்சியுடன் எவ்வாற்ருனும் பொருந்துமாறு இல்லை என்பதையும் காட்டுகின்ருர். இக்குறிப்பு நிகழ்ச்சிகளுடன் இணையாமல் தனியாகக் கிடப்பதனுல் இஃது இடைச் செருகலாக இருக்கலாமோ என ஐயுற நேர்கின்றது என்றும் சுட்டுகின்ருர். வேங்கடத்திற்கும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கும் புகழ் தேடுவதற்காகவே யாரோ ஒருவரால் மேற்கொள்ளப் பெற்ற திட்டம் என்றே கருதுகின்ருர் அந்த அறிஞர். பெருங் கவிஞராகிய இளங்கோவடிகள் தம்

---

18. 'வடவேங்கடம்' என்ற தலைப்பில் வந்துள்ள ஆங்கிலக் கட்டுரையில் (Tamil Culture–Vol IX No. 1 Jan-Mar. 1961)

முடைய சமயப் பொது நோக்கைப் புலப்படுத்திக் கொள்வதற்காகவே இதனைச் சேர்த்திருப்பார் என்று கொள்வதற்கில்லை; அப்படிக் கொண்டாலும் திருவரங்கம் என்ற வைணவதலத்தைக் குறிப்பிடுவதனாலேயே அக் குறிக்கோள் நிறைவுபெற்று விடாதன்றோ? என்று மேலும் வற்புறுத்திக் கூறிச் செல்லுகின்றார் அந்த அறிஞர்.

அதே கட்டுரையில், திருவரங்கத்தை வருணிக்கும் பகுதியில், ஈற்றடியாகிய "திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்" என்பதிலுள்ள உம்மையை நீக்கியும், திருவேங்கடம் அங்கெழுந்தருளியுள்ள மூர்த்தி இவற்றின் வருணனையை முற்றிலும் நீக்கியும் படித்தால்,

40 திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்
52 என்கண் காட்டென்று என்உளம் கவற்ற
53 வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்

என்பதாக அமைந்து, பொருளும் பாட்டின் அமைப்பும் கெடாது பொருந்தும் என்று கூறி, திருவேங்கடத்தைப் பற்றிய வருணனை முற்றிலும் இடைச்செருகலே என்று பின்னும் வற்புறுத்திச் செல்வர். பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறாயிரப்படிக் குரு பரம்பரையிலும், இராமாநுசரின் திவ்விய சரிதையிலும் காணப்பெறும் உடையவர் காலத்தில் திருமலையில் நிகழ்ந்த சைவசமய வாதத்தைப்பற்றிய குறிப்புகளை எடுத்துக் காட்டி, இந்தச் சூழ்நிலையில் திருமலையை வைணவதலம் என்பதை நிலைநாட்டவே இத்தகைய இடைச்செருகல் யாரோ ஒருவரால் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் கூறி, தன் முடிவுக்கு அரண் அமைத்துக் கொள்வர். இந்தச் சைவ வைணவ வாதத்தைப்பற்றி அடுத்த பொழிவில் விளக்குவேன்.

கவர்ச்சியின் காரணமாக அந்த ஊரையும் அங்குள்ள மூர்த்தியையும் சற்று அதிகமாகவே அம் மறையோன் வருணித்திருத்தல் கூடும். மறையோன் மதுரைக்கு வழித் திறம் கூறும்பொழுதும் திருமால் குன்றத்தைக் குறிப் பிடுங்கால் தன் இறையன்பு மேலீட்டால் கேட்போர் திறம் நோக்காது ஆங்குள்ள வியத்தகு செய்திகளையெல் லாம் விரித்தோதுவதனைக் காணலாம். இங்ஙனம் கூறு வது இறையன்புடையாரின் இயல்பு என்பதைத் தெரி விக்கவே இளங்கோவடிகளும் அவன் பேசுமளவும் பேச விடுகின்றனர் என்று கருதலாம். எனவே, நேரில் கண்ட திருவரங்கத்தைக் குறைவாகவும் இன்னும் சென்று காணாத திருவேங்கடத்தை அதிகமாகவும் மறையோன் வருணித்துள்ளான் என்பதை மட்டிலும் காரணமாகக் கொண்டு திருவேங்கடத்தைப்பற்றிய வருணனை இடைச் செருகல் என்று பிள்ளையவர்கள் கூறுவது சிறிதும் பொருந்தாது என்பது என் கருத்தாகும்.

தவிர, இன்னோர் உண்மையும் ஈண்டு அறிதற் பாலது. சிலப்பதிகாரம் வரலாற்று அடிப்படையில் அமைந்த காவியமாயினும் அஃது ஒரு வரலாற்று நூல் அன்று. கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் மூலம் அறிந்த இளங்கோவடிகள், மேலும் அவள் வரலாற்றைப் பலர் மூலம் நன்கு தெரிந்து தெளிந்து, தம் கற்பனை யையும் துணைக்கொண்டு காவியம் அமைத்தபொழுது எத்தனையோ செய்திகளை விட்டும் இருக்கலாம்; பல செய்திகளைக் கற்பனையாகச் சேர்த்துக்கொண்டும் இருக் கலாம். ஈண்டு நாம் காணும் இரண்டு இடவருணனை களும் மாங்காட்டு[20] மறையோனின் வாயில் வைத்துப்

20. மாங்காடு என்ற பகுதி மலைநாட்டில் (கேரளம்) உள்ளது.

பேசப்பெற்றாலும் அதனைக் கூறுபவர் இளங்கோவடிகளே யாவர் என்பதை நாம் மறத்தலாகாது. திருவரங்கத்தைக் குறைவான அடிகளிலும் திருவேங்கடத்தைச் சற்று அதிகமான அடிகளிலும் கூறியவர் இளங்கோவடிகளே யன்றி மாங்காட்டு மறையோன் அல்லன். எனவே, ஒன்றன் குறைவையும் மற்றதன் நிறைவையும் காரணமாகக் கொண்டு நிறைவாகவுள்ளதை இடைச் செருகலாகக் கொள்ளல் எவ்வாற்றானும் பொருந்துவதன்று. பெருமதிப்பிற்குரியவரும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்பவருமான பிள்ளையவர்கள் ஏன் இத்தகைய முடிவுக்கு வந்தார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பொதுவாக இக்கால ஆராய்ச்சியாளர்கள் சமாதானம் சொல்ல முடியாததற்கெல்லாம் எளிய வழியாகக் கைக்கொள்ளும் முறைகளில் இடைச் செருகல் என்று தள்ளிவிடுவது ஒன்றாகும். இத்தகைய ஒரு முறையைப் பிள்ளையவர்கள் மேற்கொண்டார் என்று கூறவும் என் மனம் ஒருப்படவில்லை.

பேராசிரியர் டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் மேற்குறிப்பிட்ட திருவேங்கடத்தின் வருணனையைச் சங்க காலத்து வேங்கடத்தைக் குறிப்பதாகக் கொண்டுள்ளார்கள். அவர்,

"தாழா அது
உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமான் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி

விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ அரிதே முனாஅது
முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்
ஒண்கேழ் வனமுலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதல் மறந்தே.''[21]

[சிலைக்கும்-ஒலிக்கும்; நோன் ஞாண்-வலிய நாண்; சிலை-வில்; அருநிறம்-அரிய மார்பு; கோடு-கொம்பு; நறவு-கள்; அயரும்-சிறப்புச் செய்யும்; விழவு–திருவிழா; முனாஅது-மிகப் பழைமை வாய்ந்த; முழவு உறழ்-முழவினையொத்த; பொதினி - பழநி; ஒண்கேழ் - ஒளி விளங்கும்; ஆகம் - மார்பு; பழகுவராதல் - பயின்று தங்குதல்.]

என்ற பகுதியிலுள்ள, 'விழவுடை விழுச்சீர் வேங்கடம்' என்ற சொற்றொடரை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு முழுவதும் சமய சம்பந்தமான விழாக்கள் மலிந்தது வேங்கடம் என்று கூறுவர். இதனால் அங்கு திருக்கோயில் இருந்தமை பெறப்படுகின்றது என்றும், அதனை மையமாகக் கொண்டு விழாக்கள் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்றும் ஊகம் செய்ய வழி அமைகிறதாகச் செப்புவர். ஆனாலும், இதனைக் கொண்டு கோயிலின் இருப்பைக் கொள்வதற்குச் சிறந்த ஆதாரம் ஆகாது என்பதனையும் ஒப்புக் கொள்வர்.[22]

மேற் குறிப்பிட்ட அய்யங்கார் அவர்களின் ஊகமான முடிவு தெளிவானதாகத் தோன்றவில்லை. சங்கப் பாடல்களை ஆழ்ந்து கற்போர் விழவினைக் குறிப்

---

21. அகம்-61, 'தலைமகன் பொருள் வயிற் பிரியவேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.
22. A History of Tirupathi—பக். 14.

பிடும் பல பாடல்களைக் காண்பர். கிட்டத்தட்ட தமிழகத்திலுள்ள எல்லாச் சிற்றூர்களும் விழவு மலிந்திருந்ததாகவே கூறப்பெற்றுள்ளன. ஆண்டுதோறும் வரும் விழாக்கள், பருவந்தோறும் வரும் விழாக்கள், சமூக சமய தொழில் அரசியல் பற்றிய பல்வேறு விழாக்கள் ஆண்டுதோறும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதைச் சங்கப் பாடல்களில் கண்டு மகிழலாம்.

> "வதுவை விழவிற்
> புதுவோர்க் கெல்லாம்."[23]

என்ற புறப் பாட்டடியால் திருமண விழாக்களும்,

> "முந்நீர் விழவின் நெடியோன்."[24]

என்பதனுல் கடல் தெய்வத்திற் கெடுக்கப்பெற்ற விழாக்களும் கூறப் பெற்றிருப்பதையும், பரிபாடலில்[25] ஆற்றில் வெள்ளம் பெருகி வருங்கால் மக்கள் அதில் நீராடிப் புதுப் 'புனல் விழவு' கொண்டாடல் குறிப்பிடப் பெற்றிருப்பதையும் காணலாம். புறநானூற்றில் அரசியல் அல்லது போர் விழாக்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

> "போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
> கல்லென் பேரூர் விழவுடை யாங்கன்."[26]

[என்னை-தலைவன்; பேரூர்-பெரிய ஊர்; விழவு-போர் செய்தற்கெடுத்த விழா.]

என்ற அடிகளில் இத்தகைய விழா குறிப்பிடப்பெற்றிருத்தலைக் காணலாம்.

---

23. புறம்-372
24. புறம்-9
25. பரிபாடல்—6, 7, 10, 11, 12, 16, 20, 22. இவை வையையைப் பற்றிய பாடல்கள்.
26. புறம்-84.

குறுந்தொகையிலும் விழாவினைப் பற்றிய குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன.

"விழவு முதலாட்டி."[27]

என்ற சொற்றொடரைக் காண்க. இது தலைவி இல்லறம் நிகழ்த்த வந்த பின்பே தலைவனுக்குச் செல்வம் உண்டாயிற்று என்பதைத் தெரிவிக்கின்றது.

"உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே......
.........................
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும்இவ் வூரே."[28]

என்ற பாடலாலும் தலைவி வந்த பிறகே விழவு அயர்தற்குரிய செல்வநிலை தலைவனுக்கு உண்டாயிற்று என்பதனைக் காணலாம்.

"காதலர் உழையராகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன்."[29]

[சாறு-விழா.]

இதில் தலைவன் தலைவியுடன் இருத்தலால் விழாக்கொண்ட ஊரினர் மகிழ்வதைப் போல அவள் மகிழ்கின்றாள் என்ற குறிப்பினைக் காண்க.

"இலங்குவளை நெகிழச் சாஅ யானே
உளனே வாழி தோழி சாரல்
தழையணி அல்குல் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் நலனே."[30]

---

27. குறுந்-10.
28. குறுந்-295
29. குறுந்-41.
30. குறுந்-125,

மேற்கூறிய கருத்து இப் பாடலிலும் வருதல் காண்க.

இங்ஙனம் ஊர்கள் ஆண்டுதோறும் விழாக்களுடன் பொலிந்தனவாகக் கூறுதல் சங்கப் பாடல்களின் மரபாகத் திகழ்வதைக் காணலாம். அகநானூற்றில் வரும்,

**"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்."[31]**

[அழியா விழவு-என்றும் நீங்காத விழா.]

என்ற அடியும், புறநானூற்றில் வரும்,

**"மடியா விழவின் யாணர் நன்னாட்டு."[32]**

[மடியா-நீங்காத]

என்ற அடியும், ஆண்டு முழுவதும் விழா நீங்காத ஊர் குறிப்பிடப் பெறுதலைக் காண்க; இந்த விழா பற்றிய குறிப்பு,

**"வேறுவே றுயர்ந்த முதுவாய் ஒக்கல்
சாறுஅயர் மூதூர் சென்றுதொக் காங்கு"[33]**

[சாறு-விழவு.]

என்று பட்டினப்பாலையிலும்,

**"நீறுஅடங்கு தெருவின் சாறுஅயர் மூதூர்."[34]**

[சாறு-விழா.]

என்று சிறுபாணாற்றுப் படையிலும் வருகின்றது. சிற்றூர்களும் விழாவினால் பொலிந்தவாகக் குறிப்புகள் உள்ளன.

---

30. குறுந். 125.
31. அகம்-115.
32. புறம்-212.
33. பட்டினப்—வரி 214-215.
34. சிறு பாண்—வரி 201.

"விழவு அகலு ளாங்கண் சீறூர்,"[35]

என்ற புறப்பாட்டுக் குறிப்பினையும் காண்க. ஒவ்வோர் இல்லமும் விழவுடன் பொலிந்ததாகவும் குறிப்பு உள்ளது.

"மாடந் தோறும் மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே."[36]

[மைவிடை-செம்மறிக் கிடா.]

என்பதனால் இதனை அறியலாம். இங்ஙனம் இல்லந் தோறும், ஊர்தோறும், நாடு முழுவதும் விழாக்கள் மலிந்திருந்த செய்தியைச் சங்கப் பாடல்களில் காணலாம்.

எனவே, விழாபற்றிய குறிப்பு வேங்கடத்திற்கு மட்டிலும் சிறப்பாக அமையவில்லை என்பதனை அறிய வேண்டும். அன்றியும், பேராசிரியர் அய்யங்கார் அவர்கள் காட்டிய பாடலில் இவ் விழாக்கள் சமயச் சார்புடையவை என்பதற்கு யாதொரு சான்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, சங்க காலத்தில் சமயத்தின் அடிப்படையாகவோ வேறு காரணங் கருதியோ திருப்பதி பிரபலமடைந்திருந்தது என்பதற்கு நம்பகமான சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

**'வேங்கடம்:—பெயர் விளக்கம்'**

இனி, 'வேங்கடம்' என்ற சொல்லின் பொருளைக் காண்போம். 'வேங்கடம்' என்ற கூட்டுச் சொல் (Compound word) 'வேம்', 'கடம்' என்ற இரண்டு சொற்களாலாயது. வேம்+கடம்=வேங்கடம் என்றாயிற்று. 'கடம்' என்பது பாலை நிலத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

---

35. புறம்-65.
36. புறம்-34.

"பெயன்மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம்"[37]

[துறந்த-பெய்யாதொழிந்த; புலம்பு உறு-தனிமை மிக்க; கடம்-பாலை நிலம்; காய்விடு-காய் வெடிக்கும் பொழுது; கடுநொடி-கடிய ஒலி; துதை-நெருங்கிய; புறவு-புறாக்கள்; இரிக்கும்-நீங்கச் செய்யும்.]

என்ற குறுந்தொகைப் பாடலில், 'கடம்' என்ற சொல் பாலையைக் குறித்தமை காண்க. சிலப்பதிகாரத்திலும்,

"கடம்பல கிடந்த காடுடன் கழிந்து."[38]

[கடம்-காட்டகத்து நெறி.]

என்ற அடியிலுள்ள 'கடம்' பாலை நிலத்து வழியினைக் குறிக்கின்றதனைக் காண்க. 'கடம்' என்பதற்கு உரையாசிரியர் 'அருஞ்சுரம்' என்று பொருள் கூறுவர். பிங்கலந்தை 'கடம்' என்பதனை 'மலைச்சாரல்' என்று கூறும்.

"புறவணி கொண்ட பூநாறு கடத்திடை."[39]

என்ற நற்றிணை அடியில், 'கடம்' என்பது 'புதர்கள் அடர்ந்த காடு' என்ற பொருளில் வந்துள்ளது. 'வேம்' என்பது 'எரிதல்' என்ற பொருளையுடையது. எனவே, 'வேங்கடம்' என்பது 'கொதிக்கின்ற நீரற்ற சுரம் அல்லது மலைச் சாரல்' என்று பொருள்பட்டுப் பாலை நிலத்தைக் குறிக்கின்றது. கலித்தொகையிலும்,

---

37. குறுந்-174.
38. சிலம்பு, காடுகாண்-வரி 90.
39. நற்றிணை-48.

"வெவ்விடைச் செலன்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை

....................................

அன்னூர் இருவரைக் காணிரோ பெரும!
காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை
ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய."[40]

என்ற பாடற்பகுதியிலுள்ள 'கடம்' என்ற சொல் 'பாலை நிலம்' என்ற பொருளிலேயே வருகின்றது. இனி, தமிழ் கூறு நல்லுலகத்திற்கு வடக்கேயுள்ள நிலப் பகுதியின் இயல்பினைக் காண்போம்.

டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் அப்பகுதியின் நில இயல்பினை அடியிற் கண்டவாறு தம் அரிய நூலில் குறிப்பிடுவர்.

"கிழக்கு மலைத் தொடர்கள் தமிழகத்தின் வட எல்லையில் கடற்கரை ஓரமாகச் சென்று கிருஷ்ணை நதியைத் தாண்டியதும் பல இணைத் தொடர்களாகப் பிரிந்து செல்லுகின்றன. அவற்றுள் கிருஷ்ணை நதிக்குத் தென்பாலுள்ள தொடர்களில் தென் திசையை நோக்கி சென்னைக்கு 13° வடகுறுக்கை (North Latitude) நீண்டு செல்லும் மூன்று இணைத் தொடர்கள் எடுப்பாகப் புலனாகின்றன. அவற்றுள் கடற்கரைக்கு அண்மையிலுள்ள தொடர் கிட்டத்தட்ட நேராகச் செல்லும் ஒரே தொடராக அமைந்துள்ளது. இரண்டாவது தொடர் ஒழுங்கற்ற முறையில் அமைந்த குன்றங்களின் தொகுதியாகும். அவையும் கிருஷ்ணை நதியை யொட்டித் தொடங்கி கர்நூலுக்குக் கீழ்ப்பகுதியில் சென்று கடப்பை மாவட்டத்தில் அரைவட்ட வடிவமான பகுதியில் சிதறிக் கிடக்கும் பகுதிகளாகக் காணப்படுகின்றன.

40. கலி-9.

அவற்றுள் ஒரு பகுதி 'சேஷாசல மலைகள்' என வழங்கப் பெறுகின்றன. ஆயினும், மேற்குறிப்பிட்ட மூன்று தொடர்களில் முக்கியமான தொடர் தென்திசையில் மேலும் கடற்கரையை நோக்கிச் சென்று சென்னைக்கு வடக்கில் சில மைல்கள் தொலைவிலுள்ள பொன்னேரி வரையிலும் பரவியுள்ளது. மேலும் ஒழுங்கற்ற நிலையிலும் தாழ்வான உயரத்திலும் உள்ள இன்னொரு தொடர் கர்னாடகப் பீடபூமியின் அடிப்பகுதியினின்றும் தொடங்கி, வடதிசையாகச் சென்று அனந்தபுரம் கர்நூல் மாவட்டங்களில் சிதறிய நிலையில் அமைந்து கிடக்கின்றது. இவற்றுள் நடுப்பகுதியில் அமைந்துள்ள மலைக்கூட்டங்கள் கர்நூல் மாவட்டத்தில் நல்ல மலைகள் (நல கொண்ட) என வழங்குகின்றன. அவை அங்கிருந்து தென் திசையை நோக்கிச் சென்று ஓர் ஒற்றைத் தொடர் வடிவத்தில் திருப்பதி, காளத்தி இவற்றின் அருகிலுள்ள மலைக் கூட்டங்களைச் சந்திப்பதுபோல் அமைந்துள்ளன. ஆகவே, இந்த மலைகள் சென்னைக்கு அரை டிகிரி வடக்கில் ஓர் எல்லைப்புறம் போல் அமைந்துள்ளன. இவை கர்நாடகப் பீடபூமியிலிருந்து பொன்னேரி அருகிலுள்ள கடற்கரை வரையிலும் கீழ்த்திசையை நோக்கி நீண்டு பரவி தமிழகத்தின் எடுப்பான வடபுற எல்லைபோல் அமைந்து கிடக்கின்றன."[41]

மிகப் பழங்காலத்தில் இன்று விசாகப்பட்டினத்தருகில் இருப்பதுபோல் கடல் கிழக்குப் பக்கத்தில் மலைகட்கு மிக அருகில் இருந்தது. இன்று கிழக்குப் பக்கத்தில் கடலுக்கும் மலைகட்கும் இடையிலுள்ள குறுகலான கடற்கரைப் பகுதி தொல்காப்பிய காலத்திற்கு 2500 அல்லது 3000 ஆண்டுகட்குப் பிறகு புதிதாக உண்டாகியிருத்தல்

---

41. A History of Tirupathi - பக் 1-2.

வேண்டும். அல்லது இன்றுள்ள கடற்கரைக்குக் கிழக்கிலிருந்த மலைகளைக் கடல் விழுங்கியிருத்தல் வேண்டும். கிழக்குக் கடற்கரையிலும் மேற்குக் கடற்கரையிலுமுள்ள கற்பாறைகளைக் கடல் அடித்துச் சென்றது என்பது சிறுகாக்கைப் பாடினியாரின் பாடற்பகுதியால் உறுதியாகின்றது. கடலுக்கும் மலைக்கும் நேரிட்ட போரினைக் கற்பனை நயந்தோன்றக் கூறும் பாடற்பகுதி இது:

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே."[42]

இதில் வடதிசைக்கண் ஆந்திரநாடு வரம்பாகக் கூறப் பெற்றிருப்பதைக் காண்க.

வடக்கில் கிருஷ்ணை நதிக்கும் துங்கபத்திரை நதிக்கும் வடபெண்ணை நதிக்கும் சற்றுத் தெற்கிலும் குன்றுகளும் மலைத் தொடர்களும் சூழ்ந்த நிலப்பகுதி தென்னிந்தியாவில் மிக வெப்பமான பகுதியாகத் திகழ்வதை இன்றும் காணலாம். சுற்றுப் புறத்திலுள்ள கற்பாறைகளிலிருந்து அதிகரிக்கப்பெற்றுப் பரவும் கோடைகாலக் கதிரவனின் வெப்பம் 120-லிருந்து 125° F வரையிலும் எட்டுகின்றது. இப் பகுதிகளில் கதிரவனின் வெப்பத் தாக்குதலால் மரிப்பவர்களைப்பற்றியும் நாம் கேள்வியுறாமல் இல்லை. கோடைக் காலத்தில் மக்கள் பெரும்பாலும் பகல்நேரத்தில் வீட்டைவிட்டுக் கிளம்புவதில்லை. நம் உடம்பிலுள்ள ஈரம் வெப்பமான காற்றினால் உறிஞ்சப் பெறுவதால் நண்பகலில் வறட்சி மேலிட்டு உடலில்

42. சிறுகாக்கைப் பாடினியார்

ஒருவித எரிச்சல் தோன்றுவதைஉணர்கின்றோம். ஆகவே, வறண்ட தன்மையுடைய இப்பகுதி சங்க நூல்களில் குறிப்பிடப்பெறும் 'வேங்கடம்' என்ற நாட்டுப்பகுதியைப் பெரும்பாலும் ஒத்திருப்பதை அறியலாம். அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இருப்புப்பாதைகளின் காரணமாக இப்பகுதியிலுள்ள ஒரு சில நகரங்களைத் தவிர, ஏனைய பகுதிகள் யாவும் இன்றும் பிற்போக்குத் தன்மையுடையனவாகவே இருப்பதைக் காண்கின்றோம். அண்மைக் காலம் வரையில் இப்பகுதி கிட்டத்தட்ட ஆண்டு தோறும் வற்கடத்தாலும் கொள்ளை நோய்களாலும் தொற்று நோய்களாலும் பீடிக்கப்பெற்று இருந்தது. ஏதோ மழைக்காலத்தில் இப்பகுதியிலுள்ள ஆறுகளிலும் ஓடைகளிலும் வெள்ளம் பெருகி வழிந்தாலும், அது சமவெளிப் பகுதியைவிட மிகவும் தாழ்ந்திருப்பதால் அவை பாசனத்திற்குப் பெரும்பாலும் பயன்படுவதில்லை. ஆயினும், தற்காலத்தில் சிறுசிறு அணைகளை அமைத்து நீர்த்தேக்கத்தை உண்டாக்கும் திட்டங்களால் இப்பகுதியைச் சார்ந்த பெரும்பாலான இடங்கள் கணிசமான அளவுக்கு மாற்றங்கள் அடைந்து வருகின்றன.

**வேங்கடத்தை ஆண்ட அரசர்கள் :**

இனி, இப்பகுதியை ஆண்ட அரசர்களைப்பற்றி ஒரு சிறிது அறிந்து கொள்வோம். எட்டுத்தொகை நூல்களாகிய அகநானூற்றிலும் புறநானூற்றிலும் 'புல்லி' என்ற ஓர் அரசன் குறிப்பிடப் பெறுகின்றான். புறநானூறு 'ஆதனுங்கன்' என்ற இன்னொரு அரசனையும் குறிப்பிடுகின்றது. இவர்களைப்பற்றிச் சங்க நூல்களில் அறியக் கிடக்கும் செய்திகளைக் கோவைப்படுத்திக் கூற முயல்வேன்.

**புல்லி:** முதலில் இவனைப்பற்றி அறிந்த செய்திகளைக் கூறுவேன். இவன் தமிழகத்தின் வடஎல்லையாக விளங்கும்

வேங்கடத்தையும் அதனைச் சூழ்ந்த நாடுகளையும் ஆண்டவன். புல்லி ஆண்ட நல்ல நாட்டைக் கடந்தால் வடுகு மொழி வழங்கும் வடுகர்நாடு வந்துறும் என அறியக் கிடப்பதால், தமிழகத்தின் வடஎல்லையைக் காத்து நின்றவன் இப் புல்லி எனக் கூறுதல் தவறாகாது.

"புடையலம் கறழ்கால் புல்லி குன்றத்து
நடையரும் கானம் விலங்கி, நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேஎம்."[43]

[புடையல்-ஒலிக்கின்ற; நடைஅரு-செல்லற்கு அரிய; விலங்கி-கடந்து; நோன்சிலை-வலிய வில்; பகழி-அம்பு; பிழி-கள்; கலி-செருக்கு; மொழி பெயர்-வேற்று மொழி வழங்கும்; தேஎம்-தேசம்.]

என்ற அகப்பாட்டடிகளால் இது தெளிவாகின்றது. இப் புல்லி என்பான் கள்வர் இனத்தாரின் தலைவனாவான். சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் அரசியல் அமைதியைக் குலைத்து நாட்டைப் பாழாக்கிய களப்பிரர் என்ற இனத்தாரையும் கள்வர் குலத்தவராகவே கருதுவர் சில வரலாற்று ஆய்வாளர்கள். தென்னவர் என்று வழங்கப் பெறும் பாண்டியர் கள்வர் தலைவராவர் என்றும், அப் பாண்டியர் படைக்குப் பயன்பெறும் யானைகள் யாவும் கள்வர் தலைவனாகிய புல்லி வாழும் வேங்கடத்தினின்றே வந்தன என்றும் அகப் பாடல்களால் அறியக் கிடக்கின்றன.

"ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்;
ஏவல் இளையர் தலைவன்; மேவார்
அருங்குறும் பெறிந்த ஆற்றலொடு பருந்துபடப்

43. அகம்-295

"பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்
கெடா நல்லிசைத் தென்னன்."[44]

[ஆ-பசு; அருகுறும்பு-அரிய அரண்; படு-வந்து கூடும்; செரு-போர்; செல்-இடி; இசை-புகழ்; தென்னன்-பாண்டியன்.]

"வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
மறப்போர் பாண்டியர்."[45]

[பயந்த-அளித்த.]

என்ற மதுரைக் கணக்காயனாரின் கூற்றுகளால் மேற் கண்ட செய்திகளை அறியலாம். இதனால் யாதோ ஒரு வகையால் புல்லி பாண்டியர் குலத்தோடு தொடர் புடையவனாதல் தெரிகின்றது. புல்லி ஆண்ட வேங்கட நாடு வேழங்கள் மலிந்த நாடு. வேங்கடத்தில் கொண்ட வெங்கோட்டு யானைகளை உடையது பாண்டியர் படை என்று மதுரைக் கணக்காயர் கூறுவதையும் காண்க.

புல்லி ஆண்ட நாட்டைச் சார்ந்த வீரர்கள் தாம் வாங்கும் பொருள்களுக்கெல்லாம் யானைகளையும் யானைக் கோடுகளையுமே விலையாகக் கொடுப்பர். இந்த வீரர்கள் தம் நாட்டையடுத்த காட்டினுள் புகுந்து பெண்யானை கள் வருந்துமாறு அவற்றின் கன்றுகளைக் கைப்பற்றுவர். அவற்றை வெண்கடம்ப மரக்கிளையினின்றும் உரித் தெடுத்த நாரால் ஆன கயிற்றால் கட்டிக் கொணர்ந்து, தம் ஊரில் உள்ள கள்ளுக் கடைகளின் வாயிலிடத்தே தாம் வாங்கி உண்ட கள்ளின் விலையாகக் கட்டிப் போவர்.

44. அகம்-342.
45. அகம்-27.

"கறையடி மடப்பிடி கானத் தலறக்
களிற்றுக்கன் றொழித்த உவகையர் கலிசிறந்து
கருங்கால் மாஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொளி வெண்ணார் அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவுநொடை நல்லில் புதவுமுதற் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி."[46]

[கறை-உரல்; பிடி-பெண்யானை; ஒழித்த-பிரித்துக் கொண்ட; கலி-செருக்கு; கருங்கால் மரம்-கடம்ப மரம்; கொழுகொம்பு-வளவிய கிளை; பெரும்பொளி-பெரிதாக உரித்த; வெள்நார்-வெள்ளிய நார்; பூட்டி-கட்டி; நுடங்கும்-அசையும்; நியமம்-அங்காடி; நறவு-கள்; கொடை-விற்கும்; புதவு முதல்- வாயில்.]

என்ற கல்லாடனார் பாட்டால் இதனை அறியலாம்.

வீரர்களின் செயலோடு நாம் வீரர்களின் தலைவனாகிய புல்லியின் செயலையும் அறிந்துகொள்ள விழைவது இயல்பேயன்றோ? மாமூலனார் கூறுவதைக் கேட்போம்:

"உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வயக்கிய மாவண் புல்லி."[47]

[உரும்-இடி; சிலைக்கும்-ஒலிக்கும்; நோன்ஞாண்-வலிய நாண்; வன்சிலை-வலிய வில்; நிறம்-மார்பு; அண்ணல்-தலைமை வாய்ந்த; கோடு-கொம்பு; நறவு-

46. அகம்-83.
47. அகம்-61.

கள்; நொடை-விற்ற; நாள் மகிழ் அயரும்-நாளோலக்கச் சிறப்புச் செய்யும்; மழபுலம்-மழவரது நிலம்.]

புல்லி வீரர் பலருடன் கானகம் சென்று களிறு வேட்டை யாடி, அவற்றின் வெங்கோடுகளைக் கொணர்ந்து அக் கோடுகளையும் அவற்றை விற்றுப்பெற்ற நெல்லுடன் நாளவைக்கண் தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்கு ஈந்து இன்பம் அடைவான். இங்ஙனம் இவர்களது செயலால் பிடியினை இழந்த களிறும், களிற்றினை இழந்த பிடியும் அழுது கூப்பிடும் பேரொலி அம் மலையகத்தே மாறாது ஒலிக்கும் என்று புலவர்கள் அவனது நாட்டைப் புகழ்ந்து பேசுவர்.

வேழம் வீழ்த்தும் வன்கண்மையுடையாரது செயல் களைக் கூறிய சங்கப் புலவர்கள் வலக்கை இடக்கை அறி யாத ஆயர்களின் செயல்களையும் புலப்படுத்தியுள்ளனர்.

"கோடுயர் பிறங்கல் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
................................
குடவர் புழுக்கிய பொன்கவிழ் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி"[48]

[கோடு - சிகரம்; பிறங்கல் - பாறை; புலம் - நாடு; படர்ந்த-அடைந்த; வம்பலர்-புதியர்; காய்பசி-மிக்கபசி; தீரிய—ஒழிய; குடவர்-இடையர்; புழுக்கிய—ஆக்கிய; புன்கம் - சோறு; பகுக்கும் - அளிக்கும்; நிரை-பசுக் கூட்டம்; குழீஇய-மிகப் பெற்ற.]

என்ற மாமூலனார் பாட்டில் அந்நாட்டு ஆயர் தம் நாடு நோக்கி வருவாரை விருந்தாக ஏற்று வரகு அரிசியால்

48. அகம்-393.

அட்ட சோற்றை ஆவின் பாலோடு கூட்டி அவர்க் களித்து வருவிருந்து பார்த்திருக்கும் பண்புடையாளர் என்று போற்றி உரைக்கின்ருர். அவரே இன்னொரு பாட்டில் கூறுவதையும் கேட்போம்.

“பயந்தலேப் பெயர்ந்து மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலேப் பகுக்கும்
புல்லி நன்ளுடு”[49]

[பயம்-நீர்; பெயர்ந்து-அற்று; மாதிரம்-திசைகள்; வெம்ப-கொதிக்க; வம்பலர்-புதியர் (வழிப் போக்கர்); கோவலர்-இடையர்; மழவிடை-இளேய எருது; தீம்புளி-இனிய புளிச்சோறு; செவி அடை-(பசியால்) காதடைப்பு; பகுக்கும்-அளிக்கும்.]

பொருள்வயிற் பிரிந்து செல்லும் புதியர் கோடையின் கொடுமையால் நீர்நிலேகள் எல்லாம் வற்றிப்போன நிலேயில், தம் நாட்டின் வழியாகச் செல்லுங்கால் எருதுகளின் கழுத்தில் கட்டி வைத்த புளிச் சோற்றைத் தேக்கிலேயில் வைத்துத் தருவர் என்று ஆயர்களின் விருந்தோம்பும் பண்பினே எடுத்துக் கூறுவர்.

இங்ஙனம் வீரரும் ஆயரும் கலந்து வாழும் வேங்கட நாடாண்ட புல்லி இரவலர்க்கு இல்லே என்ளுது ஈயும் வண்மையும், அதனுல் வளமார்ந்த புகழும் உடையவனுய்த் திகழ்ந்தான். அத்தகையவன் அவன் என்று அறிந்த புலவர் பெருமக்கள் அவனேப் பெருகப் பாராட்டினர்.

---

49. அகம்-31

"பொய்யா நல்லிசை மாவண் புல்லி"[50]

என்றும்,

"நெடுமொழிப் புல்லி"[51]

என்றும் மாமூலனார் சுருங்கிய வாய்பாட்டால் பாடிப் போற்றுவதைக் காண்க.

திரையன்: இவன் தமிழகத்துப் பேரரசர் மூவரோடும் ஒருங்கு வைத்து மதிக்கத்தக்க மாண்புடையவன். பெரும்பாணாற்றுப்படையின் தலைவன். கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாராட்டப் பெற்றவன். இவனைப் பற்றி அகநானூற்றில் வரும்,

"வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை"[52]

"செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி"[53]

என்ற குறிப்புகளால் இவன் வேங்கட நாடாண்ட விழுச்சிறப்புடையான் என்பதும், பூஞ்சோலை பல சூழ்ந்த பவத்திரி என்னும் ஊர் உடையான் என்பதும் இவனைப் பற்றி அறியத் தக்க செய்திகளாகும். 'பவத்திரி' என்னும் ஊர் கிழக்குக் கடற்கரையில் தற்காலக் கூடூருக்கு அருகிலுள்ளது.

பெரும்பாணாற்றுப் படையால் இவனைப்பற்றி அறியக் கிடக்கும் செய்திகள் இவை: "திருமாலை முதல்வனாகக்

---

50. அகம்-359.
51. அகம்-393.
52. அகம்-85.
53. அகம்-440.

கொண்ட குடியிற் பிறந்தவன் திரையன்; திரைதரு மரபின் வழிவந்தவன். மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும் முரசு முழங்குதானை மூவேந்தரின் சிறப்புடையவன். நீர்ப்பேர் என்னும் பெயருடையதொரு பேரூர் இவனுக்கு உரியது. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய பெருமகன் இவன். யானைகள் கொணரும் விறகினால் வேள்வி வேட்கும் அந்தணர் நிறைந்த வேங்கட மலையும் அவன் ஆட்சிக்குட்பட்டது.[54] இவன் வரலாறு குறித்துப் பல்வேறு கருத்துக்களைக் கூறுவர். விரிவஞ்சி அவற்றை யான் ஈண்டுக் கூறாமல் விடுக்கின்றேன்.

ஆதனுங்கன்: இவன் ஒரு குறுநில மன்னன். வேங்கட மலையும் அதனைச் சூழ உள்ள நாடும் இவனுக்கு உரியவை. இவனுக்குப்பின் வந்தவனே புல்லி என்ற அரசனாவான். இவன் இரவலர் இன்மை தீர்க்கும் இனிய உள்ளம் படைத்தவன். கள்ளில் ஆத்திரையனார் என்னும் தொண்டை நாட்டுப் புலவர் ஒருவர் இளையராய் இருந்த காலத்தே இவனைச் சென்று கண்டார். தன்பால் வந்த புலவரை ஆதனுங்கன் அன்புடன் வரவேற்று அருகில் இருத்தி "பிள்ளைப் பொருந, கோடை முற்றி வற்கடம் உற்ற வறுமை மிகு காலத்தே, உறுபொருள் ஈந்து உற்ற துயர் தீர்ப்பாருள் அடியேனையும் ஒருவனாக உள்ளுவாயாக"[55] எனச் சொல்லி வேண்டுவன நல்கினன் என்பது வரலாறு.

ஆதனுங்கனின் அருங்குணத்தை ஆத்திரையனார் நன்கு உணர்ந்து அவனைத் தம் உள்ளத்தே வைத்துப் போற்றுவாராயினர். அவனை மறப்பதும் அவருக்கு

54. பெரும்பாண். வரி 29-37; வரி 319,
55. புறம்-389,

அரிதாயிற்று. ஒரு சமயம் ஆத்திரையனார் தமது ஊராகிய கள்ளிலை விட்டு வேங்கடத்திற்குச் சென்று ஆதனுங்கனைக் கண்டு அளவளாவி இருந்தார். இருவரும் சொல்லாடுகையில், ஆத்திரையனார் தமக்கு ஆதனுங்கன் பால் உள்ள அன்பினை எடுத்தோத வேண்டிய நிலை உண்டாயிற்று. அவர்,

"எந்தை வாழி ஆத னுங்க! என்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின், மறக்கும் காலை
என்உயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின், மறக்குவென்"[56]

என்று பாடினார்.

ஆண்டுகள் பல கழிந்தன. ஆதனுங்கனும் இறந்தான். அஃதறிந்து வேங்கடஞ் சென்ற ஆத்திரையனார்; அவன் நாட்டை, அவன் வழிவந்த முதியன் என்பான் ஆண்டு வருதலைக் கண்டார். அவன்பால் தான் இளைஞனாய் இருந்த காலத்தில் வந்தமையும், அப்பொழுது ஆதனுங்கன் தன்பால் காட்டிய அன்புடைமையையும் எடுத்துக் கூறி,

"ஆத னுங்கன் போல நீயும்
பசித்த ஒக்கல் பழங்கண் வீட
வீறுசால் நன்கலம் நல்குமதி பெரும"[57]

[ஒக்கல்-சுற்றம்; பழங்கண்-துன்பம்; வீட-கெட; வீறுசால்-சிறப்பு அமைந்த]

என்று வாழ்த்தினார். இதற்குமேல் ஆதனுங்கனைப் பற்றிய செய்தி அறியக் கூடவில்லை.

---

56. புறம்-175
57. புறம்-489.

அன்பர்களே, மேற்கூறிய மூன்று அரசர்களும் வேங்கடத்தை ஒருவர்பின் ஒருவராக ஆண்டனரா என்பதனை அறியக் கூடிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயின், இவர்கள் மூவரும் நீண்ட எல்லையாக இலங்கும் வேங்கடத்தின் வெவ்வேறு பகுதிகளை ஆண்டதாக அறியக் கிடக்கின்றது. ஒரு சில சங்கப் பாடல்களாலும் கல்வெட்டுக்களாலும் மூவரில் ஒருவர் கிழக்குப் பகுதியையும், மற்றொருவர் மேற்குப் பகுதியையும், பிறிதொருவர் நடுப்பகுதியையும் ஆண்டதாகக் கருதலாம். இதனை மேலும் விளக்க முயல்கின்றேன். 'நுங்கன்' என்ற பெயரையும் பட்டத்தையும் உடைய அரசர்கள் கிருஷ்ணை நதிக்கருகிலுள்ள பகுதியை பதினான்காவது, பதினைந்தாவது நூற்றாண்டுகள் வரையிலும் ஆண்டதாக அறிகின்றோம். பதினான்காவது நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று நுங்கதே மகாராயர், நுங்கராயர் என்ற இரண்டு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. பதினைந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு[58] வீர நுங்கன் என்ற பெயருடைய அரசன் ஒருவன் தற்சமயம் பிரகாசம் மாவட்டத்தைச் சார்ந்த ஓங்கோல் வட்டத்திலுள்ள கனுபார்த்தியினை ஆண்டதாகக் குறிப்பிடுகின்றது.[59]

அகநானூற்று பாடலால்[60] பவத்திரி என்னும் ஊர் கூடுருக்கருகிலுள்ளதாக அறியக்கிடக்கின்றது எனக் குறிப்பிட்டேன். மேலும், நெல்லூர் கல்வெட்டுக்களால்[61] பவத்திரி என்னும் ஊரைக் கடல் கொண்டது என்றும்

58. நெல்-கல்வெட்டு 0.55 பக்கம் 988-90.

59. புறம்- 89. அவ்வை சு. துரைசாமி பிள்ளை உரை காண்க.

60. அகம்-340.

61. Nel. Ins. Gudur No. 88, 105.

அது "கடல் கொண்ட பவத்திரி கோட்டம்" என்ற கல் வெட்டுச் சொற்ளெுடரால் அறியக்கிடக்கின்றது என்றும் நாம் அறிகின்ரும். இந்தக் கடல் கோள்களுக்குப் பிறகு திரையன் தன் தலைநகரைக் காஞ்சிக்கு மாற்றிக் கொண்டான் என்பது தெளிவாகின்றது. காஞ்சி மாநகர் இளந்திரையனின் தலைநக்ராக இருந்தது என்பதனையும், அது வடநாட்டிலுள்ள நலாந்தா தட்சசீலம் போன்று பல்கலைக் கழகங்களைக் கொண்டிருந்தது என்பதனையும் நாம் அறிவோம்.

புல்லி என்பான் வேங்கடத்தின் மேற்குப் பகுதியை ஆண்டிருத்தல் கூடும். இப்பகுதி பாண்டியர் அரசாண்ட பகுதிக்கு மேற்பகுதியாக அமைந்திருந்தது என்பது அடியிற்கண்ட சங்கப் பாடல்களின் பகுதிகளால் அறியக் கிடக்கின்றது.

"செந்நுதல் யானை வேங்கடம்"[62]

"ஓங்கல் யானை உயங்கிமதம் தேம்பிப்
பன்மா ஒருசிறைப் பிடியொடு வதியும்
புடையலங் கழற்கால் புல்லிக் குன்றத்து"[63]

"ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்பும்
கடுமான் புல்லி காடிறந் தோரே"[64]

மேற்குத் தொடர்ச்சிமலை இயல்பாக யானைகள் வாழும் இடமாகும். அவை பெரும்பாலும் அண்மையிலுள்ள மலைப் பகுதிகளில் அலைந்து திரிந்திருத்தல் கூடுமேயன்றி

62. அகம்-265
63. அகம்-292
64. நற். 15.

கிழக்குக் கடற்கரைப் பகுதியையோ அன்று கிழக்குப் பகுதியையோ எட்டியிருத்தல் முடியாது.

**வேங்கடத்தின் சூழ்நிலை முதலியவை:**

தமிழ் கூறும் நல்லுலகிற்கு வடபால் உள்ள நாட்டுப் பகுதியும் மேலே குறிப்பிட்ட சங்க காலத்து வேங்கட நாட்டுப் பகுதியும் இயற்கையமைப்பிலும் தட்ப வெப்ப நிலைகளிலும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் காணப்படுகின்றன. அகப்பாட்டில் கூறப்பெற்றுள்ள இப்பகுதியின் இயற்கையமைப்பினைக் காட்டுவேன்.

**''நிலநீ ரற்று நீள்சுனை வறப்பக்**
**குன்றுகோ டகையக் கடுங்கதிர் தெறுதலின்**
**என்றூழ் நீடிய வேய்படு நனந்தலை**
**நிலவுநிற மருப்பிற் பெருபகை சேர்த்தி**
**வேங்கை வென்ற வெருவரு பணைத்தோ ள்**
**ஓங்கல் யானை உயங்கிமதம் தேம்பிப்**
**பன்மர ஒருசிறைப் பிடியொடு வதியும்**
**கல்லுடை அதர கானம் நீந்திக்**
**கடல்நீ ருப்பின் கணஞ்சால் உமணர்**
**உயங்குபக டுயிர்ப்ப அசைஇ முரம்பிடித்து**
**அகலிடம் குழித்த அகல்பாய்க் கூவல்**
**ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும்**
**புடையலங் கழற்காற் புல்லி**
**நடையருங் கானம்''**[65]

[வறப்ப-வரட்சியடைய; அகைய-எரிய; நீடிய-மிக்க; நனந்தலை-அகன்ற இடம்; மருப்பு-கொம்பு; வேங்கை-வேங்கைப்புலி; வெருவரு–அச்சம் தரும்; உயங்கி-வருந்தி; தேம்பி-வாடி; சிறை-பக்கம்; அதர-நெறிகளை

---

65. அகம்-295.

யுடைய; பகடு-எருது; உயிர்ப்ப-இளைப்பாற; நீந்தி-கடந்து; முரம்பு-வன்னிலம்; குழித்த-தோண்டின; கூவல்-கிணறு; வம்பலர்-புதியர்; அசைவிட-தளர்ச்சி நீங்க; புடையல்-கலிக்கின்ற; நடை அரு-செல்வதற்கு அரிய]

என்ற பாடலில் நாட்டின் இயற்கையமைப்பு கூறப் பெறுகின்றது. எங்கும் நிலம் நீரின்றிக் கிடக்கின்றது. மலைச் சுனைகள் யாவற்றிலும் நீர் வற்றி விட்டது. காய் கதிர்ச் செல்வனிடமிருந்து கனன்றுவரும் கதிர்கள் குன்றுகளின் உச்சியில் நெருப்பைக் கக்குகின்றன. அகன்ற பக்க மலைகளில் மூங்கில்கள் காய்ந்து கரிகின்றன. வேங்கைப் புலிகளையும் கொல்லும் திறம் வாய்ந்த மாபெரும் களிறுகள் தம்முடைய பெரிய துதிக்கைகளை நிலவு நிற மருப்புகளில் சுற்றிக்கொண்டு ஆற்றலிழந்து தளர்ந்த நிலையில் தம் பிடிகளுடன் அங்கு மிங்கும் இலைகளினிடைக் காணப்பெறும் மரங்களின் நிழலில் தங்கிக் கிடக்கின்றன. உப்பு மூட்டைகளை ஏற்றியுள்ள வண்டிகளுடன் செல்லும் உமணர்கள் எருதுகளை வண்டிகளினின்றும் அவிழ்த்து இளைப்பாற விடுகின்றனர். வன்னிலத்தை இடித்து அகன்ற இடத்தில் தோண்டப் பெற்ற கிணறுகளில் வழிப்போக்கர்களின் நீர்விடாயைத் தீர்க்கும் அளவுக்குக் கூட நீர் ஊறுவதில்லை. குன்றுகளையுடைய இத்தகைய புல்லி நாட்டில் மக்கள் செல்லுவதற்கே அஞ்சுகின்றனர்.

இன்றும் அந்நிலப் பகுதி மேற்கூறியவாறே காணப் பெறுகின்றது. ஆயின், யானைகளும் வேங்கைப் புலிகளும் காணப்பெறுவதில்லை. அவற்றிற்குப் பதிலாக காட்டுப் பன்றிகளும் நரிகளும் அப்பகுதியில்அலைந்து திரிகின்றன. இன்று உப்பு வாணிகர் அப்பகுதிகளில் தென்படுவதில்லை. ஆனால், நொடியுள்ள அக்காட்டு நெறிகளில் மாட்டு

வண்டிகள் வித்தைகள் செய்வது போல் எழுந்தும் விழுந்தும் செல்லும் காட்சிகளைக் காணலாம். நாடு விடுதலை பெற்ற பிறகு சில பகுதிகளிலுள்ள இந்நெறிகளில் மண் சாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன.

தொண்டையர் ஆட்சிக்குக் கீழிருந்த நாட்டுப் பகுதியும் மேற் கூறப்பெற்ற புல்லி ஆண்ட பகுதியை விடச் சிறந்திருக்கின்றது என்று சொல்லுவதற்கில்லை. இப்பகுதியைப்பற்றிய,

''நிழற்கவின் இழந்த நீரில் நீளிடை
அழலவிர் அருஞ்சுரம் நெடிய வென்னூர்''[66]

[கவின்-அழகிய; நீர்இல்-நீர் இல்லாத; நீள் இடை-நீண்ட இடம்; அழல்-நெருப்பு]

என்ற அகநானூற்று அடிகளால் இது நீரற்ற வறண்ட இடம் என்றும், மரநிழலின்றி நெருப்பைக் கக்குவதாக நீண்டு வளைந்த நெறிகளையுடையதாகவும் உள்ளது என்றும் அறிகின்றோம். இன்னொரு அகப் பாடலின்,

''பயந்தலை பெயர்த்து மாதிரம் வெம்ப''[67]

[பயம்-நீர்; தலைபெயர்த்து-நீங்கி; மாதிரம்-திசை; வெம்ப-கொதிக்க]

என்ற அடியால் அப் பகுதியின் எல்லாப் பக்கங்களிலும் நீர் வரண்டி வெப்பத்தால் கொதிக்கின்றது என்பது தெரிகின்றது.

''விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறைஇறந் தவரோ சென்றனர்''[68]

---

66. அகம்-213
67. அகம்-311.
68. அகம்-281.

[உருளிய -தடையின்றிச் செல்ல; குறைத்த - போழ்ந்து வழியாக்கின; அறை–பாறை]

என்ற அகப் பாட்டடிகள் கவிதை நயம் தோன்ற இப் பகுதியினை வருணிக்கின்றன. 'காய்கதிர்ச் செல்வனுகிய திகிரி தான் செல்வதற்கு வழியமைக்கும் பொருட்டு பனியையுடைய சிகரங்களைத் தலை துணித்து விட்டதாகக் கூறப்பெறுகின்றது. இன்னும் இரண்டு பாடல்கள் இப் பகுதியை, "வெம்முனை அருஞ்சுரம்" [69] என்றும், "அருஞ்சுரக் கவலை"[70] என்றும் குறிப்பிடுகின்றன. இப் பகுதியினைப் பற்றிக் கூறும் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பாடல்கள் யாவும் பாலைத் திணை பற்றியனவாகவே இருத்தல் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இவை ஏதோ ஒரு முறையில் பாலைக் கூறுகளில் ஒன்றினைக் குறிப்பிடுவனவாகவே உள்ளன.

இந்த வேங்கடப் பகுதியில் செழிப்பான இடங்களே இல்லை என்றும் கூற முடியாது. புறநானூற்றுப் பாடலொன்றில் கல்லாடனார் என்ற புலவர்,

**"தண்துளி பலபொழிந்து எழிலி இசைக்கும்**
**விண்டு வனைய விண்தோய் பிறங்கல்**
**முகடுற உயர்ந்த நெல்லின்......**
**......................................**
**வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென"**[71]

[எழிலி-முகில்கள்; இசைக்கும் -முழங்கும்; விண்டு-மலை; பிறங்கல்-குவியல்]

என்ற அடிகளால் வானம் பொய்க்காது மழை பொழிதலால் மலைபோன்ற நெற்குவியலை விளைத்த வேங்கடத்

69. அகம்-265.
70. அகம்-359.
71. புறம்-391.

தின் வடப்புறப்பகுதி வற்கடத்தால் தாக்குண்டு கிடக்கின்றது என்று கூறுவதினின்றும் இதனை அறியலாம். ஒருக்கால் இப்பகுதி மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டிய ஒன்றோ என்று நினைக்கத் தோன்றுகிறது. கர்நாடகப் பகுதியை யொட்டியுள்ள வளமான இந்துப்பூர், இலேபாக்சி என்ற பகுதிகளை இது குறிப்பதாகவும் கொள்ளலாம். செழிப்புள்ளவைகளாக இருப்பினும் இப்பகுதிகளில் சில சமயம் வற்கடமும் தோன்றுகின்றது.

**வடவேங்கடம்:** அன்பர்களே, இதுகாறும் கூறியவைமுல் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் வடவேங்கடம் இன்னதென ஓரளவு வரையறை செய்ய முடிகின்றது. தமிழ்கூறு நல்லுலகத்திற்கு வடதிசையில் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரையிலுமுள்ள நீண்ட மலைத் தொடர்கள், பொறுக்க முடியாத வெப்பத்துடன் கூடிய காடுகள் சுவடுகள் இவற்றுடன் கூடிய குன்றுகள், சிறுகுன்றுகள் அடங்கிய பகுதியே சங்க நூல்களில் குறிப்பிடப்பெறும் வேங்கடம் என்பது தெளிவாகின்றது. இப்பகுதி மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரை தொடர்பு அறுத வட எல்லையாக அமைந்திருப்பதால் அது 'வடவேங்கடம்' என்ற பெயருடன் வழங்கிற்று. தொல்காப்பியப் பாயிரமாக அமைந்த "வடவேங்கடம் தென்குமரி" எனத் தொடங்கும் பனம்பாரனுர் நூற்பாவில் குறிப்பிடப்பெற்றுள்ள 'வடவேங்கடமும்' ஏனைய சங்க நூல்களில் குறிப்பிடப்பெற்றுள்ள 'வேங்கடமும்' இப்பகுதியையே குறிக்கின்றது என உறுதியாகக் கூறலாம்.

இந்த வேங்கடத்தின் சரியான எல்லைகளை வரைசெய்து காட்டற்கேற்ற போதுமான சான்றுகள் இல்லை என்பது உண்மையே. ஆயினும், கிடைத்த அளவுள்ள சான்றுகளைக் கொண்டு கிட்டத்தட்ட அதன் எல்லைகளை

ஓரளவு அறிந்து கொள்ளலாம். ஓங்கோல் வட்டத்தில் கிருஷ்ணை நதிக்கருகிலுள்ள நாட்டின் வடபகுதியை புற நானூற்றில் குறிப்பிடப்பெற்றுள்ள 'நுங்கன்' என்ற பெயராலும் பட்டத்தாலும் வழங்கிய அரசர்கள் ஆண்டு வந்ததை மேலே குறிப்பிட்டேன் அல்லவா? வேங்கடம் என்ற பகுதி வடதிசையில் கிருஷ்ணை நதிவரையிலுமோ அல்லது ஓங்கோலுக்குத் தெற்கில் கிருஷ்ணை நதிக்கும் வடபெண்ணைக்கும் இடையிலுள்ள பகுதியின் பாதிவரையிலுமோ பரவியுள்ள பகுதிதான் வேங்கடம் என்பதை நிறுவுவதற்கு இக்கருத்து அடிப்படையாக அமைகின்றது. 'வேங்கடம்' என்ற இப்பகுதி கிழக்குக் கடற்கரையின் அருகில் திருப்பதி மலையிலிருந்து தொடங்குகின்றது என்பது திருப்பதி மலைக்கு 'வேங்கடம்' என்ற பெயர் அமைந்திருத்தலே ஒரு சான்றாக அமைகின்றது. சங்க இலக்கியங்களில் வெப்பம் மிக்க பகுதியாகக் குறிப்பிடப் பெறும் வேங்கடத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது அப் பகுதியின் ஓரத்திலோ இம்மலை இருந்திராவிடில் சிறந்த தமிழறிஞர்களாகத் திகழ்ந்த முதலாழ்வார்கள் இம் மலையை 'வேங்கடம்' என்று வழங்கியிரார். இவர்கள் பாடல்களில் சங்க இலக்கியச் சாயலும் நெறியும் நிழலிடு வதை நாம் நன்கு அறிவோம்.

சோணாட்டின் வடஎல்லையில் கிழக்குப் பகுதியில் தொடங்குகின்றது இத் திருப்பதிமலை. இதிலிருந்து வேங்கடம் என்ற பகுதி பாண்டிநாட்டின் வட எல்லையாக நீண்டு மேற்குக் கடற்கரையை எட்டுகின்றது.

> ..........................வடவயின்
> வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
> மறப்போர் பாண்டியர் அறத்திற் காக்கும்''[72]

---

72. அகம்-27.

என்ற அகப்பாடற் பகுதி பாண்டிய அரசன் இந்த வேங்கடம் உள்ள வடதிசையினின்றும் வேழங்களைக் கொண்டான் என்று குறிப்பிடுகின்றது.

"நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியாறு இறந்தன ராயினும் மயரிறந்து
உள்ளுப தில்ல."[73]

[பேர் இசை-பெரும் புகழ்; எருமை-ஓர் அரசன்; உள்ளதை-உள்ளதாகிய; அயிரி-ஓர் ஆறு; இறந்தனர்-கடந்து சென்றனர்; மயர் இறந்து-மறவியற்று; உள்ளுப-நினைப்பார்.]

என்ற இன்னோர் அகப்பாட்டின் பகுதி கர்நாடகத்திலுள்ள அயிரி என்ற யாற்றைக் கடந்து சென்று பாலை நிலத்தை அடைந்தனருகக் குறிப்பிடுகின்றது. அயிரி யாற்றிற்கு அப்பாலுள்ள பகுதி பாலைநிலம் அல்லது வேங்கடம் என்பதாக இப்பாடல் வெளிப்படையாகக் குறிப்பிடாவிடினும், அஃது அத்தகைய நிலம் என்பதாக நினைக்கச் செய்கின்றது. ஆயினும்,

"கழைஅமல் சிலம்பின் வழைதலை வாடக்
கதிர்கதங் கற்ற ஏகல் நெறியிடைப்
பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற் றடைகரை வயிரின் நரலும்"[74]

[கழை-மூங்கில்; அமல்-நிறைந்த; சிலம்பு-பக்கமலை; வழை-சுரபுன்னை; தலை-உச்சி; கதிர்-(ஞாயிற்றின்) கதிர்; கதம்-சினம்; ஏகல்-பெருகிய கற்கள்; நசைஇ-விரும்பி; வயிர்-ஊதுகொம்பு; நரலும்-ஒலிக்கும்.]

---

73. அகம்-253.
74. அகம்-177.

என்ற இன்னொரு பாடற்பகுதி இதனைத் தெளிவாக்கு கின்றது. இதில் இன்னொரு தலைவன் அயிரியாற்றைக் கடந்து காடுகளுக்கு அப்பால் செல்லுகின்றான். அவன் செல்லும் நெறியிலுள்ள பக்கமலைகளில் மூங்கில்கள் நிறைந்துள்ளன. அங்குள்ள வெப்பத்தினால் சுரபுன்னை வாடிக் கரிந்த நிலையிலுள்ளது. வழியிலுள்ள கற்குவியல்கள் கதிரவனின் வெப்பத்தை ஏற்று அதனை எல்லாப் பக்கங்களிலும் பரப்புகின்றன. இந்த அயிரியாற்றைத் துங்கபத்திரையின் உபநதியாகக் கொள்வர் டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள்[75]. இந்த உபநதி மேற்குத் தொடர்ச்சி மலையின் கீழ்ப்பகுதியில் உற்பத்தியாகிக் கர்நாடகப் பகுதியின் வடஎல்லை வழியாகப் பாய்கின்றது. இங்ஙனம் கிழக்குக் கடற்கரையில் தொடங்கும் வேங்கடம் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரையில் நீண்டு செல்கின்றது. அம் மலையைக் கடந்து சென்றால் மேற்கிலுள்ள கடல் தென்படும்.

எருமை நாடு: இனி, மேலே சுட்டிய அகப்பாட்டில்[76] குறிப்பிட்ட எருமை நன்னாடு இன்னதெனவிளக்குவேன். மைசூரில் கிடைத்த கன்னடக் கல்வெட்டுகளாலும் (EP. Car. Vol x cu 20), அதே இடத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகளாலும் (A. R. for 1907, Part) எருமை நன்னாடு என்பது கர்நாடக மாநிலம் ஆகும் என்று அறியக் கிடக்கின்றது.[77]

தமிழில் எருமை (விலங்கு) என்பது, வடமொழியில் மகிஷம் என வழங்கும். புராணக் கதைப்படி மகிஷா

75. A History Tirupathi-p. 11. இந் நதி கன்னடத்தில் 'ஹேகரி' என்று வழங்குகின்றது.

76. அகம்-253.

77. புறம்-273 உரையில் அவ்வை சு. துரைசாமி அவர்களால் காட்டப்பெற்றவை.

சுரன் என்பவன், நாட்டில் பேரழிவினை ஏற்படுத்திய மாபெரும் அசுரன் ஆவான். அரசரின் அரண்மனைக் கருகிலுள்ள சாமுண்டி மலையிலுள்ள சாமுண்டீஸ்வரி என்ற தேவதை அந்த அசுரனைக் கொன்று நாட்டைத் தீங்குகளினின்றும் மீட்டுவித்ததாகக் கதை. அந்த நகர் மகிஷாசுரன் ஆட்சியின் கீழிருந்ததால் மகிஷாசுரனூர் என்று வழங்கி வந்தது. இது வெள்ளைக்காரர்களால் மைசூர் என வழங்கப்பெற்று அப்பெயரே அம் மாநிலத்தின் பெயராகவும் நிலைத்துவிட்டது. அண்மையில் அம் மாநில அரசு, அதனை, அதன் பழம்பெரும் பெயராகிய கர்நாடகம் என வழங்கச் சட்டமும் இயற்றியதை நாம் நன்கு அறிவோம். எனவே, 'மகிஷம்' என்பது பழைய பெயராகிய 'எருமை' என்பதன் மொழிபெயர்ப்பாகும் என்பதை நாம் அறிதல் வேண்டும். இடைக்காலத்தில் அப் பெயருக்குப் புராண வழக்கும் ஏற்பட்டு சமயச் சார்பும் நேர்ந்தது.

சங்க காலத்தில் அந்நாட்டிற்கு 'எருமை நன்னாடு' என வழங்கியதை அகநானூற்றால் அறிகின்றோம்.[78]

**"நாரரி நறவின் எருமையூரன்"**[79]

**"எருமை வெளியனார்"**[80]

**"எருமை குடநாடு"**[81]

என்ற சங்ககால வழக்காறுகளை நோக்குக; இவை சங்க காலத்தில் மைசூருக்கு வழங்கப்பெற்ற பெயர்களாகும். இவற்றுள் 'எருமை குடநாடு' என்ற தொடர் கவனத்திற்கு உரியது. தொல்காப்பியம் என்ற தொல்லிலக்

---

78. அகம்-340.
79. அகம்-36.
80. அகம்-72, 73, புறம் 273, 303.
81. அகம்–115,

கணப்படி செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தில் செந் தமிழ் மொழி வழங்கி வந்தது. உரையாசிரியர்கள் இந்த நாடுகளின் பெயர்களையும் கூறியுள்ளனர்.

தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா அதன்வடக்கு-நன்றாய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.''[82]

என்ற பழைய வெண்பா ஒன்றால் இப்பன்னிரண்டு பெயர்களையும் அறியலாம். இவற்றுள் 'குடநாடு' என்ற பெயர் 'மேற்கு நாடு' எனப் பொருள்தரும் தொட ராகும். கேரளமும் கர்நாடகமும் தமிழகத்தின் மேற்குத் திசையில் உள்ளவை. ஆகவே, குடநாடு என்பது இந்த இரண்டும் சேர்ந்த நாட்டையோ, அல்லது தனித் தனியாக இவற்றுள் ஒன்றையோ குறிப்பிடும் தொடர் என்றாகின்றது. எனவே, சேரர் குடநாட்டினின்றும் பிரித்தறிவதற்காகவே 'எருமை குடநாடு' என்ற தொடர் வழங்கப்பெற்றது என்பதை நாம் அறிதல் வேண்டும். இவ்வாறு தொல்காப்பியர் காலத்திலேயே மைசூர் பன்னிரு நாடுகளில் ஒன்றாக அமைந்து தமிழ் வழக்கும் பெற்றது. இக்காலத்தில் இங்கும் கேரளத்திலும் செந் தமிழ் பயின்று வந்தது. சங்க காலத்திலும்கூட மைசூர்ப் பகுதியில் செந்தமிழ் வழங்கலாயிற்று என்ற உண்மை இந்நாட்டைப்பற்றிய பாடல்கள் சங்க இலக்கியங்களில் சேர்க்கப் பெற்றமையால் அறியக் கிடக்கின்றது. புற நானூற்றுப் பாடல்களும் (எண் 273, 303) அகநானூற் றுப் பாடலும் (எண் 73) எருமை வெளியனாராலும், இன்னொரு புறநானூற்றுப் பாடல் (எண் 72) அவர் திருக் குமாரர் எருமை வெளியனார் மகனார் கடலனார் என்பவ

82. நன்னூல் விருத்தியுரை-நூற்பா 273இன் உரை

ராலும் பாடப் பெற்றமை இவ்வுண்மைக்கு மேலும் அரணாக அமைகின்றது. தொல்காப்பியர் காலத்தில் இப்பகுதியில் பயின்று வந்த செந்தமிழ் காலப் போக்கில், பல நூற்றாண்டுகளில், கன்னடமாக மாறியது.

இக் கூறியவற்றால் தொல்காப்பியர் காலத்தில் மைசூர்ப் பகுதி (தற்காலக் கர்நாடகம்) தமிழ்கூறு நல் லுலகத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது என்பதனை யும், அதன் வட எல்லையில் அயிரியாற்றினை அடுத்து வேங்கடம் இருந்தது என்பதனையும் அறிகின்றோம். ஆகவே, தமிழ்கூறு நல்லுலகத்தின் வட எல்லையாக வழங்கிய 'வேங்கடம்' தென்னிந்தியத் தீபகற்பத்தின் வடக்குப் பகுதியில் கீழ்க் கோடியிலிருந்து மேல்கோடி வரை பரவியிருந்த பகுதியாகும் என்பதனைத் தெளிவாக அறிகின்றோம் என்றுகூறி என் முதற்பொழிவினைத் தலைக் கட்டுகின்றேன். வணக்கம்.

# 2. இடைக்கால இலக்கியத்தில் 'வேங்கடம்'

இரண்டாவது பொழிவு மார்ச்சு 8, 1974

பேரன்பர்களே,

வணக்கம். நேற்றைய பொழிவில் தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள 'வடவேங்கடம்' இன்னதென்பதை ஒருவாறு அறுதியிட்டோம். காலப் போக்கில் 'வேங்கடம்' என்ற சொல்லின் பொருள் எப்படியெல்லாம் மாறியது என்பதை இன்றைய பொழிவில் காட்டுவேன். இந்த மாற்றம் காரணமாக 'சங்ககால வடவேங்கடம்' எப்படியோ மனத்தை விட்டு நீங்கிவிட்டது. சமயச்செல்வாக்கின் காரணமாகப் பரந்து கிடந்த வேங்கடமலைத் தொடர்களை எண்ணிய மனம் குவியத்தொடங்கி, எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இன்றைய மலையை மட்டிலும் குறிக்கத் தொடங்கி, அதுவே நிலைபெற்றும் விட்டது. சுவாமி தேசிகனின் பாடலும் இதற்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டது.

"கண்ணனடி யிணைஎமக்குக் காட்டும் வெற்பு
  கடுவினையர் இருவரையும் கடியும் வெற்பு;
திண்ணமிது வீடுஎன்னத் திகழும் வெற்பு;
  தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு;
'புண்ணியத்தின் புகல்இது'எனப் புகழும் வெற்பு:
  பொன்னுலகிற் போகமெலாம் புணர்க்கும் வெற்பு;
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;
  வேங்கடவெற்பு எனவிளக்கும் வேத வெற்பே.[1]"

1. தேசிகப் பிரபந்தம்-82.

[கடியும்-ஒழிக்கும்; திண்ணம்-உறுதி; செறிந்த-நிறைந்த: புகல்-இருப்பிடம்; பொன் உலகு-பரமபதம் ; புணர்க்கும்-அடைவிக்கும்.]

பாடலைப் பன்முறை படித்துப் படித்து அநுபவிக்கவேண்டியது. அது எம்பெருமான் பிரசாதமாகிய 'இலட்டு' போல் இனிப்பதை நாம் உணர்ந்து மகிழலாம். இனி, 'வேங்கடம்' என்ற சொல்லின் பொருள் மாற்றத்தைக் காண்போம்.

**'வேங்கடம்'—பொருள் மாற்றம் :**

முதற் பொழிவில் 'வேங்கடம்' என்ற சொல்லின் பொருளை விளக்கினேன். அதனை ஈண்டு நினைவுகூர வேண்டுகிறேன். இடைக்காலத்தில் பக்தி இயக்கம் பெரும் செல்வாக்குப்பெற்ற காலத்தில் 'வேங்கடம்' என்ற சொல்லும் புதுப்பொருளைப் பெற்றது என்று கருதலாம். ஈண்டு திருவாய் மொழியிலுள்ள ஒரு பாடலை ஆய்வது பொருத்தமென்று கருதுகின்றேன்.

> "வேங்க டங்கள்மெய் மேல்வினை முற்றவும்
> தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்
> வேங்க டத்துறை வார்க்கு நமஎன்னல்
> ஆங்க டமைஅ துசுமந் தார்கட்கே."[2]

[வேம்-வெந்துபோம்; கடங்கள்-பாவங்கள்; மேல் வினை-இனி விளையக் கூடிய பாவங்கள்; முற்றவும்-சகல பாவங்களும்; நல்லன - கைங்கரியங்கள்; நம - நம: (வடசொல்); சுமந்தார்க்கு-வகிக்கிறவர்கட்கு.]

ஆழ்வார்கள் காலம் வரை 'வேம்—வெந்துபோம், கடங்கள் – பாவங்கள்' என்று வழங்கின. தன்னை

---

2. திருவாய். 3, 3: 6.

அடைந்தவர்களுடைய பாவம் அனைத்தையும் ஒழிப்பதனால் இத் திவ்விய தேசத்தை 'வேங்கடம்' எனக் கூறத் தொடங்கினர். அவர்கள் காலத்திற்குப் பிறகு 'வேம்' என்ற சொல், 'எரித்தல்' என்ற பொருளைக் கொண்டிருந்த மரபு மறைந்து, 'வேம்' என்ற சொல் 'பாவம்' என்ற பொருளை ஏற்றது. பக்தி இயக்கம் ஓங்கியிருந்த காலத்தில் சமயக் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும் மக்கள் மனத்தில் நுழையத் தொடங்கி, அதனால் அவர்கள் மனநிலை விரிந்த காலத்தில்; மனித மனம் ஏற்கெனவே தான் படைத்த சொல்லுக்குப் புதுப் பொருளையும் சேர்க்கத் தொடங்கியது. 'பாவமும்' ஆன்மாவுக்குத் தாங்கமுடியாத வெப்பத்தைத் தருவதாகும் என்று மனம் கற்பிக்கத் தொடங்கியது. எனவே, 'வேம்' என்ற சொல், 'பாவம்' என்ற பொருளையும் ஏற்க வேண்டியதாயிற்று. அங்ஙனமே, 'கடம்' என்ற சொல்லும் புதுப்பொருளை ஏற்றது. 'கடம்' என்ற சொல் சங்ககாலத்தில் பாலை நிலத்தைக் குறிக்கும் சொல்லாக வழங்கியதை முன்மொழிவில் கூறினேன். உரையாசிரியர்கள் அதற்கு, 'அருஞ்சுரம்' என்று பொருள் வழங்கியதையும் சுட்டிக் காட்டினேன். இடைக்காலத்தில் 'கடம்' என்ற சொல் 'எரித்தல்' என்ற பொருளை ஏற்றது 'வேங்கடம்' என்ற கூட்டுச்சொல் 'பாவங்களை எரித்தல்' என்ற பொருளில் வழங்கி, மேலும் அது 'பாவங்களை எரிக்கும் இடம்' என்றும் வழங்கத் தொடங்கியது. சங்க காலத்தில் இயற்பெயராக வழங்கிய 'வேங்கடம்' இடைக்காலத்தில் காரணப்பெயராக மாறத் தொடங்கியது: ஆழ்வார் பாடலிலும் இப் பெயராகவே ஏறிவிட்டது நம் போன்று படித்தவர்கள் இச்சொல் லாராய்ச்சியில் ஈடுபட்டுத் தலையை உடைத்துக் கொள்ளுகின்றோம். ஆனால், நாடோறும் பல்லாயிரக்கணக்கில்

யாத்திரையாகத் திருப்பதிக்கு வரும் பக்தர்கள்—படித்தவர்கள், பாமர மக்கள் உட்பட—அனைத்தையும் மறந்து 'வேங்கடத்தைத் தமது பாவங்களையெல்லாம் 'தீயினில் தூசாக' எரிக்கும் இடமாகவே கருதுகின்றனர். இன்னும் சிலர் 'வேங்கடம்' என்ற திவ்விய தேசம் அழிவில்லாத ஐசுவரியங்களை அளிக்கும் இடமாகும் எனவும் கருதுகின்றனர்.[3] வேண்டுவார்க்கு வேண்டுபவற்றைத் தரும் 'கலியுக வரதன்' எழுந்தருளியிருக்கும் இடமாகக் கருதும் மனங்கட்குச் சொற்களுக்குப் புதிய பொருளைச் சேர்த்துக் கொள்வதில் ஒரு சிரமமும் இருக்க முடியாதல்லவா? எனவே, இவர்கள் கருத்திற்கு ஏற்ப 'வேம்' என்பது அழிவின்மை; 'கடம்' என்பது ஐசுவரியம்: என்றபொருள் வழங்கத் தொடங்கிற்று. தன்னை அடைந்தார்க்கு அழிவில்லாத ஐசுவரியங்களைத் தருதலால் இந்தத் திவ்விய தேசம் 'வேங்கடம்' என்று பெயர் பெற்றதாக இவர்கள் மனம் எண்ணுவதில் வியப்பொன்றும் இல்லை. இத்தகைய பக்தர்கள்—சைவர்கள் வைணவர்கள் உட்பட எல்லோரும்—மனத்திற்குகந்த 'பக்தி அவியல்' பாடலும் எழுந்தது.

"திருப்பதி மிதியாப் பாதம்
  சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாக் கைகள்
  இனியசொற் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர்
  பொழிதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயனென்? காட்டில்
  எரிப்பினும் இல்லை தானே."[4]

---

3. இது வராக புராண விளக்கம் ஆகும்.
4. விவேக சிந்தாமணி-28

என்ற பாடல் எத்தனை மனங்கட்கு ஆறுதல் அளிக்கின்றது என்பதை நம்மால் அளவிட்டு உரைத்தல் இயலாதன்றோ ?

'வேங்கடம்' என்ற சொல்லின் பொருள் இடைக்காலத்தில் அதிசயிக்கத்தக்க முறையில் வளர்ந்ததற்குத் திருமூலரின் பாடல் ஒன்றும் சான்றாக விளங்குகின்றது

> "வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
> வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
> வேங்கடம் என்றே விரகறி யாதவர்
> தாங்கவல் லாருயிர் தாமறி யாதே."[5]

இப் பாடலில் 'வேங்கடம்' என்ற சொல் உடலைக் குறிக்கின்றது. 'வேங்கட நாதன்' வேகும் இயல்புள்ள உடலுக்கு நாதன் ஆகின்றான். 'நாதன்' ஈண்டு ஆன்மாவைக் குறிக்கின்றது; அத்துடன் நில்லாமல் ஆன்மாவுக்கும் ஆன்மாவாக விளங்கும் — அந்தர் யாமியாக இருக்கும் - பரமான்மையும் குறிக்கின்றது வைணவ தத்துவத்தில் சித்தும் (உயிரும்) அசித்தும் (உடல், உயிரற்ற பொருள்களனைத்தும்) எம்பெருமானுக்கு உடலாக இருப்பதாகக் கூறப்படும். 'இது சரீர—சரீரி பாவனை' என்று வழங்கப்பெறும்.

இப்போது எல்லோர் மனத்திலும் 'வேங்கடம்' என்னும் பெயர் ஒரு சொல்லாகவே தென்படுகின்றது. சொல்லிலக்கணத்தின் அடிப்படையில் அமைந்த பெயரின் முக்கியத்துவமும் நாளடைவில் மறைந்து விட்டது. ஆயினும், ஒருசொல் நீர்மைத்தாக வழங்கும் பெயரில் பழங்காலத்தின் பெருமையும் சிறப்பும் சேர்ந்தே மிளிர்கின்றது. அப்பெயரில் 'அச்சத்தை விளைவிக்கும்

---

5. திருமந்திரம்-232 (உயிர்நிலையாமை)

பழங்கூறு' அடியோடு இல்லாதொழிந்தது. வட எல்லையாக வழங்கும் 'வடவேங்கடம்' என்ற அடையுடன் கூடிய பெயரும் வழக்கற்றுப் போய், வைணவ சம்பிரதாயத்தின் அடையாகிய 'திரு' என்பது சேர்ந்து 'திருவேங்கடம்' என்று வழங்கி வருகின்றது. 'திரு' என்பது என்னென்ன பொருள்களிலெல்லாம் வழங்குகின்றதோ அப்பொருள்களெல்லாம் 'வேங்கடம்' என்ற பெயருடன் சேர்ந்து ஊருக்குப் பெருமையையும் சிறப்பினையும் அளித்துவிட்டது. மலையின் பெயரில் ஏற்பட்ட இம்மாற்றம் காலப்போக்கில் இச் சிறுமலைக்கு ஏற்பட்ட மாற்றத்துடன், எல்லாவகையிலும் பொருந்துவதாக அமைந்துவிட்டது. இதனைப் பின்னர் மேலும் தெளிவாக விளக்குவேன்.

இதற்கு முன்னர் மதிப்பிற்குரிய பெருமகனார் திரு. K. கோதண்டபாணி பிள்ளை அவர்கள், பிற்காலத்தில் இம் மலையில் நேரிட்ட மாற்றத்தைக் குறிப்பிடும் முறையில், பூதத்தாழ்வாரின் இரண்டு பாடல்களைச் சான்றுகளாகக் காட்டி விளக்குகின்றார். அச்சான்றுகள் பற்றி ஈண்டு ஆராய நேரிடுகின்றது. பூதத்தாழ்வார் இம்மலையை இளங்கிரி எனச் சுட்டுவதாக அவ்வாசிரியர் கூறுவர்.[6] அவர் காட்டும் பாடல் இது:

"நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியாது இளங்கிரிஎன்(று) எண்ணி—பிரியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு."[7]
[இளங்கிரி-சிறுமலை.]

---

6. 'வட வேங்கடம்' என்ற அவருடைய ஆங்கிலக் கட்டுரை காண்க. (Tamil Culture Vol II, No. 1- Jan-Mar 1961—பக்.88, 89)

7. இரண். திருவந். 53,

இப் பாடலில் 'இளங்கிரி' என்ற சொல், 'சிறுமலை' என்ற பொருளில் ஆளப்பெற்றுள்ளது என்றும், இது பல நூற்றாண்டுகளில், தொல்காப்பியர் காலத்திலிருந்து முதலாழ்வாழ்வாரில் ஒருவராகிய பூதத்தாழ்வார் காலம் வரையில் உள்ள காலப்பகுதியில், நிலவியல் கூறுகளின் அடிப்படையில், இம்மலைகட்கு ஏற்பட்ட மாற்றத்துக்கு ஒரு சான்றாக அமைகின்றது என்றும் விளக்குவர்.

மேலும் அவர் கூறுவது: 'வேங்கடம்' என்று வழங்கும் இப்பகுதியில் இப்பொழுதும்கூட மலைகளின் பல்வேறு அழிவு மாற்றங்களைக் காணலாம். கோடைக் காலக் கதிரவனின் கடும் வெப்பமும் மாரிக்காலத்தில் பெய்யும் மழையும் இப்பகுதியிலுள்ள சில பாறைகளைப் பெரும் பெரும் பாறைகளாகப் பிளவுபடச் செய்துள்ளன; சில பாறைகளைச் சில கூரிய கற்குவியல்களாகவும் கூழாங்கற்களாகவும் சிதைத்துள்ளன; இன்னும் சிலவற்றை மணலும் மண்ணும் கலந்த மேடுகளாகவும் மாற்றம் அடையும்படி செய்துவிட்டன. இதனால், இம் மலைப் பகுதியில் தாவரங்கள் தலைகாட்டுவதற்கு வாய்ப்பும் நேரிட்டது. ஒருகாலத்தில் வழுக்கைப் பாறைகளாக இருந்தவற்றில் பசுமையும் செழுமையும் தலைகாட்டத் தொடங்கியது. இப்பொழுது இம்மலையில் சிறு புல்பூண்டுகள், அடர்ந்த காடுகள் என்ற பல்வேறு நிலைத்தாவரங்களைக் காணலாம். இங்ஙனம் இம் மலை பூதத்தாழ்வார் காலத்தில் பல்வேறு மாற்றங்கள் அடைந்து மக்கள் வசிப்பதற்கேற்ற நிலையையும் அடைந்துவிட்டது. அதனால் அவர் இம்மலையைக் குறிக்க 'இளங்கிரி' என்ற சொல்லை ஆண்டுள்ளார்'' என்பது. இந்த ஆழ்வாரின் இன்னொரு பாடலைக் காட்டி அதில் கோயிலைப் பற்றிய குறிப்பு வருகின்றது என்றும் கூறுவர். அவர் காட்டும் பாடல்:

“வெற்பென் றிருஞ்சோலை
வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும்
நீர்மைபோல்—நிற்பென்று
உளங்கோயில் உள்ளம்வைத்
துள்ளினேன் வெள்ளத்து
இளங்கோயில் கைவிடேன்
என்று.[8]”

[நிற்பு-உகந்து வாழும் இடம்; வெள்ளம்-திருப்பாற்கடல்.]

இதில் ‘இளங்கோயில்’ என்பதற்கு முதற் கோயில் பழுதுபார்க்கப்படுங்கால் அதிலுள்ள இறைவன் திருமேனியை எழுந்தருளச் செய்வதற்குத் தற்காலிகமாக அமைக்கப்பெறும் கோயில் என்னும் சரியான பொருளையே கூறுவர். இத்தகைய ஒரு தற்காலிகக் கோயில் திருமலையில் காணப்பெறவில்லை என்பதாகக் கூறும்போதுதான் தவறு நேரிடுகின்றது. இதனை ஈண்டுச் சற்று ஆய்ந்து அவர் காட்டும் சான்றுகளின் பொருத்தமின்மையையும் புலப்படுத்துவேன்.

முதலில் அவர் கூறும் கருத்துகள் இன்னவை என்பதைக் காட்டுவேன்.

முதற் கருத்து: வேங்கடத்திற்கு இளங்கிரி என்ற பெயர் பூதத்தாழ்வாரால் தரப்பெற்றது என்பது (முதற் பாடல்).

இரண்டாவது கருத்து: ‘இளங்கோயில்’ என்ற இன்னொரு கோயில் இருந்ததாகக் கருதி, அத்தகைய

8. இரண். திருவந். 54.

இரண்டாவது கோயில் திருமலையில் இல்லையே என்று கூறுவது (இரண்டாம் பாடல்).

முதற் பாடலின் பொருளை நோக்கும்போதே பூதத்தாழ்வார் மலையை 'இளங்கிரி' என்று குறிப்பிடவில்லை என்பது தெரியவரும். மேற்குறிப்பிட்ட பாட்டில் திருமலையை ஆழ்வார் ஒரு ச்மத்காரம் பொலிய வருணித்திருப்பது மேல்நோக்காகப் பார்ப்பவர்க்கே தெரியவரும். திருமலை யாத்திரையாக வரும் பெரியார்கள் பலர்,

**"வெறியார் தண்சோலைத் திருவேங் கடமலைமேல்**
**நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே."[9]**

என்று குலசேகரப் பெருமாள் விரும்பினபடி, திருமலை ஏறும் வழியில் அன்பு வைத்து, திருமலை மேல் சென்று வாழ்வதைக் காட்டிலும், திருமலை வழியில் கிடப்பதையே பெரும்பேறுகக் கொண்டு அவ் வழியிலேயே வீற்றிருந்து எம்பெருமானைச் சிந்தை செய்கின்றனர். அப்போது மூச்சுவிடுதல் உடம்பு அசைத்தல் முதலிய ஒன்றுமின்றி வால்மீகி போன்ற மாமுனிவர்களைப் போல் யோக நிலையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அவர்கள் கூந்தல் கற்றை முன்னின்று பின் தாழ்ந்திருப்பதைக் கண்ட பூங்கொடிகள் அவர்களை 'வீற்றிருக்கும் மனிதர்கள்' என்று தெரிந்து கொள்ளாமல், இவை 'சிறுமலைகள்' என்று எண்ணி அவற்றின்மீது படர்கின்றன. இங்ஙனம் பக்தர்கள் மேலும் பூங்கொடிகள் படர்ந்திருப்பது அற்புதமான காட்சியாக அமைகின்றது. இப்படிப்பட்ட காட்சிக்கு இடமான திருமலையே நாம் விரும்பும் திருமலையாகும். இங்கு வழியில் வீற்றிருக்கும் பெரியார்களை 'இளங்கிரி' (சின்னமலை) எனக் கூறினரேயன்றி மலையை அன்று என்பது அறியத்தக்கது. எனவே,

9. பெரு. திரு. 4: 8.

திருமலையை 'இளங்கிரி' என்று வருணிக்கவில்லை என்பது தெளிவு.

இரண்டாவது பாடலிலும் ஒரு சமத்காரக் கருத்து வெளியிடப்பெறுகின்றது. 'தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும்' எனப் போற்றப்பெறும் திருமாலிருஞ் சோலைமலை திருவேங்கட மலைகளில் எம்பெருமான் வைத்துள்ள விருப்பத்தையே தம்முடைய திருவுள்ளத்திலும் வைத்திருக்கும் திறத்தை ஒரு சமத்காரமாக வெளியிடுகின்றார் ஆழ்வார். ஸ்ரீ வசன பூஷணத்திலும் "கல்லும் கனைகடலும்" (பெரி. திருவந். 68) என்றபடியே இது சித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும்; 'இளங்கோயில் கைவிடேல்' (இரண். திருவந். 54) என்று இவன் பிரார்த்திக்க வேண்டும்படியாக இருக்கும்" என்றருளிச் செய்தது இப்பாசுரத்தை உட்கொண்டேயாகும் என்பது ஈண்டு அறியத்தக்கது[10]. ஆழ்வார் எம்பெருமானை நோக்கி, "மேற்குறிப்பிட்ட இரண்டு மலைகளிலும் நீ எவ்வளவு மகிழ்ச்சியுடன் வாழ்கின்றாயோ அவ்வளவு மகிழ்ச்சியுடன் என் இதயத்திலும் வாழ்கின்றாய் என்று கண்டறிந்த அடியேன், 'வெள்ளத்து இளங்கோயில் கைவிடேல்' என்று பிரார்த்திக்கிறேன்" என்கின்றார் இப்பாடலில்.

இதன் கருத்தை மேலும் தெளிவாக்குவேன். 'வெள்ளம்' என்பது திருப்பாற்கடல். திருப்பாற்கடல் எல்லா அவதாரங்கட்கும் மூலக்கிழங்காக இருப்பது. விபவாவதாரங்களும் மற்றும் அர்ச்சாவதாரங்களும் இதன் மூலமாகவே நிகழ்வதாகக் கொள்ளும் கொள்கை வைணவர்களிடம் உள்ளது. இக்காரணம் பற்றித் திருப்

---

10. ஸ்ரீவசன பூஷணம் - சூத்திரம் 176, 177 (புருஷோத்தம நாயுடு பதிப்பு)

பாற்கடல் 'இளங்கோயில்' எனப்படும்[11]. திருமலை முதலிய திவ்விய தேசங்களும் அன்பர்களுடைய இதயமு மாகின்ற பெருங்கோயில்களிற் சென்று சேர்ந்து வாழ்வ தற்குப் பூர்வாங்கமாகவே, எம்பெருமான் திருப்பாற் கடலில் வாழ்வதாக ஆழ்வார்கள் அநுசந்திப்பார்களா தலால், அந்த அநுசந்தானத்திற்கு இணங்கத் திருப்பாற் கடலை 'இளங்கோயில்' என்று சொல்லுதல் பொருத்த முடைத்தல்லவா ? பெருங்கோயிலிற் சென்று சேர்ந்த பிறகு இளங்கோயிலில் அன்பு இருக்கக் காரணம் இல்லா மையால்; எம்பெருமானுக்கும் தமது திருவுள்ளமாகின்ற பெருங்கோயிலில் வாழ்வு அமைந்த பிறகு, இளங்கோயி லாகிய திருப்பாற்கடலில் அன்பு குறைந்து விடும் என்றறிந்த ஆழ்வார், 'பிரானே, அவ்விளங்கோயிலில் நீ வைத்திருக்கும் அன்பினைக் குறைத்துக் கொள்ள லாகாது. என் உள்ளத்தில் வந்து சேர்வதற்கு அவ்விடம் பூர்வாங்கமாக இருந்ததனால் அதன்மீது அடியேன் நன்றி பாராட்டக் கடவேன். அதன் காரணமாகப் பிரார்த்திக்கின்றேன் — அவ்விடத்தை நீ ஒரு நாளும் கைவிடலாகாது என்று' என்கின்றார். இதனால்,

> **"பனிக்கடலிற் பள்ளிகோளைப்**
> **பழகவிட்டு ஓடிவந்து; என்**
> **மனக்கடலில் வாழவல்ல**
> **மாயமணாள நம்பீ!"[12]**

---

11. இளங்கோயில்-பாலாலயம். இக்காலத்தும் திருக் கோயில்களை பழுதுபார்த்துப் புதுப்பிக்க நேருங்கால் அங் குள்ள எம்பெருமான் திருமேனியைப் 'பாலாலயப்' பிர திஷ்டை செய்வது வழக்கமாக இருப்பதை அறிக. வேறொரு பெருங்கோயிலில் சென்று சேர்வதற்கு உறுப்பாக சிறுகக் கொள்ளும் கோயில் பாலாலயம் ஆகிறது.

12. பெரியாழ். திரு. 5. 4: 9.

[பள்ளி கோளை-பள்ளி கொள்ளலை]

என்று பெரியாழ்வார் கூறுவதுபோல், திருப்பாற்கடலையும் புறக்கணித்து விட்டுத் தம் இதயத்தில் வந்து சேரும்படியான பேரன்பு எம்பெருமானுக்கு விளைந்தமையைத் தெரிவிப்பதே பூதத்தாழ்வார் பாசுரத்தின் உட்பொருளாகும் என்பது ஈண்டு அறியத் தக்கது. இதனால் 'இளங்கோயில்' என்பது, திருமலையிலே உள்ள இன்னொரு கோயில் என்று திரு. பிள்ளையவர்கள் கூறுவது சிறிதும் பொருத்தமுடையதன்று என்பது தெளிவாகும். எப்படியோ தவறான கருத்து பிள்ளையவர்களின் உள்ளத்தில் எழுந்தமையால், அவர்கள் அதனை மெய்ப்பிக்கக் கல்வெட்டு முதலிய சான்றுகளைத் தேடியலைவது வீணாகும் என்பதும் பெறப்படும். நிற்க.

வேங்கடத்தின் புகழ்:

அன்பர்களே, திருவேங்கடத்தின் புகழ் எப்பொழுது நாடு முழுவதும் பரவியது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற திருவேங்கடம் பதினொன்றாம் நூற்றாண்டில்தான் பெரும்புகழ் அடையத் தொடங்கியது. இராமாநுசர் திருவேங்கடத்தின் மீதுள்ள திருக்கோயிலின்பால் காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக்கோயிலின் புகழை மிகவும் உயர்த்திவிட்டது.

இராமாநுசர் திருமலைக்கு மூன்று தடவை வந்ததாக அவர் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. இன்று திருமலையில் நடைபெறும் வழிபாட்டுமுறைகள் எல்லாம் இராமாநுசர் வகுத்தவையே என்று 'திருமலையொழுகு'

13. A History of Tirupathi—Chap-xi and xii.

என்ற நூலால் அறிகின்றோம். இராமானுசர் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கரியம் செய்யும் அர்ச்சகர்கட்குக் குடியிருப்புவசதிகள், பிறவசதிகள் இவற்றைச்செய்தார். தம் தாய் மாமனாகிய திருமலை நம்பியையே இவற்றையெல்லாம் கண்காணிக்கும் மேலாளராகவும் நியமனம் செய்தார். இராமானுசருடைய சமூகச் சீர்திருத்தமும் அவருடைய தத்துவஞானமும் பாமரமக்கள் மனத்தையும் கவர்ந்தன. அவருடைய வடமொழி அறிவு அவருக்குப் பலவகையில் கைகொடுத்து உதவியது. அவருடைய கீதைப் பேருரையும் பிரம்மசூத்திரப் பேருரையும்அவரை வடநாட்டினருக்கும் அறிமுகம் செய்து வைத்தன. இதனால் இராமானுசரின் புகழ் நாட்டின் நாலாபுறங்களிலும் பரவியது. இதனால் அவர் மிகநெருங்கிய உறவுடன் கைங்கரியம் செய்துவந்த திருவேங்கடமுடையானின் பெருமையும் சிறப்பும் எங்கும் பரவி திருவேங்கடத்திற்கும் ஒருமுக்கியத்துவம் ஏற்படலாயிற்று. இவற்றைத் தவிர சைவ-வைணவ வாக்குவாதம் பற்றிய வரலாறும் திருமலையின் புகழ் எங்கும் பரவக் காரணமாக இருந்தது. இதுபற்றிய வரலாறு சுமார் 700 ஆண்டுகட்கு முன்பிருந்த பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறாயிரப்படிக் குருபரம்பரையிலும், இராமானுசாசாரியரின் திவ்விய சரிதையிலும் காணலாம். சைவ-வைணவ வாதத்திற்குக் காரணமாக இருந்தது பேயாழ்வாரின் பாடல்.

''தாழ்சடையும் நீள்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும்
தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு

இரண்டுருவும் ஒன்றாய்
இசைந்து."[14]

என்ற பாடல் அரி-அர வடிவத்தைக் காட்டுவது. பொய்கையாழ்வார் பாடல்களிலும்[15] இந்த வடிவத்தைக் காணலாம்.

இந்த சைவ-வைணவ வாதத்தைப்பற்றி மேற்குறிப்பிட்ட குருபரம்பரையில் காணப்படுவது இது: "தெழிகுரலருவித் திருவேங்கட மலையேறித் திருவேங்கடமுடையானையும் ஸேவித்து நிற்க, அவ்வளவிலே 'தாழ் சடையும் நீள்முடியும் நன்மழுவும் சக்கரமும் சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும், திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக் கிரண்டுருவும் ஒன்றாயிசைந்து' என்று ஆழ்வார் அநுபவித்த ஹரிஹராகாரம் ஒத்திருக்கையாலே சைவர்கள் கண்டு 'எங்கள் நாயனார்' என்று பிணங்கிவர, உடையவரும் 'உங்கள் தம்பிரானுக்கு அஸாதாரண சின்னமான திரிசூல டமருகங்களையும்; எங்கள் பெருமானுக்கு அஸாதாரண சின்னமான திருவாழி திருச்சங்காழ்வார்களையும் பண்ணித் திருவேங்கடமுடையான் திருமுன்பே வைப்போம்; அவர் எத்தை எடுத்துத் தரித்துக்கொள்ளுகிறாரோ அத்தையிட்டு அவர் ஸ்வரூபநிரூபணம் பண்ணக்கடவது' என்று அவ்வாயுதங்களைப் பண்ணி அவர் ஸந்நிதியிலே வைத்து கர்ப்பக்ருஹத்தில் ஒருத்தருமில்லாதபடி சோதித்துத் திருக்காப்பைச் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுவந்து, ப்ராத: காலமானவாறே திருக்காப்பை நீக்கி ஸேவிக்கிறவளவிலே, கூராழி வெண்சங்கேந்தி, திரிசூல டமருகங்களைக்

14. மூன்றாம் திருவந். 63.
15. இரண். திருவந். 5, 74, 98.

காற்கடைக் கொண்டிருக்கக் கண்டு ஆனந்தாஸ்ருக்கள் பனிப்பக் கொந்தளித்துக் குணலைக் கூத்தாடிக்கொண்டு சைவர்களை 'ஒட்டினர்' என்பது.'' இதனால் உடையவரால் புதியனவாகச் சங்கசக்கரங்கள் நிறுவப்பட்டனவல்ல வென்பதும், அவை நிறுவப்பெற நேர்ந்த வரலாறும் தெளிவாகும்.

மேற்கூறிய வரலாறேயன்றி, இன்னொரு வரலாறும் வழங்கி வருகின்றது. பெரும்பக்தனான தொண்டைமான் சக்கரவர்த்திக்குச் சங்குசக்கரங்கள் பெருமானால் அளிக்கப்பெற்ற ஐதிகம் ஒன்று உண்டு. தொண்டைமான் சக்கரவர்த்தி திருவேங்கடமுடையான்மீது பக்திமேலிட்டு அப்பெருமானை எப்பொழுதும் சேவித்துக் கொண்டு திருமலையிலேயே குடிகொண்டிருத்தலையறிந்த பகை மன்னர்கள் அவனது நாட்டைக் கைக்கொண்டனர். தொண்டைமான் அதனைத் திருவேங்கடமுடையான் சந்நிதியில் விண்ணப்பஞ் செய்து வணங்கி நின்றான் எம்பெருமான் தனது திருவாழி திருச்சங்குகளை அவனுக்கு ஈந்து, 'இவற்றைக்கொண்டு நீ மாற்றாரைத் தவறாது வென்றிடுக' என்று கூறியருளினார். அங்ஙனமே தொண்டைமானும் பகையை வென்று இழந்த அரசையும் பெற்றனன் என்பது வரலாறு.[16] இதனால் சில காலம் எம்பெருமான் திருமேனியில் அவ்வாயுதங்கள் இல்லாதிருந்தனவென்றும், அதனால் நேர்ந்த சைவ—வைணவ வாதத்தை உடையவர் நீக்கியருளினர் என்றும் ஒரு சாரார் கூறுவதும் உண்டு. இதனைக் கருத்திற் கொண்டு திவ்விய கவியும் தலைவியின் பிரிவாற்றாமை கண்ட செவிலி இரங்கும் துறையில்,

---

16. திருவேங்கடத் தலபுராணம் - 18. தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்கு ஈந்த அத்தியாயம் காண்க,

"முனித்தொண்டை மான்கையிற் சங்காழி நல்கி
என்மூரல் செவ்வாய்க்
கனித்தொண்டை மான்கையிற் சங்காழிகோடல்
கருமம் அன்றே."[17]

[மூரல்-புன்முறுவல்; கனித்தொண்டை-கோவைப் பழம்; சங்கு-வளையல்; ஆழி-மோதிரம்.]

என்று மிக அருமையாகப் பாடியிருத்தல் கண்டு இன்புறத்தக்கது.

## வேங்கடம் முருகனுக்குரியது :

அன்பர்களே, 'வேங்கடம் முருகனுக்குரியது; வைணவர்கள் முருகன் உருவத்தையே மாற்றித் திருமால் உருவமாக மாற்றிவிட்டார்கள்' என்று கற்றோர்களிடையே ஒரு பேச்சு நிலவிவருகின்றது. இக்கருத்தினை மறுத்து 'ஸ்ரீவேங்கடமுடையான்'[18] என்ற தலைப்பில் தக்க சான்றுகளுடன் பேராசிரியர் மு. இராகவய்யங்கார் அவர்கள் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வரைந்துள்ளார். அதனை அன்பர்கள் பார்க்க வேண்டுகிறேன். ஆயினும், அதுபற்றி ஒருசில கருத்துக்களை இவண் தெரிவிக்க விழைகின்றேன்.

## மூன்று காரணங்கள் :

திருவேங்கடமலை திருமாலுக்குரியதாகாது, அது முருகனுக்கே உரியது என்பார் கூறும் மூன்று காரணங்களை மட்டிலும் ஈண்டு ஆராய விரும்புகின்றேன். அவை :

17. திருவேங்கடத் தந்தாதி-53.

18. இராகவையங்கார், மு—ஆராய்ச்சித் தொகுதி-20 வது கட்டுரை (பார்க்க).

(1) இன்னவின்ன நிலம் இன்னவின்ன தெய்வத்திற்கு உரியதென்று பாகுபடுத்தி நூற்பா செய்யுமிடத்தில் தொல்காப்பியர், திருமாலுக்கு முல்லை நிலமாகிய காட்டையும், முருகனுக்கு குறிஞ்சி நிலமாகிய மலையையும் உரிமையாக்குவதால், மலைநிலமாகிய வேங்கடம் முருகனுக்குரியதேயன்றித் திருமாலுக்கு உரியதாகாது என்பது.

(2) 'ஒடியா விழவின் நெடியோன் குன்றம்' (அகம்—149) என்ற அகநானூற்றுத் தொடரில் 'நெடியோன் குன்றம்' என்பதற்கு, 'முருகன்மலை' என்று பொருள் கொள்வது போல், சிலப்பதிகாரத்தில் வரும் 'நெடியோன் குன்றமும்' என்ற தொடருக்கும் பொருள் கொள்ளவேண்டும் என்பது.

(3) சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் 'வீங்கு நீர் அருவி வேங்கடம்' என்பது முதல் 'செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்' என்பது வரையிலுள்ள அடிகள் இடைச்செருகல் என்பதும், முருகக் கடவுட்கே வழங்கியிருந்த அடைமொழிகளைப் பிற்காலத்தில் யாரோவொருவர் திருமாலுக்குப் பொருத்தவேண்டிச் 'செங்கண் நெடியோன்' எனச் சிறப்பித்தும், 'பகையணங் காழியும் பால் வெண் சங்கமும்' என்று இராமாநுசர் காலத்துக்கு முன்பில்லாத திருமாலடையாளங்களை இடையிற் புகுத்திப் போந்ததுவுமாகும் என்பது.

இனி, இம் மூன்று காரணங்களையும் ஒவ்வொன்றாக ஆராய முற்படுகின்றேன்.

**முதலாவது காரணம் :**

குறிஞ்சி நிலத்துக் கடவுள் முருகனேயாதலால் 'நெடியோன் குன்றம்' என்று வேங்கடத்தை மாயோன் மலையாக இளங்கோ அடிகள் கூறினது நியாயம் ஆகாது

என்று கூறும் வாதம் பொருத்தமற்றது. அதே ஆசிரியர், அதே காதையில், பாண்டி நாட்டு அழகர் மலையையும் திருமாலிருஞ்சோலையையும் கூறியிருக்கின்றார் அன்றோ? அம் மாதிரியே திருவேங்கடத்தையும் அவர் மாலவன் குன்றமாகக் கருதுவது பொருத்தந்தானே. தொல்காப்பியர் ஒவ்வொரு கடவுளர்க்கும் நிலம் வகுத்திருப்பது உண்மையேயாயினும், மலைப்பகுதியில் திருமால் கோயில் கொள்வது உண்டென்றால் அது பிழையென்றும், அதனால் அத் திருமாலை மலைக்குரிய முருகனுக்கி விடுதலே தமிழ் நூல் முறையென்றும் துணிவதுதான் மிகவும் விநோத மான போக்காகும். எனவே, இப்போக்கினை ஏற்றுக் கொள்வோமாயின், ஆழ்வார் பெருமக்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற திருமாலிருஞ்சோலை, திருக் குறுங்குடி, திருநீர்மலை, திருமெய்யம், சிங்கவேள்குன்றம் (அகோபிலம்), திருக்கடிகை (சோழசிங்கபுரம்)[19] பதரியாசிரமம் முதலாக மலைப்பகுதியில் கோயில் கொண்ட திருமால்களை என்ன செய்வது? அவர்களைக் காலி செய்து முருகனுக்கு இடந்தருமாறு ஆணை பிறப் பிக்க முடியுமா? அன்றியும், மருதம், நெய்தல் நிலப்பகுதி களில் கோயில் கொண்ட திருமால், சிவபிரான், முருகன் முதலிய தெய்வங்களையும் அகற்றிவிட்டு அவ்வந்நிலங் களுக்கு உரியவராகத் தொல்காப்பியத்தில் வரையறுக் கப்பெற்ற இந்திரனையும் வருணனையும் முறையே குடியேற்றவேண்டியதும் இன்றியமையாமையாகிவிடும். இந் நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன்.

முருகக் கடவுள் குறிஞ்சிக்குரிய கடவுளாதலால், திருவேங்கடமலைக்கும் அவர் பொதுவில் அதிதெய்வம் என்பதில் மறுப்பில்லை. ஆனால், அவருக்குரிய மலையில்

---

19. இப்போது 'சோளிங்கர்' என வழங்குவது; அரக் கோணம் காட்டுப்பாடி இரயில் வழியில் உள்ளது.

வேறெந்தக் கடவுளரும் சிறப்பாகக் கோயில் கொள்ளக் கூடாது என்று துணிவதே நூல் வழக்கோடும் உலகவியல் போடும் மாறுபடுவதாகும். ஒரு கடவுளுக்குரியகோயிலில் வேறு கடவுளரைக் காப்பாளராகவும் (க்ஷேத்திரபாலக ராகவும்), வழிபடுபவராகவும் அமைக்கும் மரபு உண்டு என்பதை நாம் அறிவோம். எடுத்துக் காட்டாக, திரு வரங்கம் பெரிய கோயிலின் கோயில் காப்பாளருள் விநா யகரும் ஒருவர். அங்ஙனமே, திருவேங்கடத்திற்கு முருக வேள் கோயில் காப்பாளராகவும், திருமாலை வழிபடுபவ ராகவும் அமைகின்றார்.

> " 'வந்திக்க வந்தனை கொள்'ளென்று
> கந்தனும் மாதவரும்
> சிந்திக்க வந்தனை வேங்கடநாத!"[20]

[வந்திக்க-வணங்க; வந்தனை-வணக்கம்; கந்தன்-முருகன்; மாதவர் - முனிவர்; சிந்திக்க-தியானிக்க; வந்தனை-வந்து தோன்றினாய்.]

என்று இம் மரபினைத் திவ்வியகவி பாடுவதாலும் அறியலாம். இங்ஙனமே திருமாலின் முக்கிய இடமாகச் சங்கநூலான பரிபாடலும், சிலப்பதிகாரமும் கூறும் திருமாலிருஞ் சோலைமலையிலும் முருகனுக்கு இடம் உண்டு. இதனை,

> —"பஞ்சவர்தம்
> பங்கங் களைந்தான் பனிரண்டு கையொருவர்
> பங்கங் களைந்தான் பதி."[21]

என்று அழகர் கலம்பக ஆசிரியர் கூறுவதனாலும் அறியலாம்.

---

20. திருவேங்கடத் தந்தாதி-8
21. அழகர் கலம்பகம்

**இரண்டாவது காரணம்:**

அகநானூற்றுப் பாடலடியிலுள்ள 'நெடியோன்' என்ற சொல் முருகனைக் குறிப்பது என்பது உண்மை என்பதற்குத் தட்டில்லை. இங்ஙனம் அருகிக் காணப் பெறும் வழக்கு திருமாலுக்குப் பெருகி வழங்கும் வழக்காக இருப்பது சிந்திக்கத்தக்கது. அன்பர்களே, 'நெடியோன்' என்பது, 'உயர்ந்தோன்' என்ற பொருளுடையது. இச் சொல் மற்றத் தெய்வங்கட்கும் அரசர்க்கும் வழங்கும் பொதுச்சொல்லாகும். அங்ஙனம் வழங்கும்போது, அது அடையுடனாவது முன் தொடர்ச்சி பற்றியாவது அவர்களுள் ஒருவரைக் குறிக்குமேயன்றித் தனித்து நின்ற நிலையில் அங்ஙனம் அவர்களைக் குறிக்கும் ஆற்றலுடையதன்று.

"முந்நீர் விழவின் நெடியோன்"[22]
"தேர்வீ சிருக்கை நெடியோன்"[23]
"பொலந்தார் மார்பின் நெடியோன்"[24]
"நிலந்தரு திருவின் நெடியோன்"[25]

என்று பாண்டியனையும், பாரி போன்ற அரசர்களையும் அடையுடன் 'நெடியோன்' என்ற சொல்லால் பண்டை நூல்கள் கூறுவதைக் காணலாம். அங்ஙனமே, "மஞ்ஞை வெல்கொடியுயரிய...... நெடியோன்"[26] என்றும், "படுமணியானை நெடியோய்"[27] என்றும் அடையுடனும், "நெடியாய் நின் குன்றின் மிசை"[28] என்று முன் தொடர்பு பற்றியும் கூறுவது பண்டைய வழக்கே என்பது ஈண்டு அறியத்தக்கது. ஆனால், திருமாலைக்

---

22. புறம்-9.
23. புறம்-114.
24. மதுரைக் காஞ்சி-வரி 61.
25. சிலப் 28-வரி 4.
26. அகம்-149
27. பரிபா-19 வரி 28
28. பரிபா-19 வரி 84

குறிக்கும்போது 'நெடியோன்' என்பது அக்கடவுட்குத் தமிழில் அநாதியாய் வழங்கும், 'மால்' 'மாயோன் என்பவை போன்று திருநாமமாய், நிலங்கடத்தற்கு நீண்ட திரிவிக்கிரமன் என்ற பொருள் குறிக்கும் பெயராகும்.

"நெடியோன் குறளுரு வாகி"[29]

"நெடியோன் மார்பில் ஆரம் போல"[30]

"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி"[31]

"நெடியோ னன்ன நெடுங்கை"[32]

"நெடியவன் மூவகைப் படிவம்"[33]

என்று அடைகளும் முன் தொடர்ச்சிகளும் இல்லாமல் தனித்து நின்றே திருமாலைக் குறிக்கும் ஆற்றலுடைய தாதலைக் காணலாம். ஆகவே, இளங்கோவடிகள் தனி நிலையில் கூறிய "நெடியோன் குன்றமும்" என்ற தொடரில், 'நெடியோன்' என்ற பெயர் திருமாலையன்றி வேறெவரையும் குறிக்கவில்லை என்று உறுதியாக அறுதி யிட்டுக் கூறலாம்.

திருவேங்கட முடையானை 'நெடியோன்' என்ற பெயரால் இளங்கோவடிகள் கூறியது அப்பெருமானைத் திரிவிக்கிரமனாகக் குறிக்கும் ஆழ்வார்பெருமக்கள் வழக்கு கட்கு மிகவும் ஒத்துள்ளதையும் காணலாம். "நெடியோனே வேங்கடவா"[34] என்றார் குலசேகரப் பெருமாள். சடகோபரும் "தாள்பரப்பி மண்தாவிய ஈசனை"[35] என்று சிறப்பித்தார். உச்சிமேற் புலவர் கொள்

29.

30. சிலப்-25 வரி 84

31.

32. பெருங். 5, 4: 9,

33. பெருங். 2. 15: 10.

34. பெரு. திரு. 4: 9.

35. திருவாய்3. 3: 11.

நச்சினார்க் கினியரும் "நிலங்கடந்த நெடு முடியண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடு பெற்ற மலை"[36] என்று திரிவிக்கிரமனாகவே திருமலை எம்பெருமானைக் கூறி மகிழ்வதைக் காணலாம். இவ்வாறு 'மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால் ஞாலம்அளந்த'வரலாற்றால் திருவேங்கடமுடையானைப் பெரியோர்கள் கூறிவருவது பற்றி ஈட்டாசிரியரும் குறிப்பிடுகின்றார்: "திருவேங்கட முடையானையன்றோ கவிபாடிற்றென்னில், 'கொண்டாய் குறளாய் நிலமீ ரடியாலே, விண்டோய் சிகரத் திருவேங்கடமே, அண்டா' (பெரிய.திரு.1.10:4.) என்றும், 'மண்ணளந்த இணைத் தாமரைகள்' என்றும், 'உலக மளந்த பொன்னடியே யடைந்துய்ந்து' என்றும் ஆழ்வார்கள் அருளிச் செய்யா நிற்பர்கள். எல்லாரையும் திருவடிகளின்கீழ் இட்டுக் கொள்ளுகைக்காக நிற்கிற நிலையாலும், வரையாதே கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டு நிற்கின்ற படியாலும் திருவேங்கடமுடையானை ஸ்ரீவாமனனாகச் சொல்லக் கடவதிறே" என்பதாக.

வேதத்திலும், "அகில புவனங்களையும் தன் மூவடிகளின்கீழ் ஒடுக்கியவன் எவனோ, அப்பெருமான் கிரியில் நிலைபெற்றருளுகிறான்" என்ற கருத்து வருகிறது என்று காட்டி, மேற்படி கருத்து திரிவிக்கிரமனாகிய திருவேங்கட முடையான் திருமலையில் நித்தியவாசம் செய்தருளுகின்ற சிறப்பையே குறிப்பதாக விளக்குவர் பேராசிரியர் மு. இராகவய்யங்கார்.[37] இந்த விழுப் பொருளையே, 'இழைத்தா ரொருவருமில்லா மறைகளை யின்றமிழால் குழைத்தாராகிய குருகைப்பிரானும்' (சட. அந் 59)

36.
37. ஆராய்ச்சித் தொகுதி: கட்டுரை 20 (பக். 269).

"குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்
சென்று சேர்திரு வேங்கட மாமலை"[38]

என்று அருளிச் செய்வர். இக் கருத்தை உட்கொண்டே சுவாமி தேசிகனும்,

"விண்ணவரும் மண்ணவரும்
விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும்
வேத வெற்பே"[39]

என்ற அடிகளில் 'வேத வெற்பு' எனப் போற்றி யுரைத்தனர் போலும்.

மூன்றுவது காரணம் :

"வீங்கு நீர் அருவி......... நின்ற வண்ணமும்" என்ற பகுதி இடைச் செருகல் என்று கூறிய கூற்றுபற்றி முதற் பொழிவில் விளக்கினேன். அதனை ஈண்டு நினைவு கூர வேண்டுகின்றேன். "பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்" இராமாநுசர் எம்பெருமானின் திருமேனியில் நிறுவிய பின்புதான் திருவேங்கடம் திருமால் திருப்பதி யானது என்று கருதுவது தவறுனது என்பதையும் காட்டுவேன். இது பழைய தமிழ் நூல்களையேனும் வழக்குகளை யேனும் அறியாமல் கூறியதாகும். இராமாநுசருக்கு முன் பிருந்த ஆழ்வார் பெருமக்கள் திருவேங்கடமுடை யானைத் திருமாலாகவே பாடியதை நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். "தாழ்சடையும் நீள் முடியும்"[40] என்று தொடங்கும் பேயாழ்வார் பாடல், அரி-அரன்

38. திருவாய். 3. 3: 8.
39. தேசிக. பிரபந்-82.
40. மூன்றும் திருவந்-63

வடிவமான திருவேங்கட முடையான் திருவுருவைப் புகழ்ந்ததாகும். பொய்கையார் "கைய வலம்புரியும் நேமியும்"[41] என்றருளி யிருப்பதையும், குலசேகரப் பெருமாள் "மின்வட்டச் சுடராழி வேங்கடக் கோன்"[42] எனக் கூறியிருப்பதையும், திருமங்கை மன்னன் "சுடராழி வலனுயர்த்த மல்லார் தோள் வடவேங்கட வாணன்"[43] என்று நுவன்றிருப்பதையும், நம்மாழ்வார் "சீறு எரியும் திரு நேமி வலவா...... திருவேங்கடத் தானே"[44] என்று பணித்திருப்பதையும், பெரியாழ்வார் பெண்கொடி "வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற்கென்னை விதிக் கிற்றியே"[45] என்றருளி யிருப்பதையும் காண்போர்க்கு, இவ்வுண்மை விளங் காமற் போகாது. இவற்றையெல்லாம் யாதோ ஒரு காரணத்தால் புறக்கணித்தாலும், மேற்கூறிய ஐயரிதனுர் வாக்கிலுள்ள, "ஆழியவன்' என்ற தொடராவது இவ்வுண்மையை நிலைநாட்டாமற் போகாது.

இளங்கோவடிகள் கூறிய திருவேங்கடச் சிறப்பு முருகற்கேஉரியதென்று கருதுவது இன்னொரு வழியாலும் பிழையுடையதாகின்றது. திருவேங்கடத்தின் பெருமையைக் கோவலனுக்குரைத்த மாங்காட்டு மறையோன் தன்னைத் திருமாலடியான் என்று குறிப்பிட்டுத் தான் திருமால் திவ்விய தேசங்கட்கு யாத்திரையாகப் புறப்பட்டவன் என்று கூறிய கதை நிகழ்ச்சியைப் பாடுமிடத்தில் மேற்கூறிய திருமலை வருணனை வருகின்றது. இதனை,

---

41. முதல் திருவந்-28.
42. பெரு. திரு. 4: 3.
43. பெரிய திருமொழி-
44. திருவாய். 6. 10: 2.
45. நாச். திரு. 1: 1.

"செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
எங்கண் காட்டென்று என்னுளங் கவற்ற
53. வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்
... ... ... ... ... ... ... ...
நீணிலம் கடந்த நெடுமுடி யண்ணல்
தாடொழு தகையேன் போதுவல்"

என்ற அடிகளால் அறியலாம். இவ் வருணனை முருகனுடையதாயின், திருமால் திவ்விய தேச யாத்திரையின் பொருட்டுத் தான் புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலையைச் சேவித்துக் கொண்டு வருவதாக அந்த மறையோன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதோடு, 'கோயில், திருமலை' என்ற பண்டைய வழக்கிற்கேற்பத் திருவரங்கச் சிறப்பை முன்பும் திருவேங்கடச் சிறப்பைப் பின்பும் வைத்து அவன் அவ்விடத்துக் கூறிய இயைபோடும் மிகவும் முரணுதல் காணலாம். இதனாலும், திருவேங்கடம் திருமால் மலை என்பதே இளங்கோவடிகளின் கருத்தென்பது மலை இலக்காக அமைகின்றது.

**வேறு சான்றுகள் :**

அன்பர்களே, திருவேங்கடம் திருமாற்கே சிறப்பாக உரிய தலம் என்பதற்கு ஆழ்வார்களின் கூற்றுக்களேயன்றி வேறு சான்றுகளும் உள்ளன. அவற்றையும் நிரல்படக் கூறுவேன்.

(1) 'வெறிகொள்...அருளீயும் ஆழியவன்' (பு. வெ. மா-230) என்ற ஐயரிதனாரின் தெளிவான வாக்கு முன்னரே காட்டப்பட்டது.

(2) பாரதம் பாடிய பெருந்தேவனாரும் தம் காலத்துப் புகழுடன் திகழ்ந்த திருவரங்கம், திருமலை;

பெருமாள் கோவில் (காஞ்சி), அழகர்மலை ஆகிய திருப் பதிகளை,

"தேனேங்கு நீழல் திருவேங் கடமென்றும்
வானேங்கு சோலை மலையென்றும்—தானேங்கு
தென்னரங்கம் என்றும் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்"[46]

[அத்தியூர் - காஞ்சி.]

என்று தம் பாரதத்தில் பாடியுள்ளது ஈண்டு கருதத் தக்கது.

(3) ஆசிரிய மாலையுடையார் 'புடையது நெடு மால் வரைக் கப்புறம் புகினும்' என்று கூறுவர்.

(4) இவற்றையெல்லாம் நன்கு அறிந்தே சிவ பரத் துவம் கூறும் அத்துவித சமய வாதியாகிய நச்சினார்க் கினியரும், "நிலங் கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகம் தவஞ்செய்து வீடுபெற்ற மலை" என்று எழுதிப் போந்தார்.

(5) கம்ப நாடனும் 'கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரேல் உம் கொடிய கொடுமை நீங்கி வீடுறுதிர்'[47] என்று கூறுவர். மேலும் அவர்,

"வலம்கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறு கின்றன மெய்நெறிப்
புலன்கொள் வார்கட் கனையது பொய்க்குமோ?"[48]

என்று அம் மலையைச் சிறப்பிப்பர்.

---

46. பெருந்தேவனார் பாரதம்.
47. கிட்கிந். நாடவிட்ட-29.
48. கிட்கிந்-ஆறு செல்-36.

(6) ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வாரும், "திருவேங்கடம் நங்கட்குச்; சமன்கொள் வீடுதரும் தடங் குன்றமே"[49] என்று போற்றியுரைப்பர்.

(7) முன்னோர் கூறின மரபை நன்குணர்ந்த சிவப் பிரகாச அடிகளும் தாம் பாடிய சீகாளத்திப் புராணத் தில்,

"அரவணைச் செல்வன் வாழும்
அந்தமிழ் நிலத்தின் எல்லைத்
திருமலை கண்டு ணர்ந்தோர்
செறிவினைத் தொடர் அறுக்கும்
பெருமலை கண்டி றைஞ்சிப்
பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரும் ஏமகூடப்
பொருப்பினை இனிது கண்டான்."[50]

என்று பாடியுள்ளார்.

(8) திருவேங்கடத்துக் கோயில் காப்பவராக முருக வேள் அமைந்துள்ளார் என்று கூறப் பெறுவதற்கேற்ப அத் திருமலைச் செவ்வேளை அருணகிரியார் பாடியுள் ளனர் என்பதை நாம் அறிவோம். ஆயினும், அவர் திரு வாஞ்சியத்தைப் பற்றின "இபமாந்தர் சக்ரபதி" என்ற திருப்புகழில், வேங்கடத்து அண்ணலைப் 'பிரசித்த நெடியவன்' என்றும் 'உயர்சார்ங்க சக்ரகரதலன்' என்றும் கூறியுள்ளமை கருதத்தக்கது. இதனால் அப் பெரியார் திருவுள்ளத்திலும் திருவேங்கடம் குறிஞ்சித் தெய்வமாகிய செவ்வேளுக்குரிய தாயினும், அது திருமாலின் புகழ்பெற்ற திருக்கோயில்களில் ஒன்றாக இருப்பது பெறப்படும்.

---

49. திருவாய். 3.3:7.
50. சீகாளத்திப் புராணம்

இவ்விடத்தில் இன்னோர் உண்மையும் கவனிக்கத் தக்கது. சீநிவாசனது திருமேனியில் நாகாபரணமும் சடையுமுள்ளமையால் அத் திருமேனி திருமாற்கு உரியதன்று என்று கூறும் செவ்வேள் கட்சியினர் அத் திருமேனி முருகனுக்குரியது என்பதை நிலைநாட்டத் தவறுகின்றனர். செவ்வேளுக்கு வக்காலத்து வாங்கி அதனைச் சிவபிரானுக்குரியதாக்குகின்றனர். சிவபிரானின் சம்பந்தம் ஒரு பக்கப் பார்வையாகவே உள்ளது. திருவேங்கடமுடையானின் திருமேனி சிவபிரானை ஒரு பாற்கொண்டதாக உள்ளது. இந்த அரி—அரன் உருவினையே பேயாழ்வார் சிறப்பித்தார். திருமங்கை மன்னனும்,

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து
பிரமனைத்தன் உந்தியிலே தோற்று வித்து"[51]

என்று அருளிச் செய்தனர். இத்தகைய திருக்கோலத்தை அவ் வெம்பெருமான் கொண்டிருந்ததால், அரியோ அரனோ என்ற வாதமுண்டாக, அதனை உடையவர் தீர்த்து வைத்த செய்தியே குருபரம்பரையில் உள்ளது என்பது முன்னர்க் காட்டப்பெற்றது.

திருமலை சிவபிரானுக்குரிய சிறந்த தலமாகக் கருதப் பெற்றிருப்பின் தேவாரம் முதலிய திருமுறைகள் இயற்றிய சிவனடியார்களுள் ஒருவரேனும் அம்மலை சிவனுக்குரியதாகப் பாடியிருப்பர். செவ்வேளின் படை வீடுகளைப் பற்றிப் பாடும் செவ்வேளடியார்களாவது இம் மலையை முருகன் வரைப்பு என்று கொண்டாடியிருப்பர். இரண்டும் இல்லையாதலின், பண்டைக்காலத்திலேயே திருமலை சிவபிரானுக்குக்கேனும் முருகவேளுக்கேனும்

51. பெரிய திரு. 3.4 : 9.

சிறப்புடைய தலமாகக் கருதப்பட்டதன்று என்பது தெளிவாகின்றது.

இன்றைய இரண்டாவது பொழிவில் இனி இடைக்கால இலக்கியத்தில் திருவேங்கடம் பற்றி வரும் செய்திகளை ஆராய்வோம். இடைக்கால இலக்கியங்களிலும்,

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
2. கம்பராமாயணம்
3. வில்லிபுத்தூரார் பாரதம்

ஆகியவற்றில் வரும் செய்திகளே ஆராயப் பெறும். முதலாவதாக நாலாயிரத்தை நோக்குவோம்.

## 1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்:

இது தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்பெறும் சிறந்த பக்திப் பனுவலாகும். இது மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவரால் அருளிச் செய்யப் பெற்ற பாசுரங்களைக் கொண்டது. இதில் ஆழ்வார்கள் பதினொருவர் இறைவன்மீது அருளியுள்ள இருபத்திரண்டு பிரபந்தங்களும், 'மற்றறியேன் குருகூர் நம்பி, பாவின் இன்னிசைப் பாடித் திரிவனே[52]' என்று நம்மாழ்வாரைப் போற்றிப் புகழும் மதுரகவிகள் நம்மாழ்வார் மீது அருளியுள்ள ஒருபிரபந்தமும், திருவரங்கத்தமுதனார் உடையவர்மீது அருளியுள்ள ஒரு பிரபந்தமுமாக இருபத்து நான்கு பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் இசைப்பாத் தொகுதிகள் மூன்றும், இயற்பாத் தொகுதி ஒன்றுமாக நான்கு பிரிவுகள் உள்ளன. பக்திப் பாடல்கள் என்ற வகையில் இதனைப் போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிகச்

52. கண்ணினுண்-2.

சிலவற்றைத்தான் கருதுதல் கூடும். இந்த நூலிலுள்ள பாசுரங்கள் 108 திருப்பதிகளில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள எம்பெருமான்களைப் பற்றியனவாகும். இந்தப் பாசுரங்களின் பெருமையை வேதாந்ததேசிகர்,

"செய்யதமிழ் மாலைகள்நாம்
தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் றோமே."[53]

[தெளியாத - விளங்காமலிருந்த; மறை நிலங்கள் - வேத பாகங்கள் ]

என்று சிறப்பித்துப் பேசுவர். இவற்றை நாம் பொருளுடன் குருமுகமாய்ப் பெற்றால் இதுவரை நமக்கு விளங்காமலிருந்த வேதவிழுப் பொருளையெல்லாம் நன்கு அறிய முடியும் என்று இவற்றின் பெருமையை அறுதியிடுகின்றார் இந்தச் சுவாமி அவர்கள்.

இந்த நூற்றெட்டுத் திருப்பதிகளுள் திருவேங்கடமும் ஒன்று. கோயில், திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி) என்று வைணவப் பெருமக்களால் மிகவும் சிறப்பாகப் போற்றப் பெறும் மூன்று திவ்விய தேசங்களுள் இது நடுநாயகமாகத் திகழ்வது. வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலாவதாகக் கூறப்பெறுவது. இதனை அழகிய மணவாளதாசர்,

"தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்—தேனேய்
திருவேங் கடந்தொழுதேந் தீய விபூதிக்குள்
கருவேம் கடந்தனெமிவ் வாழ்வு."[54]

---

53. தேசிகப் பிரபந்தம்-40.
54. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி-96.

[சரணம்-உபாயம்; பலம்-உபேயம்; தேனேயீ-தேன் நிறைந்த; தீய விபூதி-லீலா விபூதி; மருவேம்-பொருந்தோம்.]

என்று சிறப்பித்துப் பாடுவர். இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடத்தைப்பற்றிய பாடல்கள் 213 இதில் உள்ளன. இவற்றைப் பாடியவர்கள் பதின்மர். எந்தெந்த ஆழ்வார்கள் எத்தனை எத்தனை பாசுரங்கள் அருளியுள்ளனர் என்பதை ஈண்டுக் காட்டுவேன்.

| | | பாசுரங்கள் |
|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | 10 |
| 2. | பூதத்தாழ்வார் | 9 |
| 3. | பேயாழ்வார் | 19 |
| 4. | திருமழிசையாழ்வார் | 15 |
| 5. | திருப்பாணாழ்வார் | 2 |
| 6. | குலசேகராழ்வார் | 11 |
| 7. | பெரியாழ்வார் | 7 |
| 8. | ஆண்டாள் | 16 |
| 9. | திருமங்கையாழ்வார் | 62 |
| 10. | நம்மாழ்வார் | 62 |
| | மொத்தம் | 213 |

இனி, ஆழ்வார் பாடல்கள் சிலவற்றில் ஆழங்கால் படுவோம். திருவேங்கடத்தைப் பற்றியும் அங்கு எழுந்தருளியிருக்கும் நெடியோனைப்பற்றியும் அவர்கள் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முற்படுவோம். முதலாவதாக, முதலாழ்வார்கள் காட்டும் வேங்கட மலைக் காட்சிகளைக் காண்போம்.

**வேங்கடத்தில் சில காட்சிகள் :**

இக் காட்சிகளைக் காண்பதற்கு முன்னர், தத்துவத்தைப்பற்றிய ஒரு சிறு குறிப்பினை மனத்திலிருத்த

வேண்டும். வைணவ தத்துவம் சித்து; அசித்து; ஈசுவரன் என்று மூவகைப் பட்டிருக்கும். இதனைத் "தத்துவத்திரயம்" என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். சித்தும், அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். இந்த உறவினைச் 'சரீர—சரீரி பாவனை' என்று போற்றியுரைப்பர் அப்பெருமக்கள். அசித்தும் எம்பெருமான் படைப்பாதலால் அதுவும் வழிபாட்டிற்குரியது.

**"சென்று சேர்திரு வேங்கட மாமலை**
**ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே."[55]**

என்ற நம்மாழ்வார் பாசுரம் இக் கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்னவுடனேயே எம்பெருமான் மன மகிழ்ந்து நமக்கு திருவருள் பாலிக்கும் பெருமை பேசப் பெறுகின்றது.

**"திருமா லிருஞ்சோலை மலையென்றேன்; என்னத்**
**திருமால் வந்துஎன் நெஞ்சுநிறையப் புகுந்தான்"[56]**

என்ற திருவாய்மொழி இதற்குச் சான்றாக நிற்கின்றது. எனவே, அன்பர்களே, அசித்தாகிய வேங்கடமலையில் சில காட்சிகளைக் காண்டலும் இறையநுபவம் பெற்றதாக அமைகின்றது. இத்தகைய பல அழகிய காட்சிகளை நமக்கு ஆழ்வார் பெருமக்கள் காட்டிச் செல்கின்றனர். அவற்றுள் சிலவற்றை இன்றைய பொழிவில் காட்டுவேன்.

பூதத்தாழ்வார் காட்டும் காட்சி ஒன்றினைக் காண்போம். திருமலையில் மதப்பெருக்கால் செருக்கித் திரி

55. திருவாய் 3.3:8.
56. திருவாய். 10.8;1.

கின்றது ஆண்யானை ஒன்று. அது தன் பெண் யானையைக் காண்கின்றது. அதனை மீறி அப்பால் செல்ல மாட்டாது அதற்கு இனிய உணவு ஈந்து அதன் மனம் நிறைவிக்க விரும்புகின்றது. அம் மலையிலிருந்து மூங்கில் குருத்தொன்றைப் பிடுங்குகின்றது. அருகில் மலை முழைஞ்சிலிருந்த ஒரு தேனடையில் தோய்த்து அப் பிடியின் வாயில் ஊட்டுகின்றது 'குளோப் ஜாமூனை' ஊட்டுவதுபோல். இதனை ஆழ்வார்,

"பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடங்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை."[57]

[வேழம்-யானை; பிடி - பெண்யானை; இருகண் - இரண்டு கணுக்களையுடைய; வண்ணன்-நிறத்தன்; வரை-மலை.]

என்ற சொற்படமாக்கிக் காட்டுகின்றார். இத்தகைய ஒரு காட்சியைத் திருமங்கையாழ்வார் இமயமலையில் காட்டுவர். திருப்பிரிதி என்ற திவ்விய தேசத்தை வருணிக்கும் இந்த ஆழ்வார் இக்காட்சியைக் காட்டுகின்றார்.

"வரைசெய் மாக்களிறு இளவெதிர்வளர்முளை
அளைமிகு தேன்தோய்த்துப்
பிரச வாரிதன் இளம்பிடிக் கருள்செயும்
பிரிதிசென் றடைநெஞ்சே."[58]

[வரைசெய் - மலைபோன்ற; களிறு-ஆண் யானை; வெதிர்-மூங்கில்; வளர்முளை - வளரும் இள மூங்கில்;

57. இரண்-திருவந்-75.
58. பெரிய-திரு. 1-2;5.

அளை - முழைஞ்சு; பிரசவாரி-தேன் வெள்ளம்; அருள் செயும்-கொடுக்கும்.]

இங்கு ஆண்யானை தன் பெண் யானைக்கு ஒரு தேன் தோய்ந்த மூங்கிற் குருத்தைத் தந்து அதனை மகிழ்விக்கின்றது. இக் காட்சிகளை நினைவிற்கொண்ட கம்பநாடன், சித்திரகூட மலையில் இத்தகைய காட்சியொன்றினைச் சீதைக்கு இராமன் மூலம் காட்டுகின்றான்.

"உருகு காதலில் தழைகொண்டு
மழலைவண்டு ஓச்சி,
முருகு நாறுசெந் தேனினை
முழைநின்றும் வாங்கி,
பெருகு சூல்இளம் பிடிக்குஒரு
பிறைமருப் பியானை,
பருக வாயினில் கையில்நின்று
அளிப்பன பாராய்."[59]

[முருகு - மணம்; நாறு - வீசுகின்ற; முழை - கல் இடுக்கு; பெருகு சூல் - முதிர்ந்த கருப்பம்; மருப்பு - தந்தம்.]

இங்கு ஓர் ஆண் யானை சூல் கொண்டுள்ள தன் இளம் பிடியின்மீது அளவற்ற அன்பு கொண்டுள்ளது. ஒரு மலையிடுக்கில் தேன்கூடு கட்டப்பெற்று அடையில் தேன் ததும்பி நிற்கின்றது. தேனீக்கள் அதனைச் சூழ்ந்து மொய்த்துக் கொண்டுள்ளன. ஆண் யானை அண்மையிலுள்ள மரத்தினின்று ஒரு தழைக் கொத்தினை ஒடித்து அதனைக் கொண்டு அம்மழலை வண்டுகளை ஓச்சுகின்றது. பிறகு அந்தத் தேனடையினை அப்படியே அசையாமல் தன் துதிக்கையினால் வாங்கிச் சூல்நிறைந்து பருகுவதற்கும் சிரமப்படும் தன் பிடியின் வாயில் வைத்

59. கம்பரா. அயோத்-சித்திர-10.

துப் பருகுமாறு செருகுகின்றது. இந்த யானை மூங்கில் குருத்தினை விரும்பவில்லை. 'ரஸகுல்லா' போல் தேனடையை மட்டிலும் அளிக்க விரும்பினது போலும்.

இன்னொரு யானையின் செயலைப் பொய்கையாழ்வார் நமக்குக் காட்டுவர். திருமலையின் கொல்லைகளில் இராக்காலத்தில் யானையொன்று பட்டி மேய்கின்றது. ஒரு கையில் கொளுத்திய தீவட்டியும் மற்றொரு கையில் அம்பு தொடுத்த வில்லையும் கொண்டு அந்த யானையை அதட்டிச் செல்லுகின்றனர் குறவர்கள். இதனால் யானை வெருவி ஓடுகின்றது. ஆயின், எதிர்பாராத விதமாக அஃது ஓடும் வழியில் விண்ணினின்றும் எரி மீன் ஒன்று விழுகின்றது. யானை அதனை நட்சத்திரம் என்று ஓராது குறவர்கள் தம் கைத்தீவட்டியையே கீழெறிந்தனர் என்று கருதித் திகைத்துக் கற்சிலைபோல் நின்று விடுகின்றது.

"பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம் — இருவிசும்பில்
மீன்வீழக் கண்டுஅஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று."[60]

[பகழி - அம்பு; வெருவி-அஞ்சி; புனம்–சொல்லை; வேழம் யானை; விசும்பு-ஆகாயம்; மீன்-நட்சத்திரம்; அசுரர் கோன்-இரணியன்; உகந்தான்-மகிழ்ந்தான்.]

என்பது பொய்கையாழ்வார் காட்டும் சொல்லோவியம் ஆகும்.

பேயாழ்வார் காட்டும் யானையோ, 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்டழைத்த கஜேந்திரன் மரபுவழி வந்தது போலும். இது புரியும் வழிபாட்டுச் செயலை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகின்றார் ஆழ்வார். வழிபாட்டுக்

60. முதல் திருவந்-40.

குச் செல்லும் அடியார்கள் வாய்கொப்பளித்துக் கைகால் களை நீரால் தூய்மை செய்து கொண்டு மலர்களை எடுத்துப் போவது வழக்கமாகும். திருமலையிலுள்ள ஆண்யானை யொன்று இந்நெறியை மேற்கொள்ளு கின்றது. இக்காட்சியினை ஆழ்வார்,

> "புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி
> உகுமதத்தால் கால்கழுவிக் கையால்—மிகுமதத்தேன்
> விண்ட மலர்கொண்டு விறல்வேங் கடவனையே
> கண்டு வணங்கும் களிறு."[61]

[புகு-வாயில் புகும்; வாய்பூசுதல் - கொப்பளித்தல்; மிகுமதம்-அதிக மதம்; விறல்-மிடுக்கு; களிறு—ஆண் யானை.]

என்ற பாடலால் காட்டுவர். கன்னத்திலிருந்தும் மத்த கத்திலிருந்தும் பெருகியொழுகும் மதநீரால் வாய் கொப்பளிக்கின்றது யானை. அருவிபோல் கால்வரை பெருகிவழியும் மதநீரினுல் கால் கழுவுகின்றது. இங்ஙனம் திருமலையிலுள்ள ஐயறிவு விலங்கும் தன்னை வழிபடும் ஞானத்தைத் தரக்கூடியவன் திருமலையப்பன் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

இன்னொரு யானையின் செயலையும் அதன் முடிவை யும் காண்போம். 'மதயானைபோல் எழுந்த மாமுகில் காள்!' என்று ஆண்டாள் வருணித்ததை நாம் நினைவு கொள்ளுவோம். ஆண்யானை யொன்று கரிய மாமுகிற் படலத்தை எதிரியானையென்று நினைத்து துதிக்கையைத் தூக்கிக்கொண்டு வேகமாக ஓடிக் குத்துகின்றது. இதனைக் கண்ட யாளி ஒன்று அந்த யானையின்மீது பாய்ந்து ஓங்கி அறைந்து அதன் கொம்புகளை முறிக்

61. மூன்-திருவந் 70.

கின்றது. யானையும் வாய்விட்டுப் பிளிறிக்கொண்டு மடிந் தொழிகின்றது. ஆயினும், சினந்தணியாமல் அங்கேயே நின்றவண்ணம் பெருமுழக்கம் செய்து மலையையே அதிரவைக்கின்றது. இப்படி ஒரு காட்சி.[62]

திருவேங்கட மலையின் உயர்ச்சியைக் காட்டும் போக்கில் மூங்கில்களின் வளர்ச்சியையும் காட்டு கின்றார் இந்த ஆழ்வார். திருமலையின் மூங்கில் சந்திர மண்டலத்தளவும் நீண்டு வளர்ந்துள்ளது. அது மதியைப் பற்றிக்கொண்டிருக்கும் இராகுவையும் தகர்த்துக் கிரகணத்தையே விடுவித்துவிடுகின்றது. "தீங்கழை போய் வென்று, விளங்குமதி கோள்விடுக்கும் வேங் கடமே!"[63] என்பது ஆழ்வாரின் திருவாக்கு. இத்தகைய பல காட்சிகளை திவ்விய கவியும் காட்டுவார். அதனை மூன்றுவது பொழிவில் கண்டு மகிழ்வோம்.

பூதத்தாழ்வார் திருமலையில் வாழும் வானரங்கள் எம்பெருமானுக்குச் செய்யும் பூசனைகளைக் காட்டு கின்றார்.

"போதறிந்து வானரங்கள்
பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும்."[64]

[போது-விடியற்காலம்; சுனை - நீர்நிலை: ஏத்தும்-துதிக்கும் ]

இதனை அடியொற்றியே கம்பநாடன் சித்திர கூடக் குரங்குகளின் செயல்களை எடுத்துக் காட்டுவன். இங்குள்ள குரங்குகள் மூப்படைந்து கண்ணிடுகிப்போய் வழியறி

---

62. மூன். திருவந். 71.
63. மூன். திருவந். 72. கோள் - கிரகணம்.
64. இரண்-திருவந்-72.

யாது வருந்தும் மாதவர்க்கு அவர் செல்லவேண்டிய அருநெறிகளைக் காட்டுகின்றன.

> "இடுகு கண்ணினர் இடருறு
> மூப்பினர் ஏக
> நெடுகு கூனல்வால் நீட்டின
> உருகுறு நெஞ்சக்
> கடுவன் மாதவர்க்(கு) அருநெறி
> காட்டுப காணாய்."[65]

[இடுகு-இடுகிய; இடர் - துன்பம்; ஏக - செல்ல-நெடுகு கூனல்-மிக்க கூனையுடைய; மாதவர்-தவசிகள்.]

என்பது கம்பன் காட்டும் சொல்லோவியம். இங்கு இராமன் சீதைக்குப் பல சித்திரகூடமலைக் காட்சிகளைக் காட்டுகிறான். இன்னும், சில மந்திகள் சிலம்பியின் நூல்; பஞ்சின் நூல்களை ஆராய்ந்து தெரிந்து அந்தணர்க்கு அளிக்கின்றன.[66] கடுவன்கள் முனிவர்கட்கு மாங்கனிகளை அளிக்கின்றன.[67] இங்ஙனம் குறிஞ்சிநிலக் காட்சிகள் வழி வழியாகப் புதியபுதிய கற்பனைப் போக்குகளுடன் இலக்கியங்களில் புலவர்களால் காட்டபெற்று அறிவுக்கு விருந்தாக அமைகின்றன. தத்துவ ஞானியர் இந்த அசித்துக் காட்சிகளிலும் ஆழங்கால் படுகின்றனர்.

பேயாழ்வாரும் ஒரு குரங்கின் செயலைக் காட்டி மகிழ்கின்றார் தெளிவான கற்பாறையின் மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறது பெண் குரங்கொன்று. அது தனக்கு நட்பாகவுள்ள ஓர் ஆண்குரங்கை நோக்கி விண்ணில் வெண்மையாகத் தோன்றும் திங்களைப் பிடித்துத் தருமாறு வேண்டுகின்றது.

---

65. அயோ-சித்திர-30.
66. அயோ. சித்திர-32.
67 அயோ. சித்திர-33.

"தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே"[68]

[சிலாதலம் - கற்பாறை; மந்தி - பெண் குரங்கு; கடுவன் - ஆண் குரங்கு; மதியம்-திங்கள்.]

என்பது பேயாழ்வாரின் சொல்லோவியம். இப்பாடலால் திருமலையின் உயர்ச்சியை அறிகின்றோம். இங்ஙனம் திருமலையின் விண்ணை எட்டும் உயர்வினைக் காட்டும் பல பாக்கள் திருவேங்கடமலையின்மீது எழுந்த தனி இலக்கியங்களில் உள்ளன. அவற்றை நாளைச் சொற்பொழிவில் காட்டுவேன்.

## திருமழிசையாழ்வார் :

திருவேங்கட மலையைப்பற்றிய பக்திசாரரின் அநுசந்தானம் மிகவும் அற்புதமானது.

"வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்"[69]

[வெற்பு–மலை; வீடு-மோட்சம்]

என்கின்றார். "பல மலைகளின் பெயர்களைச் சொல்லி வரும் அடைவிலே 'திருவேங்கடமலை' என்று என் வாயில் வந்து விட்டது. இதனால் பரமபதமும் எனக்குச் சித்தித்து வந்துவிட்டது" என்று கூறி இனியராகின்றார் ஆழ்வார். இந்த அநுபவத்தைக் கைமேல் கண்டவர் நம்மையும் அம்மலையைச் சென்று வணங்குமாறு ஆற்றுப் படுத்துகின்றார்.

68. மூன்-திருவந். 58.
69. நான்-திருவந். 40.

"சென்று வணங்குமினே சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்"[70]

[வினை - பாபம்.]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. 'வேங்கடம்' என்ற சொல்லின் பிற்காலப் பொருளை விளக்குவது போல் உள்ளது இப்பாடற் பகுதி. இதனை மேலும் அரண் செய்வது போல், "வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதும்"[71] என்று இன்னொரு பாடலின் அடி அமைந்திருப்பதையும் காண்கின்றோம். இவர் திருச் சந்த விருத்தத்திலும் "வேங்கடம் அடைந்த மால்பாதமே அடைந்து நாளும் உய்மினோ"[72] என்று ஆற்றுப் படுத்துவதையும் நாம் காணுமல் இல்லை. இம்மலை வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைத்தமாநிதியாயிருப்பதாக இன்னொரு பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

..."தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு."[73]

என்று பேசுவதைக் காண்கின்றோம்.

வேங்கடமலையின் எழிலும் 'கருப்பொருள்' வளமும் இந்த ஆழ்வாரின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. 'ஊர்' அல்லது 'பதி' என்ற கலம்பகத்துறைச் செய்யுள் போல் அமைந்துள்ள ஒரு பாடலைக் காண்போம்.

"நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்
பொன்மணியும் முத்தமும் பூமரமும்—பன்மணிச்சீ

---

70. நான்.திரு. 42.
71. நான்.திரு. 48.
72. திருச்சந். 81.
73. நான்.திரு. 45.

செஞ்சுடர் நாவலைக் கும்திரு
மாலிருஞ் சோலையதே.''[76]

என்ற பெரியாழ்வார் பாசுரத்தாலும் இவ்விருப்பத்தை அறியலாம்.

குலசேகரப் பெருமாள் :

சேரர்கோன் குலசேகராழ்வாருக்குத் திருவேங்கட மலையின்மீது ஏற்பட்ட கழிபெருங்காதல் அற்புதமானது. ஓர் இனிய திருமொழியில் அந்த ஆழ்வாரின் எண்ணக் கோவைகளைக் கண்டு களிக்கலாம். திருவேங் கடத்தில் பிறத்தலும் அங்கு ஏதாவது ஒரு பொருளாக இருத்தலும் போதும் எனக் கூறுகின்றார் ஆழ்வார் திரு வேங்கடமலையில் வாழும் பேறு கிடைக்கப் பெற்றால், அறிவற்ற விலங்குப்பிறவியும் தனக்குப் போதும் என் கின்றார். 'வேங்கடத்து, கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே'[77] என்பது அவர் திருவாக்கு. இப்படிக் கூறியவரின் சிந்தனை சிறகடித்துப் பறக்கின்றது. குருகுக்கு இறகுகள் இருப்பதை நினைக்கின்றார். அதனால் அஃது அவற்றின் துணைகொண்டு திருமலையை விட்டு வேறிடத்திற்குச் சென்றாலும் செல்லக் கூடும் என்று கருதுகின்றார். அங்ஙனமின்றி அந்த மலையிலேயே பிறத்தல், வாழ்தல், இறத்தல் ஆகிய செயல்களையுடைய மீனாய்ப் பிறந்தாலும் போதுமே என்று எண்ணுகின்றார்.

"தேனார் பூஞ்சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே''[78]

என்பதனால் தன் அவாவினை வெளியிடுகிறார். எம் பெருமானுக்கு அந்தரங்கச் சேவனைகத் தொண்டு

76. பெரியாழ்.திரு-4.3:2.
77. பெரு.திரு. 4:1
78, பெரு.திரு-4:2

புரியும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றால் தான் யாதொரு தடையுமின்றி அர்ச்சக பரிசாரர்களுடன் எளிதில் திருக் கோயிலில் புக்குக் கருவறையை அடைந்து எம்பெருமான் அருகில் நின்று பணி செய்யலாம் என்ற எண்ணம் பளிச் சென்று இவர் மனத்தில் உதிக்கின்றது.

**"மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தான்உமிழும்**
**பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேன் ஆவேனே."[79].**

என்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

தான் விரும்பும் அந்தரங்கப் பணி கிடைத்தால் பொன் வட்டில்மேல் மனம் சென்று அதனைக் களவாடும் ஆசை தோன்றலாம்; அதனால் சிறைவாசமும் கிட்ட லாம் என்ற எண்ணஓட்டம் எழுகின்றது ஆழ்வாருக்கு. ஆதலால் இயங்குதிணைப் பிறப்பு வேண்டும் என்ப தில்லை; நிலைத்திணைப் பிறப்பு கிடைத்தாலும் போதும் என்று எண்ணுகின்றது இவர் மனம். வானவர், வானவர் கோனுடன் பூமாரி பொழியும் இடமாதலால் அத் திருமலையில் மலர்ப்பணியாற்றும் மரமாகவேனும் இருக்க லாமே என்று கருதுகின்றார். 'தேனின் இனிய பிரானே செண்பகப் பூச்சூட்ட வாராய்'[80] என்ற பெரியாழ்வார் வாக்கால் எம் பெருமான் திருவுள்ளத்திற்குச் சண்பக மலர் மிகவும் உகப்பாதலை அறிகின்றார். உடனே,

**"பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்**
**செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே"[81].**

என்று தன் ஆசையை வெளியிடுகின்றார்.

---

79. பெரு.திரு-4:3
80. பெரியாழ்.திரு-2.7:1.
81. பெரு. திரு. 4:4.

இந்த ஆசைக்கும் தடை தோன்றுகின்றது. கற்பகத்தைக் கருதிய காதலிக்குக் கண்ணன் அம் மரத்தைப் பெயர்த்துச் சென்றதுபோல் திருமலைக்கு வருகின்ற செல்வந்தர்களுள் யாரேனும் ஒருவர் சண்பகமரத்தையும் பெயர்த்துக்கொண்டேகின் திருமலையின் வாழ்க்கையை இழக்கநேரிடுமே என்ற ஊகம் கால் கொள்ளுகின்றது இவர் சிந்தனையில். ஒன்றுக்கும் உதவாத புல் பூண்டு செடி கொடியின் புதராக-தம்பகமாக-வேனும் இருந்தால் தனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது என்று எண்ணி,

"எம்பெருமான் ஈசன் எழில்வேங் கடமலையில்
தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே"[82]

என்று தம் விருப்பத்தைப் புலப்படுத்துகின்றார். சிறிது யோசித்த அளவில் அதற்கும் ஓர் ஆபத்து உண்டு என்பதாக எண்ணுகின்றது இவர் உள்ளம். காட்டுத்துறையினர் செடிசெட்டுகளை அடிக்கடி சோதிக்கும் இயல்புடையவராதலால், அவர்கள் தம்பகத்தைக் களைந்தெறியக் கூடும்; அல்லது தீயிட்டு அதனை எரித்தலும் கூடும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. மலையின் ஒரு பகுதியாக இருப்பின் என்றும் மாறாத ஒரே நிலையில் இருக்கலாமே என்று கருதுகின்றார். உடனே "வேங்கடத்துள், அன்னனைய பொற்குவடாம் அருந்தவத்தன் ஆவேனே"[83] என்று தன் நசையினை வெளியிடுகின்றார்.

இந்தப் பாரிப்பும் மறையத் தொடங்குகின்றது. புதிய திருக்கோயில்களை நிறுவுவோர், பழைய கோயிலுக்குத் திருப்பணி புரிவோர், மலைமுகட்டுப் பாறைகளை உடைத்துக் கொண்டு போவாராதலால் அதுவும் தனக்கு

---

82. பெரு. திரு. 4:5
83. பெரு. திரு. 4;6

ஏற்றதன்று என எண்ணுகின்றார் ஆழ்வார். ஆதலின் எவராலும் பெயர்த்துக் கொண்டு போக முடியாத கானாறாக வேனும் பிறக்க கூடாதா என்று எண்ணுகின்றது இவரது மனம். "திருவேங்கட மலைமேல் கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே"[84] என்று அபேட்சிக்கின்றார் ஆழ்வார். இதனைச் சிறிது சிந்தித்ததும் அதிலும் ஒரு குறையிருப்பதை உணர்கின்றார். ஆற்றில் எப்பொழுதும் நீரோட்டம் இருக்காதன்றோ? அப்போது திருமலையிலும் வாழ்க்கை இழந்ததாக அன்றோ முடியும்? அங்ஙனமின்றி எப்பொழுதும் ஒரு தன்மையாகத் திரு வேங்கடமுடையானைச் சேவிக்க வரும் அடியார்களின் அடிப்பொடி படும்படி வழியாய்க் கிடக்கும் நிலைமை தனக்கு வாய்த்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கின்றது இவரது தூய்மையான உள்ளம். உடனே,

> "வெறியார் தண்சோலைத் திருவேங் கடமலைமேல்
> நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே."[85]

[வெறிஆர்–மணம் மிக்க; நெறி-வழி]

என்று தன் அவாவினைப் புலப்படுத்துகின்றார் ஆழ்வா

இதனைச் சிறிது ஆராய்ந்தவுடன் இதிலும் ஒரு குறை தட்டுப்படுகின்றது. வழியென்பது அவரவர் வசதிக்குத் தக்கபடி மாறுபடுவதன்றோ? ஓரிடத்திற்கு ஒன்றுதான் வழி என்றும் சொல்ல முடியாது. அன்றியும் அது விலகி நிற்கும் பான்மையது. இப்போதுள்ளது போல் பேருந்து வசதிகள் இருப்பினும் எல்லோரும் நடந்துதான் வருவர் என்று சொல்ல முடியுமா? இவற்றையெல்லாம் எண்ணிய ஆழ்வார் நெறியாக அமைய வேண்டும் என்று விரும்புவதைவிட எம்பெருமானது திருவருள்

84. பெரு. திரு. 4:7.
85. பெரு திரு. 4:8

நோக்கம் பதியுமாறு அவன் கண்வட்டத்தில் மெய்யடியாரும் பிறரும் வேறுபாடின்றி எல்லோரும் இடைவிடாது நடமாடும்படியான ஓர் அசேதனபொருளாகி விடில் அவனுடைய திருப்பவளத்தை விடாது காணும் பேறு கிட்டுமே என்று எண்ணுகின்றார்.

**"நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்**
**படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே."[86]**

என்று சிறப்பான விருப்பத்தையும் வெளியிடுகின்றார். இப் பாசுரத்தை அடியொற்றியே திருமால் திருக்கோயிலின் கருவறையின் வாயிற்படி "குலசேகரன் படி" என்று இவர் பெயரையிட்டு வழங்கும் சம்பிரதாயமும் இருந்து வருகின்றது என்பதனை ஈண்டு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இந்தப் பேற்றுக்கும் குந்தகம் விளையினும் விளையலாம் என்று எண்ணுகிறார் ஆழ்வார். திருமலைக்கு வரும் பக்தர்களுள் செல்வந்தராக இருக்கும் எவரேனும் ஒருவர் சந்நிதிக்குள் கருங்கல் படியிருப்பது திருவேங்கடமுடையானது செல்வநிலைக்குத் தகாது என்றும், தங்கவாசலுக்கு உட்புறமுள்ள வாயில் கருங்கல்லாக இருப்பது சிறிதும் அடாது என்றும் கருதித் தங்கத்தகட்டால் மூடுவதற்கும் முன்வரலாமன்றோ? அப்படிச் செய்தால் திருவேங்கட அப்பனின் திருமுக மண்டல சேவையை இழக்க நேரிடுமே. ஆகையால் படியாய்க் கிடப்பதும் பாங்கன்று என்று அறுதியிடுகின்றார். பின்னர் எந்தப் பிறவியை வேண்டுவது என்பது தோன்றவில்லை. அவன் தாள் வணங்க அவன் அருளின்றி முடியுமா? முடியாதன்றோ? இந்த ஞானம் தம் உள்ளத்தில் தோன்றவே

86. பெரு. திரு-4;9

தாமாக ஒரு பிறவியையும் வேண்டிக்கொள்ள விரும்பாதவராய் "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே"[87] என்று சொல்லித் தன் ஆசைக்குத் தலைக் கட்டி விடுகின்றார்.

இந்தப் பெருமாள் திருமொழியை அடியொற்றியே முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்,

"மாடாக நிழற்றுசெழு மரனுகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்தநறும் புதலாக வழிப்படுவோர்
ஓடாகப் பெறுவமெனில் உயிர்காணற் கதிபெறலாம்
வீடாகத் திருநெடுமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே."[88]

[மாடு - விலங்கு; நிழற்றும் - நிழல் தரும்; தவச்சிறிய- மிகச் சிறிய; பூடு-புல் பூண்டு; புதல் - புதர்.]

என்ற பாடலை அருமையாக அமைத்து ஆழ்வாரிடம் தமக்குரிய ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றார். இந்தப் புலவர் பெருமானின் புலமை நலத்தை மூன்றுவது பொழிவில் காணப்போகின்றோம்.

**சூடிக்கொடுத்த சுடர்க்கொடி:**

அன்பர்களே, ஆண்டாள் அம்மையார் திருவேங்கடப் பெருமான்பால், மேகத்தைத் தூது விடுவதாக அமைந்த பதிகம் ஒன்று நாச்சியார் திருமொழியில் உள்ளது. கற்போர் கருத்தைக் கவரும் அத் திருமொழியில் சற்று நேரம் ஆழங்கால் படுவோம். தூதுப்பாடல்களும், பிரபந்தங்களும், 'காமம் மிக்க கழிபடர் கிளவி' களாகும்.

"இயம்புகின்ற காலத்து எகினம் கிள்ளை
பயம்பெறு மேகம்பூ வைபாங்கி—நயந்தகுயில்

87. பெரு-திரு-4:10.
88. திருவேங். கலம்.-72

பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம்ஈ ரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை."
[எகினம் - அன்னம்; பிரமரம்-வண்டு ]

என்ற இரத்தினச் சுருக்கப் பாடலால் தூதுவிடுவதற் குரிய பொருள்கள் இன்னவை என்பது அறியப்படும். இவற்றுள் மேகமும் ஒன்றுகும். இவையெல்லாம்,

"சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனர் புலவர்"[89]

என்ற நூற்பாவின் பகுதியால், பேசுவன போலவும் கேட்பன போலவும் அமைத்துக் கோடல் கவிதை மரபாக இருந்து வருகின்றது.

'கற்பூரம் நாறுமோ'[90] என்று திருச்சங்காழ்வாளுேடு சொல்லாடிப் பொழுதுபோக்கின ஆண்டாள் அம்மை யாருக்கு அது மறுமாற்றம் உரைக்கவில்லை. பிரிவால் தன் ஆற்றுமை மீதூர்ந்து செல்லத் தொடங்குகிறது. காலமும் கார்காலமாக இருக்கின்றது. மேகங்களும் 'ஆழியுட் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி ஊழி முதல்வன் போல் மெய்கறுத்து, பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில், ஆழிபோல மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து' வந்து தோன்றுகின்றது. கார்காலத்தில் தவருது திரும்புவதாகக் கூறிப்போன எம்பெருமானின் திருவாக்கு அவள் நினைவிற்கு வருகின்றது. அப்படியே அவனும் மேகங்களுடன் வந்திருக்கக்கூடுமென்று நினைக் கின்றுள். 'மேகங்காள், எம்பெருமானும் உம்முடன் வந்தானே?' என வினவுகின்றுள். அவை மறுமொழி தரவில்லை; அந்த எம்பெருமானும் அவள் கண்ணுக்குத்

89. தொல். பொருள்-செய்யு-192,
90. நாச்-திரு-7

தென்படவில்லை. ஆகவே, தன்னுடைய நிலைமையை எம்பெருமானுக்கு அறிவிக்க வேண்டுமென்று மேகங்களை இரக்கின்றாள். இந்தத் திருமொழி முழுவதும் மேகத்தைத் தூதுவிடுவதாகச் செல்லுகின்றது. மேகங்களை நோக்கி,

"கண்ணீர்கள் முலைக்குவட்டில்
துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை யீடழிக்கும்
இது தமக்கோர் பெருமையே."[91]

[குவடு-நுனி; துளிசோர-அரும்ப; சோர்வேனை-வருந்துகின்ற என்னை; ஈடு அழிக்குமிது - உருவழிக்கிற இது; தமக்கு-அவருக்கு.]

என்று வினவுகின்றாள். "திருவேங்கடமுடையானைப் பெரியாழ்வார் திருமகள் ஆசைப்பட்டுப் பெறுதொழிந்தாள் என்றால் அவனுடைய பெருமை என்னாகும்?" என்று கேட்கின்றாள்.

அடுத்து, மேகங்களை நோக்கி இவ்வாறு பேசுகின்றாள்: "மாமுகில்காள், காமத்தீ என்னுள்ளே புகுந்து என்னை வாட்டுகின்றது. நள்ளிரவில் ஒரு தென்றற்காற்றுக்கு நான் இலக்காகி எவ்வாறு இருப்பேன்? தென்றல் காமத்தீயிற்குத் துணையாயிருந்து நோயை அதிகப்படுத்துகிறதே.[92] எம்பெருமானைப் பிரிந்து பட்ட துக்கத்தினால் என் மேனியழகு கெட்டது. உடல் இளைத்தமையால், வளையல்கள் கழன்றொழிந்தன. நானும் நெஞ்சு தளர்ந்து உறக்கமொழிந்து கிடக்கின்றேன். இந்த நிலையில் எம்பெருமானின் திருக்குணங்களை எங்ஙனம் போற்றி உயிர்காத்திருக்க முடியும்?

91. நாச். திரு-8:1

92. நாச். திரு-8:2.

எளியாரை எல்லாரும் கைவிடுவது உலக இயல்பே யன்றோ?''[93] இங்ஙனம் தன் நிலையை மேகங்கட்கு உணர்த்திச் சில செய்திகளை வேங்கடத்து எம்பெருமான் மாட்டுச் சொல்ல வேண்டுகின்றுள்.

முதல் செய்தி :

ஆண்டாள் தெரிவிக்க விரும்பும் முதற்செய்தி இது. "என் மார்பிலுள்ள இளமுலைகளை அவ்வெம்பெருமான் விரும்பி அணைந்து கொண்டே இடைவிடாது கிடக்க வேண்டுமென்று நான் ஆசைப்பட்டுக் கிடக்கின்றேன்" என்பதாக.

''என்னாகத் திடங்கொங்கை
விரும்பித்தாம் நாடோறும்
பொன்னாகம் புல்குதற்கு
என்புரிவுடைமை செப்புமினே.''[94]

[ஆகம்–மார்பு; தாம்-எம்பெருமான்; பொன் ஆகம்-விரும்பத்தக்க மார்பு; புல்குதல் – அணைதல்; புரிவுடைமை–ஆசையுடைமை.]

என்பது பிராட்டியாரின் திருவாக்கு. "ஒரு பொருளிலே விருப்பமுள்ள சிறுர்களைப் பெற்றோர் எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் அவர்கள் சமாதானம் அடைவதில்லை. விரும்பின பொருளைப் பெறும் வரையிலும் விடாத பிடிவாதங் கொள்வது போல் என் இளங்கொங்கைகளும் அவ் வெம்பெருமானுடைய திருமார்புடன் அணையவேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றன" என்கின்றுள். "சொற் கேளாத ப்ரஜைகளைப் போலே யாய்த்து முலைகளின்

93. நாச். திரு-8:3.
94. நாச்-திரு. 4:4

படி."[95] என்ற இன்சுவை மிக்க வியாக்கியான வாக்கியம் சுவைத்து மகிழத்தக்கது.

## இரண்டாவது செய்தி :

"எம்பெருமான் என்னிடத்துப் பறித்துப்போன கைவளையல்களைத் திருப்பிக் கொடுப்பதாக இருந்தால் என் நிலையை அவருக்குத் தெரிவியுங்கள்" என்பது இரண்டாவது செய்தி. "தான் கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே"—என்பதால் அவனுடைய மன ஈடுபாட்டை அறிந்து கொண்டு தன் நிலையைத் தெரிவிக்குமாறு வேண்டுகை என்ற குறிப்பும் புலனுகின்றது. "அவன் தரிலும் தருகிறுன், தவிரிலும் தவிருகிறுன்; நீங்கள் அறிவித்துப் போருங்கோள்" என்ற வியாக்கியான வாக்கியமும் கண்டு மகிழத்தக்கது.

## மூன்ருவது செய்தி :

தன்னுடைய நிறைவுகளைக் கொண்ட நாரணற்கு தன் நடலை நோயைத் தெரிவிக்க வேண்டுமென்பது மூன்ருவது செய் தியாகும். இச்செய்தி தாங்கிய பாசுரத்தில் ஆழங்கால் படுவோம்.

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த
 தண்முகில்காள்! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே
 நிரந்தேறிப் பொழிவீர்காள்!
உலங்குண்ட விளங்கனிபோல்
 உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்குஎன்
 நடலைநோய் செப்புமினே.[96]"

---

95. ப்ரஜைகள் - பிள்ளைகள்.
96. நாச்-திரு. 8;6

[சலம் - கடல்நீர்; நிரந்து ஏறி - பரவியிருந்து; உலங்கு - பெருநுளும்பு - (பெரும் கொசுக்கள்); நலம்- பெண்மைக்கு உரிய நாண் முதலிய குணங்கள்; நடலை நோய்-நிற்பது இருப்பது விழுவது எழுவதாய்ப் படுகிற நோய்.]

பாசுரத்தின் பொருள் வெளிப்படை. சில சொற்றொடர்களின் நயம் காண்போம். 'மாவலியை நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்'—'பயனையே கருதுபவர்களான (பிரயோஜநாந்தரபரர்களான) தேவர்களுக்காகத் தன்னை இரப்போனாக்கிக் கொண்டு காரியம் செய்த பெருமான் எழுந்தருளியிருக்கின்ற தேசத்தில் வாழும் நீங்கள் பயன்கருதாத எனக்காகக் (அநந்யப் பிரயோஜநையான எனக்காகக்) காரியம் செய்யவேண்டாவோ? எம்பெருமான் ஓர் அசுரன் பக்கல் சென்று காரியம் செய்ததுபோல் நீங்களும் ஓர் அசுரன் பக்கல் சென்று காரியம் செய்யவேண்டும் என்று நான் சொல்லுகின்றேன்? இல்லையே. உடையவன் பக்கலிலேயன்றோ உங்களைப் போகுமாறு வேண்டுகின்றேன்?' என்ற குறிப்பு இதில் புலப்படுவதைக் கண்டு மகிழவேண்டுகின்றேன். "(ஏறிப் பொழிவீர்காள்!) சாய்கரத்தை உயரவைத்துத் தண்ணீர் வார்ப்பாரைப் போலே, காணவே விடாய் கெடும்படி உயரவேறி வர்ஷிக்கிறிகோளிறே; அவன் வர்த்திக்கிற[97] தேசத்திலே அவனோடே உங்களுக்கு ஒரு ஸம்பந்தமுண்டானால் அவன் ஸ்வபாவமுண்டாக வேண்டாவோ?" என்ற வியாக்கியானம் காண்மின்.

"உலங்கு என்ற பெருங்கொசுக்கள் விளாம்பழத்தில் மொய்த்தால் அதன் சாறெல்லாம் சுவறிப் போவது

97. வர்த்தித்தல் - இருத்தல்.

போல் என்னுடம்புடன் அணைந்து என் ஆற்றல் முழுவதையும் கொள்ளை கொண்ட பெருமானுக்கு நான் இங்ஙனம் நோவுபட்டுக் கிடக்கும் நிலையை எடுத்துக் கூறுங்கள்'' என்கின்றாள்.

**நான்காவது செய்தி :**

இது உயிரனைய செய்தியானதால் சொல்லும் போதே மிகப் பணிவாகத் தொடங்குகின்றாள்.

**''சங்கமா கடல்கடைந்தான்**
**தண்முகில்காள்! வேங்கடத்துச்**
**செங்கண்மால் சேவடிக்கீழ்**
**அடிவீழ்ச்சி விண்ணப்பம்''[98]**

[சங்கம்–சங்கு; மா-பெருமை வாய்ந்த; சேஅடி - செவ்விய திருவடி; அடிவீழ்ச்சி - அடியேனுடைய.]

என்ற பீடிகையைக் காண்மின். அதற்குட்பிறகு சொல்ல வேண்டிய செய்தியைத் தெரிவிக்கின்றாள்.

**''கொங்கைமேல் குங்குமத்தின்**
**குழம்பழியப் புகுந்துஒருநாள்**
**தங்குமேல் என்ஆவி**
**தங்குமென்று உரையீரே.''[99]**

''அவர் என்னுடன் கலவி செய்ய வருவாரென்று நம்பி முலைத்தடங்களில் குங்குமக் குழம்பு பூசி அணி செய்து வைத்துள்ளேன் ; அதனைப் பயனுடையதாம்படி செய்வாராகில் தரிக்கலாம் என்று சொல்லுங்கள்'' என்கின்றாள். 'என் ஆவி தங்கும்' என்ற சொல் நயத்தை நோக்குமின். ''ஒருநாள் அணைவது போகத்துக்குப் போதாது; அஃது உயிர் தரிப்பதற்கே சாலும்'' என்ற

98. நாச்-திரு. 8:7
99. நாச். திரு. 8 ; 7

குறிப்பு அறிந்து மகிழத்தக்கது. "ஒரு நாள் தங்குமேல் என்னுவி தங்கும். குணஜ்ஞானத்தாலே தரியாளோ என்றிருக்கவொண்ணுது; அணையுமாகில் தரிக்கலாம்" என்ற வியாக்கியானம் கண்டு மகிழத்தக்கது.

இறுதியாகத் தன் நிலைமையை மீண்டும் ஒருமுறை புலப்படுத்தி உள்ளத்தைத் தொடுமாறு கூறும் செய்தி நம் உள்ளத்தையும் நெகிழச் செய்கின்றது. "இராம நாமங்களைச் சொல்லி மழைக்காலத்தில் எருக்கம் பழுப்புகள் அற்று விழுவது போல் ஒசிந்து கிடக்கின்றேன். இந்நிலையில் கிடந்து தவிக்கும் எனக்கு நெடுகிச் செல்லுகின்ற காலத்தில் ஒரு நாளாகிலும் ஒரு வாய்ச் சொல் அருளமாட்டாரோ?[100]" என்று தான் ஏங்கி நிற்கும் நிலையைப் புலப்படுத்துகின்றுள். அதன்பின்னர் அவள் பேசும் பேச்சுதான் நம் உள்ளத்தில் ஆழப்பதிகின்றது. இஃது எம்பெருமான் திருவுள்ளத்தைக் கட்டாயம் தொடத்தான் செய்யும். அம்மையார் மேகத்தை விளித்துப் பேசுகின்றுர்.

"மதயானை போல்எழுந்த
மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்!
பாம்பணையான் வார்த்தையென்னே!
கதியென்றுந் தானுவான்
கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தான் என்னும்சொல்
வையகத்தார் மதியாரே.[101]"

[பதி - இருப்பிடம்; தான் - எம்பெருமான்; வதை- கொலை; மதியார் - மதிக்க மாட்டார்கள்.]

---

100. நாச்-திரு–8:8
101. நாச். திரு. 8 ; 9

பாசுரத்தின் பொருள் தெளிவு. எனினும், சொற்றொடர்கள் குறிக்கும் தொனிப் பொருளில் ஆழங்கால் படுவோம். வந்தேறிகள் போலன்றி எம்பெருமான் திவ்விய தேசத்தில் நிரந்தரமான வாழ்வு பெற்றிருப்பதால் செருக்கியிருக்கும் நிலைகண்டு 'மதயானை போல் எழுந்த மாமுகில்காள்!' என விளிக்கின்றாள். 'பாம்பணையான் வார்த்தை என்னே!'— என்பதில் திருவனந்தாழ்வானிடம்,

**"சென்றால் குடையாம்; இருந்தால்சிங் காசனமாம்**
**நின்றால் மரவடியாம்; நீள்கடலுள்—என்றும்**
**புணையாம்; மணிவிளக்காம்; பூம்பட்டாம் புல்கும்**
**அணையாம்"**[102]

[சென்றால் - உலாவினால்; இருந்தால் - உட்கார்ந்தால்; மரவடி - பாதுகை; புணை - மெத்தை (தெப்பம்); விளக்கு – தீபம்; பூம்பட்டு - திருப்பரிவட்டம்; புல்கும்– தழுவும்; அணை - தலையணை.]

என்று பொய்கையாழ்வார் அருளிச்செய்தபடி எல்லாவித கைங்கரியங்களையும் கொள்வதுபோல் என்னிடத்தும் கொள்வன் என்றிருந்தேன்; பாம்பணையைக் கைவிட்டுத் திருமதுரையில் வந்து பிறந்த கண்ண பிரான் தேர்த்தட்டில் நின்று சொன்ன வார்த்தையை (சரமசுலோகத்தை)[103] மெய்யென்று நம்பி மோசம் போனேன். பாம்போடே அணைந்து பாம்பின் தன்மையே தனக்கும் உண்டாகப் பெற்றான். அதற்கு நாக்கு இரண்டாக இருப்பதுபோல் இவனும் இரண்டு நாக்குப் பெற்றான்; பொய்யனாகி விட்டான்" என்ற கருத்து தொனித்து நிற்பதைக் கண்டு மகிழ்கின்றோம். தன்

102. முதல் திருவந். 53.
103. பகவத் கீதை-18 : 66.

னுடைய காக்கும் தொழிலை மறந்ததோடன்றி ஒரு பெண் பிள்ளையையும் கொலை செய்தான் என்ற கருத்து உலகில் பரவுமாகில் பின்னர் அவனை மதிப்பார் உண்டோ? என்று அவன்மீது கழிபேரிரக்கமும் கொள்கின்றாள். இங்ஙனம் ஆண்டாளம்மையார் வேங்கடவாணன்மீது தூது விடுவதாக அமைந்த திருமொழியில் ஆழங்கால் பட்டு அகமகிழ்கின்றோம்.

**திருமங்கையாழ்வார்:**

திருமங்கையாழ்வார் திருவேங்கடத்தை நான்கு திருமொழிகளால்[104] மங்களாசாசனம் செய்துள்ளதை அறிகின்றோம். திருவேங்கடமலையின் இயற்கைக் காட்சிகளில் இந்த ஆழ்வாரும் மிகவும் ஆழங்கால் பட்டுப் பேசுவதை இவர்தம் பாசுரங்களால் அறிகின்றோம். புண்ணிய தீர்த்தங்களாலும் பெரிய சோலைகளாலும் சூழப்பட்டது திருவேங்கடம் என்பதை, "தீர்த்தம் நீர்த் தடம் சோலை சூழ் திருவேங்கடம்[105]" என்றும், "சேரும் வார் பொழில்சூழ் திருவேங்கடம்"[106] என்றும்,

> "வாச மாமலர் நாறு வார்பொழில்
> சூழ்தரும் உலகுக்கெலாம்
> தேசமாய்த் திகழும் மலைத்திரு
> வேங்கடம்"[107]

என்றும் கூறுவதைக் காணலாம். மேலும் "வேய் ஏய் பூம்பொழில் சூழ் விசைஆர் திருவேங்கடம்[108]", "கரி

104. பெரிய திரு. I. 8; 1.9; 1.10; 2.1.
105. பெரிய திரு. 1-8:4.
106. பெரிய திரு. 1-8:7.
107. பெரிய திரு. 1-8:9
108. பெரிய திரு. 1-9:1.

சேர் பூம்பொழில் சூழ் கனமா மலை வேங்கடம்"[109] என்ற சொற்றொடர்களும் வேங்கடத்தின் சோலைகளை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. இத்தகைய சோலைகளில் தேன் மலிந்து காணப்பெறும் என்பதை, "தேன் ஏய் பூம் பொழில்[110]" "கோல் தேன் பாய்ந்தொழுகும் குளிர் சோலை சூழ் வேங்கடம்",[111] "கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடம்[112]" என்ற தொடர்கள் காட்டி நிற்கும்.

வேங்கடம் விண்ணுலகம் வரை எட்டியுள்ளது என்பதைப் பின்னர் எழுந்த நூல்கள் உயர்வு நவிற்சி யால் கூறினும்,[113] இந்த ஆழ்வார் தன்மை நவிற்சி யாகவே கூறுவர். "குன்று ஏய் மேகம் அதில் குளிர் மாமலை வேங்கடம்",[114] "நிலம்தோய் நீள் முகில்சேர்நெறி வேங்கடம்[115]" "செப்புஆர் திண்வரைசூழ் திருவேங் கடம்"[116], "விண்ஆர் நீள் சிகர விரைஆர் திருவேங்க டம்"[117], "விலங்கல் குடுமித் திருவேங்கடம்"[118] "விண் தோய் சிகரத் திருவேங்கடம்"[119] "மின் ஆர் முகில்சேர் திரு வேங்கடம்"[120] என்பன போன்ற தொடர்களால் இதனை

109. பெரி. திரு. 1-9:7.
110. பெரி. திரு. 1-9:2.
111. பெரி. திரு. 1-9:8
112. பெரி. திரு. 1-9:9.
113 மூன்றாவது பொழிவில் காட்டப் பெறும்.
114. பெரி திரு. 1–9:3.
115. பெரி. திரு. 1-9:4
116. பெரி. திரு. 1-9:5
117. பெரி. திரு. 1-9:6
118. பெரி. திரு. 1-10:2
119. பெரி. திரு. 1–10:4
120. பெரி. திரு. 1-10:6

அறியலாம். இங்ஙனம் இந்த ஆழ்வார் சொற்றொடர்களால் கூறுவனவற்றைப் பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள் தனித் தனிப் பாடல்களாக வருணித்துக் காட்டுவனவாகவுள்ளன என்பதை அடுத்த பொழிவில் காட்டுவேன். இத்தகைய உயர்ச்சியினை உடைய வேங்கடத்தில் கானவர் இடும் கார் அகில் புகை உயர்ந்து பரவுகின்றது.[121] வஞ்சிக் கொடி போன்ற இடையையுடைய குறப் பெண்கள் தினைப் புனங்களைக் காவல் புரிந்து வருகின்றதாகக் காட்டுவர் இந்த ஆழ்வார்.[122]

இயற்கை எழில்களை ஆங்காங்குத் தம் பாடல்களில் சுட்டியுரைத்த ஆழ்வார் அத் திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பலவாறு போற்றியுரைக்கின்றார். எம்பெருமான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களுக்காகச் செய்த பல செயல்களை எடுத்துக் காட்டி அகமகிழ்கின்றார். திருவேங்கடநாதன் குருந்தம் ஒசித்த கோபாலனாக வந்தவர்; கொக்கின் வடிவமாக வந்த பகாசுரனை வாய் பிளந்து வானுலகத்திற்கு அனுப்பிய வித்தகர்;[123] கன்னெஞ்சத்தையுடைய பூதனையிடம் பாலமுதம் பருகியதுடன் அவள் உயிரையே குடித்த அற்புதச் செயலையுடையவர்; கிருதயுகத்தில் வெண்ணிறத்தையும், கலியுகத்தில் கருமை நிறத்தையும், துவாபரயுகத்தில் நீலமணி நிறத்தையும் கொண்டிருப்பவர்.[124] கண்ணனாக இருக்கும்பொழுது மருதிடை தவழ்ந்து நளகூபர மணிக்ரீவர்களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவர். குன்றமேந்திக் குளிர் மழைகாத்து

---

121. பெரி. திரு. 2-1:1
122. பெரி. திரு. 2-1:2
123. பெரி. திரு. 1-8:1
124. பெரி. திரு. 1-8:2

ஆநிரைகளின் துன்பத்தைப் போக்கியவர்.[125] பார்த்தனுக்குச் சாரதியாக நின்று தேரோட்டியவர்; ஆய்ப்பாடியில் கோபியருடன் குரவை கோத்து ஆடிய கோவலர்.[126] மாணியாய்ச் சென்று மண் இரந்து கொண்டவர்; இராமனாக நின்று மராமரங்கள் ஏழையும் ஓரம்பினால் எய்த அற்புதச் செயலையுடையவர்.[127] பாலனாய் ஏழுலகுண்டு ஆலிலையில் துயின்றவர். திண்திறல் அரியாகி ஒண்திறல் அவுணன் உயிர்குடித்த திறலுடையவர்.[128] பஞ்ச பூதங்களின் வடிவாக நின்று பேராயிரம் கொண்ட பெம்மான்.[129]

எம்பெருமான் திறத்தை எடுத்துரைத்த ஆழ்வார் தன் குற்றங்களையெல்லாம் விரித்துக் கூறித் தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்டிச் சரண் புகுகின்றார். "எம்பெருமானே, உறவினரல்லாதாரை உறவினர்கள் என்று நம்பிக் கெட்டொழிந்தேன்.[130] அநுபவிக்கத் தகாதவற்றை அநுபவித்த[131] எண்ணற்ற பாவங்களைச் செய்தேன். பல உயிர்களைக் கொன்று பலவகைப் பாவங்களைப் பண்ணினேன்.[132] எண்ணற்ற யோனிகளில் பிறந்து இளைத்தேன்; ஒருவிதமான நற்செயல்களையும் புரிந்தேன் இலேன்.[133] பஞ்ச பூதங்களான யாக்கையில் புகுந்து புலம்பித் தளர்ந்தொழிந்தேன்[134].

125. பெரி. திரு. 1-8:3
126. பெரி. திரு. 1-8:4
127. பெரி. திரு. 1-8:5
128. பெரி. திரு. 1-8:6
129. பெரி. திரு. 1-8:7
130. பெரி. திரு. 1-9:1
131. பெரி. திரு. 1-9:2
132. பெரி. திரு. 1-9:3
133. பெரி. திரு. 1-9:4, 5
134. பெரி. திரு. 1-9;6

அறியாப் பருவத்தே பல அவச் செயல்களைச் செய்து விட்டேன்; இளமைப் பருவத்தில் பெண்டிர்க்காகவே அலைந்து திரிந்து சதிர்கேடானேன்.[135] இங்ஙனம் பாவமே செய்து பாவியான அடியேன் உன்னைவிட்டுத் தரிக்க மாட்டாத அன்பு பிறந்து உன்னையே அடைக்கலமாகப் பற்றிக் கொண்டேன். முன்னைத் தீவினைகளை எண்ணி என்னைக் கைவிடாது ஆட்கொள்ள வேண்டும் என்று கூறி[136] அவனைச் சரணமடைகின்றார் ஆழ்வார். அடுத்த பதிகத்தில் முதல் ஐந்து பாசுரங்களில் எம்பெருமான் இராவணனின் திண் ஆகம் பிளக்க அம்பு கோத்தது; இலங்கை அரக்கர்களை மடியச் செய்தது; நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு ஆலிளந் தளிர்மேல் துயில் கொண்டது, உறிமேலுள்ள நறு நெய்யை அமுது செய்தது; குறளுருவமாய் நின்று ஈரடிகளால் நில மனைத்தையும் கவர்ந்தது; அரியாய்த் தோன்றி அவுணன் உடலம் பிளந்தது முதலிய செயல்களை அநு சந்தித்து[137] 'அடியேன் இடரைக் களையாயே' என்றும், 'அடியேனுக்கு அருளாயே' என்றும், 'அடியேனுக்கு அருள் புரியாயே' என்றும், 'குறிக்கொள் எனை நீயே' என்றும் பிரார்த்திக்கின்றார் ஆழ்வார். அடுத்து இரண்டு பாசுரங்களில் திருவேங்கட முடையான் அவரு டைய திருவுள்ளத்தில் வந்து புகுந்த பெருஞ்செயலைப் பேசி அநுபவிக்கின்றார்.[138] 'திருவேங்கடம் மேய என் ஆனை என் நெஞ்சில் உளானே' என்றும், 'திருவேங்கட மாமலை மேய கோனே! என்மனம் குடிகொண்டு இருந் தாயே' என்றும் பேசி இனியராகின்றமையைக் காண்

135. பெரி. திரு. 1-9:7
136. பெரி. திரு. 1-9:9
137. பெரி. திரு. 1-10: 1 to 5.
138. பெரி. திரு. 1.10:6,7

கின்றேம். 'சேயன் அணியன் என் சிந்தையுள் நிறன் மாயன்' என்று சொல்லிக் களிக்கின்றார். 'திருவேங்கட மாமலை மேய ஆயன் அடியல்லது மற்று அறியேனே என்றும், 'திருவேங்கட மாமலை மேய எந்தாய்! இனி யான் உனை என்றும் விடேனே' என்றும் பேசித் தமக்குப் பரபக்தி வாய்த்த பேற்றினைக்கூறி இனியராகின்றார். 'பரமபதம், திருப்பாற்கடல் முதலான திவ்விய தேசங் களைக் கைவிட்டு, யோகியர் மனத்தையும் தேடி யோடாமல், என்னுடைய அழுக்கு நெஞ்சில் வந்து புகுந்தாயே' என்று எம்பெருமானின் சீல குணத்தில் ஆழங்கால் படுகின்றார்.

இவ்விடத்தில் ஒன்றை நினைவு படுத்த விரும்புகின் றேன். வைணவ தத்துவப்படி எம்பெருமான் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் இருக்கின்றான் எந்த நிலையில் இருந்தாலும் எம்பெருமான் ஒருவனே யாவான்; எல்லோருக்கும் எளி தாகக் கிட்டும்படியாக இருப்பது அர்ச்சை நிலை. இதுவே ஆழ்வார்களின் திருவுள்ளத்தைக் கவர்ந்த நிலை. இந்த நிலையில்தான் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருந்து எண்ணற்ற மக்களுக்குச் சேவை சாதித்துக் கொண்டிருக் கின்றான். அத்தகைய எம்பெருமான் வேண்டுவார்க்கு வேண்டியனவற்றை ஈவதற்குத் திருவேங்கடமலையில் ஓயாது ஒழியாது, பகல் என்றும் இரவு என்றும் பாராது, உட்காரவும் படுக்கவும் நேரமின்றி நின்ற திருக்கோலத் தில் சேவை சாதிக்கும் நிலை இவர் உள்ளத்தைக் கவர்ந்த தால் "சிந்தாமணியே!" என்று உளங்கனிந்து பேசு கின்றார்.

ஒருவனுடைய பேற்றுக்கும் இழவுக்கும் காரணமாக இருப்பது மனம். மன ஈடுபாடு இன்றேல் ஒன்றும் நட வாது. இத்தகைய மனம் தீய போக்குகளில் சென்று

பட்டி மேயாமல் எம்பெருமான் பக்கல் சென்று சேர்ந்ததே என்று உவந்து தன் நெஞ்சினைக் கொண்டாடுகின்றார் அடுத்த திருமொழியில்.[139] இங்ஙனம் நெஞ்சினைப் போற்றும் பண்பு ஆழ்வார் பெருமக்களின் பொதுவான பண்பாக இருப்பதை அவர்கள் அருளிச் செயல்களில் கண்டு மகிழலாம். "திறம்பாது என் நெஞ்சமே! செங்கண்மால் கண்டாய்" என்று பேசுகின்றார் பொய்கையாழ்வார்.[140]

"உளன்கண்டாய் நல்நெஞ்சே உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன்கண்டாய்"[141]

என்று நெஞ்சை வாழ்த்துகின்றார் திருமழிசையாழ்வார். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில்,

"நெஞ்சமே! நல்லை! நல்லை! உன்னைப் பெற்றால்
என்செய் யோம்?இனி என்ன குறையினம்?"[142]

என்றும்,

"ஊனில்வாழ் உயிரே! நல்லைபோ! உன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன் என்அம்மான்
தானும்யாதும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே."[143]

என்றும் அடிக்கடி நெஞ்சைக் கொண்டாடுதல் காணலாம். அங்ஙனமே திருமங்கையாழ்வாரும், மேலே குறிப்பிட்ட பெரிய திருமொழியில்[144] ஒவ்வொரு பாசுரத்திலும் தம்முடைய திருவுள்ளத்தை விளித்து 'வேங்கடத்து

139. பெரி. திரு. 2:1.
140. முதல். திருவந். 96.
141. நான்முகன். திருவந். 86.
142. திருவாய். 1-10:4
143. திருவாய். 2-3:1
144. பெரி. திரு. 2.1.

அண்ணலுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே!' என்று சொல்லி உகக்கின்ருர். 'நாயேன் வந்து அடைந்தேன்; நல்கி, ஆள் என்னைக் கொண்டருளே' என்றும், 'இனி யான் உனை என்றும் விடேன்' என்றும், 'பகவத் விஷயத்தில் நான் ஈடுபடும்படியாக அவன் திறத்து அடிமைத் தொழில் பூண்டது உன்னாலன்ருே, நெஞ்சமே!" என்று ஒரு தடவை சொன்னதுபோல் ஒன்பது தடவை 'அடிமைத் தொழில் பூண்டாயே' என்று சொல்லிச் சொல்லி இனியராவதைக் காண்கின்ருேம்.

இந்தத் திருமொழியின் ஒரு பாசுரத்தில் ஆழங்கால் பட எண்ணுகின்றேன்.

**"இரண்டை யாயின கொண்டு தொண்டர்கள்**
**ஏத்து வார்உற வோடும் வானிடைக்**
**கொண்டு போயிடவும் அதுகண்டென்**
**நெஞ்சம் என்பாய்,**
**வண்டு வாழ்வட வேங்கடமலை**
**கோயில்கொண்டத னெடும் மீமிசை**
**அண்டம் ஆண் டிருப்பாற்கு அடிமைத்தொழில் பூண்**
**டாயே![145]"**

[இண்டை - பூமாலை; வான் - பரமபதம்; மீமிசை அண்டம் - திருநாடு.]

என்பது பாசுரம். "எண்திசையுமுள்ள பூக்கொண்டு ஏத்தி உகந்து உகந்து தொண்டரோங்கள் பாடியாட"[146] என்று நம்மாழ்வார் பணித்ததுபோல பலவகைப்பட்ட பூக்களைக் கையிலேந்திக் கொண்டு வழிபாடு செய்யும் தொண்டர்களையும் அவர்களுடன் சம்பந்தம்பெற்றமற்று முள்ளாரையும் எம்பெருமான் ஆட்கொண்டு திருநாடு

---

145. பெரி. திரு. 2-1:3
146. திருவாய். 4-7:8

சேர்க்கின்றான் என்கின்ற திருக்குணத்தைக் கண்டு தன் நெஞ்சு அத் திருவேங்கட முடையானுக்குத் தொண்டு பூண்டதை உவக்கின்றதாகச் செல்லுகின்றது இப் பாசுரம். இப் பாசுரத்தின் சொன்னயத்தையும், உரை நயத்தையும் அடியார்களிடையே இதுபற்றி நிகழ்ந்த சுவையான உரையாடலையும் ஈண்டுக் குறிப்பிட விரும்பு கின்றேன்.

'இண்டை கொண்டு' என்றாலே போதும், 'இண்டை யாயின கொண்டு' என்றதன் கருத்து என்ன? எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற தூய உள்ளத்துடன் கொள்ளுகின்ற பூ எதுவாயினும் குற்ற மில்லை. செண்பகம் மல்லிகை செங்கழுநீர் இருவாட்சி என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் பூக்களாகத்தான் இருத்தல் வேண்டும் என்கின்ற விதியொன்றும் இல்லை. ஏதேனும் ஒரு பூவாயிருக்கலாம் என்பது தோன்றவே 'ஆயின' என்றார். உரை மன்னன் பெரியவாச்சான் பிள்ளையும், 'பூமாலையென்று பேர் பெற்றனவற்றைக் கொண்டு' என்று வியாக்கியானித் தருளியிருப்பதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

பராசரப்பட்டருக்கும் நஞ்சீயருக்கும் நடைபெற்ற தாக ஈட்டாசிரியர் குறிப்பிடும் உரையாடல் இன்சுவை மிக்கது. அது 'பரிவதில் ஈசனைப் பாடி'[147] எனத் தொடங்கும் திருவாய் மொழிப் பாசுரம் பற்றியது. அப் பாசுரத்தின்,

"பிரிவகை யின்றி நன்னீர் தூய்
புரிவதுஉம் புகை பூவே"

என்ற அடிகளை உபன்யசிக்கும்போது 'புரிவதும் புகை பூவே' என்ற சொற்றொடரைத் திருவுள்ளம்பற்றி

147. திருவாய். 1-6:1

"இவ்விடத்தில் அகில் புகை என்ருவது, கருமுகைப் பூ என்ருவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும் ஒரு புகையும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு அமையும். செதுகையிட்டும் புகைக்கலாம், கண்ட காலிப் பூவும் சூட்டலாம்" என்று கூறிஞராம். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நஞ்சீயர் "கண்ட காலிப் பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது என்று சாத்திரம் மறுத்திருக்க இப்படி அருளிச் செய்யலாமோ?" என்று வினவிஞராம். அதற்கு பட்டர் அருளிச் செய்த சுவையான மறுமொழி: "சாத்திரம் மறுத்தது மெய்தான்; கண்ட காலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுக்க வில்லை; அடியார்கள் அப் பூவைப் பறித்தால் முள் பாயுமே என்று, பக்தர்கள் பக்கல் தயையிஞல் சாத்திரம் அதனை நீக்கினதேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை" என்பது.

'உறவோடும் வானிடைக் கொண்டு போயினவும் அது கண்டு' என்ற அடியின் பொருளிலும் கருத்து மாறுபாடு உண்டு. அதனையும் ஈண்டுக் காட்ட விரும்புகின்றேன். ஒருவர் இறைவனுக்கு வழிபாட்டு முறையைக் கையாண்டால் அவருக்கும் அவருடன் சம்பந்தம் பெற்றவர்கட்கும் அதன் பயன் உண்டென்ருலும்' அவருடைய வாழ்நாள் காலத்தில் சம்பந்தம் பெற்றவர் கட்கு அது கிட்டுமேயன்றி அவருக்குப் பின்வந்தோருக்கு அது கிட்டும் என்று சொல்ல முடியாது என்பர் ஒரு சாரார்; அனைவருக்கும் உண்டு என்று அறுதியிடுவர் வைணவ சித்தாந்திகள். சுவாமிதேசிகன் 'நியாஸதிலகம்' என்னும் வடமொழி தோத்திரத்தில் இந்த சித்தாந் தத்தை வெளியிட்டருளியுள்ளார். இதில் அவர்; மூன்று சான்றுகள் தருகின்ருர். குருடன் கண் தெரிந்த வனுடைய கையைப் பிடித்துக் கொண்டு போவது

போலவும், நொண்டி மரக்கலத்தில் உட்கார வைக்கப் பெற்று ஓடக்காரனால் கொண்டு போகப்படுவது போலவும் என்று உரைத்த சான்றுகள் சம காலத்தருக்குப் பலன் உண்டு என்பதைக் காட்டும். 'அரசனிடத்தில் சேவகம் செய்து சிறப்பாகப் பொருளீட்டினவனுடைய மக்கள் பேரன்மார் முதலானவர்கள் யாவரும் அவ்வரசனுடைய பெயரையும் அறியாமல் அப்பொருள் தரும் போகங்களை அநுபவிப்பது போலவே' என்றுரைத்த மூன்றாவது சான்றால் பிற்காலத்தவருக்கும் அதன் பலன் உண்டு என்பது நன்கு புலனாகின்றது.

இங்ஙனம் வண்டுகள் வாழும் படியாகச் சோலை வாய்ப்புகள் அமைந்துள்ள திருவேங்கடமலையை ஆள்வது போலவே பரமபதத்தையும் ஆண்டு கொண்டு '**ஈருலக நாதன்**' என்று பேர் பெற்றிருக்கும் எம்பெருமானுக்கு அடிமைத் தொழில் பூண்ட நெஞ்சினை உகந்து பேசுவது நம் உள்ளத்திற்கும் பெருவிருந்தாக அமைகின்றது.

**நம்மாழ்வார்**

ஆழ்வார்களின் தலைவராகக் கருதப்பெறும் நம்மாழ்வாரின் அருளிச் செயல்களில் திருவேங்கடத்தைப்பற்றி வரும் செய்திகள் மிக அற்புதமானவை. விசிட்டாத்வைத தத்துவத்தின் உயிர் நாடியாகவுள்ள சரணாகதியின் அருமையை உலகுக்கு உணர்த்தும் பெருமையை இங்குக் காணலாம். இந்த ஆழ்வாரும் திருவேங்கடத்தின் இயற்கை எழிலில் "தெழிகுரல் அருவித் திருவேங்கடம்"[148], "சிந்துபூமகிழும் திருவேங்கடம்"[149] "தெள்நிறை சுனைநீர்த் திருவேங்க

---

148. திருவாய். 3-3:1

149. திருவாய். 3-3:2

டம்[150], "எழில் கொள் சோதி"[151], "திலகம் உலகுக்கு ஆய்நின்ற திருவேங்கடம்"[152] என்ற தொடர்களால் ஈடுபட்டுப் பேசுவதைக் காணலாம். "திருவேங்கட மாமலை, ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே" [153] என்று அந்த மலையின் பெருமையிலும் அவர் ஆழங்கால் பட்டுப் பேசுவதைக் காணலாம்.

திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே இந்த ஆழ்வாருக்குத் "தாள் பரப்பி மண்தாவிய ஈசனாக"[154]வும் "எண்கண், பாசம் வைத்த பரம் சுடராக[155] வும் "வேதியர் முழுவேதத்து அமுதம்[156]" ஆகவும் காட்சி அளித்து அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றான். திருமங்கையாழ்வார் திருவேங்கட முடையானிடம் சரண் புகுந்ததை மேலே காட்டினேன். நம்மாழ்வார் சரண்புகுந்ததை ஈண்டுக் காண்போம்.

"அகல கில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய் உலகம்மூன்று
உடையாய் என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்(று) இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"[157]

---

150. திருவாய். 3-3:3
151. திருவாய். 3-3:8
152. திருவாய். 6-10:1
153. திருவாய். 3-3:8.
154. திருவாய். 3-3:11
155. திருவாய். 3-3:4
156. திருவாய். 3-3:5
157. திருவாய். 6-6:10

[இறை - கணநேரம்; நிகர்-ஒப்பு; புகல் ஒன்று-வேறு வழி.]

இந்தப் பாசுரம் வைணவர்கட்கு 'சரம சுலோகம் போல்'[158] இனிப்பது; அது போல் ஆன்மாவை ஈடேற்றும் புணைபோல் இருப்பது. இதுதான் எம்பெருமானைக் 'கால்கை' பிடித்து (காக்கைபிடித்து?) உய்யும் வழியாக இருப்பது. வைணவ தத்துவத்தில் கூறினல் 'சரணுகதியாக' இருப்பது. இப்பாசுரத்திற்கும் இப்பாசுரம் அடங்கிய பதிகத்திற்கும் ஈட்டாசிரியர்கூறும் சொற் பொருள்கள் சிந்தைக்கும் செவிக்கும் இனிப் பவையாகும். இத் திருவாய் மொழியின் ஒன்பதாம் பாசுரத்தின் இறுதியடி "அந்தோ அடியேன் உன் பாதம் அகல கில்லேன் இறையுமே[159]" என்பது. ஆழ்வார் பாசுரங்கட்கு உரை சொல்லும் போதே வைணவதத் துவம் அனைத்தையும் குழைத்துத் தந்துவிடுவார்கள்— அன்னை பிள்ளைக்கு முலைப்பாலுடன் மருந்தைக் குழைத்துத் தருவது போல. அன்னை உடலுக்கு மருந்து ஊட்டுகின்றுள், ஆசாரியர்கள் உயிருக்கு மருந்து ஊட்டுகின்றனர். அவ்வளவுதான். இப்பாசுரம் சரணு கதியைக் குறிப்பதால் இத்திருவாய்மொழி முழுவதும் சரணுகதி சாரமாயிருக்கும் என்று வைணவ ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுவர்கள். அதற்கேற்ப இந்த ஆரும் பத்து முழுவதிலும் 'உலகளந்த திருவடி' அடிக்கடி கூறப் பெறுவதையும் காணலாம். 'நெடியோன்' என்ற பெயர் திரிவிக்கிரமனைக் குறிப்பது. மூன்று ஆச்சரிய மான செயல்களைச் செய்தவன் திரிவிக்கிரமன். 'திரிவிக் கிரமனைச்' சிலர் 'திருவிக்கிரமன்' என்று எழுதுவர். அது தவறு என்பது ஈண்டு அறியத் தக்கது. இத்திருப்

158. கீதை 18:66
159. திருவாய். 6-10;9,

பாசுரத்தை துவயமந்திரத்தின் பதங்களோடு ஒப்பிட்டுப் பொருள் கூறுவர் ஈட்டாசிரியர். அவ்வுரை நோக்கி அறிந்து மகிழ வேண்டுகிறேன்.

## அகப்பொருள் கலப்பு :

இனி ஆழ்வார் பெருமக்கள் தம்முடைய பாசுரங்களில் அகப்பொருள் தத்துவத்தைக் குழைத்துக் காட்டும் அருமைப் பாட்டையும் ஈண்டுக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமாக அமையும். பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் ஏற்பட்டுள்ளன என்று வைணவ தத்துவம் கூறுகின்றது. அவற்றுள் 'நாயக-நாயகி பாவனையும்' (தலைவன்-தலைவி உறவு) ஒன்றாகும். இந்த உறவே ஏனையவற்றுள் சிறந்தது; உயிராயது. இந்த முறையில் பாமான்மாவைத் தலைவனாகவும், சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாடல்களை நாலாயிரத்திலும் தேவாரத்திலும் காணலாம். ஆயினும், வைணவப் பெருமக்களே சங்ககால நெறியை யொட்டி ஓர் அகப்பொருள் நெறியினை அமைத்துக் காட்டிய பெருமையினைப் பெற்றனர். புருடோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன்னர், உலகிலுள்ள ஆன்மாக்கள் யாவும் பெண்தன்மையினை அடைந்து நிற்கும் என்பது அவர்கள் கண்ட தத்துவமாகும். எனவே, ஆழ்வார்கள், குறிப்பாக நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும், பெண்தன்மை எய்திப் பல திருக்கோயில் மூர்த்திகளை அநுபவித்ததை அவர்களுடைய திருப்பாசுரங்களில் காணலாம்.

அன்பர்களே, இவ்விடத்தில் வைணவர்களிடையே நிலவும் ஒரு மரபினை நினைவூட்டுகின்றேன். தண்டகாருண்ய முனிவர்கள் இராமபிரானது பேரழகில்

ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயமங்கையர்களாகிக் கண்ணனைக் கூடினர் என்ற வழக்கு ஒன்று உண்டு. ஆனால், ஆழ்வார்கள் அப்படியின்றி அப்பொழுதே பெண்மை நிலையை யடைந்து எம்பெருமானாகிய புருடோத்தமனை அநு பவிக்கக் காதலிக்கின்றனர். நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்களிடத்தில் சில சமயம் ஞானம் தலை தூக்கி நிற்கும்; சிலசமயம் பிரேமம் (காதல்) மீதூர்ந்து நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலிருக்கும்பொழுதும் அவர்கள் பாசுரங்கள் அருளியுள்ளனர். இதனை,

> "ஞானத்தில் தம்பேச்சு;
> பிரேமத்தில் பெண்பேச்சு"[160]

என்று 'ஆசாரிய ஹிருதயம்' என்ற நூல் குறிப்பிடும். அஃதாவது, ஞான நிலையிலிருக்கும்பொழுது அவர்கள் தாமான தன்மையிலே நின்று பேசுவர். பிரேம நிலையிலிருக்கும் பொழுது பெண் தன்மையையடைந்து வேற்று வாயாலே பெண்பேச்சாகப் பேசுவர். அப்போது நம்மாழ்வாருக்குப் 'பராங்குசர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் 'பராங்குச நாயகி' என்ற பெண்மைப் பெயரும்; திருமங்கையாழ்வாருக்குப் 'பரகாலர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் 'பரகால நாயகி' என்ற பெண்மைப் பெயரும் வழங்கப்பெறும்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக்கும் பொழுது, அவர்கள் தோழி, தாய், தலைவி என்ற மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர். இதன் காரணமாகப் பாசுரங்களும் தாய் சொல்வது போல வடிவெடுத்துத் 'தாய்ப் பாசுரம்' என்றும், தோழி

160. ஆசாரிய ஹிருதயம்-சூத்திரம், 118.

சொல்வது போல உருக்கொண்டு 'தோழிப் பாசுரம்' என்றும், தலைவி பேசுவதுபோல் வடிவெடுத்துத் தலைவிப் பாசுரம்' என்றும் பெயர்களைப் பெறும். இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுகள் நிகழ்ந்து பாசுரங்களில் வெளிவந்தாலும், பாசுரங்கள் பேசுகின்றவர்கள் ஆழ்வார்களே யாவர். திருவரங்கப் பெருமான் மீது தாய்ப் பாசுரமாக அருளிய பதிகத்தின்[161] இறுதிப் பாசுரத்தில் 'வண்குருகூர்ச் சடகோபன், முகில் வண்ணன் அடிமேல் சொன்ன சொல்மாலை ஆயிரத்துள் இப்பத்தும்' என்றும், மலை நாட்டுத் திருப்புலியூர் எம்பெருமான் மீது தோழிப் பாசுரமாக அருளிய பதிகத்தின்[162] பலசுருதிப் பாசுரத்தில் 'தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் சொல், நேர்பட்ட தமிழ்மாலை ஆயிரத்துள் இப்பத்தும்' என்றும், மலைநாட்டுத் திருமூழிக் களத்து உறையும் எம்பெருமான் மீது தலைவிப் பாசுரமாக அருளிய பதிகத்தின்[163] இறுதியில் 'வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்து உரைத்த அழிவு இல்லா ஆயிரத்துள் இப்பத்தும்' என்றும் கூறியிருப்பதனால் இதனை அறியலாம். ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பெருகினாலும் அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். அங்ஙனமே ஆழ்வாரது சொல் மாலைகள் மூன்று நிலைமைகளாக வழிந்து புறப்பட்டாலும், அவை ஆழ்வார்களது பாசுரங்களாகவே தலைக்கட்டி நிற்கும்.

எம்பெருமானைப் பற்றிக் கூறும் நூல்களில் 'திருவாய்மொழி'யும் ஒன்று என்பதை நாம் நன்கு அறிவோம்.

---

161. திருவாய். 7-2. "கங்குலும் பகலும்"
162. திருவாய். 8-9. "கருமாணிக்க மலைமேல்"
163. திருவாய். 9-7. "எம் கானல் அகம்"

இது 'திருமாலவன் கவி'[164] என்றும் சிறப்பிக்கப் பெறும். இந்நூலில் நம்மாழ்வார் பகவானை நூறு பதிகங்களால் அநுபவித்து இனியராகின்றார். இவற்றுள் 73 பதிகங்கள் ஆழ்வார் தாமான தன்மையில் பேசியவை. 27 பதிகங்கள் பெண்பாவனையில் நின்று பேசியவை. பெண் நிலையிலிருந்து பேசியவற்றுள் மகள் பாவனையில் பேசினவை 17 பதிகங்கள்; தாய் பாவனையில் பேசினவை 7 பதிகங்கள்; தோழி பாவனையில் பேசியவை 3 பதிகங்கள். இங்ஙனம் மூன்று நிலைகளாக வடிவெடுக்கும் பாசுரங்கட்கு 'ஆசாரிய ஹிருதயம்' என்னும் நூல் தத்துவம் குறிப்பிடுகின்றது.[165] இந்த மூன்று நிலைகளையும் மூன்று பிரஜ்ஞாவஸ்தைகள்[166] என்று விளக்கமும் தருகின்றது. அந்த விளக்கங்களை ஈண்டுக் குறிப்பிடுவது பொருத்தமே யாகும்.

வைணவ முறைப்படி மோட்சத்தை அடைய விரும்புபவர்கள் (முமுட்சுகள்) தெரிந்துகொள்ள வேண்டிய 'இரகசியங்கள்'[167] மூன்று. அவை திருமந்திரம், துவயம், சரம சுலோகம் என்பனவாகும். ஆன்மாவின் உண்மைச் சொருபம் இன்னதென்பதையும், அந்நிலைக்கேற்பச் சேதநன் விடவேண்டுவன இவை என்பதையும், பற்ற வேண்டுவன இவை என்பதையும் தெரிவிப்பது திருமந்திரமாகும். இது தன்னை மனனம் செய்கின்றவருக்கு இரட்சகமாயிருத்தலின் 'மந்திரம்' எனப் பெயர்

---

164 திருவிருத்தம்-48.

165. ஆசாரிய ஹிருதயம்–சூத்திரம், 113.

166. பிரஜ்ஞாவஸ்தை-மூன்று காலத்தையும் அறியும் அறிவின் நிலை; அவஸ்தை-நிலை.

167. இவற்றின் பெருமையை உணராதார் காதில் விழாதவாறு மறைக்கப்பெறுவதால் இவை 'இரகசியங்கள்' எனப்பட்டன.

பெற்றது. இந்த மந்திரத்தின் தன்மையை அறிந்தவருக்கே ஏனைய துவயம், சரமசுலோகம் என்ற இருமந்திரங்களிலும் சொல்லப்பெறும் உபாயத்திலும் பலத்திலும் (பலனிலும்) விருப்பம் ஏற்படும். இந்த மூன்று மந்திரங்களும் ஒன்றையொன்றை விரித்துரைக்கும் முறையில் அமைந்துள்ளன. முதலில் உள்ள திருமந்திரத்தில் 'ஓம்' 'நம':, 'நாராயணாய' என்ற மூன்று சொற்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் 'ஓம்' என்ற சொலின் பொருளையே ஏனைய இரண்டு சொற்களும் நன்கு விரிவுபடுத்துகின்றன. இந்த இரண்டு சொற்களின் பொருளையே 'துவயம்' என்ற இரண்டாவது மந்திரம் விரிக்கின்றது. இத்தத்துவத்தின் பொருளையே 'சரமசுலோகம்' என்ற மூன்றாவது மந்திரம் மேலும் விரிக்கின்றது. திருமந்திரத்திலுள்ள மூன்று சொற்களிலும் 'ஓம்' என்ற பிரணவம் ஆன்மாவினுடைய அடிமைத் தன்மையையும் (சேஷத்துவத்தையும்) 'நமஸ்ஸு' ஒருவனையே பிரதானமாகக்கொண்டிருக்கும் தன்மையையும் (பாரதந்திரியத்தையும்), 'நாராயணாய' என்பது ஆன்மா இறைவனுக்குப் புரிய வேண்டிய அடிமைத் தொழிலையும் (கைங்கரியம்) உணர்த்துகின்றன.

மேலும், இவற்றுள் பிரணவம் பிரிந்திருக்கும் நிலையில் 'அ', 'உ', 'ம' என்ற மூன்று எழுத்துக்களைக் கொண்டது. இம் மூன்று எழுத்துகளும் முறையே இருக்கு, யஜுர், சாமம் என்ற மூன்று வேதங்களின் உயிர் நிலையான எழுத்துக்களாகும். ஆகவே, பிரணவம் சகல வேத சாரமாகின்றது. இந்த மூன்று எழுத்துகளும் மூன்று சொற்களாக நின்று மேற்கூறிய மூன்று பொருள்களையும் தெரிவிக்கும். அஃதாவது, அகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை அடிமைத்தன்மையையும் (சேஷத்துவம்), உகாரம் அந்த அடிமைத்

தன்மை மற்றவருக்கில்லாமல் எம்பெருமானுக்கே உரிய தாயிருக்கும் தன்மையையும் (அநந்யார்ஹத்துவம்), மகாரம் ஞானவாஞகிய சீவான்மாவையும் தெரிவிக்கின்றன. இங்ஙனம் ஆன்மாக்கள் யாவும் ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமை என்ற உணர்வுடன்கூடிய மனநிலை தோழி கூற்ருக வெளிப்படுப்பெறுகின்றது என்பது ஆன்ருேர் துணிபு. திருவாய்மொழியில் தோழியின் பாசுரமாக வரும் மூன்று பதிகங்களும்[168] பிரணவத்திலுள்ள உகாரத்தின் பொருளான அநந்யார்ஹத்துவத்தை வெளியிடுகின்றன.

பெண் பிள்ளையைப் பெற்று வளர்ப்பவள் தாய். அப்பெண் தக்க வயதை அடைந்ததும், பேராண்மைக்கு இருப்பிடமாகவுள்ள தலைவனிடம் கழிபெருங் காதலை உடையவளாகின்ருள். அவன் இருக்கும் இடத்தைப் போய்ச் சேரவேண்டும் என்று பதறுகின்ருள். ஆனுல், அவளது பதற்றத்தைத் தடுத்து நிறுத்துகின்ருள் தாய். தலைவனே தலைவி இருக்கும் இடத்திற்கு வரவேண்டும் என்பது நடைபெறவேண்டிய ஒழுங்குமுறை என்றும், அங்ஙனமின்றித் தலைவியே தலைவனிருக்கும் இடத்திற்கு புறப்படுவது குலமரியாதைக்குச் சிறிதும் பொருந்துவதன்று என்றும் நினைக்கின்ருள் தாய். திருமந்திரத்தின் இரண்டாவது சொல்லாகிய 'நம:' என்பது இந்நிலையைக் குறிக்கின்றது. இச்சொல்லை ந+ம: என்று இரண்டாகப் பிரிக்கலாம். 'ம' என்பது வடமொழியில் 'எனக்கு உரியவன்' என்றும், 'ந' என்பது 'அல்லன்' என்றும் பொருள்படுகின்றன. அஃதாவது, 'எனக்கு நான் உரியவன் அல்லன்' என்றபொருள் கிடைக்கின்றது. இதனுல் 'நான் பிறனுக்கு (ஈசுவரனுக்கு) உரியவன்' என்பது பெறப்படுகின்றது. இம் முறையில் இச்சொல் ஈசுவர பாரதந்திரியத்தைத்

168. திருவாய். 4-6: 6-5; 8-9.

தெரிவிக்கின்றது. இன்னும் விளக்கிக் கூறினுல், இச்சொல் ஞானத்தினுல் ஏற்படும் சுதந்திரத்தன்மையை ஒழிக்கின்றது. அதன் காரணமாய் ஏற்படும் 'தன்னைத் தானே காத்துக்கொள்ள முடியும்' என்னும் எண்ணத்தையும் நீக்குகின்றது. இனி, இவனைக் காத்து இரட்சிப்பவன் ஈசுவரனே ஆகின்றுன் என்ற துணிவு பிறக்கின்றது; அஃதாவது, ஈசுவரனே உபாயம் என்ற பொருள் கிடைக்கின்றது. இந்த மனநிலைதான் 'தாய்' என்று குறிக்கப்பெறுகின்றது. திருவாய்மொழியில் தாய் பாவனையில் பேசின ஏழு பதிகங்களும் ஈசுவர பாரதந்திரியத்தையும், அவனை உபாயமாகின்றுன் என்ற கருத்தையும் தெரிவிக்கின்றன.

பெற்ருேர் அல்லது உறவினர் கூட்டாமலேயே தலைவனுடன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து, தலைவனுடைய ஒப்புயர்வற்ற வனப்பு முதலியவற்றில் ஈடுபட்டு இருப்பவள் மகள்; குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது உயிர்வாழ்ந்திருக்க மாட்டேன்' என்னும் பதற்றத்தையுடையவள் இவள். காலக்கழிவினை இவளால் பொறுக்க முடிவதில்லை. திருமந்திரத்தில் பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் எல்லோருக்கும் சேஷியாய் (தலைவனுய்) அறுதியிடப்பெற்றவன் எம்பெருமான். எல்லோருக்கும்புகலிடமாக இருப்பவனும் அவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை உணரப்பட்ட பின்பு, 'நாராயணுய' என்ற சொல்லினுல் கூறப்பெற்றுள்ள எம்பெருமானுடைய சொரூபம் ரூபம் குணம் விபூதி முதலியவற்றின்[169] சேர்க்கையாலுள்ள

---

169. சொரூபம் - ஈசுவரனின் திவ்வியாத்தும சொரூபம்; ரூபம் - பகவானுடைய திவ்விய மங்கள விக்கிரகம்; குணம் - ஆன்ம குணம், விக்கிரக குணம்; ஆன்ம குணங்கள்-ஞானம், சக்தி முதலியன; விக்கிரக குணம்-அழகு, மென்மை முதலியன; விபூதி-நியமிக்கப்படும் பொருள் (ஐசுவரியம்).

பெருமையை நினைந்து மகிழ்பவள் இவள். எம்பெருமான் சாத்தியோபாயமாக இருந்தால் தான் செய்யும் சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகின்ற பேறு கிடைக்கக் கூடும் என்று பொறுத்திருக்கலாம். ஆனால் அவன் சித்தோபாயமாக இருப்பவன். அதனால் அவனைத் தாமதித்து அநுபவிப்பதற்குக் காரணம் இல்லை; 'அவனே உபாயம்' என்ற கோட்பாட்டையும் மீறித் தான் நினைத்த பேற்றினை உடனே பெறவேண்டும் என்ற பதற்றத்தை உடையவளாக இருக்கின்றாள் இவள். இந்த மனநிலைதான் 'மகள்' (தலைவி) என்று குறிப்பிடப் பெறுகின்றது. திருவாய்மொழியில் மகள் பாவனையில் பேசும் பதினேழு பதிகங்களும் இந்த நிலையினையே குறிக்கின்றன என்பதைப் இந்தப் பதிகங்களை ஊன்றிப் படிப்பதனால் அறியலாம்.

இந்த மூன்று நிலைகளும் (அவஸ்தைகளும்) நம்மாழ்வாருக்கு எல்லாக் காலங்களிலும் இருந்தன. இதனால் தான் இவை 'ஞானவஸ்தைகள்' (ஞான நிலைகள்) என்று கூறப்பெறாமல் 'பிரஜ்ஞாவஸ்தைகள்' (உணர்வுநிலைகள்) என்று குறிப்பிடப் பெற்றுள்ளன என்பது அறிந்து உணரத்தக்கது. இங்ஙனம் திருவெட்டெழுத்தின் (திருமந்திரத்தின்) மூன்று சொற்களாலும் குறிப்பிடப் பெறும் பொருளைப் பற்றிய ஞானம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தே இருக்கும் என்பதை உணர்த்தவே இவ்வாறு குறிப்பிடப்பெற்றது என்பதையும் சிந்தித்து அறிதல்வேண்டும்.

வேதாந்தங்களில் குறிப்பிடப்பெறும் பக்தி இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்பதை அறிகின்றோம். இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம் 'பகவத் விஷய காமம்' என்று வழங்கப்பெறும். இங்ஙனம் இவர்கள் மாதவன் மீது

கொள்ளும் காமம் மங்கையர்மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது. ஆயினும், சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்த பகவத் விஷய காமத்திற்கும் கூறப்பெறும். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல, பகவத் விஷயாநுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம் பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்று சமயச் சான்றோர் கொள்வர்.

காதல் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே, பக்திச் சுவையின் அடிப்படையாகவே, பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமாகிய வேப்பிலையுருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தை வெளியிற் பூசிக் கொடுத்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சருக்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும், சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலைநாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய காமத்தினையுடையவர்கட்குக் காட்டப்பெறும் உத்திமுறையாக இறையனார் களவியலிலும் கூறப் பெற்றுள்ளமை[170] ஈண்டு ஒப்பு நோக்கி உணர்தல் தகும். ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற்கேற்ற ஓர் இலக்கிய மரபே இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை என்க.

---

170. இறை. கள. நூற்பா-2 (உரை காண்க.)

இனி, இங்ஙனம் ஆழ்வார் பாடல்களில் வரும் ஒரு சில அகப்பொருள் துறைகளைச் சுருக்கமாக விளக்க எண்ணுகின்றேன்.

தூது: திருவண்டூர் எம்பெருமான்மீது நம்மாழ்வார் மட்டிலுமே மங்களாசாசனம் செய்துள்ளார். இது 'மகள் பாசுரமாக' நடை பெறுகின்றது; தூதுவிடும் பதிகமாக அமைந்துள்ளது. இங்கு ஆழ்வார் குருகினங்கள், கருநாரை, புள்ளினங்கள், அன்னங்கள், பூங்குயில்கள், கிளி, பூவை, வண்டினங்கள் இவற்றைத் தூது போகும்படி வேண்டுகின்றார். இங்ஙனம் பறவைகளைத் தூது விடுவதற்கு உட்பொருள் உண்டு. ஆசாரிய ஹிருதயம்,

> "சேர்ப்பாரைப் பட்சிகளாக்கி, ஜ்ஞாந
> கர்மங்களைச் சிறகுஎன்று, குரு ஸப்ரம
> சாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்"[171]
>
> [ஸப்ரமசாரி — ஒரு சாலை மாணாக்கர்; ஸ்தாநே-இடத்தில்.]

என்று குறிப்பிடுகின்றது. "விண்ணோர் பிரானார், மாசு இல் மலர் அடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே"[170] என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளமையால், பகவத் விஷயத்தில் கொண்டு சேர்ப்வர்கள் பறவைகளாகக் கொள்ளப்படுவர். இயல்பாகவுள்ள இரண்டு சிறகுகளைக் கொண்டு பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ, அங்ஙனமே ஞானம், ஒழுக்கம் (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப்படுகின்றான் என்பது ஆன்றோர் கொள்கை. எனவே, ஞானத்தையும் ஒழுக்கத்தையும் சிறகுகளாகக் கொள்ள வேண்டும். ஆசாரியர்களும்

---

171. ஆசாரிய ஹிருதயம்-சூத்திரம், 150.
1 2. திருவிருத்தம்-54

ஒருசாலை மாணுக்கர்களும் புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள் என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கருத்து. இந்தப் பறவைகளிலும் அன்னம், வண்டு முதலிய வையாகச் சொல்லப்பெறுபவர்கள் இன்னார் இன்னார் போன்றவர்கள் என்று அருளிச் செய்யப்பெற்றுள்ளது.[173] விரிப்பிற் பெருகும்.

திருவாய்மொழியில் தூதுவிடும் பதிகங்களாக உள்ளவை நான்கு. "அஞ்சிறைய மடநாராய்"[174], "வைகல் பூங்கழிவாய்"[175],பொன்னுலகாளீரோ"[176]"எங்கானலகங் கழிவாய்"[177]. என்பவை அவை. இவண் குறிப்பிட்ட முதல் தூது எம்பெருமானுடைய வியூக நிலையை நோக்கி விடப்பட்டதென்றும், விபவாவதாரத்தை நோக்கி இரண்டாந் தூது விடப்பட்ட தென்றும், பரத்துவத்தையும் அந்தர்யாமித்துவத்தையும் நோக்கி மூன்றாந் தூது விடப்பட்டதென்றும்,அர்ச்சாவதாரத்தை நோக்கி நான்காந்தூது விடப்பட்டதென்றும் ஆசாரியர்கள் மெய்ப்பித்துக் காட்டுவார்கள்[178]. திருவண் வண்டூர் எம்பெருமான்மீது விடப்பட்ட தூதினை வேறோர் இடத்தில் விரிவாக விளக்கியுள்ளேன். [179] அன்பர்களை அதனை நோக்கி அறியுமாறு வேண்டுகிறேன்.

---

173. ஆசாரியஹிருதயம்-சூத்திரம் 153, 154, 155. காண்க.
174. திருவாய் 1-4.
175. திருவாய் 6-1.
176. திருவாய் 6-8.
177. திருவாய் 9-7
178. ஆசாரிய ஹிருதயம்—சூத்திரம் 156.
179. சுப்புரெட்டியார், ந: மலைநாட்டுத் திருப்பதிகள், கட்டுரை-8.

அறத்தொடுநிலை : தோழியும் தலைமகளும் அறத்தொடு பொருந்தவே நடந்திருப்பதாகக் காட்டி நிற்றலே அறத்தொடுநிலை என்பது. குட்டநாட்டுத் திருப்புலியூர் எம்பெருமான்மீது நம்மாழ்வார் அருளியுள்ள பதிகம் தோழி பாசுரமாக நடைபெறுகின்றது. பராங்குச நாயகி வயது முதிர்ந்து மங்கைப் பருவம் அடைகின்றாள். கணவனை நாடி அடையவேண்டிய வயதல்லவா இது? திருப்புலியூர் எம்பெருமானுடன் இயற்கைப் புணர்ச்சியும் நடைபெற்று விடுகின்றது. தலைவியின் உயிர்த் தோழியானவள் தலைவியின் உருவ வேறுபாட்டாலும் சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி உண் டானமையை ஒருவாறு அறிகின்றாள். தன் மகளின் உண்மை நிலையை அறியாத தாய் தந்தையர் இவளுடைய திருமணத்தை நிச்சயித்து மண முரசும் அறைவிக்கின்றனர். இதனை அறிந்த தோழி மனங் கவல்கின்றாள். 'பரதனே அரசன்' என்று அறைவித்த முரசொலி செவிப்பட்டபோது பரதாழ்வான் எங்ஙனம் மனக் கிலேசம் அடைந்தானோ அங்ஙனமே தோழி இப்போது துயர் அடைகின்றாள். அவள் இவ்வாறு சிந்திக் கின்றாள் : "மானிடவர்க்கென்று பேச்சுப்படில், வாழகில்லேன்[180]" என்று கூறியவள் இவள். 'அன்றிப் பின் மற்றொருவர்க் கென்னை பேசலொட்டேன் மாலிருஞ் சோலையெம்மாயற்கல்லால்க்'[181] என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். மாறாக ஏதேனும் நடைபெற்றால் இவள் உயிர் தரியாள். அப்படி நடைபெறுவதை எப்படி யாயினும் தடுத்தேயாக வேண்டும். அங்ஙனம் செய்ய முயலுங்கால் திருப்புலியூர் நாயனுருடன் புணர்ச்சி உண்டானமையை அறிவிப்பின் அஃது என் காவற்

---

180. நாச். திரு. 1:5
181.

சோர்வாலே நிகழ்ந்தது என்று ஏற்பட்டுவிடும். அறிவியாது ஒழியில் இவள் வாழாள். இந்நிலையில் செய்ய வேண்டியது என்ன ?" என்பதாக.

தோழி இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது தலைவியின் பெற்ருேரும் மற்ருேரும் தலைவியின் வடிவ வேறுபாட்டிற்குக் காரணம் யாதாக இருக்குமோ என்று ஆராயும் நிலையைக் காண்கின்ருள். தானும் அவர்களுடன் ஆராய்வதாகச் சேர்ந்து கொண்டு இதனை விலக்க வேண்டுமென்று உறுதி செய்கின்ருள். அந்த முறையைக் கூறுவதாக அமைந்ததே திருப்புலியூர் மாயப் பிரான் மீது மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத் திருவாய்மொழி. இதுவே அகப் பொருள் நூலார் குறிப்பிடும் 'அறத்தொடு நிற்றல்' என்பதாகும். இன்ஞேர் இடத்தில் இப்பதிகம் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது.[182] ஆண்டுக் கண்டு மகிழ வேண்டுகின்றேன்.

**உடன் போக்கு :** தலைவனும் தலைவியும் பகற்குறியிலும் இரவுக்குறியிலும் பலகாலும் கூட்டம் நிகழ்த்தி வருவதனுல், அவர்களது மறையொழுக்கம் வெளிப்பட்டு அலராகும். இதனை அறிந்த தலைவன் தோழியின் விருப்பத்திற் கிணங்கச் சிலகாலம் அவ் வலர் அடங்குமாறு கூட்டம் நீங்கி வேறிடத்திற்குச் சென்று உறைவான். அவ்வாறு நீங்கி உறைதலை அகப்பொருள் நூல்கள் 'ஒருவழித் தணத்தல்' என்று குறிப்பிடும். அலரறிந்த தலைமகன் இவ்வாறு ஒருவழித் தணந்து நில்லாளுயின் அவன் தலைவியைத் தோழியின் துணைக் கொண்டு ஆங்கு நின்றும் பெயர்த்து ஒருவருக்கும் தெரியாமல் நள்ளிரவில் தன் மனையிடத்துக்கு உடன்

182. மலைநாட்டுத் திருப்பதிகள்—கட்டுரை-9.

கூட்டிக் கொண்டு செல்வான். இங்ஙனம் அவன் செல்லலை 'உடன் போக்கு' என்று வழங்குவர் அகப் பொருள் நூலார். இத் துறையில் வரும் பெரிய திரு மொழிப் பதிகம் ஒன்றில் ஆழங்கால் படுவோம்.

பரகால நாயகி திருத்தாயாருடன் கண் உறங்கிக் கொண்டிருக்கின்றபொழுது, அவளை யாரும் அறியாமல் தன்னுடன் அழைத்துக் கொண்டு போகத் துணிந்த வயலாலி மணவாளன், திருத்தாயார் சிறிது கண்ணுறங் கினபொழுது அங்ஙனமே அவளைக் கொண்டு சென்றுவிட் டான். உடனே துணுக்கென்று கண்விழித்துக் கொண்ட திருத்தாயார் படுக்கையைத் தடவிப் பார்க்கின்றாள் ; மகளைக் காண்கின்றிலள். தன் மகள் வயலாலி மணவா ளனைக் குறித்து வாய்வெருவினபடியை அறிந்தவளா தலின் அப்பெருமானே இவளைக் கொண்டு போயிருக்க வேண்டும் என்று நினைத்து எழுந்து பார்க்கின்றாள். தான் நினைத்தபடியே வயலாலி மணவாளன் தன் மகள் கையைப் பிடித்துக் கொண்டு போவதைத் தன் கண்ணாலே கண்டு வாய்விட்டுப் பேசுவதாக நடக் கின்றது இத் திருமொழி.[183] வயலாலி மணவாளனை நாளும் கலந்து அநுபவிக்கவேண்டுமென்றிந்த ஆழ்வா ருடைய விருப்பம் இத் திருமொழியாக வடிவங் கொண்டது போலும்.

இதுபற்றிப் பக்தர்களிடையே ஓர் இதிகாசம் வழங்கி வருகின்றது. வயலாலி மணவாளன் பரகால நாயகியைக் கவர்ந்து சென்றது மறையாகவா அல்லது பலரு மறியவா என்ற வினா எழுகின்றது அவர்களிடையில். மகளைத் தாய் அணைத்துக் கொண்டு கிடக்கையில் எம்பெருமான் தனிமையில் வந்து யாரும் அறியா

183. பெரி. திரு. 3-7

வண்ணம் கவர்ந்து சென்றதாகப் பிள்ளை அமுதனார் என்பார் உரைத்தாராம். அதனைக் கேட்டருளிய பராசர பட்டர், 'அங்ஙனம் வேண்டா; பலரும் கண்டுகொண்டிருக்கையில் தீவட்டிக் கள்ளர் கொள்ளை கொண்டு போமாப்போலே கொண்டு சென்றதாக நிர்வகிப்பது எளிது' என்றருளிச் செய்தாராம். இப்பதிகத்தில் இத்துறை அமைந்த அருமைப்பாடு பிறிதோர் இடத்தில் விளக்கப் பெற்றுளது[184]. ஆண்டுக் கண்டு மகிழ வேண்டுகிறேன். இத்துடன் நாலாயிரத்தைப்பற்றிய பேச்சினைத் தலைக்கட்டிக் கம்பராமாயணத்தில் நுழைய விரும்புகிறேன்.

## 2. கம்பராமாயணம்

அன்பர்களே, கம்பராமாயணத்தில் வேங்கடத்தைப் பற்றிய குறிப்பு வருகின்றது. ஒரு பெருங் காப்பியத்தில் 'மலை கடல் நாடு வளநகர் பருவம்' முதலிய பொருள்களைப் பற்றி ஆங்காங்குச் சுட்டிச் செல்லுதல் காப்பிய மரபாக இருந்து வருவதை நாம் அறிவோம். இக்கால ஆராய்ச்சி முறையில் கூறினால் கவிஞன் தரைநூல் பற்றிய (geography) குறிப்புகளைத் தருகின்றான் என்று சொல்ல வேண்டும். கிட்கிந்தா காண்டத்தில் நாடவிட்டபடலத்தில் இத்தகைய குறிப்புகளைக் காண்கின்றோம். இராமபிரானது கட்டளைப்படி சுக்கிரீவன் வானரப்படைத் தலைவர்களைச் சீதாபிராட்டியைத் தேடும்படி எல்லாத் திசைகளிலும் விடுக்கின்றான். ஒவ்வொரு திசையிலும் இரண்டு வெள்ளம் சேனையுடன் வானரவீரர்கள் செல்லுகின்றனர். தென்திசையை

184. சுப்புரெட்டியார், ந.: சோழ நாட்டுத் திருப்பதிகள் (விரைவில் வெளிவரும்)

நோக்கிச் செல்லும் வானர வீரர்களை நோக்கி அவர்கள் தேடவேண்டிய பல இடங்களைக் குறிப்பிட்டு அவர்கள் செல்லும் வழியினை யெல்லாம் விளக்குகின்றான் அக் கவிக் குலத்தரசன். அப்பொழுது வேங்கடத்தின் வளம், பெருமை, முதலிய செய்திகளைத் தருகின்றான்.

"வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்
நல்லறத்துக் கீறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோற் பூத்து நின்ற
அடைசுற்றுந் தண்சாரல் ஓங்கியவேங்
கடத்திற்சென் றடைதிர் மாதே"[185]

[ஈறு - வரம்பு; அடை - தேன்கூடு.]

"வேங்கடம் தனக்கு வடக்கில் வழங்கும் வடமொழிக்கும் தெற்கில் வழங்கும் தமிழ் மொழிக்கும் எல்லையாக உள்ளது. நான்கு மறைகளும் மற்றைச் சாத்திரங்களும் தம்மிடத்தல் கூறியுள்ள எல்லாப் பொருள்கட்கும் முடிவான பொருளையுடையது; அதாவது அந்நூல்களில் நுவலப்பெறும் கடவுளர் யாவரினும் சிறந்த முழுமுதற் கடவுளான திருமாலைத் தன்னிடத்திற் கொண்டுள்ளது. அதற்கெல்லாம் வரம்பாய் நின்று திகழ்கின்றது. அதன் பெருமையை எடுத்துச் சொல்லி விளக்க உவமைப் பொருள் ஒன்றும் இல்லை. ஆயினும், புகழ்நிரம்பிய உடல் போல் பொலிந்து நிற்கின்றது என்று சொல்லி வைக்கலாம். அந்த மலை தேன் கூடுகள் நிரம்பப் பெற்ற தாழ்வரைகளால் சூழப் பெற்றுள்ளது. நீங்கள் அம்

185. கிட்கிந். நாடவிட்ட - 26,

மலையினைச் சென்றடைவீர்களாக" என்று முதலில் கூறுகின்றான் கதிரவன் மைந்தன்.

அடுத்து, அம்மலையில் வதியும் மாமுனிவர்களின் பெருமையைப் பேசுகின்றான் அருக்கன் மைந்தன்.

"இருவினையும் இடைவிடா எவ்வினையும்
இயற்றாதே இமையோர் ஏத்தும்
திருவினையும் இடுபதந்தேர் சிறுமையையும்
முறையொப்பத் தெளிந்து நோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங்
கதுகளையும் கடையின் ஞானத்து
அருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுளரீண்
டிருந்தும்அடி வணங்கற் பாலார்."[186]

[இருவினை - நல்வினை, தீவினை; இமையோர் - தேவர்கள்; ஏத்தும் - புகழும்; இடுபதம் - பிச்சையாக இடும் சோறு; கரு - மூலகாரணம்; களையும்-நீக்குதற்கு உரிய; கடை - எல்லை.]

"அம்மலையில் வாழும் மாமுனிவர்கள் வினைகள் விளை தற்குக் காரணமான எந்தக் கருமங்களையும் செய்யார்; 'ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும்' பெற்றியினை உடையார்;இப்பிறவிக்கு மூலகாரணம் வினையேஎன்பதை நன்கு அறிந்தவர்கள்; அதனைப் போக்குவதற்குரிய எல்லையில்லாத தத்துவ ஞானத்தை உடையவர்கள். இவர்கள் இருவினைகட்கும் பகைவர்களாகத் திகழும் பெரியோர்கள். அம் மலையிலுள்ள அவர்கள், இருந்த இடத்திலிருந்தே திக்கு நோக்கித் தண்டம் சமர்ப் பிப்பதற்கு உரியவர்களாவர்" என்று அவர்கள் பெருமையைப் போற்றியுரைக்கின்றான்.

186. கிட்கிந். நாடவிட்ட-27

தெற்கு நோக்கிச் சென்ற வானர வீரர்கள் பல இடங்களில் சீதாப்பிராட்டியைத் தேடிப் பார்த்துக் கொண்டே திருமலைக்கு வருகின்றனர். அப்போதும் அம்மலையின் தன்மை கூறப்பெறுகின்றது.

"முனிவரும் மறைவல் லோரும்
முந்தைநாட் சிந்தை மூண்ட
வினைவரு நெறியை மாற்றும்
மெய்யுணர் வோரும் விண்ணோர்
எனைவரும் அமரர் மாதர்
யாவரும் சித்தர் என்போர்
அனைவரும் அருவி நன்னீர்
நாளும்வந் தாடு கின்றார்"[187]

முனிவர் முதலிய இவ்வுலகத்தவரும் தேவகணங்களாகிய மேலுலகத்தினரும் நீராடுவதற்குரிய பெருமை வாய்ந்த நீரருவிகளினாலாகிய பல புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுள்ளது அம்மலை. அம்மலையில் தேவர்கள் ஐம்பொறிகளையும் அடக்கித் தவமியற்றுகின்றனர். இத்தகைய அம்மலையிலுள்ள பல்வேறு இடங்களையும் எடுத்துக் கூறுமுகத்தான் அம்மலையின் சிறப்பினை எடுத்தியம்புகின்றான் வானரவேந்தன்.

"தோதவத்தித் தூய்மறையோர் துறையாடு
நிறையாறுஞ் சுருதித் தொன்னூல்,
மாதவத்தோ ருறைவிடனும் மழையுறங்கும்
மணித்தடனும் வான மாதர்
கீதமொத்த கின்னரங்கள் இன்னரம்பு
வருடுதொறும் கிளக்கும் ஓதை
போதகத்தின் மழக்கன்றும் புலிப்பறழும்
உறங்கிடனும் பொருந்திற் றம்மா."[188]

187. கிட்கிந் - ஆறுசெல். 34
188. கிட்கிந். நாடவிட்ட. 28.

[தோதவத்தி - தூய்மையான ஆடை; துறை- துறைகள்; நூல் - சாத்திரம்; மழை-மேகங்கள்; தடன்- தாழ்வரைகள்; கின்னரம்-ஓர் இசைக்கருவி; வருடுதல்- தடவுதல்; ஓதை - ஓசை; போதகம் - யானை.]

"திருமலையில் உடல் தூய்மையும் மனத் தூய்மையும் உடைய அந்தணர்கள் இறங்கி மூழ்கி நீராடும் துறைகளும் ஆறுகளும் உள்ளன; முனிவர்கள் உறைகின்ற ஆசிரமங்கள் அங்கு உள்ளன; மேகங்கள் தவழும் தாழ்வரைகள் அம்மலையைச் சூழ்ந்துள்ளன. தேவ மாதர்கள் தங்கள் இசைப்பாட்டுக்கு ஒத்துவருமாறு கின்னரங்களின் நரம்புகளை வருடுந்தோறும் உண்டாகும் ஓசையினால் யானைகளின் இளங்கன்றுகளும் புலியின் குட்டிகளும் தம்முள் பகையின்றி உறங்கும் இடங்கள் அம்மலையில் உள்ளன" என்று கூறுகிறான்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமலைக்குச் செல்லாது ஒதுங்கிச் செல்லுமாறு அடுத்து அறிவுறுத்துகின்றான் அக் கோமகன்.

> "கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரேல்
> உம்நெடிய கொடுமை நீங்கி
> வீடுறுதிர் ஆதலினால் விலங்குதிர்"[187]

[கோடு-சிகரங்கள்; மால்வரை - பெரிய மலை; கொடுமை - கொடும் பாவங்கள்; வீடு உறுதிர்-மோட்சமடைவீர்; விலங்குதிர் - விலகிச் செல்லுங்கள்.]

திருவேங்கட மலையை நெருங்கியவுடனே அப்புனிதத் தலத்தின் மகிமையால் கொடும்பாவங்கள் யாவும் மறைந்து வீடுபேறு கிடைத்துவிடுமாதலாலும், இதனால் இராம காரியத்திற்குக் குந்தகம் விளையுமாதலாலும் அம் மலையை வணங்கின நிலையில் விலகிச் செல்லுமாறு அறி

189. கிட்கிந். நாடவிட்ட-29.

வுறுத்துகின்ருன். அம்மலே மிக்க தூய்மையுள்ளதாதல் பற்றி இராவணன் அங்குச் சென்றிருக்கமாட்டான் என்பது திண்ணம் என்பதையும் குறிப்பாற் புலப்படுத்து கின்ருன் வானரக்கோன்.

இத் திருவேங்கட மலேயின் மோட்சமளிக்கும் தன் மையும் பேசப்பெறுகின்றது.

**"வலங்கொள் நேமி மழைநிற வானவன்**
**அலங்கு தாளிணை தாங்கிய அம்மலே**
**விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்**
**புலன்கொள் வார்கட் கனேயது பொய்க்குமோ?[190]**

[வலம் - வெற்றி; மழைநிறவானவன்- சீநிவாசன்; அலங்கு - விளங்குகின்ற ]

அம்மலேயில் எழுந்தருளியிருக்கும் சீநிவாசன் விலங்கு கட்கும் வீட்டுலகத்தை அளிப்பவன் என்று பேசுகின் ருன் கவிஞன். இங்ஙனம், கம்பன் வாக்கில் காவியப் போக்கில், திருவேங்கடத்தின் பெருமைபேசப்படுவதைக் கண்டு மகிழ்கின்ருேம்.

## 3. வில்லிபாரதம்

அன்பர்களே, வில்லிபாரதத்திலும் திருவேங்கடத் தைப்பற்றி ஒரு குறிப்பு வருகின்றது. பாண்டவர்கள் விசுவகர்மனுல் இந்திரப் பிரத்தத்தில் புதிதாக இயற்றப் பட்ட அழகிய நகரிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்த நாளில் வேடர்களால் கவரப் பெற்ற ஓர் அந்தணனின் ஆநிரைகளே மீட்கும் பொருட்டு வில்லெடுக்க ஆயுத சாலேயை நோக்கிச் செல்லுங்கால் தருமனுடன் திரௌ பதியிருப்பதைப் பார்த்துவிட்டான் அருச்சுனன். அந்தப்

190. கிட்கிந். ஆறுசெல் - 35. 6

பாவம் தீரும்பொருட்டு நாரத முனிவரின் யோசனைப்படி அவன் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ள வேண்டிய தாயிற்று. கங்கையில் நீராடுகையில் அங்கு நீராடிய நாககன்னிகையரில் உலூபி என்பாளுடன் பாதாள லோகம் சென்று, அவளை மணந்து, நாகலோகத்தில் சின்னாட்கள் தங்கி, இராவானை மகனாகப் பெற்றுப் பூலோகத்திற்கு வருகின்றான் பார்த்தன். பின்னர் இமய மலையிலுள்ள தீர்த்தங்கள், யமுனை முதலிய தீர்த்தங்களில் நீராடி, தென்றிசை நோக்கி வந்தவன் திருவேங்கடத்தை அடைகின்றான். இதனை வில்லிபுத்தூரார்,

> "பத்திக்கு வரம்பாகிய பார்த்தன் பலதீர்த்தம்
> அத்திக்கினும் எத்திக்கினும் ஆர்என்றவை ஆடி
> சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை அணுகி
> தத்திச்சொரி யருவித்தட அரவக்கிரி சார்ந்தான்."[191]

[வரம்பு - எல்லை; சித்தி - கருதிய பயன் கைகூடுகை; விதை - மூலம்; தத்தி - குதித்து; அரவக்கிரி-சேடமலை, திருவேங்கடம்]

என்று குறிப்பிடுவர். தென்னாடு பல சிவத்தலங்கட்கும் விட்டுணுத்தலங்கட்கும் இடமாய் அமைந்து அடியார் கருதிய பயன் கைகூடுவதற்கு உரிய இடமாக இருத்தலால், 'சித்திக்கொரு விதையாகிய' என்ற அடை கொடுத்து சிறப்பிக்கப் பெற்றது. திருமலையில் ஆகாய கங்கை, பாவவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமார தாரை, தும்புரு தீர்த்தம், கோனேரி, ஆழ்வார்தீர்த்தம் போன்ற பல புண்ணிய தீர்த்தங்கள் உளதால், 'தத்திச் சொரி அருவி' எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் 'திருவேங்கடம்' வில்லிபுத்தூரார் வாக்கிலும் இடம்பெற்று நிலையான புகழுடன் வாழ்கின்றது.

---

191. ஆதிபர் - அர்ச்சுனன் தீர்த். 12.

இங்ஙனம் இடைக்கால இலக்கியத்தில் 'திருவேங் கடம்' புகழும் பொலிவும் பெற்றுத் திகழ்கின்றது. திரு வேங்கடமுடையானும் பக்தர்கள் கூட்டத்தைப் பெருக் கிக் கொள்ளுகின்முன். இராமாநுசர் அனந்தாழ்வானை யனுப்பி நந்தவனம் அமைத்தல், குளம் வெட்டல் போன்ற கைங்கரியம் செய்வித்ததும், பின்னர் தாமே திருமலைக்கு எழுந்தருளிக் கோயில் வழிபாட்டு முறையை வகுத்ததுமான செயல்கள் திருமலையின் புகழும் திருவேங் கடமுடையானின் சிறப்பும் எட்டுத் திசைகளிலும் பரவு வதற்கு ஏதுக்களாக அமைகின்றன. இதனுல் திருவேங் கடம் தலயாத்திரிகர்களின் சிறப்பான இடமாக அமைந்து விடுகின்றது; பக்தி இயக்கமும் இதனை மேலும் சிறப்பாக்குகின்றது என்று கூறி இன்றைய பொழி வினைத் தலைக்கட்டுகின்றேன். வணக்கம்.

# திருவேங்கடத்தின்மீது எழுந்துள்ள நூல்கள்

மூன்ருவது பொழிவு	மார்ச்சு 7, 1974

பேரன்பர்களே,

வணக்கம். இன்று நடைபெறுவது மூன்ருவது சொற்பொழிவு. இத்தொடரில் நடைபெறும் இறுதிச் சொற்பொழிவாகும் இது. சென்ற சொற்பொழிவில் ஆழ்வார் பெருமக்களாலும் இராமநுசராலும் திருவேங்கடம் பெரும் புகழ்பெற்றது என்பதைக் குறிப்பிட்டேன். இதனல் கற்றவர்கள், கல்லாதவர்கள், பக்தர்கள் சுற்றுலாச் செல்வோர் முதலிய எண்ணற்ற மக்கள் நாடோறும் திருமலைக்கு வருவதும் போவதுமாக உள்ளனர். திருவேங்கட முடையான்மீது எண்ணற்ற கதைகள், செவிவழிச் செய்திகள் எழுகின்றன. இவை தல புராணத்திலும் இடம் பெறுகின்றன. சில தனிப் பாடல்களும் திருவேங்கட மலைபற்றிப் புனையப்படுகின்றன. இவை யாவும் மேலும் மேலும் மக்களிடையே பக்திச்சுடர் கிளர்ந்தெழுவதற்குக் காரணமாக அமைகின்றன.

ஓர் அழகிய பாடல் அழகிய நிகழ்ச்சியொன்றினைத் தாங்கி நிற்கின்றது. கேட்கும் வரத்தையெல்லாம் அளிக்கும் எம்பெருமான் ஏழுமலையானைக் காண்பதற்கு ஒரு நாள் ஒரு கூனன், ஒரு குருடன், ஒரு முடவன், ஓர் ஊமை என்ற நால்வர் மலை ஏறுகின்றனர். இவர்களைப் போல் ஊனுடம்பில் குறையில்லாவிட்டாலும் உள்ளத்

தில் குறையுடையவர்கள் பலரும் மலைஏறுகின்றனர். திடீ ரென்று ஓர் அதிசயம் நிகழ்கின்றது. கோலூன்றி நடந்த கூனன் நிமிர்ந்து ஓடவே தொடங்கிவிடுகின்றான். குருட னுக்குக் கண்ணொளி ஏற்பட்டு விடுகின்றது. அவன் வளைந்த கொம்பொன்றில் தொங்கிக் கொண்டிருக்கும் தேன்கூட்டைப் பார்த்து, 'அதோ தேன்' 'அதோ தேன்' என்று அருகிலுள்ளவர்கட்குக் காட்டுகின்றான். அது வரை முடமாய்க் கிடந்து தட்டுத்தடுமாறி மலையேறிய நொண்டியோ தேன்கூட்டைப் பறிக்க மரத்தின்மீதே ஏறத் தொடங்கிவிடுகின்றான். அதுவரை வாய்பேசா மல் ஊமையாக நடந்து சென்றவனும் வாய்விட்டுப் பேசத் தொடங்கிவிடுகின்றான். 'அவன் எடுக்கும் தேனில் எனக்கும் ஒரு பங்கு' என்று கேட்கின்றான். இத்தகைய ஒரு கற்பனை நிகழ்ச்சியைப் படைக்கின்றார் கவிஞர் ஒருவர். அவரும் இவர்களைப்போல் மலைமீது கோயில் கொண்டிருக்கும் மாதவனை வணங்குவதற்குச் சென்று கொண்டிருப்பவரே. இங்ஙனம் வழிவழியாக வளர்ந்து வரும் மாதவன்மீது மக்கள் கொண்ட நம்பிக்கை கவிஞரிடம் ஒரு பாட்டு வடிவம் பெறுகின்றது. அப் பாடல் :

"கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந்தோட,
குருடன் கொம்பில்
தேன்என்று காட்ட, முடவன்
அத்தேனை எடுக்க,அயல்
தான்நின்ற ஊமை எனக்கென்று
கேட்க, தருவன்வரம்
வான்நின்ற சோலை வடமலை
மேல்நின்ற மாதவனே.[1]"

---

1. ஒரு பழம் பாடல்,

பக்திச் சுவை கிளர்ந்தெழச் செய்யும் இப்பாடல் மக்கள் மனத்தில் மாதவன் நிலையான இடம் பெற்றிருப்பது போலவே இடம் பெற்று விட்டது.

இங்ஙனம், ஏழுமலையான்மீது எழுந்த பாடல்களே யன்றித் தனி நூல்களும் அவன்மீது எழுந்துள்ளன. அத் தனி நூல்களை ஆராய்வதே இன்றைய பொழிவின் நோக்கமாகும். இன்று நமக்குக்கிடைத்திருக்கும் நூல்கள் சிற்றிலக்கியங்களும் புராணங்களுமாகும். சிற்றிலக்கியங் களுள் குறிப்பிடத்தக்கவை இவை:

1. திருவேங்கடத் தந்தாதி
2. திருவேங்கடமாலை
3. திருவேங்கடக் கலம்பகம்
4. சேடமலை பதிற்றுப்பத்தந்தாதி.

புராணங்களுள் நமக்குக் கிடைத்திருப்பவை:

1. திருவேங்கடத் தலபுராணம்
2. திருவேங்கட புராணம்.

என்ற இரண்டுமாகும். புராணங்கள் என்று கூறத்தக்க வாறு திருவேங்கடத்தின்மீது தமிழில் நூல்கள் இல்லை; அண்மைக் காலத்தில் வடமொழி மான்மியத்தை அடிப் படையாகக் கொண்டு அமைந்த 'திருவேங்கடத் தல புராணம்' என்ற ஒரே ஒரு நூல் உள்ளது. 'திருவேங்கட புராணம்' என்ற நூல்பற்றிக் குறிப்புகள் உள்ளன. ஆனால், அந்த நூல் எனக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, கிடைத்திருக்கும் நூல்களைப்பற்றி இன்றைய பொழிவில் சில கருத்துகளை உங்கள்முன் வைக்கின்றேன்.

சிற்றிலக்கியங்கள் என்பவை தமிழில் வழங்கி வரும் பிரபந்தங்களாகும். இவை தொண்ணூற்றாறு வகைப் படும் என்று கூறும் மரபு ஒன்று உண்டு. ஆனால் பிரபந் தங்களின் இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்களில் ஒன்றி

லாயினும் 'தொண்ணூற்ருறு' என்ற வரையறை கூறப் பெறவில்லை. இவற்றில் கூறப்பெருத சிற்றிலக்கியங்கள் பல இன்று வழக்கில் உள்ளன. இன்னும் காலத்திற் கேற்பப் பலப்பல இலக்கியங்களும் தோன்றுதல் கூடும். அவற்றை விலக்கல் எவராலும் இயலாது. எனவே, சிற்றிலக்கியங்களின் வகைகளையும் எண்வரையறையை யும் அறுதியிடுவது இயலாதவொன்று என்பதை நாம் அறிதல் வேண்டும். ஆயினும், தமிழ் மொழியின் தலை சிறந்த இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் இத் தகைய நூல்கள் தோன்றுவதற்குரிய விதியை வகுத் துள்ள நுட்பத்தையும், அவரது எதிரதாக் காக்கும் கூர்த்த மதிநலத்தையும் நாம் போற்றத்தக்கவர்களாக இருக்கின்ருேம்.

பெரும்பாலும், தொடர்நிலைச் செய்யுட்கு உரியன வாகத் தொல்காப்பியத்தில் கூறப்பெற்ற வனப்பு எட்டனுள்[2], 'விருந்து' என்பதும் ஒன்ருகும். இதனைத் தொல்காப்பியர்,

> விருந்தே தானும்
> புதுவது கிளந்த யாப்பின் மேற்றே.[3]

என்று குறிப்பிடுவர். அதாவது, முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது இவ்வகை நூலாகும். இப் பொதுவிதி சொற்ருெடர்நிலை யாய் வரும் அந்தாதி, கலம்பகம் முதலான சிற்றிலக் கியங்கட்கும், அந்தாதியாய் வராத உலா, தூது, பிள்ளைத் தமிழ் முதலான பல இலக்கியங்கட்கும் இலக்கணமாக அமைந்துவிட்டது. இந்த விதியே சிற்றிலக்கியப் பரப்பு

2. தொல். பொருள். செய்யு. நூற்பா. 1
3. தொல். செய்யு. நூற்பா. 231

விரிந்து எண்ணிறந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கும் ஏதுவாயிற்று.

## பொதுப்பண்புகள்:

அன்பர்களே, இச்சிற்றிலக்கியங்களின் பொதுப்பண்புகளை ஈண்டுக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும் என்று கருதுகிறேன். இவ்வகை நூல்களில் நூலறிவும் உலகியலறிவும் நிரம்பிய புலவர் பெருமக்களின் கற்பனை வளத்தைக் காணலாம். இவற்றில் காவியச் சுவைகள் களிநடம்புரிவதையும் கண்டுகளிக்கலாம். உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள் வைப்பு முதலான இவற்றின் அணிநலன்கள் கற்பவர் கருத்தினைக் கவர்வனவாக இருத்தலைப் பார்க்கலாம். இவற்றுள் அமைந்திருக்கும் யமகம், திரிபு, சிலேடை போன்ற சொல்லணிகள் கற்பாரைத் திகைக்க வைக்கும் பெற்றியனவாக இருத்தலையும் காணலாம். இத்தகைய இலக்கியங்கள் பல திருத்தலங்கள்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அறியத் துணைசெய்வதையும் காணலாம். ஒவ்வொரு வகையிலும் பலப்பல நூல்கள் தோன்றி இந்தவகை இலக்கியச் செல்வத்தை மிகுதிப்படுத்தியுள்ளன. இவ்வகை இலக்கியங்களை இயற்றியவர்களுள் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

## பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் :

ஈண்டு நாம் ஆராய எடுத்துக்கொண்ட நூல்களுள் திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை என்ற இரண்டு நூல்களை இயற்றியவர் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்கள். இவர் சோழநாட்டில் திருமங்கை என்னும் திருப்பதியில் பார்ப்பனர் மரபில் பிறந்தவர்.

இளமையிலேயே வடமொழி தென் மொழிகளை ஐயந்திரிபற ஓதி உணர்ந்தவர். வைணவ சமய நூல்களையும் கற்றுத் துறைபோய வித்தகர். ஆழ்வார் அருளிச் செயல்களில் ஆழங்காற்பட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் நம்பெருமாள் பக்கல் பேரன்பு பூண்டவர். அக்காலத்தில் ஆண்ட அரசன் அவையில் சிறந்த பதவி வகித்தவர். அரசன் அவருடைய பக்திவைராக்கியம் முதலியவற்றை அறிந்து அவருடைய வேண்டுகோட் கிணங்கக் கோயிலில் தனி இடமும் தளிகைப்பிரசாதமும் அவருக்குக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்தான். இவருடைய பக்திப் பெருக்கினால் இவருக்கு 'அழகிய மணவாளதாசர்'[4] என்ற பெயர் வழங்கலாயிற்று.

திருவரங்கத்தில் இருந்த காலத்தில் இவர் திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம், சீரங்கநாயகரூசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்ற எட்டு நூல்களை இயற்றியருளினார். இவை இன்று 'அஷ்டப் பிரபந்தம்' என்ற பெயரில் ஒரே தொகுதியாக வழங்கி வருகின்றது. இவர் இயற்றியனவாகச் சில தனிப்பாடல்களும் வழங்கிவருகின்றன. இவரைப்பற்றிப் பல கதைகளும் வழங்கி வருகின்றன. அவற்றை விளக்க ஈண்டுநேரமும் இல்லை; தேவையும் இல்லை. இறுதி நாளில் ஒரு நொண்டிப் பசு இவர்மேல் விழ அது விழுந்ததனாலேற்பட்ட துன்பத்துடனே இவர்,

"துளவ துளவவெனச் சொல்லுஞ்சொற் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்

---

4. 'அழகிய மணவாளன்' என்பது திருவரங்கத்து எம்பெருமானின் திருநாமம்.

கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்காய் அரங்கா இனி.”

என்று சொல்லித் திருநாட்டை அலங்கரித்தாக அறியக் கிடக்கின்றது.

இவர் சிலேடை, திரிபு, யமகம், அந்தாதி, கலம்பகம், ஊசல் முதலியனவற்றைப் பாடுவதில் ஒப்புயர்வற்றுத் திகழ்கின்றார். இவருடைய நூல்களை ஆராயுங்கால் இதனைத் தெளிவாக விளக்குவேன். அன்றியும் 'திவ்வியகவி' என்ற பட்டப் பெயரே இதனைத் தெளிவுறுத்தும். இவர் இயற்றிய 'திருவரங்கக் கலம்பகம்' மிகச் சிறப்பினையுடையது. வெண்பாப் பாடுவதில் வல்ல புகழேந்தியும், விருத்தம் பாடவல்ல கம்பநாடரும், அந்தாதி பாடுவதில் பேர்பெற்ற ஒட்டக்கூத்தரும்; கலம்பகத்திற்கு என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் இரட்டையர்களும்; சந்தம்பாடுவதில் வல்லவரான படிக்காசுப் புலவருமான பெரிய புலவர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து செய்தாலொத்த சிறப்பினையுடையது இக் கலம்பகம். ஆயினும், 'அம்மானையில் அய்யங்கார் அடிசறுக்கினார்' என்று ஒரு சாரார் குறை கூறுவர். அது சிறிதும் சரியன்று என்பது ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலனாகும். “தேனமரும் சோலை”[5] என்று தொடங்கும் அம்மானைச் செய்யுளின் ஈற்றடியிலுள்ள, “சாபத்தால் அம்மானை” என்ற தொடரின் சிலேடைப் பொருளின் நயத்தையும் வரலாற்று அமைப்பையும் ஆழ்ந்த கருத்தையும் நோக்குமிடத்து, அங்ஙனம் இழித்துரைப்பாரது பழிப்புரை வெற்றுரையேயாம் என்பது தெற்றென விளங்கும். இந்த ஆசிரியர் செய்துள்ள சிற்றிலக்கியங்களில் எல்லாம் ஆழ்வார்கள் அருளிச் செயல்களின் செல்வாக்கும்; நாத

5. திருவரங்கக் கலம்பகம்-26

முனிகள் போன்ற ஆசாரியர்களுடைய அருளிச் செயல் களின் சிறப்புப் பொருள்களும் பொருந்தியிருப்பதைக் கண்டு களிக்கலாம்; அநுபவித்து மகிழலாம்.

இனி, இவர் திருவேங்கடம் சம்பந்தமாக அருளி யுள்ள இரண்டு நூல்களை ஆராய முற்படுவோம்.

## 1. திருவேங்கடத் தந்தாதி

அன்பர்களே, முதலாவதாகத் 'திருவேங்கடத் தந்தாதி'பற்றிச் சிறிது ஆராய்வோம். இச்சிற்றிலக் கியம் திருவேங்கடமலைமீதும் அம்மலையில் கோயில் கொண்டிருக்கும் சீநிவாசன்மீதும் பாடப்பெற்றது. 'அந்தாதி' என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும்படிப் பாடுவது. இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யுளின் ஆதியாக அமைய வைப்பது. 'திருவேங்கடத் தந்தாதி' என்ற நூல் அந்தாதித் தொடையாலமைந்த நூறு கட்டளைக் கலித்துறைகளால் அமைந்தது. இந் நூலிலுள்ள கலித்துறைகள் யாவும் பெரும்பாலும் திரிபு என்ற சொல்லணியும் யமகம் என்ற சொல்லணியும் அமைந்தவையாகும்.

இந்நூலில் நூலின் புறமாக முற்பகுதியில் சிறப்புப் பாயிரமாகச்[6] செய்யுள் ஒன்றும், காப்புச் செய்யுளாக ஒன்றும், நூலின் இறுதியில் தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும் ஆக 103 செய்யுட்கள்

---

6. இது வைணவ சம்பிரதாயத்தில் 'தனியன்' எனப் படும். நூலினுள் அடங்காது தனியே பாயிரமாய் நிற்றல் பற்றியது அப்பெயர். 'அன்' விகுதி உயர்வுப் பொருளது.

உள்ளன. தான் திருவேங்கடமுடையான்மீது பாடப் போகும் அந்தாதிப் பிரபந்தம் யாதொரு குற்றமும் இன்றி அமைவதற்குத் திருவருள் புரியுமாறு ஆழ்வார் களின் தலைவராகிய நம்மாழ்வாரை வேண்டுகின்றார் ஆசிரியர்.

"நல்ல வந்தாதி திருவேங்
கடவற்கு நான்விளம்பச்
சொல்ல வந்தாதின் வழுபொருட்
சோர்வறச் சொல்வித்தருள்;
பல்ல வந்தாதிசை வண்டார்
குருகைப் பரசமயம்
வெல்ல வந்தாதி மறைதமி
ழாற்செய்த வித்தகனே.[7]"

[விளம்ப - சொல்ல; சொல்அவம் - சொற்குற்றம்; தாதின் வழு - வினைப்பகுதிகளின் குற்றம்; பொருள் சோர்வு - பொருள் குற்றம்; அற - சிறிதுமின்றி; பல் லவம் - தளிர்; தாது - பூந்துகள்; குருகை - குருகூர்; ஆதிமறை - வடமொழி வேதம்.]

சொற்குற்றம் பொருட்குற்றமின்றிக் கவிபாடும் திறனைத் தனக்கு அருளுமாறு ஆசிரியர் ஆழ்வாரை வேண்டுவதைப் பாடலில் காணலாம்.

இந்த நூலில் பாதவகுப்பு, ஊர் போன்ற புறப் பொருள் துறைகளும், இரங்கல், தூது, அறத்தொடு நிற்றல், வெறி விலக்குப் போன்ற அகப்பொருள் துறை களும் அமைந்துள்ளன. சொல்லணிகளும் பொருளணி களும் செய்யுட்களுக்குப் பொலிவினைத் தருகின்றன. வைணவ தத்துவக்கருத்துகள் ஆங்காங்குக் காணப்பெறு கின்றன. எம்பெருமானின் திருக்குணங்களும் வெற்றிச்

---

7. காப்பு.

செயல்களும் நூல்முழுவதும் பரவி நின்று படிப்போரைப் பக்திச்சுவையில் திளைக்க வைக்கின்றன. முத்தி நெறிகளுள் சிறந்ததாகப் போற்றப்பெறும் சரணாகதித் தத்துவம் பல இடங்களில் வற்புறுத்தப் பெறுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆழ்வார்களின் வாக்குச் சாயல்களும் பக்தியநுபவமும் திவ்விய கவியின் திருப் பாசுரங்களில் அமைந்து கிடப்பதை நாம் கண்டு மகிழலாம். மிடுக்கு நடையால் அமைந்த பாடல்களில் தமிழின் குழைவு நெளிந்தோடுவதைப் பாடல்களைப் பன்முறைப் படித்துச் சுவைப்போர் அநுபவித்துக் களிக்கலாம். இனி, இவற்றை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கத் தலைப்படுகின்றேன்.

பிரபந்தத் தலைவனது திருவடிகளின் சிறப்புகளைக் கூறுவது 'பாதவகுப்பு' என்ற துறையாகும். 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்'[8] என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கொப்பச் சரணமடைகின்ற உயிர்கட்கெல்லாம் உய்யத் துணையாயிருப்பது எம்பெருமானின் திருவடியாகும்.

> "சேஷி பக்கல் சேஷபூதனிழியுந் துறை, ப்ரஜை
> முலையிலே வாய் வைக்குமாப் போலே"[9]
>
> [சேஷி - இறைவர்; சேஷபூதன்-சீவான்மா; ப்ரஜை-குழந்தை.]

என்ற முமுட்சுப்படி வாக்கியமும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. பாலுண்ணும் பச்சைப் பசுங்குழவி எங்ஙனம் அன்னையின் அவயவங்கள் யாவையும் விட்டு, தான் உயிர் வாழ்வதற்கிடனாய் உள்ள அவள் கொங்கையிலே வாய்

8. குறள்-10
9. முமுட்சுப் படி-நூற்பா-147

வைக்கின்றதோ, அங்ஙனமே சேஷியாகின்ற ஈசுவரனைப் பற்றப் புகும் சேஷபூதனும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டுத் தான் உய்வதற்கு இடமாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான் என்பது மேற்குறிப்பிட்ட வாக்கியத்தின் பொருளாகும். குழந்தை தாயின் முலையின் வாய்வைப்பது குழந்தையின் இயல்பாக இருப்பதுபோலவே, இறைவன் திருவடிகளில் இழிவது சேதநனின் தன்மைக்கு இயல்பாக அமைந்திருக்கும் என்பது சிந்தித்து அறியத்தக்கது.

இக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு 'பாத வகுப்பு' என்னும் துறை எழுந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

> "திருவேங் கடத்து நிலைபெற்று
> நின்றன சிற்றன்னையால்
> திருவேங் கடத்துத் தரைமேல்
> நடந்தன தாழ்பிறப்பின்
> உருவேங் கடத்துக் குளத்தே
> யிருந்தன; வுற்றழைக்க
> வருவேங் கடத்தும் பியஞ்சலென்
> றேடினம் மால்கழலே."[10]

[சிற்றன்னை - கைகேயி; தருவேம் - மரங்கள் வேகப் பெறும்; கடத்து - கடுஞ்சுரத்திலுள்ள; தாழ்பிறப்பு - இழிந்த பிறப்பு; உருவேங்கள் - வடிவத்தையுடைய எங்களது; தத்துக்கு - ஆபத்தை நீக்குதற்பொருட்டு; உற்று - துன்பமுற்று; கடம் - மதத்தையுடைய; தும்பி- யானை; மால் - திருமால்; கழல் - திருவடிகள்.]

என்ற பாடலில் திருவடியின் ஏற்றத்தை நூலின் தொடக்கத்தில் எடுத்துக் கூறினர் ஆசிரியர். இதில்

---

10. பாடல்-1

பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற இறைவனின் ஐந்து நிலைகளில் நான்கு நிலைகள் கூறப்பெற்றிருத்தல் கண்டு மகிழத் தக்கது. 'திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன' என்றதில் அர்ச்சாவதாரம் கூறப்பெற்றிருத்தலைக் காணலாம்; எம் பெருமான் விக்கிரகத்தில் ஆவிர்ப்பவித்திருத்தலையும் உணர்த்துகின்றது. 'சிற்றன்னையால் தருவேம் கடத்துத் தரைமேல் நடந்தன' என்றது, விபவத்தை; அதாவது அவதாரத்தை. 'தாழ்பிறப்பினுருவேங்கள் தத்துக்கு உளத்தே இருந்தன' என்றது, அந்தர்யாமித்துவத்தை; அது நிலைத்திணை இயங்குதிணைப் பொருள்கள் எல்லாவற்றிலும் எள்ளினுள் எண்ணெய் போல் மறைந்து இருத்தலையும், அடியார்கள் உள்ளத்தில் வீற்றிருத்தலையும் குறிக்கின்றது. 'உற்று அழைக்க வரும் கடத்தும்பி அஞ்சல் என்று ஓடின மால் கழல்' என்பது பரத்துவத்துடன் சௌலப்பியத்துவத்தையும் காட்டுகின்றது. பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையே பரத்துவம் என்பது; அந்த நிலையிலுள்ள எம்பெருமானையே யானை அரசு 'ஆதிமூலமே!' என்று கூவி ஓலமிட்டது. எம்பெருமானும் தன் பரத்துவ நிலையை மறந்து தனது பேரருளினால் அரைகுலையத் தலைகுலைய யானை இருந்த மடுக்கரைக்கே வந்து உதவினன். இந்த சௌலப்பிய மகாகுணத்தில் ஈடுபட்டே மேற்கூறியவாறு உணர்த்தினார் ஆசிரியர். எம்பெருமானின் வியூக நிலையை இன்னொரு பாடலில் காட்டுவேன்.

அன்பர்களே, இப்பொழுது கூறப்போகும் பாடல் அகப் பொருள் துறையைக் கொண்டது. தலைவனைப் பிரிந்து வருந்தி மாலைப் பொழுதுக்கும் அன்றிற் குரலுக்கும் ஆற்றாத தலைவியின் நிலையைக் கண்டு தோழி இரங்குவதாக அமைந்தது இப்பாடல்.

"பொருதரங் கத்தும் வடத்தும்
அனந்தபுரத் துமன்பர்
கருதரங் கத்துந்துயில் வேங்கடவ!
கண்பார்த் தருள்வாய்
நிருதரங் கத்து நிறம்போல்
வரும்அந்தி நேரத்தன்றில்
ஒருதரங் கத்தும் பொழுதும்
பொருள்என் ஒருவல்லியே.[11]"

[தரங்கம் - அலை; பொருதரங்கம்-திருப்பாற் கடல்; வடம்-ஆலிலை; அன்பர் கருதும் அரங்கம்-திருவரங்கம்; நிருதர் அங்கம்-அரக்கர் உடல்; அந்திநேரம் - மாலைக் காலம்; ஒருதரம் - ஒருமுறை; ஒருவல்லி - தனித்த பூங்கொடி போன்றவள்.]

என்ற பாசுரத்தில் தலைவியின் நிலையைப் பேசுகின்றாள் தோழி. திருப்பாற்கடல், ஆலிலை, திருவனந்தபுரம், திருவரங்கம் இந்த நான்கு இடங்களிலும் திருவேங்கடவனே கண்வளர்கின்றான். இரவும் பகலும் ஓயாது ஒழியாது, பக்தர்கட்கு நின்ற நிலையிலேயே 'பேட்டி' அளித்துச் சோர்வுற்ற எம்பெருமான் இந்த இடங்களில் சற்று ஓய்வு கொள்ளுகின்றான் போலும்! இதுவும் அறிதுயிலேயன்றி ஆழ்ந்த உறக்கம் அன்று. அரக்கர் நிறம் போல் கறுத்துப் பயங்கரமாய் வருகின்ற அந்திமாலையில் அன்றில் பறவை ஒருதரம் கத்துகின்ற பொழுதேனும் தலைவி தலைவனின் பிரிவைப் பொறுக்க முடியாதவளாக இருப்பதாகத் தோழி கூறுகின்றாள். அவள்மீது எம்பெருமானின் (தலைவனின்) திருக்கண் நோக்கையும் வேண்டி நிற்கின்றாள். முன்பொழிவில் அகப்பொருள் துறைகள் ஆழ்வார் பாசுரங்களில் அமைந்த அருமைப் பாட்டையும் தத்துவத்தையும் விளக்கினேன். அவற்றை

11. பாடல்-9

ஈண்டுச் சிந்திக்க வேண்டுகின்றேன். இதில் திருப்பாற்கடலில் இறைவன் நிலையைக் கூறியிருப்பது வியூக நிலையாகும். "கவலையின்றிப் பலவிடத்தும் கண்ணுறங்குகின்ற நீ இவ்விளமகள் துயில்பெறுது வருந்துதலை மாற்ற வேண்டாவோ?" என்ற குறிப்பு முதல் இரண்டு அடிகளில் தொனிக்கின்றதைக் கண்டு மகிழ்க.

இனி, புறத்துறை அமைந்த ஒரு பாசுரத்தைக் காட்டுவேன்.

"மாலை மதிக்குஞ்சி ஈசனும்
போதனும் வாசவனும்
நூலை மதிக்கும் முனிவரும்
தேவரும் நோக்கியந்தி
காலை மதிக்குள் வைத்தேத்தும்
திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமான்
உறைதிரு வேங்கடமே.[12]"

[மதி - பிறைச்சந்திரன்; குஞ்சி - தலைமயிர்; ஈசன் - சிவன் போதன் - நான்முகன்; வாசவன் - இந்திரன்; அந்தி - மாலை; மதி - அறிவு; கைமலை - கையாகிய மலை.]

இதில் ஊர் அல்லது பதி எனப்படும் புறத்துறை அமைந்துள்ளதைக் காண்க. பிரபந்தத் தலைவன் வாழிடம் இன்ன சிறப்புடையது என்ற வாய்பாடு பொருந்தக் கூறுதல் இப் பிரபந்தத்துறையின் இலக்கணமாகும். சிவபெருமானும் நான்முகனும் தேவேந்திரனும் முனிவர்களும் காலையிலும் மாலையிலும் தம் மனத்தில் வைத்துப் போற்றுகின்ற சிறந்த மலை எதுவென்றால், மலைபோன்ற இரண்டு கைகளாலும் திருப்பாற்கடலைக் கடைந்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவேங்

12. பாடல்-2

கடமாகும். இங்ஙனம் சிறப்புடைய மலையாதல் பற்றி அது தண்டமிழில் திருமலை என்றும், வடமொழியில் 'ஸ்ரீசைலம்' என்றும் வழங்கி வருகின்றது.

இத்துறை அமைந்த இன்னொரு பாடலும் கற்போருக்குக் களி விருந்தாக அமைகின்றது.

"புண்ணி யம்காமம் பொருள்வீடு
பூதலத்தோர்க் களிப்பான்
எண்ணி யங்காமன் திருத்தாதை
நிற்கும்இடம் என்பரால்
நண்ணி அங்குஆம் அன்பரைக்
கலங்காத் திருநாட்டிருத்தி
மண்ணி யங்காமல் பிறப்பறுத்
தாளும் வடமலையே."[13]

[புண்ணியம் - அறம்; காமன் - மன்மதன்; நண்ணி- விரும்பி; திருநாடு - பரமபதம்; அறுத்து - ஒழித்து.]

தன்னிடத்து வந்து சேரும் அடியார்களின் பிறப்பை யொழித்துப் பரமபதத்தில் சேர்ப்பிக்கும் திருமலையே அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் இவ்வுலகத்தினர்க்கு அளிக்கும் நினைவால் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகும். 'திருவேங்கடமாமலை, ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே"[14] என்ற ஆழ்வாரின் அருளிச் செயல் ஈண்டு நினைக்கத்தக்கது.

எம்பெருமான் 108 திவ்விய தேசங்களில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளிப் பக்தர்கட்குச் சேவை சாதிப்பதாகக் கருதும் வைணவ மரபு ஒன்று உண்டு. பயிர்த்

13. பாசுரம்-38.
14. திருவாய்-3.3;8

தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் பெரும்பாலும் பயிர்த் தலையிலேயே சிறு குடில் அமைத்து, அதில் குடியிருந்து கொண்டு, அப்பயிரைத் தம் உயிர்போல் பாதுகாப்பது போலவே, திருமகள் கேள்வனுன பரமபதநாதனும் தனக்கு அடிமை செய்து உய்வதற்காகவே பிறவி எடுத்த ஆன்மாக்களையெல்லாம் ஆட்கொண்டு உய்விக்கும் பொருட்டுப் பெருங்கருணையால் இந்நில உலகில் 108 திவ்வியதேசங்களிலும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து ஆன்மாக்களை உய்விக்கின்முன். இங்ஙனம் ஆன்மப்பயிர்களைப் புரக்கும் எம்பெருமானுக்குப் 'பக்தி உழவன்' என்று திருநாமம் இட்டு மகிழ்வர் பக்திசாரர் என்ற திருமழிசைப்பிரான்.

> "வித்தும் இடவேண்டும்
> கொல்லோ விடைஅடர்த்த
> பக்தி உழவன்
> பழம்பு னத்து"[15]

[விடை - காளை; அடர்த்த - அடக்கின]

என்று கூறுவதைக் காண்மின். இந்த 108 திவ்விய தேசங்களில் பதினேழு திவ்வியதேசங்களை யாதொரு அடைமொழியுமின்றி ஒரு பாசுரத்தில் அடக்கி வைத்துள்ள அழகினைக் கண்டு மகிழலாம்.

> "அரங்கங் குடந்தை குருகூர்
> குறுங்குடி அட்டபுய
> கரம்கண்ண மங்கை நறையூர்கடன்
> மல்லைகச்சி கண்ண
> புரம்கண்டி யூர்தஞ்சை மாலிருஞ்
> சோலைபுல் லாணிமெய்யம்

---

15. நான்முகன் திருவந்-27

தரங்கம் பரமபதம் வேங்க
டேசர்க்குத் தானங்களே.”[16]
[தானங்கள் - இடங்கள்]

இதில் சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் சேர்ந்தவை திருவரங்கம்,திருக்குடந்தை, திருக்கண்ணமங்கை, திருநறையூர், திருக்கண்ணபுரம், திருக்கண்டியூர்; திருத்தஞ்சை என்பனவும்; பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் சேர்ந்தவை திருக்குறுகூர், திருக்குறுங்குடி, திருமாலிருஞ்சோலைமலை, திருப்புல்லாணி, திருமெய்யம் என்பனவும்; தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டில் சேர்ந்தவை திருவட்டபுயகரம், திருக்கடன்மல்லை, திருக்கச்சி என்பனவும்; வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டில் சேர்ந்தவை திருப்பாற்கடல், திருநாடு என்பனவுமாகப் பதினேழு திருப்பதிகள் கூறப்பெற்றிருத்தல் கண்டு மகிழத்தக்கது.

அய்யங்கார் அவர்களின் அகத்துறை அமைந்த இன்னொரு பாசுரத்தில் ஆழங்கால் படுவோம். இது 'தலைவி செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல்' என்னும் துறையின்பாற் பட்டது.

“உண்டமருந் துகைக்கும் அன்னைமீர்
மதனோ ரைந்தம்பும்
கொண்டமருந் துகைக்குக் குறுகாமுனம்
கொவ்வைச் செவ்வாய்
அண்டமருந் துகைக்கும் திறந்தான்
அப்பன்போற் பரியும்
எண்தமருந் துகைக்கும் பொடிகாப்
பிடுமின் என்தனக்கே.[17]”

---

16. பாடல்-56
17. பாடல்-51

[மருந்து - அமிர்தம்; கைக்கும் - கசக்கும்; மதன் - மன்மதன்; அமர் - போர்; உந்துகைக்கு - நெருங்குவதற்கு; அண்டம் - வெண்ணெய், அண்டகோளங்கள்; திறந்தான் - பிறந்தவன்; அப்பன் - திருவேங்கடமுடையான்; பரியும் - அன்பு கொள்ளும்; எண்தமர்-மதிக்கத் தக்க அடியார்கள்; துகைக்கும் - மிதிக்கின்ற; பொடி - திருவடிப் புழுதி.]

என்பது பாசுரம். திருவேங்கட முடையானாகிய தலைவனைக் களவொழுக்கத்தால் கூடிப் பிரிகின்றாள் தலைவி (சீவான்மா). அஃதாவது, எம்பெருமான் அய்யங்காருக்கு ஒருகால் காட்சி கொடுத்து மறைகின்றான். அதனால் தலைவி பலவாறு நோவுபடுகின்றாள். அத் துயரம் மாத்திரத்தையே கண்ட செவிலித்தாயர் அந் நோயின் காரணமும் அதனைப் போக்கும் முறையும் இன்னதெனை உணராது வேறுவகையாக ஆராய்ந்து பொருத்தமற்ற முறையை மேற்கொள்ளத் தொடங்குகின்றனர். நோய் ஒன்றும் மருந்தொன்றுமாதலால் அந்நோய் தீராது வளர்ந்தது. அதனை ஆற்ற மாட்டாத தலைவி நாணம் துறந்து தானே தனது நோயினையும், நோயின் காரணத்தையும் அந்நோய் தீர்க்கும் மருந்தையும், அம்மருந்தைத் தரும் முறையினையும் உணர்த்துகின்றாள்.[18] திருவேங்கட முடையானின் அடியார்களின் திருவடிப் புழுதியைக் காப்பாக இடுமாறு கூறுகின்றாள் தலைவி. இதனால் தலைவியின் களவைத் தந்தை முதலியோர் படிப்படியாக அறிந்து அத்தலைவனுக்கே தன்னை மணம் செய்துவைப்பர். இப்பாசுரம்,

---

18. தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலும், தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றலும்ம முறை; இலக்கண மரபு.அது முறை மாறியுள்ளது இங்கு.

"மணியின் அணிநிற மாயன்தமர்
அடிநீறு கொண்டு
அணிய முயலின் மற்றில்லை
கண்டீர்இவ் அணங்குக்கே."[19]

[மணி - நீலமணி; மாயன்தமர் - திருமாலடியார்.]

என்ற திருவாய் மொழிப் பாசுரத்தின் பகுதியை அடியொட்டி எழுந்ததாகக் கருதலாம்.

## தத்து வக்கருத்துகள் :

அன்பர்களே, மேலே ஒரு சில வைணவ சமயத் தத்துவக் கருத்துகள் அமைந்த பாசுரங்களைக் காட்டினேன். இன்னும் ஒரு சிலவற்றைக் காட்டுவேன். எம்பெருமானது திருமார்பில் 'ஸ்ரீவத்ஸம்' என்னும் மறுவும் பெரிய பிராட்டியாரும் இருப்பதாகக் கருதுவர் வைணவர்கள். அடியார்களின் பிழைகளைப் பாராட்டாமல் பொறுத்து அவர்களை ஆட்கொண்டருளுதற்குப் புருஷகாரமாக (பரிந்துரைப்பவளாக) 'அகலகில்லேன் இறையும்' என்று இருப்பவள் எம்பெருமாட்டி. ஆகவே, தன்னைச் சரணமடைந்தவர்கள் எத்தகையவராயினும் அவர்களை விலக்காமல் அனைவரையும் இனிது வாழுமாறு கருணை புரிவான் என்று நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் வைணவர்கள்[20]. திவ்விய கவியும் இதனை நினைவில் கொண்டே,

"கண்ணனையேன் நெஞ்சுருகேன் அவைகொண்(டு)என்
கண்ணும் நெஞ்சும்
புண்அனையேன் கல்லனையேன் என்றாலும்
பொற்பூங் கமலத்

---

19. திருவாய். 4.6:6.
20. பாடல்-86

தண்அனேயே நல்ல சார்வாக
வேங்கடஞ் சார்ந்துமணி
வண்ணனேயே யடைந்தேற்கு இல்லையோ
தொல்லை வைகுந்தமே.''[21]

[அவை - கண்நனையாமை, நெஞ்சுருகாமை; தண் அனேயே ; தண்ணளியையுடைய தாயான பெரிய பிராட்டியாரையே; சார்வாக - துணையாக; தொல்லை - அநாதியான.]

என்று தன் நிலையை விளக்கித் தனக்கும் வைகுந்தப் பதவி கிடைப்பது உறுதி என்பதைப் புலப்படுத்துவர்.

சீவான்மாக்கள் அவரவர் வினைவயத்தால் தேவர்கள், விலங்குகள், மனிதர்கள், தாவரங்கள் போன்ற வடிவாகப் பிறப்பார்கள் என்பதும், எம்பெருமானுகிய பரமான்மா அங்ஙனமின்றித் தன் இச்சை காரணமாக நல்லோரை ஆட்கொள்ளும் பொருட்டும் அல்லோரை அழித்தற் பொருட்டும் அறத்தை நிலைநாட்டும் பொருட்டும் மச்சம், கூர்மம் முதலிய அவதாரங்கள் செய்கின்முன் என்பதும் வைணவர்களின் நம்பிக்கைகள்[22]. சித்து, அசித்து, ஈசுவரன் என்ற தத்துவம் மூன்றில், சித்து எனப்படும் சீவான்மா ஈசுவரன் என்ற பரமான்மாவுக்கு எப்பொழுதும் அடிமையாகவும்; எம்பெருமானுகிய பரமான்மா சீவான்மாவுக்குத் தலைவனுகவும் இருப்பதாகக் கருதுவதும் வைணவ தத்துவமாகும். இக்கருத்தினை நினைவில் கொண்டு திவ்வியகவி; கூறுவதைக் காண்போம்.

''தானவ னுகம ருப்பொசித்
தானுக்குத் தானுகந்த

21. பாடல். -46
22. பாடல். -87

தானவ னாக முடியினின்
றானுக்குத் தாள்வணங்காத்
தானவ னாக மிடந்தானுக்(கு)
ஆள்என்று தன்னையெண்ணாத்
தானவனாக நினைந்திருப்
பாற்கென்றுந் தானவனே.''[23]

[தானவனாக = தானம் + அல் + நாகம் - மதத்தை யுடைய இருள் போன்ற யானை; மருப்பு-கொம்பு; ஒசித்தல்-ஒடித்தல்; தான் உகந்தது ஆன-தான்விரும்பிய இடமான; வனாக = வல் + நாகம் - வலிய மலையான வேங்கடம்; முடி-சிகரம்; தாள்-திருவடி; தானவன் - இரணியன்; ஆகம்-மார்பு; இடந்தான்-பிளந்தான்; ஆள்-அடிமை; தான் அவனாக - (சீவான் மாவாகிய) தானே அப்பரமான்வாக; என்றும் - எப்பொழுதும்; தான்-பெருமான்; அவனே-பயன் படாதவன். அவம் - பயனின்மை.]

தான் அவனாக நினைத்திருக்கும் சீவான்மாவுக்குப் பரமான்மா அந்நினைப்பிற்கு ஏற்பத் தான் அவனே (பயன்படாதவன்) ஆவன் என ஒரு சமத்காரம் தோன்றக் கூறிய திவ்விய கவியின் திறனைப் பாடலில் காணலாம். இறுதியிலுள்ள அவன் என்பதை இருவகைப் பொருள்பட வைத்த நயம் இங்குக் கருதி மகிழத் தக்கது.

ஐம்பொறிகளின் தன்மையை எடுத்துக்காட்டுகளால் விளக்கியிருக்கும் பெருந்திறன் பாராட்டி மகிழத்தக்கது. முதலில் பாசுரத்தில் ஆழங்கால் படுவோம்.

''சிறக்கும் பதந்தரு வார்திரு
வேங்கடச் செல்வர்செய்ய

23. பாடல்.-57

நிறக்கும் பதந்தொழு துய்ய
எண்ணீர் நெறியிற்பிழைத்து
மறக்கும்ப தந்தியும் சேலும்
அசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்க மும்போல்
ஐவராற் கொடும் பாதகரே."[24]

[பதம்-பரமபதம்; செய்ய-சிவந்த; நிறக்கும்-நிறம் அமைந்த; பதம்-திருவடி; உய்ய-ஈடேற; எண்ணீர் -நினையுங்கள்; மதம்-கோபக் குணம்; கும்பம்-மத்தகம்; தந்தி-யானை; சேல்-மீன்; அசுணம்-ஒருவகைப் பறவை; பதங்கம்-விட்டில்.]

இதில் ஐம்புலன்களின் ஆசையால் கெடுவதற்கு யானை, மீன், அசுணம், வண்டு, விட்டில் ஆகிய ஐந்து பிராணி கள் உவமைகூறப்பெற்றுள்ளன. யானை ஊற்றுணர்ச்சியால் அழியும். எங்ஙனம் என்பதை விளக்குவேன். யானையைப் பிடிக்கும் வேடர்கள் காட்டில் ஒரு பள்ளம் பறித்து அதன் ஒரு புறத்தில் ஒரு பெண் யானையை நிறுத்திக் குழியைத் தழை முதலியவற்றால் மறைப்பர். மறுபுறத் தில் ஆண்யானை பெண்யானையைக் கூடும் விருப்பால் ஓடி வருகையில் குழியில் வீழ்ந்து மேலேற மாட்டாது அகப் பட்டுக் கொள்ளும். பிறகு அதனைத் தந்திரமாக விலங் கிட்டு மேலேற்றித் தம் வசப்படுத்திக் கொள்வர் எயினர் கள். மீன் சுவையால் அழியும். எங்ஙனம் என்பதைக் கூறு வேன். தூண்டிலில் வைக்கப்பெற்றுள்ள தசையை உண்ணவேண்டும் என்ற அவாவினால் மீன் விரைந்து வந்து அதில் வாயினை வைத்து அம்முள்ளில் மாட்டிக் கொள்ளும். மீளமாட்டாத மீனை வலைஞர் எடுத்துத் தம் கூடையில் போட்டுக் கொள்வர். இங்கு மீன் வாய் (நாக்கு) என்னும் பொறிக்குரிய சுவையின்பத்தின்

24. பாடல்-27

ஆசையால் அழிந்தது. அசுணம் ஒலியால் அழியும். இஃது எங்ஙனம் எனில் கூறுவேன். அசுணம் இசையறி குறிஞ்சி நிலப் பிராணி. இதனைப் பிடிக்க விரும்பும் குறவர்கள் நிலவு காயும் மாலைப் பொழுதில் வேய்ங்குழல் முதலிய வற்றால் இன்னிசையை எழுப்புவர். அந்த இசையைச் செவிமடுத்துக் களிப்படைய விரும்பிய பறவைகள் அவ் வின்னிசையைச் செவியிலேற்றுத் தம்மை மறந்த நிலையி லிருக்கும்பொழுது அக்குறவர்கள் பறையோசையை முழக்குவர். அவ்வல்லோசையைக் கேட்டவுடன் அப் பறவைகள் இறந்துபடும். அவற்றை அவர்கள் எடுத்துச் செல்வர். இது செவி என்னும் பொறிக்குரிய ஒலியின்பத் தின் ஆசையால் அழிந்தது. வண்டு மணத்தால் அழியும். வண்டுகள் மலர்களின் நறுமணத்தை அவாவித் தாமரை முதலிய பெருமலர்களில் வந்து தங்கும். அம்மலர்கள் குவிந்து கொள்ளுங்கால் வண்டுகள் மலர்களில் அகப் பட்டுத் தவிக்கும். அன்றியும், சண்பகமலரின் நறுமணத் தையும் அதன் நறுந்தேனையும் நுகரும் விருப்பால் அதனை அணுகி மொய்த்து அம்மலரின் வெப்பம் தாங்க முடியாமல் இறந்துபடும். மற்றும், நறுமண விருப்பினால் தேனில் மொய்த்து அதனை மிகுதியாக உண்டு மயங்கி மீளமாட்டாது சிக்கி அழிதலும் உண்டு. இது மூக்கு என்னும் பொறிக்குரிய நாற்றவின்பத்தின் ஆசையால் அழிந்தது. விட்டில் ஒளியால் அழியும். இதனையும் விளக்கு வேன். விட்டில் பூச்சி விளக்கொளியைக் கண்டவுடன் அதனிடத்து அவாவோடு ஓடிவந்து விழுந்து இறந்து படும். இது கண்ணென்னும் பொறிக்கு உரிய ஒளியின் ஆசையால் அழிந்தது. ஆயின், மனிதன் ஐம்புலன்களை யும் ஒருசேர நுகரத் தொடங்கி அழிந்து படுகின்றான். இங்ஙனம் ஐந்து புலன்களால் மக்கள் அழிந்துபடுவதைக் கூறுகின்றார் திவ்விய கவி.

இன்னொரு பாசுரத்தில் ஐம்பொறிகளின் கொடுமையையும் தன்னுடைய அநந்யகதித்துவத்தையும்[25] வெளியிடுகின்றார் அய்யங்கார்.

"கருத்தா தரிக்கும் அடியேனைத்
தள்ளக் கருதிக்கொலோ
திருத்தா தரிக்கும் ஐவர்க்கிரை
ஆக்கினை செண்பகத்தின்
மருத்தா தரிக்கும் அருவிஅரு
வடவேங் கடத்துள்
ஒருத்தா! தரிக்கும்படி எங்ஙனே
இனியுன்னை விட்டே."[26]

[கருத்து-மனத்தில்; ஆதரித்தல்-விரும்புதல்; கருதி-எண்ணி; திருத்தாது-சீர்திருத்தாமல்; அரிக்கும் - கெடுக்கும்; ஐவர்-ஐம்பொறிகள்; மரு-மணம்; தாது-மகரந்தப் பொடி; அரிக்கும்-அரித்துக் கொண்டு வரும்; அரு-நீங்காத; ஒருத்தா-ஒப்பற்ற கடவுளே; தரிக்கும்படி-உய்யும் வகை.]

என்ற பாடலில் 'உன்னைவிட்டு உய்யும் வகை எவ்வாறோ?' என்று தன் பரிதாப நிலையை ஆசிரியர் புலப்படுத்துவதைக் கண்டு மகிழ்க.

## திருவேங்கடமுடையானின் பெருமை :

அன்பர்களே, இந்த நூலில் திருவேங்கட முடையானின் பெருமையும் பல பாடல்களில் நுவலப் பெறுகின்றது. ஒன்றிரண்டு இடங்களை இப்பொழுது காண்போம்.

---

25. அநந்ய கதித்துவம் - இறைவனையன்றி வேறொரு இரட்சகனையின்றி யிருக்கும் நிலை.

26. பாடல்-41

"சித்திக்கு வித்ததுவோ இதுவோவென்று
தேடிப் பொய்ந்நூல்
கத்திக்கு வித்தபல் புத்தகத்தீர்!
கட்டுரைக்க வம்மின்
அத்திக்கு வித்தனையும் உண்ட
வேங்கடத் தச்சுதனே
முத்திக்கு வித்தக னென்றே
சுருதி முறையிடுமோ."[27]

[சித்திக்கு-வீடு பேற்றுக்கு; வித்து-மூலம்; பொய்ந் நூல்-பர சமய நூல்; கத்தி-கதறிப் படித்து; கட்டுரைக்க -உறுதியாகச் சொல்ல; அத்தி-நீர்; கு-சூழ்ந்த; சுருதி-வேதம்.]

*வீடுபேற்றினை அளிக்கவல்லவன் திருமலையில் எழுந்தருளி யிருக்கும் திருமாலே என்று வேதங்கள் வற்புறுத்திக் கூறும் என்பதனை உறுதியாகக் கூறுவர் திவ்வியகவி. பிற சமயநூல்களில் ஆழங்கால்பட்டு முத்திக்குரிய மூலப் பொருளை இன்னதென அறியாது மயங்குபவர்களை நோக்கிக் கூறும் பாசுரம் இது.*

"பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்தன்று
உடனே விழுங்கி,
கரந்து உமிழ்ந்து கடந்துஇடந்தது
கண்டும் தெளியகில்லீர்;
சிரங்களால் அமரர் வணங்கும்
திருக்குரு கூர்அதனுள்
பரன்திறம் அன்றிப்பல் உலகீர்தெய்வம்
மற்றுஇல்லை பேசுமினே."[28]

[கரந்து-மறைத்து; பரன் - மேலானவன்]

27. பாடல்-33
28. திருவாய்-4.10 ; 3

என்றுற்போன்ற பாசுரங்களின் வாய்பாட்டைக் கொண்டது இப்பாசுரம். இங்ஙனம் ஆழ்வார்களின் பாசுரங்கள் திவ்வியகவியின் வாக்கில் செல்வாக்குப் பெற்ற இடங்கள் எண்ணற்றவை.

இன்னொரு பாசுரத்தில் முத்தியை விரும்புவோரைத் திருவேங்கடமுடையானின் திருவடிகளைத் தரிசிக்க வருமாறு கூவி அழைக்கின்றார் ஆசிரியர்.

"உடுக்கும் உடைக்கும் உணவுக்கு
மேயுழல்வீர்! இனிநீர்
எடுக்கும் முடைக்கு ரம்பைக்
கென்செய்வீர்? இழிமும்மதமும்
மிடுக்கும் உடைக்குஞ்சரம் தொட்டவேங்
கடவெற்பர் அண்ட
அடுக்கும் உடைக்கும் அவரடி
காண்மின் அனைவருமே."[29]

[உழல்வீர்-அலைகின்றவர்களே; முடைக் குரம்பை-நாற்ற உடம்பு; இழி-ஒழுகுகின்ற; மிடுக்கு-வலிமை; குஞ்சரம்-யானை; அண்டம் அடுக்கு-அண்ட கோளங்களின் வரிசை.]

எம்பெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தால் முத்தி பெறுவது உறுதி என்பது குறிப்பாக உணர்த்தப் பெறுகின்றது இப் பாசுரத்தில். திருவேங்கடமுடையானைத் துதிக்க வல்லவர்கட்கு எவ்விதத்துன்பங்களும் உளவாகா என்று வேறொரு பாடலிலும் புலப்படுத்துகின்றார்.[30]

திருவேங்கட முடையானை வணங்கியவர்கள் அதன் பயனாக மறுமையில் பெறும் பயன்களை இவ்வாறு வரிசைப்படுத்திக் கூறுகின்றார் அய்யங்கார்.

---

29. பாடல்-35
30. பாடல்-94

"ஏறுக டாவுவர் அன்னங்க
டாவுவர் ஈரிருகோட்(டு)
ஊறுக டாம்மழை ஓங்கல்
கடாவுவர்."[31]

[ஏறு-காளை; ஈர் இரு கோடு-நான்கு தந்தங்கள்; கடாம்-மதநீர்; ஓங்கல்-மலைபோன்ற ஐராவதம்.]

இதில் உருத்திரபதவி, பிரம்மபதவி, இந்திரபதவிகள் பெறுவதாகக் கூறப்படுவதைக் காண்க. திருவேங்கடமுடையானின் திருநாமங்கள் என்னென்ன தரும் என்பதனை இன்னொரு பாசுரத்திலும் குறிப்பிடுகின்றார்.

"துன்பம் களையும் சனனம்
களையும் தொலைவறுபேர்
இன்பம் களையும் கதிகளையும்
தரும்."[32]

[துன்பம் - கிலேசம்; சனனம் - பிறப்பு; களையும்-அழிக்கும்; தொலைவு அறு-முடிவு இல்லாத; கதிகள்-பதவிகள்.]

இதில் எம்பெருமானின் திருநாமங்களின் மகிமை பரக்கப் பேசப்பெறுவதைக் காண்க.

## ஆழ்வார் பாடல்களின் செல்வாக்கு :

அன்பர்களே, நம் திவ்வியகவி ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆழங்கால் பட்டு மகிழ்ந்தவர்; அவற்றின் பக்திச் சுவையில் திளைத்தவர். இதனால் இவற்றின் சாயல் இவர் பாசுரங்களிலும் தென்படுகின்றது. நாலாயிரத்தின் கருத்துகளும் சொற்றொடர்களும் அய்யங்கார் பாசுரங்களில் மிளிர்வதை எங்கும் காண

31. பாடல்-68
32. பாடல்-95

லாம். முன்னரே ஒன்றிரண்டு இடங்களைக் காட்டினேன். ஈண்டு மேலும் சில இடங்களைக் காட்டுவேன்.

"வேங்கட மாலைஅவியா மதிவிளக்
கேற்றி அங்கம்
ஆம்கடம் ஆலையம் ஆக்கிவைத்
தோமவன் சேவடிக்கே
தீங்குஅட மாலைக் கவிபுனைந்
தோமிதிற் சீரியதே
யாம்கடம் மால்ஐ ராவதம்
ஏறி யிருக்குமதே?"[33]

[அவியா-கெடாத; மதி-அறிவு; அங்கம்-உறுப்புகள்; கடம்-உடம்பு; தீங்கு-பிறவித் துன்பம்; கடம்-மத மயக்கம்.]

பேரின்பத்துக்கு இடமாகுமாறு எம்பெருமானைச் சிந்தையிற்கொண்டு தியானித்து அறிவு முழுவதையும் அவன் பக்கலிலே செலுத்தி அவனது சொரூபத்தை உணர்ந்து அவன்மீது பாமாலைபாடி அவனை வழிபடுதலைக் காட்டிலும், சிற்றின்பத்திற்கே இடமான தேவேந்திரபதவி சிறிதும் சிறவாது என்றுகூறி, பகவத் கைங்கரியத்தில் தம் ஊற்றத்தைப் புலப்படுத்துகின்றார் அய்யங்கார்.

இப்பாசுரத்தின் முதல் இரண்டு அடிகள்,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்."[34]

என்ற பூதத்தாழ்வார் பாடலையும்,

---

33. பாடல்-3
34. இரண்-திருவந்-1

"மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி"[35]
[மார்வம்-இதயம்]

என்ற பெரியாழ்வாரின் பாசுரப் பகுதியையும் அடிப் படையாகக் கொண்டு அமைந்தவையாகும்.

"அவன்சே வடிக்கே
தீங்குஅட மாலைக் கவிபுனைந்தோம்"

என்ற இப்பாசுரப்பகுதி,

"சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை"[36]

என்ற பொய்கையாழ்வார் வாக்கையும்,

"இருந்தமிழ் நல்மாலை இணையடிக்கே சொன்னேன்"[37]

"சொல்மாலை ஏத்தித் தொழுதேன்"[38]

என்ற பூதத்தாழ்வார் வாக்குகளையும்,

"மாதவனை, சொல்மாலை எப்பொழுதும் சூட்டு"[39]

"முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல்மாலை"[40]

என்ற நம்மாழ்வாரின் வாக்குகளையும்,

" கலிகன்றிச்
செஞ்சொலால் எடுத்த தெய்வநல் மாலை"[41]

என்ற திருமங்கையாழ்வாரின் வாக்குகளையும் அடி யொட்டி அமைந்தவையாகக் கருதலாம்.

---

35. பெரியாழ்-திரு. 4. 5: 3
36. முதல் திருவந்.1
37. இரண்-திருவந்.74
38 இரண்-திருவந்-85
39. பெரி. திருவந்-45.
40. திருவாய். 7-5 : 11
41. பெரிய திரு.1.1 ; 10

"தூர விரும்புண் டரிக்குமிக்
காயத்தைச் சூழ்பிணிகாள்!
நேர விரும்புண் டரர்க்கருள்
வானெடு வேங்கடத்தான்
ஈர விரும்புண் டரீகப்பொற்
பாதங்க ளென்னுயிரைத்
தீர விரும்புண் டநீராக்கு
மாறுள்ளம் சேர்ந்தனவே."[42]

[தூர-தொலைவில்; இரும்-இருங்கள்; புண்-தடை; காயம்-உடம்பு; பிணிகாள்-நோய்களே; புண்டரர்-திருமண் காப்புடையவர்; ஈரம் - குளிர்ச்சியான; இரும்-பெரிய; தீர - முழுவதும்; நீர் ஆக்கும் ஆறு - நீர் போலாக்கும்படி]

இதில் தான் இடைவிடாது எம்பெருமானது திருவடிகளைத் தியானம் செய்யத் தொடங்கி வினைகள் அனைத்தும் தொலையுமாறு அவன் கருணைக்கு இலக்காகி விட்டதாகவும், ஆதலால் வினைகளின் விளைவால் வருவன வான நோய்களால் ஒன்றும் நலிவு செய்ய முடியாது என்ற துணிவு கொண்டு நோய்களை விளித்து விரைந்தோடிப் போகுமாறும் அச்சுறுத்திப் பேசுகின்றார். இந்தப் பாசுரம்,

"நெய்க்குடத் தைப்பற்றி ஏறும்
எறும்புகள்போல் நிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்!
காலம் பெறஉய்யப் போமின்;
மெய்க்கொண்டு வந்து புக்கு
வேதப் பிரானார் கிடந்தார்;
பைக்கொண்ட பாம்பணை யோடும்
பண்டன்று பட்டினம் காப்பே."[43]

---

42. பாடல்-6 43. பெரியாழ் திரு. 5. 2;

[நிரந்து - பரவி; கைக் கொண்டு - வசப்படுத்திக் கொண்டு; காலம் பெற - விரைவாக; புக்கு – புகுந்து; வேதப்பிரானுர் - நான் முகனுக்கு மறையை உணர்த் தியவர்; பட்டினம் - பட்டினமாகிய ஆன்மா; பண்டு - பழைய நிலை; காப்பு - காக்கப் பெற்றது.]

என்பது முதலாகக் கூறும் பெரியாழ்வாரின் அருளிச் செயல்களை அடியொட்டியது.

தலைவனைப் பிரிந்த தலைவி கடலொடு புலம்புவதாக திருவேங்கடத்தந்தாதியில் ஒரு பாசுரம் பொய்கையாழ் வாரின் அருளிச்செயலை அடியொட்டியது. இரண்டை யும் அடியில் கண்டு ஒப்பு நோக்குவோம்.

"ஒருமா தவனி யொருமாது
செல்வி உடனுறைய
வருமா தவனின் மகுடம்
வில்வீச வடமலைமேல்
கருமா தவன்கண் ணனின்பாற்
றிருநெடுங் கண்வளர்கைக்
கருமா தவமென்ன செய்தாய்
பணியெனக் கம்புதியே."[44]

[அவனி-பூதேவி; செல்வி-சீதேவி; ஆதவன்-சூரியன்; வில் - ஒளி; கரு - கரிய; கண் வளர்தல் - உறங்குதல்; அரு மா தவம் - அரிய பெரிய தவம்; பணி - சொல்க; அம்புதி - கடல்.]

தலைவி இதில் அருகிலுள்ள கடலை முன்னிலைப் படுத்திக் "கடலே, திருமால் எப்பொழுதும் உன்னிடத்திலே பொருந்தி கண் வளர்தற்கு என்ன தவம் செய்தாய்? சொல்லுக" என்று இரங்கி வினவுகின்ருள்.

---

44. பாடல் - 10

[பற்றி-நிலேத்து; கலேபோய் - ஒளி மழுங்கப் பெற்று; வெளுத்து - நிறம் மாறி; வற்றி - தேயப்பெற்று - பனி மல்கி - நீர் நிரம்பப் பெற்று; மாசு – தூசி; மொழிச் சியைப் போல் - தலேமகள் போல்; வெற்றியிராமன் - சயத்தையுடைய இராமன்; வேட்டாய் கொல் - விரும் பிஞயோ.]

தலேவனேப் பிரிந்து தலேவி வருந்துகின்ற பொழுது கட்புலனுகும் பொருளெல்லாம் வருந்துகின்றனவாகத் தோன்றுதலால், தோழி திங்களே நோக்கி "நீயும் வேட் கையால் நலிவுபடுகின்றனேயோ?" என்று வினவுகின்ருள் இப்பாசுரத்தில். நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரத்தை நோக்குவோம்.

"நைவாய எம்மேபோல்
நாள்மதியே நீஇந்நாள்
மைவான் இருளகற்ருய்;
மாழாந்து தேம்புதியால்;
ஐவாய் அரவணேமேல்
ஆழிப் பெருமாஞர்
மெய்வா சகம்கேட்டுஉன்
மெய்ந்நீர்மை தோற்ருயே?"[47]

[நைவு - நைந்து போதல்; மதி - சந்திரன்; மை - கரிய; மாழாந்து - மயங்கி; தேம்புதி - குறைபடுகின்ருய்; ஐவாய் - ஐந்து முகம்; ஆழி - சக்கரப்படை; மெய் நீர்மை - உண்மையான குணம்; தோற்ருய் - இழந் தாய்.]

இங்ஙனம் ஆழ்வார் பாசுரங்களே அடியொற்றி வந்த பல பாசுரங்களே இந்நூலில் காணலாம்.

---

47. திருவாய் 2-1 ; 6

## தமிழின் குழைவு:

அன்பர்களே, ஆழ்வார்களின் பாசுரங்களைப் போலவே திவ்விய கவியின் பாசுரங்களும் உள்ளத்தை உருக்குபவை; பக்திச் சுவையை ஊற்றெடுக்கச் செய் பவை. தமிழின் குழைவும் நெளிவும் பாடிய வாய் தேனூறும்படி செய்யவல்லவை. சொற்போக்கும் நடைப்போக்கும் படிப்போர்க்குக் கவர்ச்சி யூட்டுபவை. ஒரு சில பாடல்களில் இக்கூறுகளைக் காண்போம்:

"மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன்
மண்ணும் விண்ணும்
தாயவன் கண்ணன் கமல மொப்பான்
சரத்தால் இலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத்
தான்திரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு
வைகுந்தம் தூரமன்றே."[48]

[மணி – நீலமணி; தாயவன் - தாவி அளந்தவன்; கண் - கண்கள்; நல் கமலம் - நல்ல செந்தாமரை; தீய வன் கண்ணன் - கொடிய தறுகண்மையுடைய இரா வணனது; தூயவன்கண் - தூயவனிடத்தில்; அன்புடை யார்க்கு - பக்தியுடையார்க்கு.]

திருவேங்கட முடையானிடம் பக்தி செய்தொழுகு வார்க்கு மிக எளிதில் வீடுபேறு கிட்டும் என்று கூறும் பாடல் பன்முறை படித்துப் பாட்டின்பத்திலும் இன்பத் தமிழிலும் திளைத்து அநுபவிக்கத் தக்கது.

"பேரானைக் கோட்டினைப் பேர்த்தானை
வேங்கடம்பே னுந்துழாய்த்

48, பாடல் - 5

தாரானைப் போதனைத் தந்தானை
யெந்தையைச் சாடிறப்பாய்ந்(து)
ஊரானை மேய்த்துப்புள் ஊர்ந்தானைப்
பஞ்சவர்க் குய்த்துநின்ற
தேரானை நான்மறை தேர்ந்தானைத்
தேருநுந் தீதறுமே.''[49]

[பேர் ஆனை - பெரிய யானை; கோடு – கொம்பு; பேர்த்தானை – பேர்த்து எடுத்தவனை; பேணும் - விரும்பும்; துழாய்த் தாரான் - துழாய் மாலையையுடையவன்; போதன் - நான்முகன்; சாடு – சகடாசுரன்; இற - முறியும்படி; ஊர் ஆனை - ஊரிலுள்ள பசுக்களை; புள் - கருடன்; உய்த்து - செலுத்தி; தேரானை - தேரை யுடையவனை; தேரும் - அறிந்து துதியுங்கள்; தீது அறும் - துன்பங்கள் நீங்கும்.]

இது, திருமலையை விரும்பி இடமாகக்கொண்ட எம்பெருமானைத் துதித்தால், துன்பங்களெல்லாம் நீங்கும் என்று கூறுவதாக அமைந்த பாசுரமாகும். இதில் பேரானை—பேர்ந்தானை, தாரானை–தந்தானை, ஊரானை-ஊர்ந்தானை, தேரானை—தேர்ந்தானை என்பவை எதிர்மறையும் - உடன்பாடுமாய்ச் சொற்போக்கில் ஒன்றுக்கொன்று மாறுபடுவதாக மேல்நோக்கில் தோற்றினும் பொருளை யுணருமிடத்து உள்நோக்கில் வேறுவகையாகப் பொருள் பட்டு மாறுபாடின்றி முடிவது அறிந்து இன்புறத்தக்கது. பாசுரத்தைப் பலமுறை படித்து அநுபவித்தால் கவிதை இன்பத்தை எட்டிப் பிடிக்கலாம்.

இறுதியாக ஒரு பாசுரத்தில் ஆழங்கால் படுவோம். திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் திவ்வியகவி மரகத ரத்தினமாகக் கண்டு அநுபவிக்கிறார்.

49. பாடல் - 83

## 2. திருவேங்கடமாலை

அடுத்து, 'திருவேங்கடமாலை' என்னும் சிற்றிலக்கியம் பற்றி ஒரு சில கருத்துகளைக் கூறுவேன். இந்த நூல் திருவேங்கடமலைமீதும் அம்மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்மீதும் பாடப்பெற்றது. 'மாலை' என்பது தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்று. ஒரு பொருள் குறித்துப் பல செய்யுள் கூறுவது அதன் இலக்கணம் ஆகும். மலர்கள் கொண்டு தொடுக்கப் பெற்ற மலர்மாலைபோலச் சொற்கள் கொண்டு தொடுக்கப்பெற்ற மாலையாகிய பிரபந்தமாகும் இது. திருவேங்கடமுடையானது திருவடியில் சூட்டப்பெறும் திருமாலை போன்றதால், 'திருவேங்கடமாலை' என்று பெயர் பெற்றது இந்நூல்.

"சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை"[52]

"இருந்தமிழ் மாலை இணையடிக்கே சொன்னேன்"[53]

"சொல்மாலை ஏத்தித் தொழுதேன்."[54]

"மாதவனை, சொல்மாலை எப்பொழுதும் சூட்டு."[55]

"கலிகன்றி,
செஞ்சொலால் எடுத்த தெய்வநல் மாலை."[56]

"முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல்மாலை."[57]

---

52. முதல் திருவந் - 1
53. இரண். திருவந் - 74
54. ஷ்டி - 85
55. பெரிய திருவந் - 65
56. பெரிய. திரு. 1-1:10
57. திருவாய். 7-2 : 11

என்ற ஆழ்வார்களின் வாக்குகளாலும் இதனை அறியலாம். இங்குத் திருவேங்கடம் என்பது திருமலையைக் குறிப்பதுடன் அத் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் குறிக்கும்; உபலட்சணம். "தேச்யரான பெருமாளைச் சொன்னதெல்லாம் உபஸர்ஜந கோடியிலேயாய் அத்தேசமேயாய்த்து, இத்திருமலைக்கு விஷயம்" என்ற வியாக்கியானப் பகுதியையும் ஈண்டு நோக்குக.

நூறு வெண்பாக்களாலமைந்த இந்நூலில் புறமாக முற்பகுதியில் காப்புச் செய்யுட்கள் இரண்டும், அவையடக்கச் செய்யுள் ஒன்றும், நூலின் இறுதியில் தற் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும் அமைந்துள்ளன. நூலிலுள்ள நூறு செய்யுட்களிலும் முன்னிரண்டு அடிகளில் திருவேங்கடத்தின் சிறப்பும் பின்னிரண்டடிகளில் திருவேங்கடமுடையானது சிறப்பும் கூறப்பெற்று 'ஊர்' என்னும் துறையமைய 'திருவேங்கடம் என்பது திருமாலின் திருப்பதி' என்னும் வாய்பாடு பொருந்துமாறு நூல் அமைந்துள்ளது. அன்றியும், இந்நூலின் பிற் பகுதியாகிய ஐம்பது செய்யுட்களின் முன்னிரண்டடிகள் மேற்கூறப்பெற்ற தன்மையுடன் 'சிலேடை' என்னும் அணியையும் கொண்டுள்ளன. மேலும், இந்நூலின் செய்யுட்களெல்லாவற்றிலும் பின்னிரண்டடிகள் பெரும்பாலும் 'திரிபு' என்னும் சொல்லணியும், சிறுபான்மை 'யமகம்' என்னும் சொல்லணியும் அமைய யாக்கப்பெற்றுள்ளன.

வைணவப் பற்று மிக்க இந் நூலாசிரியர் காப்புச் செய்யுட்களில் முதலில் வைணவர்கள் வழிபடு கடவுளாகப் போற்றும் நம்மாழ்வார் வணக்கத்துடனும்; அடுத்து எடுத்துக்கொண்ட நூலின் தலைவனாகத் திகழும் திருவேங்கடமுடையான் வணக்கத்துடனும் நூலைத்

தொடங்குகின்றார். மறந்தும் புறந்தொழா வீர வைணவ ராதலின் வேங்கடத்து மாலையன்றிப் பிற கடவுளரைப் போற்றாத தன்னுடைய திண்ணிய மனவுறுதியையும் புலப்படுத்துகின்றார்.

**"மூலமே என்றகரி முன்வந் திடர்தொலைத்து**
**நீலமே கம்போல் நின்றானைப்—பாலாய**
**வேலைநடு வில்துயிலும் வித்தகனை வேங்கடத்து**
**மாலையன்றிப் பாடாதென் வாய்."[58]**

[மூலம் - ஆதி மூலம்; கரி - யானை; இடர் - துன்பம்; பாலாய வேலை - பால்மயமான கடல்.]

பாடலின் முன்னிரண்டடிகளில் வேங்கடத்தின் சிறப்பும் பின்னிரண்டடிகளில் அங்கு எழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையானின் பெருமையும் பேசப்பெறு பவை என்று மேலே குறிப்பிட்டேன். அதனை ஈண்டுக் காட்டுவேன்.

**"மாலைக்கோ லித்திரியும் வையகத்தோர் தம்பிறவி**
**வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே—சோலைத்**
**தருமா தரைநட்டான் தண்முல்லை ஆயர்**
**தருமா தரைநட்டான் சார்பு."[59]**

[மாலை - மயக்கத்தை; கோலி - கொண்டு; வேலை - கடல்; வங்கம் - மரக்கலம்; தரு - பாரிஜாத மரம்; மா தரை- பெரிய பூமி; மாதரை-மகளிரை; நட்டான் - விரும்பிக்கூடினன்.]

பிறவிப் பெருங்கடலுக்கு வங்கமாகத் திகழ்வது திருவேங் கடமலை என்பதாக முன்னிரண்டடிகளில் கூறினார். பின் னிரண்டடிகளில் ஆயர்மகளிரைக் கூடிய கண்ணன் உம்ப

---

58. காப்பு – 2
59 பாடல் - 3

ருலகிலிருக்கும் பாரிசாதமரத்தை இப்பூவுலகில்கொண்டு வந்து நட்ட பெருமையைப் பேசுகின்ருர். பின்னிரண்டு அடிகளில் யமகம்[60] என்ற சொல்லணி அமைந்து பாடலை அழகுறச் செய்கின்றது.

திருவேங்கடத்தின் சிறப்பு:

இந்த நூலில் திருவேங்கடமலையின் சிறப்பு பாடல் தோறும் முதல் இரண்டு அடிகளில் பலவாருகப் பேசப் பெறுகின்றதைக் காண்போம்.

முதலாவதாக: நான்முகன், சிவபெருமான், இந்திரன் முருகன், ஆதிசேடன் ஆகிய கடவுளருடன் வேங்கடமலை ஒப்பிட்டுப் பேசப்பெறுகின்றது.

**"நாலு திசைமுகமும் நண்ணுதலால் ஒண்கமலம்**
**மேலுறலால் வேதாவாம் வேங்கடமே."[61]**

[நண்ணுதல்-பொருந்தியிருத்தல்; விரும்பி வருதல்; மேல்உறல் - தோன்றுதல், தன்மேல் தங்கப் பெறுதல்; வேதா - பிரமன்.]

என்ற வரிகளில் நான்முகன் வேங்கடத்துடன் ஒப்பிடப் பெறுகின்ருன். இவ்வாறு ஒப்பிடப் பெறுதலைச் செம்மொழிச் சிலேடைபற்றி வந்த உவமையணி[62] எனக் கூறுவர் அணியிலக்கண நூலார். இவ்வாறே,

---

60. யமகமாவது - அடி முதலெழுத்தோடு இரண்டெழுத்து முதல் பத்தெழுத்து ஈருக ஓரடிபோலப் பல அடிகள் பாடப் பெறுவது. ஈண்டு எழுத்துக் கணக்கு ஒற்றொழித்துப் பார்க்க வேண்டும். யமகத்தைத் தமிழில் மடக்கு என்று வழங்குவர்.

61. பாடல் - 4

62. செம்மொழிச் சிலேடையாவது -சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்பெருமல் பொருள்படுவது.

"பாணிபிறை கொன்றை பணிசூடி மானேந்தி
வேணியர னேப்பொருவும் வேங்கடமே."[63]

[பாணி - நீர்; பணி - பாம்பு; வேணி - சடை முடி.]

என்ற அடிகளில் சிவபெருமான் வேங்கடத்திற்கு ஒப்பாகின்றான். சிவபெருமான் தலையில் கங்கை கொன்றை மலர் பாம்பு இவற்றையும், கையில் மானையும் கொண்டு சடைமுடியுடன் திகழ்வதுபோலவே, வேங்கடமலையிலும் திவ்விய தீர்த்தங்கள்; கொன்றை மரங்கள், நாகங்கள், மான்கள் ஆகியவை இருக்கின்றன. சிவபெருமானின் முடியில் சந்திரன் இருப்பதுபோலவே, உயர்ந்த திருமலையின் மீதும் சந்திரன் தோன்றுகின்றான். சிவபெருமானிடம் சடை முடியிருப்பதற்கேற்ப வேங்கடத்தில் அடர்ந்த வனம் உள்ளது.

"மாலாய் சசிதழுவி வச்சிரமேந் திப்புகர்மா
மேலாய்ப் புரந்தரம் வேங்கடமே"[64]

[மால் - ஒரு பெயர், பெருமை; சசி - இந்திராணி, சந்திரன்; வச்சிரம் - ஆயுதம், இரத்தினக் கற்கள்; புகர் மா - புள்ளிகளையுடைய ஐராவதம், யானை.]

என்ற வரிகளில் வேங்கடம் இந்திரனுக்கு ஒப்பாகின்றது. இந்திரனுக்கு மால் என்ற ஒரு பெயர் உண்டு; இந்திராணியைக் கூடியுள்ளான்; வச்சிராயுதத்தைக் கொண்டிருக்கின்றான்; செம்புள்ளிகளையுடைய ஐராவதம் என்ற யானைமீது ஏறுகின்றான். அங்ஙனமே, வேங்கடமும் பெருமையுடையதாய், சந்திரன் தன்மீது பொருந்தப் பெற்றதாய்[65] வச்சிர ரத்தினக்கற்களைத் தன் மேலுடைய

---

63. பாடல் - 5
64. பாடல் - 6
65. சசி - சந்திரன். முயல் வடிவத்தையுடையதென்று காரணப் பொருள்படும். சசம் - முயல். சந்திரனிடத்துக் காணப்படுகின்ற களங்கத்தை முயலென்றல் ஒரு வகைக் கவி மரபு.

தாய், செம்புள்ளிகளையுடைய யானைகள் தங்கப் பெறு தாய்த் திகழ்கின்றது. அடுத்து;

"வள்ளிபுணர்ந் தாறுமுக மன்னிமயில் மேற்கொளலால்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே."[66]

[வள்ளி - வள்ளி நாயகி, வள்ளிக் கொடி; ஆறு - எண், நதி; மயில் - வாகனம், பறவை; வேள் - முருகன்.]

என்ற வரிகளில் வேலன் வேங்கடத்துக்கு ஒப்பாகின்றான். வேங்கடத்தில் வள்ளிக் கொடிகள் உள்ளன; ஆறுகள் இருக்கின்றன; மயில்கள் உலவுகின்றன. முருகனும் வள்ளியை மணம் புணர்ந்தவன்; ஆறுமுகங்களையுடையவன்; மயிலை வாகனமாகக் கொண்டவன். அடுத்து, ஆதிசேடனுக்கும் வேங்கடத்திற்கும் ஒப்புமை கூறப் பெறுகின்றது.

"புள்ளரவம் நீரரவம் போர்மா அரவம்அரு
வெள்ளரவம் வெற்பாகும் வேங்கடமே."[67]

[அரவம் – ஒலி, பாம்பு; மா - விலங்கு.]

பறவைகளின் ஒலியும், அருவிநீர் பெருகிய ஒலியும்,போர் செய்கின்ற யானை முதலியவற்றின்ஒலிகளும் நீங்காதிருப்பதால் வேங்கடமலை அரவ வெற்பாயிற்று. சேஷகிரி என்பது தமிழில் அரவவெற்பு என்று பரியாயநாமமாகப் பெயர் பெறுகின்றது. இந்த அடிகளில் 'திரிபு'[68] என்னும் சொல்லணி அமைந்து அழகு செய்வதைக் கண்டு மகிழலாம்.

---

66. பாடல்-7
67. பாடல் - 8

68. திரிபாவது - ஒவ்வோரடியிலும் முதலெழுத்து மாத்திரம் வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய பல எழுத்துகள் ஒன்றி நின்று பொருள் வேறுபடுவது.

**இரண்டாவதாக:** வேங்கடமலையின் உயர்ச்சியைக் கூறுங்கால் பல செய்திகள் மிகச் சுவைபடக் கூறப்பெறு கின்றன. திருவேங்கட மலையிலுள்ள பொன்மயமான திருக்கோயிலின் ஒளி மிகுதியாக வீசுதலால் பகலோ னின் தேர்க்குதிரைகள் கண்கூச்சமடைந்து கண்விழிக்க இயலாது கண்மூடி அம்மலையின் உயர்வினால் அதில் கால் இடறுகின்றன.[69] இப்பகுதியில் பன்னிரண்டு இராசிகளில் மேடம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்றவைகள் மலையின் உயர்வுடன் பொருத்திக் காட்டப்பெறும் திறம் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது,

"வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே."[70]

[வரி உழுவை - வரிப்புலி; வாலாட்டுதல் - கோபக்குறி; மேடம் - ஆடு.]

என்பதில் திருவேங்கடமலையிலுள்ள பசியால் வாடிய புலி யொன்று வானத்திலுள்ள ஆட்டுக்கிடா வடிவுள்ள மேடராசியைப் பார்த்துச் சீறுகின்றது. 'மேடத்தைப் பார்த்திருக்கும் வேங்கடமே' என்ற பாடத்திற்கும் புலி யானது தன் உணவிற்கும் வலிமைக்கும் தகுந்ததாகிய இடபராசியை எதிர் நோக்கிக்கொண்டு, அவ்வகை வலிமை இல்லாத மேடராசியைக் கண்டு வெறுத்திருக் கும் என்றும் பொருள் கொள்ளலாம். மலையில் தாவிக் குதித்து விளையாடும் குரங்குகள் அதன் தண்குவட்டில் பொருந்தி வரும் நண்டு வடிவமான கடகராசியைக் கண்டு வெருவியோடுகின்றன.

---

69. பாடல் - 9
70. பாடல் - 16

"தாவிவரும் வானரங்கள் தண்குவட்டில் கற்கடகம்
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே."[71]
[குவடு-மலைச்சிகரம்; மேவி-பொருந்தி]

என்பது கவிஞனின் வாக்கு. ஆண்யானையைப் பெண் யானை யாதோ ஒருகாரணத்தால் வெறுத்து வருகின்றது. இந்நிலையில் அது வானத்தில் வருகின்ற சிங்கவடிவான சிங்கராசியைக் கண்டு பேரச்சங்கொண்டு தானே வலியச் சென்று ஆண்யானையைத் தழுவுகின்றது.[72] இளம் பெண் வடிவமான கன்னிராசி மலையுச்சியிலுள்ள மூங்கிலுக்கு நேராக வந்து பொருந்துங்கால் அது கம்பத்தின்மீது நடிக்கும் கழைக் கூத்தியைப் போல் திகழ்கின்றது.[73] மற்று, ஓங்கி வளர்ந்திருக்கும் மூங்கிலுக்கு நேராகச் சுறு வடிவம் போன்ற மகர ராசி வருங்கால், அது மதன வேளின் சுறவக் கொடிபோல் காட்சியளிக்கின்றது.[74] வானத்தில் செல்லுகின்ற நிறைகோல் வடிவான துலா ராசியினிடத்தில் ஒளிவிடும் இரத்தினங்களை வைத்து எடை காண்கின்றனர் மலைக்குறவர்கள்.[75] தினைப்புனத்தைக் காக்கின்ற குறவர்கள் குளிர்மதியில் களங்கத் தோற்றமாக இலங்கும் மான்வடிவைக் கண்டு, அதனைத் தினைபுனத்தை மேயவரும் மான் என்று கருதி வானத்தில் வில்வடிவாகக் காணப்பெறும் தனுசு ராசியைக் கை வில்லாகக் கொண்டு அம்பு எய்ய முயலுகின்றனர்.[76] அம்புலியில் வாழும் மான் வேங்கடமலையில் அதிரும் குரலையும் திறந்த வாயையும் கொண்ட வெம்புலியைக்

71. பாடல் - 17
72. பாடல் - 18
73. பாடல் - 19
74. பாடல் - 22
75. பாடல் - 20
76 பாடல் - 21

கண்டு அஞ்சி நடுங்குகின்றது.[77] ஓங்கி வளர்ந்திருக்கும் மரக்கொம்பொன்றிலுள்ளதேனிறால் விண்ணில்செல்லும் பிறைச்சந்திரனது வளைந்தவடிவமாகிய கொம்பு படுத லால் உடைந்து தேனைச் சொரிகின்றது. அத்தேன் அதற்கு நேராக வரும் குடவடிவமான கும்பராசியில் நிறைந்து வழிகின்றது.[78] திருமலையிலுள்ள கோனேரியில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் கூனலிள வெண்குருகு ஒன்று வானத்தில் செல்லும் மீன்வடிவமான மீனராசியின் நிழல் நீரில் தெரியக் கண்டு அதனை உண்மையான மீன் என்று கருதிக் கொத்தி ஏமாந்து போகின்றது.[79]

இதுகாறும் இராசிமண்டலத்தில் தம் கற்பனையைச் செலுத்தின கவிஞர் விண்மீன் மண்டலத்தில் கவனத் தைச் செலுத்துகின்றார்.

> "மண்மூலந் தாவென்று மந்திகடு வற்குரைப்ப
> விண்மூலம் கேட்டேங்கும் வேங்கடமே."[80]

[மண்மூலம் – கிழங்கு; விண்மூலம் - மூல நட்சத் திரம்.]

என்பதில் குரங்கின் பேச்சைக் காட்டுகின்றார். பெண் குரங்கொன்று ஆண்குரங்கை நோக்கி உண்பதற்கு 'மூலம் தா' என்று கேட்கின்றது. வானத்திலுள்ள விண் மீனாகிய மூலம் தன்னைப் பிடித்துக் கொடுக்கச் சொன்ன தாகக் கருதி அஞ்சிக் கலங்குகின்றது. இந்த வருணனை களிலெல்லாம் குறிஞ்சிநிலக் கருப்பொருள்களே கூறப் பெற்றிருத்தல் கண்டு மகிழத்தக்கது. மகளிர்

---

77. பாடல் - 22
78. பாடல் - 23
79. பாடல் - 24
80. பாடல் - 25

பொன்னூஞ்சலிலிருந்துகொண்டு உந்தி உந்தித் தள்ளி விளையாடுகின்றனர். அந்த ஊஞ்சல் அவிட்ட நட்சத்திரத்தில் படுங்கால் அங்கு அம்மகளிர் இறங்குகின்றனர்.[81]

மூன்றுவதாக: வேங்கடமலையின் உயர்ச்சியைக் காட்டுவதற்காகவுள்ள வேறு சில வருணனைகளையும் காண்போம். வேங்கடமலையில் மண்டிக்கிடக்கும் உயர்ந்த சாதி மூங்கில்கள் முற்றி வெடித்தலால், அவற்றினின்றும் சிதறும் முத்துகள் மேகத்தைத் தொளை செய்து அம் மேகத்தினின்றும் வெளிப்படுகின்ற மழைநீர்க் கட்டிகளுடன் கீழே விழுகின்றன.[82] அம் மலையின்மீது வானுற ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில் அவண் காணப்பெறும் இந்திர வில்லில் தொடுத்தற்கு அமைந்த அம்பு போல் காணப்பெறுகின்றது.[83] அந்த மூங்கிலின் உச்சியில் கட்டப்பெற்ற தேன்கூடு உம்பருலகத்து நிலைக்கண்ணாடி போல் விளங்குகின்றது.[84] உம்பருலகின் ஐவகைக் கற்பகத் தருக்களில் கட்டப்பெற்ற செவ்விய தேன் இறால் மலையின்மீது வரையாடுகள் தாவிப் பாய்வதால் கிழிந்து தேனைச் சொட்டுகின்றது.[85] பாக்கு மரங்களைப் பற்றிய வருணனை பாங்குற அமைந்து படிப்போரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

**"பொன்கமழும் கற்பகத்தின் பூங்கா வணத்துக்கு**
**மென்கமுகம் காலாகும் வேங்கடமே."[86]**

[காவணம் - பந்தல்; கமுகு - பாக்கு.]

---

81. பாடல் - 26
82. பாடல் - 33
83. பாடல் - 34
84. பாடல் - 36
85. பாடல் - 40
86. பாடல் - 35

என்ற அடிகளில் விண்ணை எட்டுமாறு வளர்ந்துள்ள பாக்கு மரங்கள் உம்பருலகத்துக் கற்பகச் சோலையாகிய பந்தலுக்கு நாட்டப்பெற்ற அழகிய கால்கள் போல் காட்சி யளிப்பது கூறப்பெறுகின்றது. அப்பாக்குமரத்தில் வெடித்த நிலையிலுள்ள வெண்ணிறப்பாளைகள் வெங்கதிரோனுக்கு அசைக்கப்பெறும் வெண்கவரிபோல் காட்சி அளிக்கின்றன.

**"தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு**
**வெண்கவரி போலசையும் வேங்கடமே."[87]**

[கதிரின் செல்வன் - சூரியன்]

என்று கூறுவர் திவ்விய கவி. முழுமதியம் வானத்தில் இறுமாந்து உலவுகின்றது. அப்பொழுது அருகில் செல்லும் மதயானையொன்று அத்திங்களை இனிய பாலில் கலந்த உணவுத் திரளை என்று கருதித் துதிக்கையை நீட்டிய வண்ணம் உள்ளது.[88]

**நான்காவதாக:** வேங்கட மலையின் வேறு சில காட்சிகளிலும் ஆழங்கால் படுவோம். வேங்கடமலையிலுள்ள தென்னை மரத்தில் வெண்மையான பாளை மலர்ந்து கிடக்கின்றது. சுனை நீரிலுள்ள மீன்கூட்டங்கள் அதனைக் கொக்கு என்று கருதி நீரினுள் அஞ்சி மறைகின்றன.[89] தென்னை மரத்தினின்றும் இளநீர்க் காய்கள் கீழே வீழ்தலால் அம்மலையிலுள்ள இரத்தினங்கள் சிதறுகின்றன. செந்நிறமுள்ள அவற்றை நெருப்பென்று கருதி யானைகள் விலகிச் செல்லுகின்றன.[90] வேங்கடமலை

87. பாடல் - 37
88. பாடல் - 31
89. பாடல் - 27
90. பாடல் - 29

யில் மேகங்கள் இடிமுழக்கம் செய்கின்றன. அம் முழக்கத்தை மதயானைகளின் பிளிறல்கள் என்று கருதி அவ்யானைகளை விழுங்குவதற்குமலைப்பாம்புகள் வாயைத் திறந்த வண்ணம் காத்திருக்கின்றன.

"அங்கயலின் மேகம் அதிரப் பெரும்பாந்தள்
வெங்கயமென் றங்காக்கும் வேங்கடமே."[91]

[அயல் - அருகு; அதிர-முழங்க; பாந்தள் - மலைப்பாம்பு; கயம் - யானை; அங்காக்கும்-வாய்திறக்கும்.]

என்ற அடிகளில் இக்காட்சியினைக் காணலாம். தேவர்களும் குறிஞ்சி நிலத்துக் குறத்தியரும் அமிர்தத்தையும் குறிஞ்சித் தேனையும் பண்டமாற்றுச் செய்து கொள்ளுகின்றனர்.[92] இதனால் உம்பருலகம் திருமலைக்கு மிக அண்மையில்உள்ளது என்பதும், நாளும் அமிர்தத்தையே உண்பவர்களான தேவர்கள் அதனை வெறுத்தொழித்து' அதனினும் இனிய தேனினை விரும்பிப் பெறுகின்றனர் என்பதும் பெறப்படுகின்றன. இன்னொருஅழகான காட்சி: திருமலையில் பெண்குரங்கொன்று மாமரத்தில் பழுத்துத் தொங்கும் தேமாங்கனி யொன்றினைக் கையில்கொண்டு தாவிச் செல்லுகின்றது. இதனைக் காணும் உம்பருலகத்துக் கற்பகத்தருவில் அமர்ந்திருக்கும் ஆண் குரங்கு அக் கனியைத் தனக்குத் தருமாறு கையை நீட்டுகின்றது.[93] இதனால் கற்பகக் காடுகளில் கிடைக்கும் கனிகளிலும் திருமலையில் காணப்படும் கனி சுவையில் இனியது என்னும் கருத்துத் தோன்றுகின்றது. மலர்களைக் கொண்டு காட்டப் பெறும் காட்சி மனத்தினை மாண்புறுத்துகின்றது. கொன்றை மரங்கள் சொரியும் பொன்

91. பாடல் - 30
92. பாடல் - 41
93. பாடல் - 42

மலர்கள் காந்தள் மலர்களின்மீது விழுகின்றன. இக்காட்சி ஈகைக்குணமுடைய வேந்தன் இரவலர் கையில் பொன்னைச் சொரிவது போல் உள்ளது என்று கூறுகின்றார் கவிஞர்.[94] செந்நிறமான பதுமராகக் கல்லைச் சுற்றிக் கொண்டு இருக்கும் பெரியமலைப்பாம்பு சூரியனைச் சுற்றிக் காணப்பெறும் ஊர்கோள் வட்டம்போல் காட்சியளிக்கின்றது.[95] குறவர்கள் யானையின் மீது மாணிக்கக் கற்களை வீசியெறிகின்றனர். அவை முகிலினிடையில் காணப்பெறும் மின்னல்போல் திகழ்கின்றன.[96] மாணிக்கப் பாறையின்மீது தாவிப்பாயும் குரங்குகள் செங்கதிரோன் மண்டலத்தின் மீது பாயும் அநுமனைப்போல் தோன்றுகின்றன.[97] திருமலையின்மீதுள்ள வெண்ணிறமான பளிக்குப் பாறையில் உறங்கும் மான் திங்கள் மண்டிலத்தின் நடுவில் காணப்பெறும் மானை ஒத்துள்ளது.[98]

> **"கொம்பின் இறால் வாங்கநிமிர் குஞ்சரத்தை அம்புலிமேல்**
> **வெம்பியெழும் கோள்அரவாம் வேங்கடமே."**[99]

[கொம்பு - கிளை; இறால் - தேனடை; குஞ்சரம் - யானை; வெம்பி - கோபித்து; கோளரவு - இராகு.]

என்ற வரிகளில் காட்டப்பெறும் காட்சி நம் சிந்தையைக் கவர்கின்றது. மரக்கொம்பில் தொங்கும் தேனிறாலைக் கவர்வதற்குக் கைநீட்டுகின்றது கானில் திரியும் வேழம். அக்காட்சி திங்களைப் பற்றுதற்கு அதன்

94. பாடல் - 45
95. பாடல் - 47
96. பாடல் - 46
97. பாடல் - 48
98. பாடல் - 50
99. பாடல் - 49

மீது கறுக்கொண்டு எழும் இராகு என்னும் கரும்பாம்பு போல் தோன்றுகின்றது.

**ஐந்தாவதாக :** வேங்கடமலையைப்பற்றி மேலும் சில சிறப்புகளைக் காண்போம்.

> **"திரு வேங்கட மாமலை**
> **ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே."**[100]

என்று ஆழ்வார் கூறியதையே விரித்துக் கூறுவார்போல் சில செய்திகளைக் கூறுகின்றார் திவ்வியகவி. பிறவிப் பெருங் கடலைத் தாண்டி வைகுந்தம் புக்கவர்களும் மீண்டும் திருவேங்கடமலையைத் தொழ விரும்புகின்றனர்.[101] நான்மறைகளும் நான்குபக்கங்களிலும் வேலிபோல் நின்று வேங்கடத்தைத் தொழுகின்றன.[102] "திருப்பதி மிதியாப்பாதம் சிவனடிவணங்காச் சென்னி" என்ற பாடலை நாம் கேள்வியுற்றிருக்கின்றோம். திருப்பதிக்கு வந்து சேர்ந்தமாத்திரமே பரமபதப்பேறு கிட்டிவிடும். இதனைக் கேள்வியுற்ற பொன்மலையான மகாமேருவும் வெள்ளிமலையான கைலாய கிரியும் வேங்கடத்தை வணங்கி நிற்கின்றன.[103] பிறக்குங் காலத்தும் வளர்ந்து உயிர் வாழும் காலத்தும் இறக்குங் காலத்தும் உண்டாகின்ற பலவகைத் துன்பங்களும், அவற்றிற்கெல்லாம் காரணமான வினைத்தொடர்களும் திருமலைக்கு வந்தவுடன் "தீயினில் தூசாகும்."[104] திருவேங்கட மலையின் வரந்தரும் ஆற்றல் சொல்லுந்தரமன்று. பைத்தியம், மகப்பேறின்மை, முடம், கூன், குருடு, செவிடு, ஊமை

---

100. திருவாய். 3-3:8
101. பாடல் - 10
102. பாடல் - 11
103. பாடல் - 12
104. பாடல் - 14

போன்ற குறைகள் யாவற்றையும் தீர்த்து வைப்பது திருவேங்கடமாகும்.[105]

ஆறுவதாக: அன்பர்களே, நூலின் பிற்பாதியிலுள்ள முன்னிரண்டடிகள் பாடல்களின் சிலேடை அணியைக் கொண்டிருப்பதாக மேலே குறிப்பிட்டேன் அல்லவா? அந்த அணி வகைகளை எடுத்துக்காட்டும் முகத்தான் மேலும் வேங்கடத்தின் பெருமைகள் சிலவற்றைக் கூறு வேன்.

**"காதலித்துச் சார்ந்தவர்க்கும் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்**
**வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடம்"**[106]

[இற்று - நீங்கி; காமியம் - வாழ்வில் விருப்பம்; வேதனை - நான்முகனை, துன்பங்களை.]

என்பது ஒரு பாடலின் முதலிரண்டடிகள். பூவுலக வாழ் வில் ஆசை முழுதும் ஒழித்துத் தன்னிடம் வந்துசேர்ந்த முனிவர்கட்கும், பிரமனையும் யமனையும் விலக்குவது வேங் கடம்; பிறப்பையும் இறப்பையும் ஒழிக்கும் என்றவாறு. நிலவுலக வாழ்வினை விரும்பியவர்கட்கும் துன்பவகை களை ஒழிப்பது திருவேங்கடம். இரண்டாவது அடியி லுள்ள "வேதனைக் கூற்றைத் தவிர்க்கும்" என்ற அடி சிலேடைப் பொருளில் அமைந்தது. வேதனை—பிரமனை; கூற்றை—யமனை என்பது முதற் பொருள். வேதனைக் கூற்றை-துன்பங்களின் வகைகளை; இஃது இரண்டாவது பொருள்.

**"கேள்வித் துறவோரும் கேடறவில் வாழ்வோரும்**
**வேள்விக் கினமாற்றும் வேங்கடம்."**[107]

---

105. பாடல் - 15
106. பாடல் - 51
107. பாடல் - 52

[கேள்வி - ஞானக்கேள்வி; கேடு அற இல் - தீங்கில் லாமல்; வேள்விக்கினம்-மன்மதனுல் வரும் இடையூறு, வேள்விக்கு இனம் - யாகத்து இனமான நற்செயல்கள்.]

என்பது இன்னொரு பாடலின் முன்னிரண்டடிகள். இவற்றில் "வேள்விக் கினமாற்றும்" என்பது சிலேடையணி அமைந்த சொற்றொடர் ஆகும். ஞானக் கேள்விகளையுடைய துறவியரும் மன்மதனுல் வரும் துன்பத்தை நீக்குவதற்குரிய இடம் திருவேங்கடம். அங்ஙனமே, தீங்கில்லாமல் இல்லறவொழுக்கத்தில் வாழ்பவர்களும் யாகத்திற்கு இனமான நற்செயல்களைச் செய்தற்கு இடமாக உள்ளது திருமலை. அண்மையில் 'அகண்ட வேள்வி' ஒன்று நடைபெற்றதை நாடு நன்கு அறியும்.

இங்ஙனமே அடியவர்கள்—வேடர்கள்[108], குறத்தியர்—சித்தர்,[109] கிட்டுநெறி யோகியர்—கிள்ளைகள்,[110] கந்தர்வர்—தவர்[111], மனைவாழ்க்கை நீத்தவர்—வாளரி[112] என்றவாறெல்லாம் இணைப் பொருள்களை அமைத்து இருபொருள்படும்படி திருவேங்கடமலையின் சிறப்பினைக் கூறும் செய்திகள் சொல் விருந்தாக அமைந்து களிபேருவகை பயக்கின்றன. விரிவஞ்சி அவை ஈண்டு விடப்பெறுகின்றன. இங்ஙனம் எம்பெருமானின் படைப்பாகிய 'அசித்தும்' சீவர்களின் வினைகளைப் போக்கும் தத்துவக் கருத்து அழகுடன் எடுத்தோதப் பெறும் நேர்த்தியை இப்பகுதிப் பாடல்களில் கண்டுகளிக்க முடிகின்றது.

---

108. பாடல் - 54
109. பாடல் - 56
110. பாடல் - 73
111. பாடல் - 58
112. பாடல் - 91

## திருவேங்கடமுடையானின் பெருமை :

அன்பர்களே, இதுகாறும் திருவேங்கடமலையின் சிறப்பினைக் கண்டோம். இனி, திருவேங்கட முடையானின் பெருமையில் ஆழங்கால்படுவோம். வைணவ தத்துவம், சித்து அசித்து ஈசுவரன் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பேசப்பெறும் என்று முன்னர்க் குறிப்பிட்டேன். சித்து என்பது, சீவான்மாக்களைப் பற்றியது. அசித்து என்பது, சீவான்மாக்கள் தங்கியிருக்கும் உடல், உயிரற்ற அகிலம், அதில் சேர்ந்த பொருள்கள் இவற்றை நுவலும். ஈசுவரன், இறை தத்துவத்தை எடுத்து இயம்பும். அன்றியும், சித்தும் அசித்தும் இறைவனுக்கு உடலாக அமைந்திருப்பன என்று முப்பொருள்கட்குமுள்ள உறவினையும் எடுத்துக்கூறும் வைணவ தத்துவம். இதனை, 'சரீர-சரீரி பாவனை' என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். இறைவன் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற நிலைகளிலும் உருவங்கொண்டு விளங்குவான் என்பதும் வைணவ தத்துவம் ஆகும் என்பது முன்னரே காட்டப்பெற்றது. இந்த நூலிள்ள நூறு பாடல்களின் பின்னிரண்டடிகளிலும் திருவேங்கட முடையானின் பெருமை பேசப்பெறுகின்றது என்று மேலே குறிப்பிட்டேன். அந்த எம்பெருமானின் பெருமைபற்றி ஓரளவு தெரிந்துகொள்ள முற்படுவோம். எம்பெருமானின் பெருமை பற்றிய கருத்துகளைப் பல பகுதிகளாக நிரல்படுத்திக் கூற முயல்கின்றேன்.

## எம்பெருமானின் இருப்பு:

எம்பெருமான் திருவுள்ளம் உவந்து தங்கியிருக்கும் இடம் நான்முகன் வாழ்கின்ற அண்டங்களுக்கும் மேலதாகவுள்ள பரமபதம் என்னும் இடமாகும்.

"ஆணிநிறப்
பீதாம் பரனுர் பிரமர்வாழ் அண்டங்கள்
மீதாம் பரனுர் விருப்பு."[113]

[ஆணிப் பொன் - மாற்றுக் குறைவற்ற பொன்; அம்பரம் - ஆடை; பரனுர்-திருமால்; விருப்பு - உவந்து தங்கும் இடம்.]

என்ற அடிகளால் பரத்துவ நிலையிலுள்ள எம்பெருமானின் இருப்பிடம் தெரிகின்றது. இவ்விடத்தில் அண்டங்கள் எண்ணற்றவை என்பதும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரமன் உளன் என்பதும், அவ்வண்டங்கட்கெல்லாம் மேலுள்ளதுதான் பரமபதம் என்பதும் அறியத் தக்கவை. அடுத்த பாடலிலும் பரமபதம் 'அந்தரத்தான் சார்பு' என்று வலியுறுத்தப் பெறுகின்றது. இன்னொரு பாடலில்,

"வான்ஏறித்
தீமுகனு கத்திருப்பார் சேவடிக்கா ளானவரை
காமுகனு கத்திருப்பார் காப்பு."[114]

[வான் - பரமபதம்; நாகம் - ஆதிசேடன்; ஆள் ஆனவர் - அடிமைப்பட்டவர்; திருப்பார் - செல்லவிடாதவர்; காப்பு - பாதுகாக்கும் இடம்.]

என்ற அடிகளால் வைகுந்தத்தை இருப்பிடமாகவுள்ள எம்பெருமான் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கின்ருன் என்பதைப் புலப்படுத்துகின்ருர் ஆசிரியர்.

## எம்பெருமானின் திருமேனி:

வைணவ தத்துவப்படி எம்பெருமானுக்கு வடிவம் உண்டு. அது 'திவ்விய மங்கள விக்கிரகம்' என்று வழங்

113. பாடல் - 5,48
114. பாடல் - 22

கப்பெறும். அவன் நீலமேகத்தின்[115] நிறத்தையுடைய வன். காயம்பூ நிறத்தையுடையவனாகவும் சொல்லப் பெறுவான்.[116] நான்முகன் சிவன் என்னும் இருதேவர் களையும் தன் திருமேனியில் வைத்திருப்பவன்.[117] கையில் திருவாழியைத் தரித்திருப்பவன்.[118] இன்னொரு பாடலில் அவன் கதை, வாள், அம்புகள் பொருந்திய வில், திருச்சங்கு, திருவாழி ஆகிய ஆயுதங்களைக் கொண்டவன் என்று கூறப்பெற்றுள்ளான்.[119] 'அகலகில்லேன் இறை யும்' என்று கூறும் அலர்மேல் மங்கையைத் திருமார்பில் கொண்டிருப்பவன்.[120]

எம்பெருமானின் வியூகநிலை ஒரு பாடலில் காட்டப் பெறுகின்றது.

> **"வண்டுவரை நாட்டினான் மத்தாக வாரிதியுள்**
> **பண்டுவரை நாட்டினான் பற்று."**[121]

[வண்துவரை - வளப்பமுள்ள துவாரகை; வாரிதி - கடல்; பண்டு - முற்காலம்; வரை - மலை.]

தேவர்கள் பொருட்டு மந்தரமலையைத் திருப்பாற் கடலில் மத்தாக இட்டுக் கடைந்து அமிர்தம் கொணர்ந்த செயல் இவ்வரிகளில் காட்டப்பெறுகின்றது. அன்னமாய் நின்று நான்முகனுக்கு அருமறைப் பொருளின் சாரத்தை விளக்கியருளினான்.[122] இச்

---

115. பாடல் - 12, 33.
116. பாடல் - 56
117. பாடல் - 17
118. பாடல் - 35
119. பாடல் - 72
120. பாடல் - 39
121. பாடல் - 37
122. பாடல் – 21

செயல்கள் வியூக நிலையிலிருந்து கொண்டு நடத்தியவை. அன்னமாக நின்று அருமறை உணர்த்திய செயல் ஆழ்வார் பெருமக்களாலும் உணர்த்தப் பெறுகின்றது.[123] கண்ணனுகத் தேர்த்தட்டில் இருந்துகொண்டு பார்த்தனுக்குத் தத்துவ நூலை வெளியிட்டது விபவத்தில்.[124]

எம்பெருமானின் விபவாவதாரச் செயல்கள் பல பாடல்களில் குறிப்பிடப் பெறுகின்றன. கண்ணனுக இருந்து வேய்ங்குழலூதி ஆநிரைகளைக் காத்தமை,[125] பார்த்தனுக்குத் தேரூர்ந்தமை,[126] குடமாடியமை[127] போன்ற செயல்களும்; இராமனுக வந்து அகலிகையின் சாபந்தீர்த்தமை,[128] அநுமனை வாகனமாகக் கொண்டமை[129], சீதையுடன் பொருந்தியமை,[130] அரக்கர்களை அழித்து வீடணனுக்குப் பட்டம் கட்டினமை[131] ஆகிய செயல்களும்; வாமன உருவத்தில் வந்து மூவடிமண்ணை இரந்தமை,[132] சுக்கிரனது கண்ணைக் கெடுத்தமை[133] போன்ற செயல்களும் இந்த ஆசிரியர் பகவதநுபவம்பெற ஊன்றுகோலாகத் துணைபுரிகின்றன.

ஆழ்வார்களின் பாடல்களனைத்தும் எம்பெருமானின் அர்ச்சைவடிவிலிருந்து ஏற்றுக்கொள்ளப் பெற்றவை

---

123 பாடல் - பெரிய திருமொழி 11.4:8
124. பாடல் - 44
125. பாடல் - 9
126. பாடல் - 10
127. பாடல் - 48
128. பாடல் - 14
129. பாடல் - 33
130. பாடல் - 38
131. பாடல் - 42
132. பாடல் - 40
133. பாடல் - 43

என்பதை நாம் அறிவோம். இதனைத் திவ்வியகவி "ஞான முதலாழ்வார்கள்,வெண்பாவை ஆதரித்தான்[134]" என்ற சொற்றொடரால் குறிப்பிடுவர். இன்னொரு பாடலில் அர்ச்சை, விபவம், பரம் என்ற மூன்றுநிலைகளும்[135] பிறிதொரு பாடலில், வியூகம், விபவம், பரம் என்ற மூன்று நிலைகளும்[136] குறிப்பிடப் பெறுகின்றன. இங்ஙனம் ஒரே பாடலில் பல நிலைகள் கலந்து வருதலையும் இந்நூலில் காண்கிறோம். எம்பெருமான் அன்பருள்ளத்தில் நிலைபெற்றிருக்கும் அந்தர்யாமித்துவத்தை "உள் நிலைக்கும் சோதி"[137] என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர். இதனைத் திருமங்கையாழ்வார்,

> "உளங்கனிந் திருக்கும் அடியவர் தங்கள்
> உள்ளத்தில் ஊறிய தேன்"[138]

என்று கூறி இனியராவர். பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும்,

> "மனத்துஉள்ளான்"[139]

என்று கூறுவர்.

### உலகைப் புரக்கும் செயல்:

எம்பெருமான் இந்த உலகைப் புரக்கும் செயல் பல பாடல்களில் நுவலப்பெறுகின்றது. எம்பெருமான் பாலனாய் ஏழுலகுண்டு ஆலிலையில் துயின்றதாக ஆழ்வார் பெருமக்கள் கூறியதை நினைவில் கொண்டு

---

134. பாடல் - 11
135. பாடல் - 35
136. பாடல் - 46
137. பாடல் - 36
138. பெரிய திருமொழி 4.3:9
139. இரண். திருவந். 28; மூன். திருவந்-3

நமது திவ்விய கவியும் தம் பாடலில்[140] குறிப்பிடு கின்றூர். பிரளய வெள்ளத்தில் தான் ஓர் ஆலிலை யில் துயின்றமை இரண்டு பாடல்களில் குறிப்பிடப் பெறு கின்றது.[141] இராசசம் தாமத குணங்களால் மிக்கவர் தம் பக்கல் வாராது கரும கதியால் வெவ்வேறு துணிவு கொள்ளும்படித் தனது அம்சத்தால் பலப்பல தெய்வங் களையும், பலப்பல சமயக் கோட்பாடுகளையும், பல்வேறு வழிபாட்டு முறைகளையும் அமைத்துவைத்த எம்பெரு மானின் அற்புத ஆற்றலை ஆழ்வார் பெருமக்கள் சிறப்பித்து பேசுவர்.

"பிணக்குஅற அறுவகைச் சமயமும்
நெறியுள்ளி உரைத்த
கணக்குஅறு நலத்தனன்"[142]

என்றும்,

"வணங்கும் துறைகள் பலபல
வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல
வாக்கி அவையவைதோறும்
அணங்கும் பலபல வாக்கிநின்
மூர்த்தி பரப்பி வைத்தாய்"[143]

[விளங்கும் - மாறுபடும்; அணங்கு - தெய்வங்கள்; மூர்த்தி - வடிவம்.]

என்றும் நம்மாழ்வார் குறிப்பிட்டதை நினைவில் கொண்டு இந்த ஆசிரியர்,

140. பாடல் - 13
141. பாடல் - 27,47
142. திருவாய் - 1.3:5
143. திருவிருத்தம் - 96

"பொய்ந்நூலால்
அச்ச மயக்கத்தினர் ஆதரிக்கத் தெய்வங்கள்
வச்ச மயக்கத்தினர் வாழ்வு."[144]

[கத்தினர் - பிதற்றுபவர்கள்; வச்ச - உண்டாக்கி வைத்த; மயக்கத்தினர் - மாயையை யுடையவர்.]

என்று பேசுவர். எனவே, உலகினைப் புரத்தல் பொருட்டு, பக்தி நெறியால் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் எல்லாச் சமயநெறிகளும் எம்பெருமானாலேயே வெளியிடப் பெற்றவையாகும்.

## அருமையும் எளிமையும் :

எம்பெருமானின் எளிமைக் குணத்தை;

"பத்துடை அடியவர்க் கெளியவன்
பிறர்களுக் கரிய
வித்தகன்"[145]

[பத்து-பக்து]

என்று பேசுவர் ஆழ்வார். திவ்வியகவி "தூயசனகாதியாரும், ஓதிவணங்கற் கரியார்"[146] என்றும், அவனது அருமைக் குணத்தை கூறுவர். மேலும் அவர், "மேகன் அயன் அம்கொண்டார் வேணியரன் காண்பரியார்"[147] என்றும்,

—எண் சிந்தைக்கு
ஓரா இருந்தான் ஒருநாள் விதுரனுக்கு
வாரா விருந்தான்"[148]

[எண் சிந்தை - எண்ணுகின்ற மனம்; ஓரா - அறியப் பெறுமல்; வாரா - வருதற்கு அரிய; விருந்தான் - விருந்தினன்]

144. பாடல் – 59
145. திருவாய் 1.3:1
146. பாடல் - 36
147. பாடல் - 67
148. பாடல் - 18

என்று எம்பெருமானின் எளிமைக் குணத்தையும் சிறப்பாக விதந்து ஓதுவர். கண்ணன் எளியவனுக வீட்டிற்கு எழுந்தருளியமையை நினைந்து,

"என்ன மாதவம் செய்ததது இச்சிறுகுடில்?"[149]

என்று கூறிய விதுரன் வாக்கினை இன்றும் வைணவப் பெருமக்கள் அடிக்கடிச் சொல்லி மகிழ்வதை நாம் காண லாம். எம்பெருமான் திருவேங்கடமலையில் எழுந்தருளி யிருப்பதே அவனது சௌலப்பிய குணத்தைக் (எளிமை யைக்) காட்டுவதாகும். ஆகவே, இந்நூலிலுள்ள நூறு பாடல்களும் அர்ச்சையைக் குறிப்பிடுகின்றன என்று கூறுவதிலும் தவறு இல்லை.

**பக்தர்களைக் காத்தல்:**

தனக்கு அடிமைப்பட்டவர்கள் பிழை செய்தால் அதனைப் பொறுத்தலும்; குற்றமாகப் பாராட்டாது விடுதலே யன்றிக் குணமாகக் கொள்ளுதலும் எம்பெரு மானது இயல்பு என்று நம்புபவர்கள் வைணவப் பெரு மக்கள்.

"தன்அடியார் திறத்தகத்துத் தாமரையாள் ஆகிலும்
சிதடு உரைக்குமேல்
என்அடியார் அதுசெய்தார் செய்தாரேல் நன்றுசெய்தார்
என்பர் போலும்."[150]

[சிதடு - குற்றங்கள்]

இதில், பரிந்துரை செய்யும் எம்பெருமாட்டிகூட குற்றங் களைக் கணக்கிட்டுக் கூறத் தொடங்கினுலும் எம் பெருமான்'என் அடியர் அது செய்யார்' என்று கூறி

149. வில்லிபாரதம் - உத்தி - கிருட்டிணன் தூது -80
150. பெரியாழ் திரு. 4.9:2

மறுப்பர் என்பதாகப் பெரியாழ்வார் பேசுவதைக் காண்க. இதனைக் கருத்தில் கொண்டே திவ்வியகவியும்,

—பொங்கமரில்

ஆர்த்த வலம்புரியார் ஆட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார்."[151]

[அமர் - போர்; ஆர்த்த - முழங்கின; ஆட்பட்டார் - அடியார்; அவலம் - துன்பம்; புரியார் - செய்யார்]

என்று கூறுவர். இந்த அடிகளில் 'திரிபு' என்ற சொல்லணி அமைந்திருத்தலும் கண்டு மகிழத்தக்கது. இன்னொரு பாடலில், "பத்தரைத் தம் உள் நினைந்து காப்பார்" என்று தெளிவாகவே கூறியுள்ளார். இதனை வற்புறுத்துவான் வேண்டிப் பின்னொரு பாடலில் ஓர் எடுத்துக்காட்டும் தருவர்.

—"பைங்கழையின்,

மாண்டாரைப் பண்டழைத்தார் மாமறையோன் பால்தோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார்."[152]

[கழை - வேய்ங் குழல்; மண்தாரை பண் - மாட்சிமைப்பட்ட ஒழுங்கான இசை; தழைத்தார் - செழிக்க ஊதினவர்; மாண்டார் - இறந்த மக்கள்.]

என்பதிலுள்ள வரலாறு காண்க. இதனையே திருவரங்கத்து மாலையிலும் "மீளாப் பதம் புக்க பாலரை நீயன்று மீட்டது"[153] என்று குறிப்பிட்டுள்ளார், பெரியாழ்வார்.

"பிறப்பகத்தே மாண்டொழிந்த
பிள்ளைகளை நால்வரையும்

---

151. பாடல் - 31 152. பாடல் - 29

153, திருவரங்கத்து மாலை - பாடல் 72

154. பெரியாழ். திரு 4.8:2. ஒப்பிடுக பெரி. திரு. 5.8:8

இறைபொழுதிற் கொணர்ந்துகொடுத்
தொருப்பத்த உறைப்பனூர்''[154]

என்ற பாசுரப் பகுதியில் குறிப்பிட்ட வரலாற்றையே நினைந்து கூறுவர் இந்த ஆசிரியர். இதனைத் தவிர, கிருஷ்ணவதாரத்தில் கூனியின் கூனை நிமிர்த்தியமை[155] பாஞ்சாலியின் ஆடையை வளர்த்து மானங்காத்தமை[156] குன்றமேந்திக் குளிர்மழை காத்தமை[157] போன்ற வரலாறுகளையும் காட்டி அடியார்களைக் காக்கும் உண்மையை மேலும் அரண் செய்வர்; சரணமடைந்தவர்க்கு வைகுந்தமும் ஈவர் என்று வலியுறுத்துவர்.[158] இத்தன்மையுடைய எம்பெருமானே திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்பதாகப் பாசுரங்கள் தோறும் பகர்வர்.

**வீரச்செயல்களும் வெற்றிச் சிறப்புகளும்:**

எம்பெருமானுடைய வீரச் செயல்களையும் வெற்றிச் சிறப்புக்களையும் பேசிப் பகவதநுபவம் பெறுவது ஆழ்வார் பெருமக்களின் இயல்பு என்பதை இரண்டாவது சொற்பொழிவில் குறிப்பிட்டேன். ''ஆழி எழ சங்கும்''[159] எனத் தொடங்கும் திருவாய்மொழியால் இதனை அறியலாம். ஆழ்வார்கள் மேற்கொண்ட மரபினைப் பின்பற்றியே நம் திவ்வியகவியும் இறையநுபவம் பெறுகின்றார். அதனை ஈண்டும் விளக்க முற்படுகின்றேன்.

இந்நூலில் திவ்விய கவியின் பாடல்களில் கிருஷ்ணவதார நிகழ்ச்சிகள் அதிகமாகக் கூறப்பெற்றுள்ளன.

---

155. பாடல் - 58
156. பாடல் - 65
157. பாடல் - 66
158. பாடல் – 55
159. திருவாய்-7.4
160. பாடல் - 16; பாடல் 51 ஐயும் காண்க.

—கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்கும்
செம்பவள மாவென்றான் சேர்வு."[160]

[கூடம் - யானைச்சாலை; கம்பம் - கட்டுத்தறி; வளம் மா - மதக் கொழுமையான யானை; காசினி - உலகம்; செம்பவளம் - வாய்; ஆ என்றான் - அங்காத்தான்; சேர்வு-சேர்ந்திருக்குமிடம்]

குவலயா பீடம் மதயானையைக் கொன்றழித்தவனும், பிரளயகாலத்தில் உலகத்தை உண்ணுவதற்காகவும், கிருஷ்ணுவதாரத்தில் வெண்ணெயை உண்பதற்காகவும் சிவந்த பவளம் போன்ற தனது திருவாய் மலரை ஆவென்று திறந்தவனுமாகிய திருமால் சேர்ந்திருக்கும் இடம் வேங்கடமாகும். இங்ஙனமே கிருஷ்ணுவதாரத்தில் குழல் ஊதி ஆநிரைகள் தன்னைச் சுற்றிவரச் செய்தல்,[161] காளிங்கன்மீது நடனமாடி அதன் கொடுமையை அடக்குதல்,[162] பூதனையிடம் பாலமுது செய்து அவள் உயிரையும் உண்ணல்,[163] வன்கஞ்சன் என்னும் சின மாமனைக் கொன்றமை,[164] அதற்கு முன்பதாக மல்லர்களை வதைத்தல்,[165] பாரதப் போரில் பஞ்சவர்க்காக நூற்றுவரைக் காலன்பா லாக்குவித்தல்,[166] அதற்கு முன்னர் அப்போரில் திருவாழியால் பகலவனை மறைத்து இரவு தோன்றச் செய்தல்,[167] பதினாராயிரம் கோபியர்

161. பாடல் - 16
162. பாடல் - 70
163. பாடல் - 41
164. பாடல் - 54
165. பாடல் - 44
166. பாடல் - 19, 52
167. பாடல் - 34
168. பாடல் - 51

களை மணத்தல்,[168] சத்தியபாமையின் பொருட்டு உம் பருலகினின்றும் பாரிசாத மரத்தை இம்பருலகிற்குக் கொணர்தல்,[169] தேர்த்தட்டினின்றும் பார்த்தனுக்குக் கீதை உபதேசித்தல்,[170] தன் பேரன் அநிருத்தன் பொருட்டு வாணனின் ஆயிரம் கைகளையும் அறுத்தல்[171] ஆகிய வீரச் செயல்கள் அநுசந்திக்கப் பெறுகின்றன.

அடுத்து இராமாவதாரச் செயல்களைப் பேசி இனிய ராகின்ருர் ஆசிரியர். அந்த அவதாரகாலத்தில் நிகழ்த்திய கல்வடிவாக இருந்த அகலிகையை அரிவையாக்குதல்[172], மாரீசனை இரண்டாவது முறை வெருட்டல்,[173] அவனைக் காலனுலகிற்கு அனுப்புதல்,[174] கலைவணக்கு நோக்கு அரக்கி மூக்கை நீக்கிக் கரனோடு துடணன் தன் (முத்தலையார் உட்பட) உயிரை வாங்குதல்,[175] வரிநெடு வேல் அரக்கரோடும் இலங்கை வேந்தன் இன்னுயிர் கொண்டு அவன் தம்பிக்கு அரசும் ஈதல்[176], அதற்கு முன்னர் சேதுகட்டுவித்தல்[177] ஆகிய அருஞ் செயல்களை அநுசந்தானம் செய்து அகமகிழ்கின்ருர் அய்யங்கார்.

இவற்றை அடுத்துப் பிரகலாதன் பொருட்டு தூணினின்றும் நரசிங்கம் தோன்றினமையும்,[178] அன்னமாய் நின்று நான்முகனுக்கு அருமறைகளை உபதேசித்தமை

---

169. பாடல் - 28
170. பாடல் - 44
171. பாடல் - 26
172. பாடல் - 21
173. பாடல் - 61
174. பாடல் - 24
175. பாடல் - 49, 64
176. பாடல் - ~~23~~, 42
177. பாடல் - 34
178. பாடல் - 8

யும்,[179] கஜேந்திரனுக்கு அபயமளித்தமையும்[180], கடல் கடைந்து தேவருக்கு அமுதையும் சிவபெருமானுக்கு நஞ்சையும் அளித்தமையும்[181] ஆசிரியர் தமது பாடல் களில் எடுத்துக் கூறிப் பரவசப்படுகின்றார்.

அர்ச்சாவதாரத்தில் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் மாலை ஏற்றல்[182], திருமங்கையாழ்வாரின் திருப்பாசுரங்களை ஏற்றருளுதல்[183] முதலாழ்வார்களின் திருவந்தாதிகளை ஆதரித்தல்[184] ஆகிய செயல்களும் எடுத்தியம்பப் பெறுகின்றன. இத்தகைய வெற்றிச் செயல்களையெல்லாம் நிகழ்த்தியவனே திருவேங்கட முடையானுகக் காட்சியளிக்கின்றான் என்பது ஆசிரி யரின் திருவுள்ளமாகும்.

அன்பர்களே, இதுகாறும் திவ்விய கவி படைத் தளித்த 'திருவேங்கடமாலை' என்ற சொல் மாலையில் கட்டப்பெற்றுத் தமிழ்மணம் வீசும் வாடாமலர்களாகத் திகழும் பல பாசுரங்களின் சுவையில் ஈடுபட்டுத் திளைத் தோம். இந்நிலையில் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்கட்குத் 'திவ்விய கவி' என்ற அடைப் பொருத்தம் நுட்பமாக அமைந்திருக்கும் அருமைப்பாட்டையும் எண்ணி மகிழ்கின்றோம்.

---

179. பாடல் - 21
180 பாடல் - 23
181 பாடல் - 41
182 பாடல் - 60
183 பபடல் - 70
184 பாடல் - 11

# 3. திருவேங்கடக் கலம்பகம்

இனி, 'திருவேங்கடக் கலம்பகம்' பற்றி ஒரு சில கருத்துகளைக் கூற முற்படுகின்றேன். 'திருவேங்கடக் கலம்பகம்' என்பது, திருவேங்கடமலைமீதும் அம்மலையின் மீது திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையான் மீதும் காதல் கொண்ட உள்ளத்தினின்றும் உருக்கொண்ட நூலாகும். பலவகை நிறமும் மணமும் கொண்ட மலர்களால் தொடுக்கப் பெறும் மலர் மாலையினைக் 'கலம்பகம்' என வழங்கும் மரபு ஒன்று உண்டு.

> 'பல்பூ மிடைந்த படலைக் கண்ணி'[185]

என்ற பெரும்பாணாற்றுப் படைத் தொடருக்கு 'பல பூக்கள் நெருங்கிய கலம்பகமாகிய மாலை' என்ற நச்சினார்க்கினியர் உரை இதனை ஒருவாறு விளக்கும்.

> ''களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த,
> அலங்கலந் தொடையல்''[186]

என்ற தொண்டரடிப் பொடிகளின் திருவாக்காலும் இது புலனாகும். இதனை இக்காலத்தார் 'கதம்பம்' என்று வழங்குவர். எனவே, பலவகைப்பட்ட நிறமும், வடிவும், மணமும் உடைய மலர்களால் தொடுக்கப்பெற்ற மலர் மாலை 'கலம்பகம்' என்று பெயர் பெற்றதைப் போலவே, பலவகையான ஓசை நயமுடைய பாக்களும், இனங்

185. பெரும்பாணாற் - வரி 174.
186. திருப்பள்ளி எழுச்சி-பாசுரம்-5.

களும், உறுப்புகளும் பயின்று வரும் நூல் 'கலம்பகம்' என்று பெயர் பெற்றது என்று சொல்லலாம்.

**கலம்பகம்-பெயர்க்காரணம் :**

'கலம்பகம்' என்ற சொல்லைப்பற்றியும் சில கூறுவேன். 'கலம்பகம்' என்பதை வடசொல் என்று குறிப்பிடுவர் ஒரு சாரார். இவர்கள் கலம்+பகம் எனப் பிரித்து, 'பன்னிரண்டு மரக்கால்' எனப் பொருள்படும் 'கலம்' என்னும் சொல்லும் இறைவனது ஆறு குணங் களைக் குறிக்கும் 'பகம்' என்ற சொல்லும் குறிப்பாய்ப் பன்னிரண்டு ஆறு என்னும் தொகையை மாத்திரம் உணர்த்தி, உம்மைத் தொகையாகப் புணர்ந்து பதி னெட்டு உறுப்புகளையுடைய சிற்றிலக்கியத்திற்கு ஏதுப் பெயராயிற்று என்று கூறுவர். இவர்களே கலம்–பன் னிரண்டு, பகம்–அதில் பாதி; அஃதாவது ஆறு என்று பொருள் கொண்டு பதினெட்டு உறுப்புகள் உடையது 'கலம்பகம்' என்றும் உரைப்பர். பதினெட்டு உறுப்பு களாவன: புய வகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்பனவாம். பிறிதொரு சாரார் கலப்பு+அகம் எனப் பிரித்து, மெலித்தல் விகாரம் பெற்றதாக்கி, பல உறுப்பு களும் கலத்தலைத் தன்னிடத்தே யுடையதென அன் மொழிக் காரணக் குறியாகக் கொள்வர். இவர் கருத்துப் படி 'கலம்பகம்' என்பது தமிழ்ச் சொல்லாகும்.

---

187. **ஆறுகுணங்களாவன : ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்பவை.**

அன்பர்களே, இவ்விருசாரார் கொள்கைகளுள் பின்னர்க்கூறிய கொள்கையே வலிமையுடையதாகத் தோன்றுகின்றது. பதினெட்டு உறுப்புகளையுடையது கலம்பகமாயின் பதினெட்டின் மேலும் உறுப்புகள் அமையப் பாடுதல் இலக்கண வரம்பினை மீறியதாகும். ஆயின், கலம்பக நூல்களிலெல்லாம் மேற்குறிப்பிட்ட பதினெட்டு உறுப்புகளேயன்றி ஊர், மடல், கொற்றி யார், பிச்சியார், வலைச்சியார், இடைச்சியார் எனப் பிறஉறுப்புகளும் கலந்து வருதல் உண்டு. ஆதலால், பதினெண் உறுப்பால் பெயர் அமைந்தமையாகக் கூறுவது பொருந்துவதின்றுகின்றது. அவை பிற்கால வழக்கில் வந்ததாகக் கொள்ளினும், இலக்கண வரம் புடைய நூலுக்கு அவ் வரம்பின் மாறுபட்ட முறை நுழைதல்கூடாது. மேற்கூறியவற்றுள் தலைவனது ஊரை சிறப்பிப்பது 'ஊர்' எனப்படும். தலைவன் 'மடலேறுவன்' என்று கூறுவது 'மடல்.' கொற்றி, வைணவ வேடம் தாங்கியவள். பிச்சி, சிவவேடம் புனைந்தவள். 'இடைச்சி யார்' தயிர் மோர் விற்கும் இடைக்குலப் பெண். 'வலைச் சியார்' மீன் விற்கும் வலையர் மகள். இளைஞர் தமது காமக்குறிப்பைப் புலப்படுத்தி இவர்களுடன் உரையாடு வதாகச் செய்யுள் செய்வது கலம்பக ஆசிரியரின் மரபாக இருந்து வருகின்றது.

கலம்பக நூலில் ஒருபோகு கொச்சகக் கலிப்பாவும், வெண்பாவும், கலித்துறையும் முதற் கவியுறுப்பாக அமைய, இடையிடையேமருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை முதலியனவும் விரவி வரும். மடக்குச் செய்யுட்கள் மடங்கி மடங்கி வரும். பதினெண் உறுப்புகளிலாயினும், ஒருபோகு முதலிய பாவிலு

மாயினும், பாவினங்களினுமாயினும், இவற்றில் கலந்து வரும் துறைப் பொருள்களிலாயினும் தொடர்பு என்பதே இராது. அந்தாதித் தொடர்பு மட்டிலும் பாக்களிடையே அமைந்திருத்தலைக் காணலாம். உறுப்புகளிலோ, பாக்களிலோ எதன்பின் எது என்ற தொடர்பும் இருப்பதில்லை.

கலம்பகம் பாடுங்கால் தேவர்க்கு நூறும்; அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதும் என்ற எண்ணிக்கையில் பாக்கள் அமையப் பாடுதல் வேண்டும் என்பது நூல் விதியாகும். இந்த வரம்பிலும் கலம்பக நூலார் நின்றதாகத் தெரியவில்லை. மதுரைக் கலம்பகம் 102 செய்யுட்களும், சிவஞான பாலய தேசிகர் கலம்பகம் 93 செய்யுட்களும், சைன நூலாகிய திருக்கலம்பகம் 120செய்யுட்களும், அரசனுகிய நந்திவர்மன்மீது பாடப்பெற்ற நந்திக் கலம்பகம் 100 செய்யுட்களும் ஆக செய்யுட்களின் எண்ணிக்கை வரம்பிலும் மாறுபட்டிருத்தலைக் காணலாம்.

**கலம்பகப் பயன் :**

இங்ஙனம் 'கலம்பகம்' என்ற நூல் பாடுவதால் பயன்தான் என்ன? ஊகித்துச் சொன்னுல் அது பொழுதுபோக்குக்காகவே பாடப்பெற்ற நூல் என்றே தோன்றுகின்றது. பல கலம்பகங்கள் கடவுள்மீது பாடப்பெற்றுள்ளன என்பது உண்மையே. ஆயினும், அவை அன்பினை வளர்ப்பனவாக அமையவில்லை. கலம்பக உறுப்புகளும் பிற அகப்பொருள் கருத்துகளும் இன்றித் தோத்திர நிலையில் உள்ள பாக்களே அன்பை வளர்ப்பனவாக அமைந்துள்ளன. சில கலம்பகங்கள் எல்லாப் பாக்களி

லும் அன்பையே வளர்க்கும் நோக்கம் உடையனவாகவும் உள்ளன. என்றபோதிலும், அவற்றுள்ளும் சில உறுப்புகள் பொழுதுபோக்குக் குரியனவாகவே அமைந்துள்ளன. புலவர்களும் தம் திறமையொன்றையே வெளிப்படுத்த நினைத்து அன்பை மறந்து விடுகின்றனர். சொல்லடுக்குகளையும் சிலேடைகளையுமே கொண்டவர்களும் இல்லாமல் இல்லை. திருவேங்கடக் கலம்பகத்திலும் சிலேடை பெரிதும் காணப்பெறுகின்றது. எனினும், பெரும்பாலான பாடல்கள் அன்பைவளர்க்கும் பான்மையுடையனவாகத் திகழ்கின்றன. கலம்பகப் பயன் அன்பைப் பெறுதலாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடத் தேவை இல்லை.

நூலாசிரியர் :

நூலைப்பற்றிக் கூறுவதற்கு முன்னர் நூலாசிரியரைப் பற்றிச் சில செய்திகளைக் கூற விரும்புகின்றேன். திருவேங்கடக் கலம்பகத்து நூலாசிரியர் முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார். இவர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் மகள் வயிற்றுப் பேரர். செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பொன்விளைந்த களத்தூர் இவரது ஊராகும். இவர் குழவிப் பருவத்தினராயிருந்த காலத்தில் இவரது அன்னையார் இவருடன் சோழநாட்டுக்குச் சென்று அங்குள்ள திருக்கண்ண மங்கை என்னும் திருமால் திருப்பதியின் அருகிலுள்ளதோர் ஆற்றின் நடுவில் குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்து வரலாயினர். ஒருநாள் எதிர்பாராதவண்ணம் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தாய் அவ்வெள்ளத்திற்கு அஞ்சிக் குழந்தையை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டதாக வரலாறு. அதன்பிறகு அத் திவ்ய தேசத்தில்

எழுந்தருளியிருக்கும் அபிடேகவல்லித் தாயார் எடுத்து வளர்த்து வந்ததாகச் செவிவழிச் செய்தியால் அறி கின்றோம். அன்னையின் கருணையால் இளமையிலேயே முத்தமிழையும் ஐயந்திரிபறக் கற்றுத் துறை போய வித்தகராகத் திகழ்ந்தார். அத் திருப்பதித் தாயார் மீதும் 'திருக்கண்ண மங்கை மாலை' என ஒரு சிற்றிலக்கியம் இயற்றியருளினார். சில ஆண்டுகட்குப் பிறகு தொண்டை நாட்டிற்குத் திரும்பி, வல்லிபுரத்திற்கு அருகிலுள்ள திம்மூரில் வாழ்ந்திருந்தனர்.

இங்ஙனம் வாழ்ந்து வருங்கால் ஒருசமயம் காஞ்சி நகருக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் அத்திகிரி அருளாளரையும் பெருந்தேவித் தாயாரையும் வணங்கி அவர்கள் மீது பஞ்சரத்னம் பாடிப் பரவினார். இந் நிலையில் எம்பெருமானின் திருமாலை தானே இவர் கழுத்தில் விழுந்தது. அதனைக் கண்ணுற்ற வைணவப் பெரு மக்கள் மிகவியப்புற்று இவருக்குக் கோவில் மரியாதைகள் அனைத்தையும் செய்தனர்; அத்திருப்பதியில் சிலகாலம் தங்கியிருக்கச் செய்து உபசரித்தனர். அன்றியும், ஆண்டுக்கிவ்வளவு என்று தானியம் முதலியன அயல் ஊர்களிலிருந்து கிடைக்குமாறும் செய்தனர்.

இவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 450 ஆண்டு கட்கு முன்னர் வாழ்ந்தவர் என்று கூறப்பெறுகின்றது. வைணவ சமயத்தைச் சார்ந்த இவர் செய்துள்ள வேறு நூல்கள் :- பாலூர்க் கலம்பகம், செய்யூர்ப் பிள்ளைத்தமிழ், சில தனிப் பாடல்கள் முதலியனவாகும்.

**பாட்டின்பம் :**

இனி, நூலினுள் புகுந்து சில பாடல்களைப் பயின்று பாட்டின்பத்தில் திளைக்க முற்படுவேன். நூலை முற்ற

ஆய்ந்து இன்பந்துய்த்ததற்குக்காலமும் இடமும் போதா தாகையால், கவிஞரின் செவ்வியை எடுத்துக் காட்டு முகத்தான் கலம்பக உறுப்புகளுள் ஒரு சிலவற்றுக்குரிய பாக்களை ஆய்ந்து இன்பந் துய்ப்பதே சாலும் எனக் கருதுகின்றேன். அவற்றைத் தமிழ் அன்பர்கட்கு இன்சுவை விருந்தாக அளிக்க முயல்கின்றேன்.

முதற்பாடல் :

இப்பாடல் தரவும் தாழிசையும் அராகமும், மீண்டும் தாழிசையும் அம்போதரங்கங்களும் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவால் அமைந்தது.

"மலர்மேவு திருமகளும் வாட்டடங்கண் நிலமகளும்
மலர்மேவு குழல்நீளை அணங்குமிரு மருங்கிருப்ப
வலனேங்கு பரமபத மாமணிமண் டபத்திலமர்
நலனேங்கு பரம்பொருளாய் நான்குவியூ கமுமாறய்
உபயகிரிப் புயராம நெடுகண்ணன் முதலான
விபவவுரு வமுமெடுத்து வீறுமுயிர் தொறுங்குடிகொள்
அந்தரியா மியுமான தமையாமே எளிதாக
விரிந்தநெடு வேங்கடத்தில் எல்லோரும் தொழநின்றய்"

என்பது எட்டடித் தரவு. இதில் எம்பெருமானுடைய பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளின் தன்மை கூறப்பெறுகின்றது. பரம் முதலிய நான்கு சொரூபமும் காலவடைவிலே உயிர்களை உய்விக்க மாட்டாமையை நோக்கி; எம்பெருமான் தனது இயல்பான பெருங்கருணையால் அர்ச்சை வடிவ மாகத் திருவேங்கடத்தில் நின்ற கோலமாகச் சேவை சாதிக்கின்றுன் என்பதை இப் பகுதியில் புலப்படுத்து கின்றார் ஆசிரியர்.

அடுத்து வரும் ஆறு ஈரடித் தாழிசைகளிலும், மாவலி யிடம் மூவடிமண் இரந்து பெற்றமை, பாலகனாய் ஏழுலகுண்டு ஆலிலையில் துயின்றமை, நான்முகனுக்கு நான்மறை உணர்த்தினமை, கண்ணனாக அவதரித்த காலத்தில் சாந்தீபிநி முனிவரிடம் கல்விபயின்றமை, மத்துறு கடைவெண்ணெய் களவினில் உண்டதால் உரலினில் யாப்புண்ட எளிமை, திரிவிக்கிரமாவதாரத்தில் உற்பத்தியான கங்கையின் வரலாறு, அந்தக் கங்கையைக் குகனது அம்பியின் மூலம் கடந்தமை போன்ற செய்திகளைக் கூறும் முகத்தான் இறையநுபவத்தில் ஆழங்கால் படுகின்றார் ஆசிரியர். இப்பகுதியை அடுத்தனவாகவுள்ள நான்கு ஈரடி அராகங்களிலும் காளியன் முடிமீது திருநடனம் புரிந்தமை, குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தமை, பாஞ்சாலியின் துகிலுரியப்பெற்றபோது அதனை வளரச் செய்து அவளது கற்பைக் காத்தமை, ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழிதொட்டமை ஆகிய எம்பெருமானின் வெற்றிச் செயல்களை எண்ணி எண்ணி இனியராகின்றார். இவற்றினை மீண்டும் அடுத்து வரும் ஆறு ஈரடித் தாழிசைகளிலும், எம்பெருமானின் ஆச்சரியமான திருவிளையாடல்களைச் சிந்தித்து மகிழ்கின்றார். மச்சாவதார காலத்தில் ஒரு புற முள்ளினிடத்து அடங்கிக் கிடந்த பெருங்கடலை பல மலைகளால் அணை கட்டியதும், திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதளித்த பெருமான் ஆயர்பாடியில் வெண்ணெய் பெறும்பொருட்டுக் கூத்தாடியதும், நான்முகனை நாபிக் கமலத்தில் பிள்ளையாகப் பெற்ற எம்பெருமான் தசரதனதுபிள்ளை என்று பெரிய திருநாமத்தைப் பெற்றதும், உம்பர் முதல் யாவர்க்கும் உயர்வாழ்வைப் பணித்தருளுகின்றவன் இம்பர் தரும் காணிக்கைப் பொருள்களை இச்சியா நின்றதும், தொண்டைமான் சக்கரவர்த்தி

அருச்சித்துத் திருவடிகளில் இடும் பொன் மலர்களைக் காட்டிலும் திருவேங்கட மலையின் வடக்கில் குரவை என்னும் ஊரிலுள்ள பீமன் என்னும் குயவன் அருச்சித்து இடும் மண் மலர்களை மிகவும் உவந்து ஏற்றதுமான திருவிளையாடல்களின் பெருமையை நினைந்து போற்றுகின்றார்.

இவற்றைத் தொடர்ந்துவரும் இரண்டு நாற்சீர் ஈரடி அம்போதரங்கங்களிலும் பொன்மயமான மேருமலையின்மீது ஊர்ந்து வரும் காளமேகம்போல வினதை மகன் கருடன் மீது ஏறிவருகின்ற பெருமிதத்தையும், கரிய பெரிய கடலின்மீது பொருந்திய பாசிபோல் அழகிய திருமால் பால் கிடக்கும் நறுமணங்கமழும் திருத்துழாய்மாலையின் பெருமையையும் வியந்து போற்றுகின்றார். அடுத்து வரும் நான்கு ஓரடி அம்போதரங்கங்களிலும் எம் பெருமானின் இரண்டு திருக்கைகளிலும் இரு சுடர்களைத் தாங்கி நிற்கும் பெருமை, இரட்டை மருத மரங்களிடையே தவழ்ந்து சென்ற எளிமை, அருமறைகளின் திருமுடியில் அமர்ந்திருக்கும் அருமை, உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் தேனாக அமர்ந்திருக்கும் இனிமை - ஆகிய பெருங்குணங்கள் பேசப் பெறுகின்றன. இவற்றினை அடுத்து வரும் எட்டு இருசீர் ஓரடி அம்போதரங்கங்களிலும் பூமியை இடந்தமை, கடலில் பள்ளி கொண்டமை, சகடு உதைத்தமை, பகடு கொன்றமை, கருணை சுறந்தமை, மருள் ஒழித்தமை, அளவற்ற திருக்குணங்களை உடைமை, உலகினை உகந்தமை போன்ற வெற்றிச் செயல்களைப் பேசி மகிழ்கின்றார் ஆசிரியர்.

தனிச்சொல்லை அடுத்துவரும் நேரிசை ஆசிரிய சுரிதகத்தில் திருவேங்கட முடையானைப் பலபடப் புகழ்ந்து

'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும்' பேறு கிட்டும்படி அருள்பாலிக்கும்படி வேண்டுகின்றார். அடுத்து வரும் செய்யுள் ஒன்றில் 'நாக்கொண்டு மானிடம் பாடாது' இறைவனையே பாடும் வரம் தருமாறு இறைஞ்சுகின்றார்.

''பொருளடுத்த முதிர்தீஞ்சொல் பூந்தமிழாற்
சிறியேன் இப் புவியில் போகம்
மருளடுத்த மாந்தர்தமைப் பாடாதுன்
புகழ்பாட வரந்தந் தாள்வாய்
அருளடுத்த கடைக்கண்ணா ! அம்புயப்பெண்
அடுத்துறையும் அகன்ற மார்பா,
இருளடுத்த மலர்ச்சோலை யினமடுத்த
வடமலைவாழ் எம்பி ரானே.''[188]

[பூ தமிழ்-அழகிய தமிழ்; போகம்-சிற்றின்பம்; மருள்-மயக்கம்; அருள்-கருணை; அம்புயப் பெண்-பெரிய பிராட்டி; இருள்-அடர்ந்த இருள்; இனம்-கூட்டம்.]

எம்பெருமாட்டியுடன் பொருந்தியிருக்கும் எம்பெருமானையே வழிபடவேண்டும் என்ற வைணவ தத்துவம் இப்பாட்டில் அமைத்து கிடப்பது கண்டு மகிழத்தக்கது. 'அகலகில்லேன் இறையும்' என்று அலர்மேல் மங்கை உறைமார்பனையே சரணமடைந்த நம்மாழ்வாரின் தத்துவமே இந்த நூலின் பரசுரங்கள்தோறும் நிழலிடுவதைக் கண்டு அநுபவிக்கலாம்.

---

188 பாசுரம்-4,

**இரங்கல் :**

*தலைவியொருத்தி திருவேங்கடமுடையான் மீது பெருங்காதல் கொள்ளுகின்றாள். இதனைச் செவிலித்தாய் எப்படியோ அறிந்து கொள்ளுகின்றாள். தோழிமார்களை அழைத்து அவர்களிடம் தலைவியின் தன்மையை இரங்கிக் கூறுவதாக அமைந்த பாடல் இது:*

"ஒளிக்குங்கு மக்கொங்கை யுகளத்தின் மடவீர்!
உத்துங்க சிகரத்தின் ஒருசேட கிரிமால்
அளிக்கும் பெருங்காமம் உள்ளத்தி னுள்ளே
அடங்காது கொல்லோ? விடங்காலும் விழியாள்
கிளிக்கும் குயிற்கும் சிகிக்கும் சகிக்கும்
கீதத் தளிக்கும் கபோதத் திரட்கும்
களிக்கின்ற பூவைக்கும் அன்னங்க ளுக்கும்
காருக்குமே சொல்லும் ஊரென் சொலாதே![189]

*[ஒளி-பிரகாசமான; உத்துங்க-உயர்ந்த; ஒரு-ஒப்பற்ற; சேடகிரி-சேஷாசலம்; மால்-திருமால்; விடம் காலும்-நஞ்சை உமிழும்; சிகி-மயில்; சகி-தோழி; கீதத்து அளி-இசையையுடைய வண்டுகள்; கபோதம்-மாடப்புறா; பூவை-நாகணவாய்ப்புள்; கார்-மேகம்; ஊர்-ஊர்மக்கள்.]*

*"பிரகாசமுடையனவும் குங்குமக் குழம்பை அணிந்தனவுமான கொங்கைகளையுடைய இளம் பெண்களே உயர்ந்த கொடுமுடிகளையுடைய அரவக்கிரியின்மீது எழுந்தருளியுள்ள எம்பெருமான் என் மகளுக்குக் கொடுத்தருளிய பெருவேட்கை உள்ளத்தினுள் அடங்க மாட்டாது போலும். நஞ்சையுமிழும் நயனங்களையுடைய*

189. பாசுரம்-43.

இவள் கிளிகளுக்கும், குயில்களுக்கும், மயில்களுக்கும், தோழியர்க்கும், இன்னிசை முரலும் வண்டுகளுக்கும் மாடப்புறுக்களின் கூட்டத்திற்கும், துணையுடன் கூடி மகிழும் நாகணவாய்ப் பறவைகட்கும், அன்னங்கட்கும், ஏனை மேகங்களுக்கும்கூட, தனது வேட்கையினை அடக்காமல் வெளியிடுகின்றாள். இந் நிலையில் ஊர் வாயை மூடுவதற்கு ஒரு விரகு உண்டோ?'' என்று செவிலித்தாய் இரங்கிக் கூறுகின்றாள். 'காமம் மிக்க கழிபடர் கிளவி' களாகத் தன் மகள், கிளி முதலியவற்றிடம் கூறுவதைக் கேட்ட செவிலித்தாய் தன் மகள் நிலைக்கு இரங்கிக் கூறுவதாக அமைந்த இப் பாடல் தலைவியின் பகவத் காமத்தையே நுவல்கின்றது. தலைவி கூற்றாக வரும் இன்னொரு பாடல் நம் சிந்தைக்குப் பெருவிருந்தாக அமைகின்றது. அப்பாடலைப் பின்னர்ப் பொருத்தமான ஓரிடத்தில் காட்டி விளக்குவேன். இங்ஙனம் இந்நூலில் 'இரங்கல்' துறையில் பதின்மூன்று பாடல்கள்[190] காணப் பெறுகின்றன. அவை யாவும் வெவ்வேறு பாவடிவு பெற்றுத் திகழ்கின்றன.

**காலம் :**

*கார்காலத்தில் எங்ஙனம் தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்வது என்று தலைவி இரங்கி மொழிவதாக அமைந்தது இப்பாடல்.*

''ஆலும்அளி அங்கண்வனம் மலர்முலைபாய் காலம்
அவர்பிரிவால் அங்கண்வனம் மலர்முலைபாய் காலம்
கோலமயில் இனம்பரிவிற் குனித்துவரும் காலம்
கொடியேன்முன் மதன்பிரிவிற் குனித்துவரும் காலம்

190. பாசுரங்கள்-5, 13, 14, 25, 26, 32, 35, 36, 39, 43, 68, 69, 75.

நீலமணி வண்ணன்அம்பொன் நிழல்நாகம் அரையின்
நெடுமாயன் மலர்ச்சோலை நிழல்நாகம் வரையின்
சாலுமழைக் குலம்பலகால் தடித்துவிடும் காலம்
தழற்கொழுந்தாம் எனப்பலகாற் றடித்துவிடும் காலம்'' [191]

[ஆலும்-ஆரவாரிக்கும்; அளி–வண்டு; மலர் முலை–முல்லை மலர்கள்; கண் வனம்-கண்களின்நீர்; அலர் முலை-அடிபரந்த கொங்கை; கோலம்-அழகிய; பரிவு-அன்பு; குனித்து-கூத்தாடி; பரி வில்-கரும்பு வில்; குனித்து-வளைத்து; நாகம்-பீதாம்பரம்; நாகம்-மலை; சாலும்-மிகுந்த; பல கால்-பல முறை; தடித்து விடும்-மின்னலை வீசுகின்ற; பல காற்று-வலிய காற்று.]

"ஆரவாரிக்கும் வண்டுகள் அம்மலையின்கண் உள்ள சோலைகளில் முல்லைமலர்களில் பாய்கின்ற காலமும், கணவன் பிரிவால் தலைவியின் கண்ணீர் அவளது அடி பரந்த கொங்கைகளில் பாய்கின்ற காலமும், அழகிய மயில் கூட்டங்கள் அன்புடன் ஆடிவரும் காலமும், என் எதிரில் காமன் கரும்பு வில்லை வளைத்துப் போர் செய்யும் காலமும், நீலமணி போன்ற திருநிறத்தையுடையவனு கிய அழகிய பொன்மய பீதக ஆடையை உடுத்த திரு வரையையுடைய மாயனது பூஞ்சோலைகளின் சாயையை யுடைய அரவக்கிரியில் மேகங்களின் கூட்டம் பன்முறை மின்னலை வீசுகின்ற காலமும், நெருப்புச் சுவாலை என்னும் படி வலிய காற்று வீசி வருகின்ற காலமும் ஆகிய கார் காலத்தில் யான் எங்ஙனம் தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்வது?" என்று இரங்கிக் கூறுகின்றாள் தலைவி.

---

191. பாசுரம்-55.

தவம்:

உடலை வருத்தும் தவத்தை விலக்கிப் பகவானைத் தியானிக்குமாறு வற்புறுத்தல் 'தவம்' என்னும் கலம்பக உறுப்பின் இலக்கணமாகும்.

"மானிடர்காள் கானிலுடல்
வாடப் பெருந்தவம் செய்(து)
ஏனிடருற் றீர்?பணிவெற்(பு)
எம்பெருமான்— தானே
தவமதுவே வீசுதுழாய்த்
தாமனடி உள்ளின்
தவமதுவே யாவருக்கும்
தான்"[192]

[கான்-காடு; இடர்—துன்பம்; பணிவெற்பு-சேஷாசலம்; தாமன் - மாலையையுடையவன்; உள்ளின் - தியானித்தால்.]

இதில், "எம்பெருமானை அடைவதற்கு விரோதியான உடல் தொடர்புகளை அறுத்துக்கழித்து எம்பெருமானைப் பெறவேண்டுமென்று உடலை வருத்தித் தவம் செய்தல் வேண்டா; அடியார் பக்கல் மிக்க அருளுடையவனாகிய எமது திருவேங்கடமுடையானைச் சென்று சேர்ந்து விரோதிகளனைத்தையும் போக்கப் பெறுவீர்" என்று தவம் விலக்கித் தண்ணளிசேர் அண்ணலிடம் தளர்வு இல் நினைவினரை ஆட்படுத்தும் தகவுடைமையைக் காண்கின்றோம்.

குறம் :

தலைமகனிடத்துக் காதல் கூர்ந்த தலைவி அவனைப் பிரிந்திருக்கும்பொழுது செய்வது அறியாது மயங்கி

192. பாசுரம்-20.

நிற்கும் நிலையில், குறிகூற வல்ல குறத்தியொருத்தி அவளை அடைந்து குறி தேர்ந்து, தலைவன் வரவு கூறித் தலைவியை மகிழ்விப்பதாகச் செய்யுள் புனைவது 'குறம்' என்னும் உறுப்பாகும்.

"எந்தவி தங்களும் அறிகுற மகள்நான்;
இங்கெதிர் வந்தினி எனதித மொழிகேள் :
அந்தமு றந்தனில் நவமணி கொடுவா;
அன்பில் அணிந்திட அழகிய கலைதா;
கந்தமி குந்த தனந்தனில் குறியே
கண்டனன் நின்று;அலர் கமழ்குழல் மடவாய்!
வந்தெவ ருந்தொழ வடமலை தனில்வாழ்
வண்துள வன்தினம் மருவுவன் உனையே!"[193]

[அறி-அறிந்த; இதம்மொழி-நல்வார்த்தை; நவமணி-புதிய நெற்கள்; கலை-ஆடை; கந்தம்-மணம்; தனம்-கொங்கை; அலர்-மலர்; குழல்-கூந்தல்; வடமலை-வேங்கடமலை; துளவன்-திருத்துழாய் மாலையணிந்தவன்; தினம்-நாள்தோறும்; மருவுவன்-கூடுவன்.]

இதில், "மணம் வீசும் மலர்களை அணிந்த கூந்தலையுடைய நங்கையே, நான் குறி சொல்லும் வகைகள் எல்லாவற்றையும் அறிந்த குறமகள். இங்கு என் எதிரில் வந்து என் நன்மொழியைக் கேட்பாயாக. அழகிய முறத்தில் புதுநெல்லைப் பரப்புக. யான் உடுத்திக் கொள்ளும் பொருட்டு அழகிய ஆடையொன்றினைத் தருக. மணம் மிக்க நின் கொங்கைகளில் நல்ல குறிகளை நிதானித்துப் பார்த்தேன். யாவரும் தொழுவதற்காக வடமலையில் எழுந்தருளியிருக்கும் திருத்துழாய் மாலையணிந்த திருவேங்கடமுடையான் உன்னை நாள்தோறும்

193. பாசுரம்-48.

வந்து கூடுவன்'' என்று குறிசொல்லி தலைவியை மகிழ் விக்கின்ருள் குறத்தி யொருத்தி.

மறம்:

தமது மகளை மணம் பேசும்படி அரசரால் அனுப்பப் பெற்ற தூதனை நோக்கி, மறவர்கள் மணம் மறுத்து அவ்வரசரை இகழ்ந்து பேசினதாகச் செய்யுள் செய்வது, 'மறம்' என்ற கலம்பக உறுப்புக்கு இலக்கண மாகும்.

''மறவர் கொம்பை வினவ வந்த
இறைவர் தூத! கேளடா
வடமலைக்குள் நின்ற மாயர்
தடம லர்க்கண் அருளினுல்
விறல்பொ ருந்தும் எங்கள் கொம்பு
வீறும் உங்கள் ஆனையின்
வெண்மை பெற்ற கொம்பு போல
விற்ப தோவ ரைந்திடும்
திறன லடந்த கொம்பு போல
விதியி னெவ்வி னத்தையும்
சேருமோசு வர்க்க லோக
தாரு விட்ட கொம்பு போல்
அறமி குந்த சுடர்தொ டப்பொ
றுக்கு மோசொல் அரசர்பால்
ஆன கொம்பு தண்டி கைக்க
மைந்த கொம்பு சரதமே.''[194]

[கொம்பு-கொம்பு போன்றவள்; இறைவர்-அரசர்; வடமலை-திருவேங்கடம்; மாயர்-எம்பெருமான்; விறல்-

---

194. பாசுரம்-27.

மகிமை; வீறும்-பெருமை பெற்ற; விற்பதோ-விற்கப் படுவதோ?; வரைந்திடும்-அறுக்கப்படும்; விதியின்-கட்டளையின்படி; கொம்பு-கிளை; அறம்-நல்வினை; சுரர்-தேவர்; தண்டிகை-சிவிகை; சரதம்-உண்மை.]

"வேடர்குலத்து உதித்த பூங்கொம்பு போன்ற எங்கள் மகளை மணம் பேசவந்த அரசர் விடுத்த தூது வனே! நான் கூறுவதைக் கேட்பாயாக. மலையில் எழுந் தருளியிருக்கும் எம்பெருமானது திருவருளினால் மகிமை பெற்றவள் எங்கள் செல்வி. அவள் உங்கள் யானையின் கொம்புபோல் விற்கப் பெறும் பொருள் என நினைத்தீர் களோ? (அன்று). அறுக்கப்பெறும் மரக் கொம்புபோல கட்டளையின்படி எந்த மரத்தினத்தையும் அடையுமோ? (அன்று). உம்பர் உலகிலுள்ள கற்பகத்தரு வெளிவிட்ட கிளைபோல தேவர்கள் தொடவும் பொறுக்குமோ? (பொருது). அப்பனே, சொல்வாயாக. அரசர்க்குப் பொருந்திய கொம்பு சிவிகைக்குப் பொருந்திய வளைந்த கொம்பேயாகும். இஃதே உண்மை என்பதை அறிவா யாக" என்று இகழ்ந்து உரைக்கின்றனர் மறவர்கள்.

இதில் பிற கடவுளர்களைச் சிறிதும் மதியாது திரு மாலடிக்கே தொண்டு பூண்ட தமது மன உறுதியினை வெளியிடுகின்ற குறிப்பு எண்ணி மகிழத்தக்கது.

**பாண்:**

தலைவியை மணந்த தலைவன் பரத்தையிடம் சென்று இன்பம் நுகர்ந்து மீண்டமை உணர்ந்த தலைவி ஊடல் கொண்டு கதவிற்குத் தாழிடுகின்றாள். அவளை வாயில் வேண்டும்படி தலைவன் பாணனை ஏவுகின்றான். அப் பாணன் தலைவியிடம் சென்று இனியதொரு பாடலை வீணையில் இசைத்து அவளது ஊடலைத் தணிக்க முயல்

கின்றான். அவ்வமயம் தலைவி பாணனை வெகுண்டு கூறு வதாக அமைந்தது இப்பாடல்.

"தூரச் சுரங்கள்பல சேர்க்கும்
துணைநீ அறிவாய் என இருந்தேன்;
வீரத் திருவேங் கடத்தானை
வேற்று மடவா ரொடுசேர்த்தாய்;
ஈரக் கடல்சூழ் உலகிலுனக்(கு)
இணையார் பாண! இமிழிசைக்கோல்
ஆரப் பெருஞ்சீர் வீணைவிடுத்
தகன்றிவ் வீணை அடுத்தாயே."[195]

[தூர-ஒன்றோடொன்று தூரமாகவுள்ள; துணை-அளவை; ஈர-குளிர்ந்த; இணை-சமமானவர்; இமிழ்-இனிமையாக ஒலிக்கும்; இசை-ஸ்வரம்; கோல்-நரம்புகள்; ஆர்-அமைந்த; அ-அத்தன்மையதான; சீர்-சிறப்பு; வீணை-இசைக் கருவி; அகன்று-விட்டுவிலகி; வீணை-பயனில் செயல்.]

இதில், "பாணனே! சுரங்களை இசைத்துப் பாடும் திறனைமட்டிலும் உடையவன் என உன்னை நினைத்திருந் தேன். அதுவேயன்றி நீ பராக்கிரமமிக்க திருவேங்கடத் தானைவேறு மகளிருடனும் சேர்த்துவைத்தாய். ஆதலின் இவ்வுலகில் உனக்கு நிகர் யார் உளர்? இனிமையாக ஒலிக்கும் சுரங்களையுடைய நரம்புகள் அமைந்த வீணையை விட்டு விலகி, இந்த வீணையை (பயனில் செயலை) மேற் கொண்டாய்" என்று பாணனுடன் வெகுண்டு கூறு கின்றாள் தலைவி.

195. பாசுரம்-60.

**சித்து:**

இரசவாதிகள் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் அமைப்பது 'சித்து' என்னும் உறுப்பின் இலக்கணம் ஆகும்.

"உரையாலும் மனத்தாலும் அளக்கொ ணாத
ஓங்குபுகழ் வேங்கடவன் உபய பாதம்
மரையாசைச் சித்தரியாம் பலநாகத் தில்வலிய
வாகிய இரும்பை வருவித் தந்தக்
கரையாத இரும்பையெல்லாம் பணங்க ளென்னக்
காண்பித்தோம்; அவ்வளவோ? கரிய தோலும்
அரையாரத் தோலுடுத்தோன் இடமும் கைகொள்
அச்சிலையும் மாதங்கம் ஆக்கி னேமே."[196]

[உரை-வாக்கு; உபயம்-இரண்டு; மரை-தாமரை; சித்தர்-சித்தராவேம்; யாம்-நாங்கள்; நாகம்-துத்த நாகம், பாம்பு; வருவித்து-உண்டாகச்செய்து; கரை யாத-உருகாத; அரை—இடுப்பு; தோல்-புலித்தோல்; இடம்-இருப்பிடம், இடப்பக்கம்; சிலை-கல், வில்; மா தங் கம்-மாற்றுயர்ந்த பொன், யானை; மாது அங்கம்-உமை யின் திருமேனி.]

இதில், "நாங்கள் வாக்கால் சொல்லியும், நெஞ்சால் எண்ணியும் அளவிடமுடியாத உயர்ந்த புகழையுடைய திருவேங்கடமுடையானது இணையடிகளினிடத்தே விருப் பத்தையுடைய சித்தராவோம். பல துத்த நாகங்களில் வலிமையுடையனவான இரும்புகளை உண்டாகச் செய்து உருகாத அந்த இரும்புகளை எல்லாம் செம்பு நாணயங் களாகக் காட்டினேம் (வலிமையுடைய பாம்புகளிடத்

196. பாசுரம்-70

தில் வலிமையுடையனவான பெரிய படங்களை[197] எழும்பச் செய்து, அந்த உருவழியாத பெரிய படங்களையெல்லாம் பணங்கள் என்னும் பெயருள்ளவாகக் காண்பித்தோம்). அதுமட்டுமா? கறுப்பான தோலையும் (உடுக்க ஆடையின்றி)[198] இடையிலே புலித்தோலையும் உடுத்துக்கொண்டுள்ள சிவனது இருப்பிடமாகிய வெள்ளி மலையையும், அவன் கையில் கொண்டுள்ள அந்தக் கல்லையும் சிறந்த மாற்றுயர்ந்த பொன்னுகச் செய்தோம். (கருநிறமுள்ள யானையையும் 'மாதங்கம்' என்று வடமொழிப் பெயரை உடையதாகச் செய்தோம்; சிவனது இடப்பக்கத்தையும் உமாதேவியினது திருமேனி[199]யாகச் செய்தோம்; அல்லது சிவனது கைலாய மலையையும் வெண்பொன்[200] மயமாகச் செய்தோம். அச் சிவன் திரிபுர சங்கார காலத்தில் கையிலே கொண்ட வில்லாகிய அந்த மேருமலையையும் சிறந்த பொன் மயமா[201]கச் செய்தோம்") என்று இரசவாதிகள் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுகின்றனர்.

தழை :

தலைமகன் தன் குறையை முடித்து வைக்கும் பொருட்டுத் தோழியிடம் தான் கையுறையாகக் கொணர்ந்து கொடுத்த தழையை அவள் அருமையாக ஏற்றுக் கொள்ளுகின்ருள். அவள் தலைமகளிடம் சென்று அவள் குறிப்பறிந்து தழையை வியந்து உரைத்து அதனை ஏற்றுக் கொள்ளும்படி செய்கின்ருள். பின்னர்த் தலை

197. 'இரு பை' எனப் பிரிக்க. பணங்கள்-பாம்பின்பட
198. தோல்-யானை. மாதங்கம்-யானை.
199. மாது+அங்கம்-உமையின் திருமேனி.
200. வெண்பொன்-வெள்ளி.
201. மா தங்கம்-சிறந்த பொன்.

மகனிடம் போந்து அத்தழையினிடத்து உண்டான தலை மகளது விருப்பத்தைக் கூறுகின்றாள். இதுவே 'தழை விருப்புரைத்தல்' என்ற கலம்பக உறுப்பாகும்.

"அடுத்தாரை வாழ்விக்கும் மால்வட
வேங்கடம் அன்ன மன்னா,
கொடுத்தாய் நறுந்தழை; யான்கொண்டு
போந்து கொடுத்தவுடன்,
எடுத்தாள்; விழியொற்றிக் கொண்டாள்;
கைப்போதினொடு ஈர்ந்தழைமேல்
படுத்தாள்; நிற்கும்பொழுது ஓர்கொம்பு
போன்றனள் பால்மொழியே".[202]

[அடுத்தார்-சரணமடைந்தோர்; மால்—திருமால்; அன்ன—ஒத்த; நறு—நல்ல; விழி—கண்; கை போது—கையிலுள்ள மலர்; ஈர்—குளிர்ந்த; பால்மொழி—இனிய சொல்.]

என்ற பாசுரத்தில் "தன்னைச் சரணம் அடைந்தவர் களை வாழ்விக்கும் மாலவன் குன்றத்தை யொத்த தலைவனே, நீ நல்ல தழையை என்னிடம் கொடுத்தா யன்றோ? நான் அதனை எடுத்துச் சென்று கொம்பு போன்றவளும் பால்போல் இனிய சொல்லையும் உடைய வளுமாகிய என் தலைவியிடம் சேர்ப்பித்தேன். பெற்ற வுடன் அவள் அத்தழையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்." கையிற் கொண்டுள்ள மலருடனே அத்தழையையே தலைவனாகப் பாவித்து அநுபவித்த திறத்தினைப் புலப்படுத்துகின்றாள் தோழி.

202. பாசுரம்-61

**ஊசல் :**

ஆசிரிய விருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல் 'ஆடீரூசல்', 'ஆடாமோவூசல்' 'ஆடுகவூசல்' என்று ஒன்றால் முடிவுறக் கூறுவது இத்துறையாகும்.

''பொருளலா விடயத்தைப் பொருளென் றெண்ணிப்
போவதுமீள் வதுமாயெப் பொழுதும் ஆடும்
மருளுலா மனவூசல் சுத்தம் செய்து
மாறுது வளர்பத்தி வடத்தைப் பூட்டி
இருளைநேர் குழல்நிலப்பெண் அலர்மேல் மங்கை
இருவரொடு மேயதன்மேல் ஏறி நின்று,
மருளினுன் மெள்ளஅசைந் தாடீர் ஊசல்
ஆதிவட மலைமாயர் ஆடீர் ஊசல்.''[203]

[எண்ணி-திரிபாகக் கருதி; மீள்வது-மீண்டு வருவது; மருள்-மயக்கம்; பத்தி-பக்தி; வடம்-கயிறு; இருளைநேர்-இருட்டையொத்த; நிலப்பெண்-பூமிப்பிராட்டி; அலர் மேல் மங்கை-பெரிய பிராட்டி; வீறும்-ஒப்புயர்வில்லாத சிறப்புற்ற.]

"வடமலையில் எழுந்தருளியிருக்கும் மாயவரே, நிலையில்லாமையால் பொருள்களாக மதிக்கத்தகாத செல்வம் இளமை யாக்கை முதலிய பொருள்களை நிலையுடைப் பொருள்கள் என்று திரிபாகக் கருதி, அவற்றினிடத்துச் செல்வதும் மீண்டு வருவதுமாகி எப்பொழுதும் ஆடுகின்ற, மயக்கம் பொருந்திய எனது மனமாகிய ஊஞ்சற் பலகையை, நீவிர் தூய்மையாக்கி, மாறுபடாமல் மேன்மேல் வளர்கின்ற பக்தியாகிய கயிற்றுடன் சேர்த்து, பெரியபிராட்டி பூமிப்பிராட்டி என்ற இரு தேவிமாருடன் அம் மனவூசலின் மீது ஏறி

---

203. பாசுரம்-77.

வீற்றிருந்து ஒப்புயர்வற்ற கருணையினால் மெதுவாக அசைந்து ஊஞ்சல் ஆடுவீராக" என்று வேண்டுகின்றார் ஆசிரியர் இப்பாசுரத்தில்.

**வண்டு :**

தலைவனைப் பிரிந்த தலைவி அப்பிரிவைப் பொறுது தலைவனிடம் வண்டைத் தூதுவிடுவதாகச் செய்யுள் புனைவது 'வண்டு' என்னும் கலம்பக உறுப்பாகும். இது 'வண்டோச்சி மருங்கணைதல்' என்ற அகப்பொருள் துறையாகும்.

"உறவே நுமக்கு வண்டீர்!
 வேங்கடேசர்பண்டூ தியநல்
நிறவேய் அனையசொல் மான்இடை
 போம்படி நித்தமுலை
அறவே பருத்தன நீரோ
 குழலில் அமர்ந்துமலர்
நறவேயுண் டாடுகின்றீர் நடுப்போம்
 விண்டு நண்ணு விரே."[204]

[பண்டு–முற்காலத்தில்; ஊதிய-வாசித்த; வேய்-மூங்கில்; இடை-இடுப்பு; நித்தம்-நாள்தோறும்; அறவே-மிகவும்; நீரோ-நீங்களோ; குழல்-கூந்தல்; நறவு-தேன்; நடு-நடுவுநிலைமை; போம்-அழியும்; விண்டு-(இவளை) விட்டு; நண்ணுவீர்-செல்லுங்கள்.]

"வண்டுகாள், எம் தலைவியிடம் உமக்குஅன்பு இல்லை. குழலின் இசையை யொத்த சொல்லும் மான் நோக்கு போன்ற பார்வையும் உடைய இவளது இடுப்பு அழியும்படி இவளது கொங்கைகள் நாள் தோறும்

204. பாசுரம்-46.

பருத்துவருகின்றன. நீங்களோ இவளது குழலில் அமர்ந்து அவள் சூட்டியுள்ள மலர்களின் நறவு அருந்திக் களிக்கின்றீர்கள். When Rome was burning, Nero was fiddling என்ற மாதிரியல்லவா உளது நும் செயல்? இவள் இடை முறிந்து விடுமாதலின், நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று இதில் தலைவன் கூறுகின்ருன். பொழுதுபோக்குக்குரியனவாகப் பாடும் இத்தகைய கலம்பக உறுப்புகள் புலவர் திறமையை வெளிப்படுத்தத் துணைசெய்தாலும் நூலின் நோக்கமாகவுள்ள அன்பை—பக்தியை—குறைப்பனவாகவும் அமைந்து விடுகின்றன. ஆனால், இந்த நூலில் 'இரங்கல்' துறையில் அமைந்த 'வண்டு விடுதூது' சிறப்பாக அமைந்துள்ளது. அதனையும் ஈண்டுக் காட்டுவேன்.

"தெரியாமல் மதுவருந்தும்
சிறையளியைத் தூதுவிட்டேன்
தரியாழி வேங்கடமால்
தனக்கென்மால் சாற்ருமல்
கரியான்அங் கவன்கரங்கால்
கண்கனிவாய் கமலமெனப்
பரியாநின் றவைக்கெதிரே
பறந்தெனையும் மறந்ததுவே."[205]

[மது-தேன்; சிறை-இறகு; அளி-வண்டு; தரி ஆழி-ஏந்திய சக்கரம்; மால் தனக்கு-திருமாலுக்கு; என் மால்-எனது மோகம்; கரம்-கை; கமலம்-தாமரை; பரியா நின்று-அன்புகொண்டு.]

இதில்,"சிறிதும் சிந்தியாது மது அருந்தும் வண்டினை எம்பெருமானிடம் தூது அனுப்பினேன். அஃது அத் திரு

205. பாசுரம்-26.

மாலிடம் என் காதலை எடுத்துரைக்காது அவனது திருக்கைகளையும், திருவடிகளையும், திருக்கண்களையும், திருவாயையும் தாமரை மலர் என்று கருதி அவற்றினிடையே பறந்து திரிந்து கொண்டு என்னையும் மறந்துவிட்டது" என்று தலைவி இரங்கிக் கூறுகின்றதைக் காண்க. பக்திச்சுவை சிறிதும் சிதையாமல் அமைந்து திகழும் இத்துறைப் பாடல் பன்முறை படித்து இன்புறத்தக்கது.

அன்பர்களே, இதுகாறும் கலம்பக இலக்கியத்தின் சில உறுப்புகளைப்பற்றிக் கவனித்து வந்தோம்; பாட்டின்பத்தில் திளைத்தோம். இங்ஙனம் சிற்றிலக்கியங்களை ஆழ்ந்து கற்றலால் தனிப்பேரின்பம் தலைப்படக் காணலாம். இனி, பொதுவான சில கருத்துகளைக் கண்டு மகிழ்வோம்.

### பக்திச்சுவை :

இந்தச் சிற்றிலக்கியத்தில் சொற்சுவையும் பொருட்சுவையும் மலிந்து காணப் பெறுவதுடன், பக்திச் சுவையும் விஞ்சி நிற்கின்றது. நெஞ்சத்தை நோக்கிக் கூறும் ஒரு பாடலில் இச்சுவை தெளிவாகத் தென்படுகின்றது.

"பதின்மர்செந் தமிழைநீ படிக்கிலாய் கேளாய்
படித்தபேர் தாளையும் பணியாய்
எதிபதி சரணே சரணமென் றொருகால்
இசைக்கிலாய் எமதுவேங் கடத்தைத்
துதிசெயாய் யிருந்த விடத்திருந் தேனும்
தொழுகிலாய் வாழிஎன் மனனே
மதிநுதல் அலர்மேல் மங்கைநா யகனார்
மலர்ப்பதம் கிடைப்பதெவ் விதமே."[206]

---

206. பாசுரம்-24.

[பதின்மர்-பத்து ஆழ்வார்கள்; எதிபதி-சந்நியாசிகளின் தலைவர் (இராமாநுசர்); இசைக்கிலாய்-சொல்ல மாட்டாய்; மதிநுதல்-சந்திரன் போன்ற நெற்றி.]

இப்பாடலில் ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் ஆழங்கால் படுதல் முதலிய நெறிகளை மேற்கொண்டு எம்பெருமானது திருவடிப் பேற்றினை அடையுமாறு நெஞ்சிற்கு உபதேசித்தலைக் காண்க.

இன்னொரு பாடலில் மன்னுயிர்களை நோக்கி உபதேசம் செய்கின்றார்.

"சரதம் கதிபெறலாம் தாலத்து உயிர்காள்
நிரதம் அவனை நினையீர்—அருமறையும்
செப்பரிய எண்ணத்தான் சேடகிரி யான்கரத்தில்
அப்பரிய வெண்ணத்தான் ஆல்."[207]

[தாலத்து-பூமியிலுள்ள; நிரதம்-இடைவிடாமல்; எண்ணம்-சிந்தை; சேடகிரி-சேஷாசலம்; கரம்-கை; அ பரிய-அந்தப் பெருமையுடைய; வெள் நத்தான்-வெண்ணிறச் சங்கினையுடைய.]

பெரியாழ்வார் "படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்சசன்னியமும்"[208] என்றாற்போல, இந்த ஆசிரியரும் "அப் பரிய வெண்ணத்தான்" என்றார். பெரியாழ்வாரின் பாசுர அடிக்குப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானமும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. "முன்னிலையா யிருக்கப் பரோக்ஷ நிர்த்தேசம் பண்ணுவானென் னென்னில்; புத்திரனை அலங்கரித்த தாய் தன் கண் படிலும் கண்ணெச்சிலாம் என்று பார்க்கக் கூசுமாப்போலே,

207. பாசுரம்-28
208. பெரியாழ். திரு. திருப்பல். 2.

மங்களாசாஸநம் பண்ணுகிற தம்முடைய கண்ணையும் செறித்து முகத்தை மாறவைத்துச் சொல்லுகிறார்; அன்று யுத்தத்திற் பிறந்த ப்ரமாதத்துக்கு இன்று மங்களா சாஸநம் பண்ணுகிறார் என்றுமாம்'' என்ற இன்சுவை மிக்க பகுதியைச் சுவைத்து மகிழ்க.

பிறிதொரு பாடலிலும் நெஞ்சிற்கு உபதேசிக்கும் முறையில் பக்திச்சுவை தெளிவாக நிழலிடுகின்றது.

"வேங்கடவா சத்திருமால் மேல்பத்தி யுள்ளசனர்
தாங்கடவா நிற்பர்பவ சாகரத்தை—தீங்கடவா
சித்தமே! கண்ணன்பால் சிந்துமதித் தோனவனை
நித்தமே கண்ணன்பால் நீ."[209]

[வாசம்-வாசம் செய்யும்; பத்தி-பக்தி; சனர்-மக்கள்; கடவா-தாண்டி; தீங்கு அட - தீமைகள் நீங்கும் பொருட்டு; பவ சாகரம்-பிறவிக் கடல்; சிந்து மதித் தோன்-பாற் கடலைக் கடைந்தவன்; நித்தம் - நாள் தோறும்; கண்ணன்பால்-கண் + அன்பால்; அன்பு-பக்தி; கண்-தியானிப்பாயாக].

திருவேங்கட முடையான்மீது பக்தியுடைய மக்கள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி முக்தியாகிய கரையை அடைவர் என்று உறுதியையுடைய ஆசிரியர் அப் பெருமானைத் தியானிக்குமாறு மனத்திற்கு அறிவுறுத்துகின்றார் இப்பாடலில்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார்."[210]

---

209. பாசுரம்-2.
210. குறள்-10.

என்னும் திருக்குறள் கருத்து இப்பாடலில் பொதிந்திருத்தலைக் கண்டுமகிழலாம்.

வேறொரு பாடலில் திரிகரணங்களையும் பயன்படுத்தும் முறையைக் கழறுகின்றார்.

''மத்தவரை காத்தபெரு மான்வேங்க டந்துதியார்
பித்தரவர் வாயோ பிலவாயே—நித்தம்வளர்
கோணக்கண் ஓங்கிவெளிக் கொண்டலைச்சீ றும்மலையைக்
காணக்கண் சித்திரத்தின் கண்.''[211]

[மத்த-மதம்பிடித்த; வரை-மலைபோன்ற யானை-பித்தர்-பைத்தியம் பிடித்தவர்; பிலம்-சுரங்கம்; கோண-வளைதலில்லாத; கண்-மூங்கில்கள்; ஓங்கி-உயர்ந்து; கொண்டலை-மேகத்தை; சீறும்-வெருட்டும்.]

யானைஅரசனைக் காத்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமலையைத் தோத்திரம் செய்யாதவர் பைத்தியர். அவர்கள் வாய் பிலவாய். அம் மலையைக் காணாத கண் ஓவியத்தில் அமைந்த கண் ஆகும். "நாராயணா வென்னா நாவென்ன நாவே", "கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே"[212] என்ற சிலப்பதிகார வரிகளை இப்பாடல் நம்மை நினைக்கச் செய்கின்றது.

## திருவேங்கடத்தின் பெருமை:

அன்பர்களே, திருவேங்கடக் கலம்பகத்தில் திருவேங்கடத்தின் பெருமையும் பல பாக்களில் பேசப்பெறுகின்றது. ஒன்றிரண்டு சான்றுகள் காட்டி இதனை விளக்க முற்படுகின்றேன். திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்

211. பாசுரம்-99.
212. சிலப்-2:17-படர்க்கைப் பராவல்-2,3.

தலும் தனக்குப் போதும் என்று கூறியவர் குலசேகரப் பெருமாள்.

"செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே."[213]

என்று கூறிய ஆழ்வாரின் வாக்கினை நாம் நன்கு அறி வோம். இதனையொட்டி இந்த நூலாசிரியரும்,

"மாடாக நிழற்றுசெழு மரனுகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்தநறும் புதலாக வழிப்படுமோர்
ஓடாகப் பெறுவமெனில் உயிர்காள்!நற் கதிபெறலாம்
வீடாகத் திருநெடுமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே."[214]

[மாடு-விலங்கு; நிழற்று-நிழல்தரும்; பூடு-பூண்டு; புதல்-புதர்; வழி படும்-வழியில்கிடக்கும்.]

என்று பாடுவர். "திருநெடுமால் தனது இருப்பிடமாக உகந்து கொண்டிருக்கும் திருவேங்கடத்தில் விலங்காக வாயினும், நிழலைத்தரும் செழுமரமாக வாயினும், மிகச் சிறிய புல் பூண்டுகளாகவாயினும், தளிர்த்த நல்ல புதராக வாயினும், வழியில் கிடப்பதொரு ஓடாகவாயி னும் இருக்கப் பெறுவோமென்றால் நாம் சிறந்த நற்கதி பெறலாம்" என்று சீவர்களை நோக்கிக் கூறுகின்றார் இப் பாடலில்.

இன்னொரு பாடலில் எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் சில இடங்களைக் குறிப்பிடும் ஆசிரியர் திருவேங் கடம் என்னும் அழகிய திருமலையையும் அவற்றுள் ஒன்றாகக் குறிப்பிடுவர்.

---

213. பெரு. திரு. 4:10
214. பாசுரம்–72

"மாதவத்தோர் சிந்தையுமாம் மாமறையின் உச்சியுமாம்
கோதகற்று வேங்கடப்பொற் குன்றமுமாம்—சீதமலர்
எட்டக் கரத்தான் இடம்திகழ்சங் கோன்குருந்தை
எட்டக் கரத்தான் இடம்."[215]

[மறை—வேதம்; உச்சி—உபநிடதம்; கோது-குற்றம்; சீதம் மலர்—குளிர்ச்சிமிக்க மலர்; அக்கரம்-அட்சரம், எழுத்து; குருந்தை எட்டு அகரத்தான்-குருத்த மரத்தை எட்டினகையை யுடையவன்.]

என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழ்க.

எம்பெருமானின் உடலாக விளங்கும் 'அசித்தும்' வழிபடுவதற்கு உரியது என்ற கொள்கையையுடையவர்கள் ஆழ்வார் பெருமக்கள் என்பதனை இரண்டாவது சொற்பொழிவில் குறிப்பிட்டேன். எடுத்துக் காட்டாக,

"மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலைப்
பதியது ஏத்தி எழுவது பயனே."[216]

என்றும்,

பரன், சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே."[217]

என்றும் நம்மாழ்வாரின் திருவாய்மொழியினையும் கூறினேன். அதனை ஈண்டு நினைவு கூர வேண்டுகின்றேன். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இந்த ஆசிரியரும் திருமலையின் பெருமையினை ஆங்காங்குக் கூறிச் செல்லுகின்றார்.

---

215. பாசுரம்-63.
216. திருவாய். 2. 10 : 2.
217. திருவாய். 3. 3 : 8.

**வேங்கடத்து அப்பனின் சீர்மை:**

அன்பர்களே, வேங்கடத்தின் பெருமையை எடுத்து காட்டின ஆசிரியர் அம்மலையில் எழுந்தருளியிருக்கும் ஏழுமலையானின் சீர்மையையும் விதந்து ஓதுகின்றார்; வேதவிழுப்பொருளே வேங்கடமலையில் எழுந்தருளி யிருப்பதாகக் கூறுகின்றார்.

"மொழிமறை முடிமேல்
எழுமுதல் அதுவே
செழுவட மலைவாழ்
விழுமிய பொருளே."[218]

[மறைமுடி-உபநிடதம்; முதல்-முதற்பொருள்; விழுமியபொருள்-பரம்பொருள்.]

என்ற பாசுரத்தைக் காண்மின். வடமலைவாழ் தேவருக்கு ஆட்பட்டால் ஏற்படும் பெருமையையும் காண்போம்.

"யாவருக் கிந்தப் பெருமையுண்
டோதுக இன்உயிர்காள்!
மாவருக் கைத்திரள் பொற்குடந்
தூங்கும் வடமலைவாழ்
தேவருக் காட்பட்டு வைகுந்த
மேவித் தினமிருப்போர்
பூவருக் கம்பொரு தாள்கீழ்ப்
படுமெப் புவனமுமே."[219]

[மா-பெரிய; வருக்கை-பலாப்பழம்; பொன்குடம். பொற்குடம் போல்; தூங்கும்-தொங்கும்; ஆள்பட்டு-

---

218. பாசுரம்-76.
219. பாசுரம்–21.

அடிமைப்பட்டு; மேவி-அடைந்து; பூ வருக்கம்-தாமரைப்பூவின் இனம்; பொரு தாள்-ஒக்கின்ற திருவடி; படும்-அடையும்.]

"ஏழுமலையானுக்கு ஆட்படுபவர்கள் வைகுந்தத்தில் இருப்பார்கள். எல்லாவுலகங்களும் அவர்கள் திருவடிக் கீழ்ப்படும். வேறு எந்தக் கடவுளுக்குத்தான் இந்தப் பெருமை உண்டு?" என்று வினவுகின்றார் ஆசிரியர் இப் பாடலில்.

நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்கள் சரணம் அடைந்தவை திருவேங்கடமுடையானின் திருவடிகள்; அவற்றை மக்கள் குலம் சரணம்ஆக அடையப்பெற்றால் ஏற்படும் பலனையும் சொல்லித் தலைக்கட்டுகின்றார்.

"சரண மெனத்தன் சரணே
அடைந்த சனர்சனன
மரண மடுத்துவருத் தாதுதன்பதம்
வாழ வைக்கும்
கிரணம் விரிக்குமதி தீண்டும்
சேட கிரியிலம்பொன்
அரணம் உடுத்த திருக்கோயில்
மேவிய அற்புதனே." [219]

[சரணம்-அடைக்கலம்; சரண்-திருவடிகள்; சனர்-மக்கள்; சனனம்-பிறப்பு; மரணம்-இறப்பு; அடுத்து-அடைந்து; தன்பதம்-தனது பரமபதம்; கிரணம்-ஒளி; விரிக்கும்-வீசும்; மதி-சந்திரன்; அம் பொன்-அழகிய பொன்; அரணம்-மதில்; உடுத்த-சூழ்ந்துள்ள.]

திருவேங்கடமுடையான் தன்னைச் சரணம் அடைந்தவர்களின் பிறப்பு இறப்புத் துன்பங்களை நீக்கித்

---

219. பாசுரம்-9.

திருநாடு அடையும் பேற்றினையும் அருளுவான் என்று கூறுவர் ஆசிரியர் இப் பாசுரத்தில்.

இன்னொரு சிறிய பாடலிலும் திருவேங்கடமுடையானின் திருப்பாதப் பெருமை பேசப்படுகின்றது.

"வேத னைத்தரும் விமலன்என
நாதன் வேங்கட நாயகன்
பாதம் அல்லது பற்றுமே
ஏதம் அற்றவர் இதயமே." [220]

[வேதன்-நான்முகன்; விமலன்–குற்றம் நீங்கியவன்; ஏதம் அற்றவர்-குற்றம் நீங்கியவர்.]

குற்றமற்றவர்கள் சீநிவாசனது திருப்பாதத்தைத் தவிர வேறொன்றையும் சரணமாக அடையார். இதில் 'வேதனைத் தரும் விமலன்' என்பதால் பரத்துவமும், 'என் நாதன்' என்பதால் சௌலப்பியமும் (விபவம்?), 'வேங்கட நாயகன்' என்பதால் அர்ச்சையும் கூறப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்க.

## ஆசிரியரின் வைணவப் பற்று :

இந்த நூலில் முத்தமிழ்க் கவியின் வைணவப் பற்றினைப் பரக்கக் காணலாம். தமிழகத்தில் சைவ வைணவ வெறிபிடித்த காலம் ஒன்றுண்டு. அக்காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள் ஒருவர் கடவுளை ஒருவர் தாழ்த்திக் கூறும் போக்கினை ஒருமரபாகவே கையாண்டு வந்தனர். ஒருவர் சிவனைப் பழித்துக் கூறினால் மற்றவர் திருமாலை இழித்துக் கூறுவார்.[221] அத்தகைய போக்கு நம் ஆசிரிய

---

220. பாசுரம்-87.

221. "வாடியோட" என்ற திருவரங்கக் கலம்பகச் செய்யுளும் (39), "கருடனோட" என்ற திருவருணைக் கலம்பகச் செய்யுளும் ( ) ஈண்டு அறியத்தக்கவை.

ரிடம் தலைக்காட்டவில்லை என்பதை இவரது வாக்குகளா லேயே அறியலாம்.

நூலைத் தொடங்குவதற்கு முன்னதாக நம்மாழ்வார், ஆழ்வார்கள், உடையவர், எழுபத்துநான்கு சிம்மாச ஞதிபதிகள் இவர்களின்மீது பாடல்களியற்றித் தம் நூலுக்குக் காப்பாக அமைத்திருப்பது இவரது ஆழ்ந்த வைணவப்பற்றினைப் புலப்படுத்துகின்றது. அங்ஙனமே நூலின் முதற் பாடலில் எம்பெருமானின் ஐந்து நிலை களையும் பிறவற்றையும் மேலே குறிப்பிட்டதை ஈண்டு நினைவுகூர வேண்டுகின்றேன். வைணவப்பற்று மிக்க இந்த ஆசிரியர் திருவேங்கடமுடையான்மீது அளவற்ற பக்தி மிக்கவர்.

"சிந்திப் பனவும் துதிசெய் வனவும்
தெரிசிப் பனவும் துரிசற் றிடவே
வந்திப் பனவும் பூசிப் பனவும்
வாஞ்சிப் பனவும் யாம்செப் புவமால்;
தந்திக் கிமையோர் பந்திக் களையின்
தாழிக் கருள்கூ ராழிக் கடவுள்
கந்தித் தெழுபூ வுந்தித் திருவேங்
கடமால் சரணம் தடமா மலரே."[222]

[சிந்திப்பது–தியானிப்பது; துதி-தோத்திரம்; தெரி சிப்பது-காண்பது; துரிசு-குற்றம்; வந்திப்பது-வணங்கு வது; பூசிப்பது-ஆராதிப்பது; வாஞ்சிப்பது-விரும்புவது; தந்தி-யானை; பந்தி–வரிசை; அளையின் தாழி-தயிர்ப் பானை; ஆழி–சக்கரம்; கந்தித்து–வாளினை வீசி; உந்தி-கொப்பூழ்; சரணம்-திருவடி.]

இதில் திருவேங்கடமுடையானின் திருவடித் தாமரைகள் தியானிக்கத் தக்கவை என்றும், தோத்திரம்

---

222. பாசுரம்-65.

செய்யத்தக்கவை என்றும், கண்டு களிக்கக் கூடியவை என்றும், குற்றங்கள் ஒழியும் பொருட்டு வணங்கத் தக்கவை என்றும், பூசிக்கத் தக்கவை என்றும், விரும்பத் தக்கவை என்றும் பல்வேறு விதமாகச் செப்பி இனிய ராகின்றார் ஆசிரியர். மூன்றாவது அடியில் குறிப்பிட்ட அளையின் தாழிக்கு வீடளித்த வரலாறு செவிவழிச் செய்தியாகக் கண்ணனைப்பற்றித் தமிழ்நாட்டில் வழங்கி வரும் கதையை யொட்டியது. வெண்ணெயைக் களவு செய்து உண்ட கண்ணன் தாயின் பிடிக்குத் தப்பி யோடியபோது ததிபாண்டன் அகத்தில் புக்கு ஒளிந் தான் என்றும், அவனைத் ததிபாண்டன் தாழியில் மறைத்துக் காப்பாற்றினன் என்றும், இதற்குச் செய்ந் நன்றியாகக் கண்ணன் அந்த இடையனுக்கும் அவனது தாழிக்கும் வீடுபேறு அளித்தான் என்றும் வழங்குவது இக்கதை.[223] இக் கதையை திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் தமது நூலில் குறிப்பிட் டுள்ளார்.[224]

"ஆனாத கீர்த்தித் திருவேங்
கடத்துறை அச்சுத! நீ
தானாத ரிக்கத் துதித்தே னல்லேன்
இந்தத் தாரணியின்
மேனாளின் மானிடம் பாடிய
நாச்சுத்த மேவுதற்கு
நானுசை யாற்றுதி செய்தேன்உன்
புண்ணிய நாமத்தையே." [225]

---

223. இராகவையங்கார், மு: ஆராய்ச்சித் தொகுதி. (கண்ணனைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குகள்— என்ற கட்டுரை காண்க).

224. திருவரங்கத்து மாலை-செய். 53.

225. பாசுரம்-99.

[ஆறாத–நீங்காத; கீர்த்தி–புகழ்; ஆதரிக்க–அன்பு வைக்க; தாரணி–பூமி; மேல்நாள்–அநாதிகாலம்; மானிடம்–மனிதர்கள்; நா–நாக்கு; சுத்தம் மேவுதல்–தூய்மையடைதல்; ஆசையால்–விருப்பத்தால்.]

இதுகாறும் தான் 'நாக்கொண்டு மானிடம் பாடிய' அழுக்கு நீங்க, எம்பெருமானின் புண்ணியத் திருநாமத்தைத் துதிப்பதாகக் கூறுகின்றார் ஆசிரியர் இதில். இதனால்தான் இவர் பாடிய 'கலம்பகமாலை' "பக்தியின் துதி பாடின மாலை" ஆகின்றது.

நூலின் இறுதிப் பாடலில் தன்னைத் தொண்டருக்கும் தொண்டனாகக் கூறி வைணவ மரபினனாகப் புலப்படுத்திக் கொள்ளுகின்றார் ஆசிரியர்.

**"கண்ணா யிரம்பெற்ற கோன்உல**
**கோங்கிய கற்பகக்காத்**
**தண்ணாரும் பூவையும் வேண்டிலம்;**
**வேண்டித் தலைக்கணிபூ**
**எண்ணார்க் கிருளன்ன வேங்கடத்**
**தான்தொண்டர் ஏவற்றொழில்**
**பண்ணாசைத் தொண்டரவர் தொண்டர்**
**தொண்டர் பதமலரே."[226]**

[தண்ஆரும்-குளிர்ச்சி நிறைந்த; வேண்டி-விரும்பி; எண்ணார்க்கு - தியானிக்காதவர்களுக்கு; இருள்-அஞ்ஞான இருட்டு; தொண்டர் – அடியார்களது; ஏவல் தொழில்–ஏவிய சிறுதொழில்; பண்-செய்கின்ற; ஆசை-அன்பையுடைய; தொண்டரவர்-அடியார்களின்; தொண்டர்–அடியார்களது; பதமலர்-திருவடித் தாமரை.]

உம்பர் உலகத்துக் கற்பகமலரையும் தான் விரும்பவில்லை என்றும், திருவேங்கடமுடையானின் தொண்டர்களின் திருப்பாத மலரே தான் விரும்பும் மலர் என்றும் கூறித்

226. பாசுரம்-100.

தமது ஆழ்ந்த வைணவப்பற்றைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றார். இப் பாடலின் "வேங்கடத்தான் தொண்டர்...தொண்டரவர் தொண்டர் தொண்டர்" என்ற அடி அவா அற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபனின் "நாயகன்-தன் அடிமை; நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்,"[227] "புனல்-பள்ளி அப்பனுக்கே, தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்"[228] "எந்தைபிரான் தனக்கு, அடியார் அடியார்-தம் அடியார் அடியார் தமக்கு, அடியார் அடியார்-தம் அடியார்அடியோங்களே"[229] என்ற திருவாய் மொழியின் அடிகளை நினைக்கச் செய்கின்றன.

இறுதியாக, நம் முத்தமிழ்க் கவி சமயக் காழ்ப் பற்றவர் என்பதற்கு ஒருசான்று காட்டி இந்நூலாராய்ச்சி யினைத் தலைக்கட்டுகின்றேன்.

"ஆக்குந் தொழிற்கு விரிஞ்சியைவைத்
தழிக்குந் தொழிற்குச் சிவனைவைத்துக்
காக்குந் தொழில்தான் கைக்கொள்
அருட்கடவுள் வடவேங் கடம்"[230]

[விரிஞ்சி-நான்முகன்]

என்ற பாடற்பகுதியில் படைக்கும் கடவுளாக நான் முகனையும், அழிக்கும் கடவுளாகச் சிவனையும், காக்கும் கடவுளாகத்திருமாலையும் கூறியுள்ளனரேயன்றி ஒருவரை யும் ஏத்தியோ தாழ்த்தியோ கூறாமை கவனிக்கத் தக்கது. திருமாலை ஏத்திக் கூறுமிடத்திலும் சிவனை இழித்துக்கூறும் வழக்க முடையவரல்லர் இந்த ஆசிரியர்.

227. திருவாய்-8.9:11
228. திருவாய்-7.1:11
229. திருவாய்-3.7:10.
230. பாசுரம்-71

"கேசவனூர் சேட கிரிமாயர்க் கைந்துமுகத்
தீசனதி பத்தன் இதுசரதம்— நேசமிகச்
சங்கங்கை ஏந்துமவர் தாட்புனலென் றேதினமும்
அங்கங்கை சென்னிவைத்தான் ஆல்." [231]

[சேடகிரிமாயர்–திருவேங்கடமுடையான்; ஐந்துமுகத்து ஈசன்-சிவன்; அதிபத்தன்-மிகுந்த பக்தியையுடையவன்; தாள்புனல்–திருவடித்தீர்த்தம்; நேசம்-அன்பு; அம்கங்கை-அழகிய கங்கை; சென்னி-தலை.]

என்ற பாடலில், சிவன் திருமாலடியான் என்றும், ஆதலால் அவன் திருவடியினின்றும் தோன்றின கங்கையைத் திர்த்தமாகக் கருதித் தன் தலையின்மீது சூடிக் கொண்டுள்ளான் என்றும் கூறுவதில் சிவனை இழித்துக் கூறுதிருத்தல் காண்க.

அன்பர்களே, இதுகாறும் முத்தமிழ்க் கவியின் மலர்ச் சோலையில் நுழைந்து பல நறுமண மலர்களைக் கண்டு நுகர்ந்தோம். செந்தமிழ்ச் சுவையினிடையே தெய்வமணமும் வீசச்செய்த முத்தமிழ் விரகரின் அருமைப் பாட்டைக் கண்டு களித்தோம். "வண்டமிழ் நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே"[232] என்று நம்மாழ்வார் கூறியவாறு, நம் கவிஞரும் ஆண்டவன் திருவடிகளில் சொல்மாலைகளை அழகு பெறச் சூட்டி மகிழ்ந்தார். அவர் கால்வழித் தோன்றிய நம் போலியரும் வாடா வளம் பெற்ற அம் மாலைகளைக் கண்டு நுகர்ந்து, அவன் திருவடிகளில் அன்பினைச் செலுத்த வழியும் வகுத்த கவிஞரைப் போற்றி இந்நூல் பற்றிய ஆராய்ச்சியைத் தலைக்கட்டுகின்றேன்.

231. பாசுரம்-54
232. திருவாய்-10.4;5

# 4. சேடமலை பதிற்றுப் பத்தந்தாதி[233]

அன்பர்களே, 'சேடமலை பதிற்றுப்பத்தந்தாதி'யைப் பற்றிச் சில கருத்துகளைத் தெரிவிப்பேன். இது சேடமலையில் (சேஷகிரி) எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மீது பாடப் பெற்ற நூலாகும். இதை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆயினும் இந்நூலிலுள்ள,

> "சீராரு மதிவதனத் தெரிவையர்கள்
> மாடமிசைச் சென்றுங் கெய்தும்
> ஏராறும் அரம்பையரோ டிரணியகந்
> துகமாடும் எழில்வல் லூரன்
> பேராரும் தமிழியலெற் கோதியருள்
> புரிகிறவன் பிறங்கு கஞ்சத்
> தாராரும் புயனெவரும் புகழ்தேவ
> ராசவள்ளல் தனைத்து திப்பாம்."[234]

[இரணியம்—பொன்; கந்துகம்—பந்து]

என்ற குருவணக்கப் பாடலால் இந்நூலாசிரியருக்குத் தமிழ்ப் பயிற்றியவர் வல்லூர் தேவராச வள்ளல் என்பார் எனத் தெரிகின்றது. இவ்வள்ளல் 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மகாவித்துவான் திரிசிரபுரம் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணுக்கர்களில் ஒருவர் என்பதும், 'குசேலோபாக்கியானம்' என்ற தமிழ்நூலை இயற்றியவர்

233. அந்தாதிக் கொத்து' என்ற தொகுதியில் கண்டது; பார்க்க: Madras Government Oriental Manuscript Series.No. 51

234. பாடல்-3

இவரே என்பதும் நாம் அறிந்த செய்திகளே. மகா வித்துவான் அவர்கள் பெங்களூரில் தங்கியிருந்த பொழுது, தேவராசப் பிள்ளையவர்கள் முதன்மையாக நின்று புலவர் பெருமானைக் கவனித்த செய்தியை டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, இந் நூலாசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது பெறப்படுகின்றது. இந் நூலிலிருந்து இந்நூலாசிரியர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வைணவ தத்துவ சாத்திரங்களிலும் நல்ல பயிற்சியுடையவர் என்பது திண்ணமாக அறியக் கிடக்கின்றது. நம்மாழ்வார் துதியுடன் நூல் தொடங்குவதால் இந்நூலாசிரியர் வைணவர் என்பது புலனாகின்றது.

**நூல் :**

இந்நூல் நூறு செய்யுட்களையும், இறுதியில் ஒரு வாழ்த்துச் செய்யுளையும் கொண்டது. சேடமலை என்பது ஏழுமலைகளில் ஒன்றாகிய 'சேஷாத்திரி'யைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.[235]

சேடமலை எனக் குறிப்பிடப் பெற்றிருந்தாலும் சேடமலை திருவேங்கடத்தைக் குறிப்பதாகவே கருதலாம். இது,

"என்று சூழ்சிக ரத்திரு வேங்கட
விரவிமீதி லினிதுறை கொண்டலே."[236]

என்ற பாடற் பகுதியால் உறுதிப் படுகின்றது. இந் நூலில் திருவேங்கடத்தின் சிறப்பும், அங்கு எழுந்தருளி

235. ஏழுமலைகள்: விருஷபாத்திரி, நீலாத்திரி, அஞ்சனாத்திரி, சேஷாத்திரி, கருடாத்திரி, நாராயணாத்திரி, வேங்கடாத்திரி. (அத்திரி-மலை).

236. பாடல்-18

யுள்ள எம்பெருமானின் பெருமையும், அவனுடைய அவதாரச் சிறப்பும் பரக்கக் கூறப் பெற்றுள்ளன. பாடல்களைப் படிக்குந் தோறும் அவை ஆழ்வார்களின் பாடல்களை நினைக்கச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக,

"செய்ய தாமரைக் கண்ணனைப் பைந்துழாய்த்
தெரியல் சூடிய நீனிற வண்ணனை
ஐய நுண்ணிடைப் பார்க்கவி நேயனை
அமரர் உய்ய அமுதருள் மாயனைத்
துய்ய சேட மலையுறை தூயனைத்
தோமி லாநுரை யுண்ட வாயனை
வெய்ய நெஞ்சக மேநித முன்னுறில்
விளங்கு வீடடை வாயிது திண்ணமே." [237]

என்ற இந்த நூலிலுள்ள ஒரு பாடலைப் படிக்குங்கால், அது திருவாய் மொழியிலுள்ள,

"செய்ய தாமரைக் கண்ண னுய்உல
கேழு முண்டஅவன் கண்டீர்
வையம் வானம் மனிசர் தெய்வம்மற்
றும்மற்றும் மற்றும் முற்றுமாய்
செய்ய சூழ்சுடர் ஞான மாய்வெளிப்
பட்டி வைபடைத் தான்பின்னும்
மொய்கொள் சோதியோ டாயி னன்ஒரு
மூவ ராகிய மூர்த்தியே." [238]

என்ற பாசுரத்தை நினைவிற்குக் கொண்டு வருகின்றது. சில பாடல்கள் திருமழிசை யாழ்வாரின் திருச்சந்த விருத்தப் பாசுரங்கள் போல் அமைந்து படிப்போர்

237. பாடல்-16
238. திருவாய்-3.6;1

மனத்தில் பக்தி கிளர்ந்தெழச் செய்கின்றன. எடுத்துக் காட்டாக, இந்நூலிலுள்ள ஒரு பாடலைக் காட்டுவேன்.

"உண்மையாக உன்னடிக்கண்
ஒருவிலன் புகுற்றிடத்
திண்மையாக அருளுவாய்கொல்
செய்யசேட வரையனே!
வண்மைமேவு கீரவாரி
மலையினுன்ம தித்தமு(து)
எண்மைநீங்க அமரருக்கெ
டுத்தளித்த குரிசிலே." [239]

இந்தப் பாடலை படித்த பின்னர் திருமழிசையாரின் பாசுரம் ஒன்றினைக் காண்போம்.

"கடைந்தபாற் கடற்கிடந்து
காலநேமி யைக்கடிந்து
உடைந்தவாலி தன்பினுக்கு
உதவவந் திராமனாய்
மிடைந்தஏழ் மரங்களும்
அடங்கவெய்து, வேங்கடம்
அடைந்தமால பாதமே
அடைந்துநாளும் உய்மினோ." [240]

இந்தப் பாசுரமும் மேற்காட்டிய பாடலும் ஒரே சந்தத்தில் இருப்பதைக் காணலாம். முன்னதில் ஆசிரியர் சேடமலையில் வாழும் எம்பெருமானின் திருவடிகளில் அன்பு செலுத்தும் மனம் அருளுமாறு அவனை வேண்டுகின்றார். பின்னதில் ஆழ்வார் வேங்கடத்து அண்ணலின் திருப்பாதத்தை அடையும் பேறு தனக்குக் கிட்டுவதற்கு

239. பாடல்–71
240. திருச்சந்-81

அருளுமாறு அவனை வேண்டுகின்றார். சேடஅரையனும் வேங்கடத்துமாலும் ஒருவனேயன்றோ? இந்நூலில் திருச் சந்த விருத்தத்தை யொட்டிப் பத்துப் பாடல்கள்[241] அமைந்து இருக்கின்றன.

"கொண்டல்கள் துயிலும் தண்டலை புடைசூழ்
கொடுமுடிச் சேடமா மலை"[242]

"புரஞ்சுடு நகையான் கைலைமற் றிதன்சீர்
பொழுதுடல் விளர்த்தது மேரு
திருந்திதன் பெருமை கண்டுள நாணிச்
சிலையென வளைந்தாங் கதனுல்.
இருந்தமிழ்ப் புலவர் இவற்கிணை யிதுவென்று
இசைத்திடு சேடமா மலை."[243]

என்ற பாடற்பகுதிகளால் இதனை அறியலாம். "மருவளர் சோலை புடையுடுத்தோங்கு மாசுண மால்வரை"[244] "தெருளகத்து முனிவர் தொழும் சேடமலை,[245] "சத்திய நான்மறை பரவுந் தனியரவ மலை"[246] "அழகாரும் சேடமலை"[247], "முகில் அடரும் முடிச்சேட முதுமலை"[248] என்ற தொடர்களில் சேடமலையின் சிறப்பினைக் காணலாம்.

---

241. பாடல்கள்-(71-80)
242. பாடல்-21
243. பாடல்-24
244. பாடல்-28
245. பாடல்-32
246. பாடல்-33
247. பாடல்-37
248. பாடல்.38

"அரங்கினரி வையராட
வரம்பையர்கண் டுளநாணிச்
சிரங்கவிழ்க்கும் வளஞ்சான்ற
சேடமலே." 249

என்ற பாடற் பகுதியில் சேடமலேயின் வளங் கண்டு மகிழலாம்.

திருவேங்கடநாதன் பெருமையை எல்லாப் பாடல்களிலுமே காணலாம். சான்றுகளாக ஒன்றிரண்டினை மட்டிலும் காட்டுவேன்.

"பெறுதற் கரிய பரம்பொருளேப்
பேசற் கரிய வொளிப்பிழம்பை
மறுவின் மறைகள் புகழ்முதலே
வானேர்க் கமுதூட் டியவிறையை
தொறுவர் மனேதோ றுறுவெண்ணெய்
சுவைத்த முகிலே யெழிலியென்றுந்
துறுமுஞ் சிகரச் சேடமலேச்
சுடரைத் துதித்தி தீமனனே." 250

என்ற பாடல் பாடியவாய் தேனூறும் பான்மையுடன் திகழ்வதைக் காண்மின்.

"கடவா ரணத்தின் மருப்பொசித்தாய்
கரிசில் அடியார் உளம்வசித்தாய்
படவாள் அரவின் நடங்குயின்ருய்
படிவெண் ததியொள் ளிழுதயின்ருய்
மடவார் அரங்கில் எனக்காவில்
மயிலார் ஆடத் திருமலேயாய்

249. பாடல்-39
250. பாடல்-4

தடவா ரிதியில் துயிலமுதே
தமியேற் கருள்வாய் பெருவாழ்வே.'' [251]

என்ற பாடலில் அவதார மகிமை, அந்தர் யாமித்துவத்தின் சிறப்பு, அர்ச்சையாயிருக்கும் தனிச்சிறப்பு ஆகியவற்றைக் கண்டு மகிழலாம்.

"அருள்மிகும் உள்ளத் தந்தணர் மறையோ
தார்ப்பும்வா னவர்துதி முழக்கும்
தெருள்மிகுங் கவிவல் லோர்துதி யொலியும்
தேக்குறு தூயநின் செவிகட்கு
இருள்மிகும் அகத்தேன் புகன்றிடு புன்சொல்
ஏற்குமோ? கராசலங் காத்தோய்!
பொருள்மிகும் அறிஞர் நிரந்தரம் பணியும்
புயங்கமால் வரையமா தேவே.'' [252]

என்ற பாடலில் ஆசிரியரின் பக்தி புலனுவதைக் காணலாம்.

ஆழ்வார்களின் பாடல்களைப்போல் நைச்சியாநு சந்தானமாகப் பாடப்பெற்றுள்ள பல பாடல்களாலும் ஆசிரியரின் பக்தியநுபவம் கொழிப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

''அருந்தவம் வழுத்து நின்னடி மலரை
அலர்கொடு பூசைசெய் தறியேன்
திருந்திழை மடவார் தம்மையே புகழ்வேன்
தேவனே எங்ஙனம் அருள்வாய்
கருந்துழாய்க் கண்ணி கமழ்மறு மார்பா
கடையுகத் தாலடை துயில்வோய்

---

251. பாடல்-6
252. பாடல்-22

பொருந்துசீர் சேடச் சிலம்பமர் பரனே
பொலிதிகி ரிக்கர மாலே.”[253]

என்ற பாடல்,

“இடகிலேன்ஒன் றட்டகில்லேன்
ஐம்புலன் வெல்லகில்லேன்
கடவனுகிக் காலந்தோறும்
பூப்பறித் தேத்தகில்லேன்
மடவன்நெஞ்சம் காதல்கூர
வல்வினையேன் அயர்ப்பாய்
தடவுகின்றேன் எங்குக்காண்பன்
சக்கரத் தண்ணலையே.”[254]

என்பன போன்ற திருவாய்மொழிப் பாசுரங்களையும்,

“மானேய் கண்மடவார்
மயக்கில்பட்டு மாநிலத்து
நானே நானுவித
நரகம்புகு பாவம்செய்தேன்.”[255]

“தெரியேன் பாலகனுய்
பலதீமைகள் செய்துவிட்டேன்
பெரியே னுயினபின்
பிறர்க்கேயுழைத் தேழையானேன்.”[256]

என்பன போன்ற திருமங்கையாழ்வார் பாசுரங்களையும் நினைக்கச் செய்கின்றன.

ஆழ்வார்கள் ஆண்டவனிடம் நேரே முறையிடுவது போன்ற பாசுரங்களை அருளிச் செய்திருப்பதை நாம்

---

253. பாடல்-25
254. திருவாய்-4•7:9
255. பெரிய.திரு.1.9.2
256. பெரிய.திரு. 1.9.7

அறிவோம். அத்தகைய பாணியை இந்த ஆசிரியர் பாடல்களிலும் கண்டு மகிழலாம்.

“பரமபா கவதர் துயரெலாந் தவிர்க்கும்
பண்ணவ! விண்ணவர் இறையே!
பிரமனைப் பூத்த பதுமநன் ஞுபா!
பேசரு மறைமுடிப் பொருளே!
மருவலர் சோலை புடையுடுத் தோங்கு
மாசுண மால்வரை யரசே!
இருமனப் பெண்டிர் மயற்கடல் கவிழா
தெடுக்குதல் நின்கடன் அன்றே.” [257]

என்ற இந்த ஆசிரியரின் பாடல்,

“கொண்டல் வண்ணு குடக்கூத்தா
வினையேன் கண்ணு கண்ணுஎன்
அண்ட வாணு என்றென்னை
ஆளக் கூப்பிட் டழைத்தக்கால்
விண்தன் மேல்தான் மண்மேல்தான்
விரிநீர்க் கடல்தான் மற்றுத்தான்
தொண்ட னேன்உன் கழல்காண
ஒருநாள் வந்து தோன்றுயே.” [258]

என்பன போன்ற ஆழ்வார் பாடல்களைப்போல் எம்பெருமானுடன் நேரில் பேசுவதுபோல் அமைந்துள்ளதைக் காண்க.

எம்பெருமானுடைய அவதாரங்கள் எண்ணிறந்தன என்று தத்துவத்திரயம் பேசும்.[259] ஆயினும், அவதாரங்

257. பாடல்-28
258. திருவாய்-8.5:6
259. தத்துவத் திரயம்—ஈசுவரப் பிரகரணம்–48

கள் பத்து என்று (தசாவதாரம்) பேசும் மரபு ஒன்று வைணவர்களிடையே வழங்கி வருகின்றது. ஆனால், இந்த நூலாசிரியர் நாரதர், வராகம், நரநாராயணர், கபிலர், தத்தாத்திரேயோர், எக்கிய புருடர், இடபம், பிருது சக்கரவர்த்தி, மச்சம், தந்வந்திரி, மோகினி, நரசிம்மம், வாமனம், பரசுராமர், வியாசர், இராமர், பலராமர், கிருஷ்ணர், புத்தர், கல்கி என்ற இருபது அவதாரங்களைப் பற்றிப் பாடல்களைப் பாடியுள்ளார். எடுத்துக் காட்டாக,

"கடங்குலவு மறைமுதல்வ ஞசியினில் தோன்றிக்
கனகவட மகமேரு அணுவாக வளர்ந்து
மடங்குலவு பொற்கண்ண னேற்றூர்த்து மோதும்
வன்கதையைப் பறித்தவன்செய் வெம்மாவைநீக்கி
இடங்குலவும் பிறைமருப்பால் அவன்மார்பம் பிளந்தே
யெருக்கிநில வலயமெடுத் தினிதுமுன்போல் நிறுத்த
திடங்குலவு வெண்கேழல் உருக்கொண்ட பெரும!
சிறியவனுக் கருள்சேட மலைவாழும் கோவே."[260]

என்ற பாடல் வராக அவதாரத்தைப் பற்றியதாகும்.

இந்நூலில் அறுசீர் கழில்நெடில் ஆசிரியப்பா, எழுசீர் கழில்நெடில் ஆசிரியப்பா, கட்டளைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, கலிவிருத்த வகைகள், சந்த விருத்தம் போன்ற யாப்புவகைப் பாடல்கள் அமைந்து நூலைச் சுவையாக்கியுள்ளன. இறுதியாக,

பூதலம் புகழும் சேடப்
பொருப்பிறை கீர்த்தி கேட்கும்
ஆதர வாளர் வாழ்க;
ஆங்கதைப் புகல்வோர் வாழ்க;

260. பாடல்-82

தீதறு மறைகள் வாழ்க;
திகழ்தருங் கொண்டல் வாழ்க;
கோதறும் அரசர் வாழ்க;
குவலயத் துயிர்கள் வாழ்க.'' [261]

என்ற வாழ்த்துப் பாடலுடன் நூல் இனிது நிறைவு பெறுகின்றது.

## 5. திருவேங்கட தலபுராணம்

அன்பர்களே, இனி திருவேங்கட தலபுராணம் பற்றிச் சில செய்திகள் பகர்வேன். இது திருமலை என்று பெயர்பெற்று விளங்கும் தெய்வத்தலம்பற்றிய பழைய வரலாறுகளைக் கூறும் நூல். இது வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களைப்போல் சருக்கம் முதலிய ஐந்து இலக்கணங்களை உடையது அன்று; புண்ணியத் தலங்களின் மான்மியங்களைத் தெரிவிக்கும் தலமான்மிய நூல் வரிசையைச் சார்ந்தது இது. இத்தகைய தலபுராணங்கள் கி. பி. பதினாறும் நூற்றாண்டு தொடங்கித் தமிழ்ப் புலவர்கள் பலரால் பல சைவ வைணவ தலங்கட்குப் பாடப் பெற்றுள்ளன என்பதை இலக்கிய வரலாறு கற்போர் நன்கு அறிவர். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மட்டிலும் பதினாறு தலபுராணங்களை இயற்றியுள்ளனர் என்பதை ஈண்டு நாம் அறியத்தக்கது. அந்த முறையில் இது திருவேங்கடம் என்ற பழைய புண்ணிய தலத்திற்கு உரியதாகத் தமிழ்ச் செய்யுட்களால் இயன்றது.

---

261. பாடல்-101

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பெரியகுளம் வட்டத்திலுள்ள 'தேவார நகரம்' என்ற ஊரில் வாழ்ந்த மதுரகவி வீரராகவசுவாமி அய்யங்கார் அவர்கள் இந்த நூலின் ஆசிரியர்; சுமார் நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர். வடமொழியிலுள்ள மூல புராணங்களிற் கண்ட வேங்கடாசல மான்மியங்களைத் தொகுத்து வெளியான வடமொழி வேங்கடாசல மான்மியத்தை நூற்று இருபது ஆண்டுகட்கு முன்பு ஒரு வைணவப் பெரியார் தமிழ்ப்படுத்தி, அது 'திருமலை மான்மியம்' என்ற ஓர் உரைநடை நூலாகத் தமிழில் வெளியாகி இருந்தது. அந்த நூலைப் பின்பற்றி இந்தப் புராண நூல் செய்யுள் வடிவில் அமைந்தது எனத் தெரிகின்றது. இந்நூல் ஐம்பத்தொன்பது அத்தியாயங்களையும். 1482 செய்யுட்களையும் உடையது. வடமொழி வேங்கடாசல மான்மியத்தில் கண்டவாறே நூலின் ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் இன்னின்ன புராணத்தின் செய்தி இதில் அடங்கியது எனக் காட்டுகின்றது. எடுத்துக் காட்டாக, 'சீநிவாசன் நாராயண முனிக்கு அருள் செய்த அத்தியாயத்தில்',

"பேசரும் பெருமை சார்ந்த.
பிரம்மாண்டம் எனும்பேர் பெற்ற
மாசறு புராணந் தன்னின்
வளம்பெறச் சொலுமி தெல்லாம்
காசினி யதனிற் கேட்போர்
கருதிய யாவும் எய்தித்
தேசுற வாழ்ந்தே பின்னர்த்
திருவிறை பதஞ்சேர் வாரே." [262]

•

262. செய்யுள்-18

என்ற பாடலில் பிரமாண்ட புராணத்தின் பெயர் வருதல் காண்க. இங்ஙனம் இந்நூலில் பவிஷ்யோத்தர காண்டம், பிரம்மோத்திரகாண்டம், வராகம், வாமனம், பதுமம், காந்தம், மார்க்கண்டம் முதலிய புராணப் பெயர்கள் காணப்பெறுகின்றன.

'பெரிய திருவடி கிரீடாசலம் கொண்டுவந்த அத்தியாயத்தில்' உள்ள,

"ஏற்றுசீர் வராக மெனும்புரா ணத்தில்
இயம்புமிக் காதையைப் புவிமேல்
சாற்றுவோர் மனத்தில் உவப்புறக் கேட்போர்
சருவசித் திகளையும் அடைந்து
மாற்றரும் எழிலார் சதுர்த்தச புவன
மருவுவோர் யாவரும் புகழ்ந்து
போற்றமா தவர்க்கும் அறிவதற் கரிதாம்
புராதனன் உலகமே புகுவார்." [265]

என்ற பாடலில் 'வராக புராணம்' நுவலப் பெற்றிருப்பதைக் காண்க.

இந்நூலை நல்ல முறையில் பதிப்பித்த பெருமை திரு. தி. பொ. பழநியப்ப பிள்ளை அவர்களைச் சாரும். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் இந்நூல் 1949 இல் வெளியிடப் பெற்றுள்ளது. இதுவே திரு. பிள்ளையவர்களால் உரைநடையில் எழுதப் பெற்றும் வெளியிடப் பெற்றுள்ளது.

---

263. செய்யுள்-13.

# 6. மணவை திருவேங்கடமுடையான் மேகவிடு தூது

இந்த நூலின் பெயரைக் கண்டவுடனே இது திருவேங்கடத்துறை அண்ணலைப் பற்றிய நூல் என நம்மை மயக்கும். ஆனால், உண்மையில் இஃது அப்பெருமானைப் பற்றியதன்று. இது நெல்லை மாவட்டத்தில் பொருநை நதிக் கரையில்[264] உள்ள திருநாங்கூர் எம்பெருமான்மீது பாடப்பெற்ற ஒரு தூதுப்பிரபந்தமாகும். 'திருவேங்கட நாதனூர்' என்ற பெயரே, இப்போது 'திரு (வேங்கட) நா (த) னூர்' என்ற முறையில் குறுகி, 'திருநாங்கூர்' என வழங்குவதாகச் சொல்லப்பெறுகின்றது. இந்த ஊரில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்மீது பாடப்பெற்ற இச் சிற்றிலக்கியம் 187 கண்ணிகளையும், இறுதியில் ஒரு வெண்பாவையும் கொண்டது. 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்ற விதிக்கிணங்க இது பெண்பால் ஆண்பால்மீது விடுத்த தூது ஆகும்.

அன்பர்களே, எனக்குக் கிடைத்த குறுகிய காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட ஆறு நூல்களைப் பற்றியே என்னால் அறிய முடிந்தது. இவற்றிற்கு மேலும் வேங்கடநாதனைப்பற்றிப் பல நூல்கள் தோன்றி இருக்கலாம். அவை கூறப்பெறாத குறையை அன்பர்கள் பொறுத்தருள்வார்களாக. எனக்கு எவையேனும் கிடைத்தால், இச் சொற்பொழிவுகள் நூல் வடிவம்

---

264. திருநெல்வேலி நகருக்கு சுமார் ஐந்துகல் தொலைவில் உள்ள திருவேங்கட நாதனூர் எம்பெருமான் மீது பாடப் பெற்ற நூல்.

பெறும்போதோ, அன்றி அப்பொழிவுகளின் இரண்டாவது பதிப்பின்போதோ அவைபற்றிச் சிறிது கூறிக் குறையைப் போக்கிக் கொள்வேன். இப்பொழிவுகளைப் படிக்கும் அன்பர்கள் எவரேனும் வேறு நூல்களைக் கண்ணுறுவார்களாயின் அடியேனுக்கு விவரங்களுடன் தெரிவித்தருளக் கோருகின்றேன்.

## 7. திருவேங்கடமுடையான் திருவாயிரம்

இந்தத் தலைப்பினையுடைய தொகுப்பு நூலின் கையெழுத்துப் படியைப் பார்க்க நேர்ந்தது.[265] இதில் பல சிற்றிலக்கியங்கள் அடங்கியுள்ளன. அவை : 1. திருப்பல்லாண்டு; 2. திருப்பள்ளி எழுச்சி; 3. திருப்பாவை; 4. கலிவெண்பா; 5. பிள்ளைத் தமிழ்; 6. கலம்பகம்; 7. பதிகங்கள்; 8. அலங்காரம்; 9. ஒருபா ஒருபஃது; 10. இரட்டை மணி மாலை; 11. மும்மணிக் கோவை; 12. நான்மணி மாலை முதலியவை. இந்நூலின் ஆசிரியர் எஸ். கே. இராமராசன் என்பார். பத்து வயதுப் பாலகனாக இருந்த பொழுதே யான் இவரை யறிவேன். வித்துவான் நுழைவுத் தேர்வு எழுதும் பொழுதே கவிதையாக்கும் திறன் இயல்பாகவே இவரிடம் அமைந்திருந்தது. பரம்பரையாக சிறந்த வைணவ பக்தி நிலவிய மரபின் வழி வந்தவராகையால், இவரிடம் திருமால் பக்தியும் துளசி மணம் போல் இயல்பாகவே அமைந்திருந்தது என்று சொல்லத் தேவை இல்லை. திருவையாற்றில் வித்துவான் வகுப்பில் படித்த காலத்திலும் இவருடன் எனக்கு நெருங்கிய

---

265. இந்த நூல் அச்சாகிக் கொண்டிருந்தபொழுது இந்த வாய்ப்பு கிட்டியது.

தொடர்பு உண்டு. அக்காலத்திலும் இவரிடம் கவிதை இயற்றும் திறன் வளர்ந்தது. பின்னர் வேலூர் கண்டர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராகப் பணி தொடங்கித் தொடர்ந்து இன்று வரையிலும் பணியாற்றி வருகிறார். பல்வேறு கவியரங்குகளிலும் வானொலிக் கவியரங்குகளிலும் இவருடைய கவிதைகளைக் கேட்டு மகிழ்ந்த பல்லாயிரக்கணக்கான சுவைஞர்களில் யானும் ஒருவன்.

திருவேங்கடமுடையான்மீது எழுந்த நூல்களைப் பற்றிய பேச்சில் இவருடைய ஒரு சில நூல்களைப் பற்றிக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமேயாகும். முதலில் 'திருப்பல்லாண்டில்' இரண்டு பாடல்களைப் பார்ப்போம்.

''பல்லாண்டு! பல்லாண்டு! வேங்கடக் குன்றின்
பயின்றோங்கு நீல முகிலே!
பல்லாண்டு பல்லாண்டு நின்கொற்ற மார்பிற்
படிந்தோங்கு கருணை வடிவே.''

இஃது இச்சிறு நூலின் முதற் பாடல். வேங்கடவனுக்கும் அவன் திருமார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று அகலாதிருக்கும் அலர் மேல் மங்கைக்கும் பல்லாண்டு பாடுகின்றார் ஆசிரியர்.

அடுத்த பாடலிலும் ஏழுமலையான் மார்பில் இருக்கும் பெரிய பிராட்டியாருக்குப் பல்லாண்டு பாடுவதைக் காண்கின்றோம்.

''சீலம் இன்றி நோன்பின்றிச்
செறிவும் இன்றி உயிர்க்கூட்டம்
ஞாலம் வருந்தப் புரிகின்ற
நலிவை நினைந்து நின்னுள்ளத்துச்

சால முளேக்கும் சீற்றமெனும்
தழலே யவிக்க நின்மார்பில்
கோலம் பொலிய வீற்றிருப்பாள்
கொற்றம் வளர்க பல்லாண்டு.''

இதில் எம் பெருமாட்டியின் 'புருஷகாரம்' (தகவுரை) குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணலாம்.

''நீரிலே நெருப்புக் கிளருமாப் போலே, குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத் தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக.'' [266]

என்ற முமுட்சுப்படியின் வாக்கியத்தை நினைந்த வாறு இப்பாடல் கவிஞரின் உள்ளத்தில் அரும்பியிருக்க வேண்டும்.

ஆண்டாள் திருப்பாவையின் பாணியில் எழுந்த 'திருப்பாவை' யில் இந்த ஆசிரியரின் இரண்டு பாசுரங் களைக் காண்போம்.

''வேங்கடத்து மேவும் விமலன்; அருச்சுனர்க்குப்
பாங்குடைய கீதை பகரும் பரஞ்சோதி;
தேங்கமழுந் தண்டுளவத் தேவன் வடிவாகி
ஓங்குபுகழ்க் கோதை யுவக்கும் தமிழ்புனைந்து
தீங்கவிஞர் நெஞ்சிற் சிறக்கும் நலம்வழங்கி
வாங்கரும்சீர் மார்கழி வந்ததுகாண்! நேரிழையீர்!
தீங்ககல ஞாலத் திருமலையின் பேர்பாடி
ஈங்குயர்த்தும் நோன்பை யியற்றுவோம்; எம்பாவாய்!''

ஆண்டாள் திருப்பாவையில் பாவை நோன்பு இயற்றுவதற்காக 'நீராடப் போதுவீர்' என்று குறிப்பாக

266. முமுட்சுப்படி-127.

அழைக்கின்றனர் ஆய மங்கையர். இந்த ஆசிரியரின் பாடலில் 'நோன்பை இயற்றுவோம்' என்று வெளிப் படையாகவே கூறி அழைக்கின்றனர் ஆய்க்குலத்துச் சிறுமியர்.

இந்த நூலின் இன்னொரு பாடலைக் காண்போம்.

**"சிந்தை யிருளைத் தினமும் அகற்றுதற்கா**
**வந்த விளக்கே! வளமார் தவக்கொடியே!**
**நந்தலிலா மாறன் நவிற்றுதிரு வாய்மொழிபோல்**
**முந்தையவா னந்தம் முகிழ்க்கும் நிலையத்துச்**
**சுந்தரனைப் போற்றித் துயர்க்கு விடைவழங்கி**
**அந்தமிலா இன்பம் அடையா துறங்குதியோ?**
**சந்தமுறு நோன்பில் தகவார் சுவையேற்றப்**
**பைந்தொடியே! மெல்லப் பரிந்தெழுவாய்; எம்பாவாய்!"**

இப்பாடலில் குறிப்பிடப் பெறுகிறவள் அடியார்கள் மரபில் தோன்றிய வளமார் தவக்கொடி. நாடோறும் சிந்தையில் திரளும் அறியாமை என்ற இருளைப் போக்கு வதற்கென்றே தோன்றிய விளக்குப் போன்றவள். இவளைக் குழுவாக வந்து எழுப்புகின்றனர் ஆயர் மங்கையர்.

'திருப்பள்ளி எழுச்சி' யில் ஒரு பாடலைக் காட்டு வேன். தொண்டரடிப் பொடியாழ்வார், மணிவாசகப் பெருமான் அவரவர் போற்றும் எம்பெருமான்களை எழுப்புவதாகத் திருப்பள்ளி எழுச்சிகளைப் பாடி யுள்ளதை நாம் அறிவோம். அந்நிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டு அந்த அடிமைத்தன்மையை அறியாது உறங்கிய நிலையில் கிடந்த நம் நாட்டு மக்களை எழுப்பு வதுபோல் அமைந்த பாரதியாரின் 'பாரதமாதா திருப் பள்ளி எழுச்சி'யும் நம் அறிந்த ஒன்றே. அதே பாணியில் திருவேங்கடவனைத் துயிலெழச் செய்கின்றார் நம் இராமராசன்.

"திங்களின் வெண்கதிர் அடைந்தவீட் டகத்தே
சேர்தரு மிருள்தனிற் சார்தரு சுரும்பர்
மங்கலச் சுடரவன் திருவரு ளாலே
மகிழ்வொடு விடுதலை பெற்றுநின் துளபம்
தங்கிய தேனினை நுகர்தர வந்து
தகவொடு செவ்வழி பாடிடும்; அரசே!
துங்கநன் னலமருள் வேங்கடச் செல்வா!
சுந்தர னே!பள்ளி யெழுந்தரு ளாயே."

[சுரும்பர் - வண்டுகள்]

இப்பாடலில் தொண்டரடிப் பொடியாழ்வாரின் 'திருப்பள்ளி எழுச்சி'யிலுள்ள முதற் பாடலின் சாயல் தென்படுகின்றது. 'திருப்பள்ளி எழுச்சி'பற்றி இப்பொழி வின் இறுதியிலும் சில கருத்துகளைக் கூறுவேன்.

'அலங்காரம்' என்பது ஒருவகைச் சிற்றிலக்கியம். 'தொண்ணூற்ருறு' என்ற தொகையில் இதனையும் அடக்கலாம். காலவெள்ளத்தில் இத்தொகை தொண்ணூற்ருறையும் கடந்து போக வாய்ப்புண்டு. இங்ஙனம் தோன்றும் சிற்றிலக்கியங்களை,

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே."[267]

என்று தொல்காப்பியர் கூறும் 'விருந்து' என்ற வகையில் அடக்கலாம் என்பது தமிழ் இலக்கிய வரலாறு கற்ருர் அறிந்த ஒரு செய்தியாகும். அருணகிரியார் இயற்றிய 'கந்தரலங்காரம்' இவ்வகை நூலைச் சார்ந்தது. இராமராசனின் 'அலங்காரத்தில்' ஒரு பாடல்:

267. தொல், செய்யுளியல்-239

"உள்ளத்தி லுள்ளும் தொறுங்களிப்
போங்கி யுறுதுயர்செய்
கள்ளத்தை நீக்கிடும் தேன்கூடு
கண்டனம்; காதலொடு
தெள்ளத் தெளிந்த நலமரு
ளாழ்வார் செழுந்தமிழில்
மெள்ளச் செழித்துப் பொலிவுறு
வேங்கட வெற்பிடத்தே."

திருவேங்கடமலையில் ஒரு தேன் கூடு தென்படு கின்றது. அது பக்தர்கள் பாடும் நம்மாழ்வாரின் செழுந் தமிழால் மெல்லச் செழித்துச் சுவையும் பொலிவும் பெற்றுத் திகழ்கின்றது. அத் தேனிருல் நம் உள்ளத்தில் எழும் களிப்பின் காரணமாக விளையும் துயராகிய கள்ளத்தையும் போக்கும் என்கின்ருர் ஆசிரியர்.

இந்த அலங்காரத்தில் மற்ருெரு பாடல்:

"உனக்கும் எனக்கும் இடையே
மறைக்கும் உளத்திரையைக்
கனக்கும் கருணைக் கரத்தால்
விலக்கிக் கனிந்தருள்க;
சினக்கும் இரணியன் மார்பைப்
பிளந்து, தெளிந்தமறை
தனக்கும் புவிக்கும் உயிர்ப்பருள்
வேங்கடத் தற்பரனே."

இதில் எம்பெருமானுக்கும் உயிருக்கும் இடையில் வினைவயத்தால் தோன்றி மறைக்கும் மனத்திரையை கனக்கும் கருணைக் கரத்தால் (அபயகரம்) கனிந்து நீக்கி யருளுமாறு வேண்டுகின்ருர் ஆசிரியர். இரணியன் மார்பைப் பிளந்து நான்மறைக்கும் புவியிலுள்ளோா

மானைப் பாடும் பணியினையே பணியாகக் கொண்ட அருணகிரியார் கந்தன்மேல் பல நூல்களைப் பாடிப் பரவசப்பட்டார். அங்ஙனமே சிறந்த திருமாலடியா ராகிய நம் இராமராசனும் திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் சீநிவாசன்மீது ஆயிரம் பாடல்களைப் பாடிக் களிப்பெய்துகின்றார்.

'பிள்ளைத் தமிழி'ல் இரண்டே இரண்டு பாடல்களைக் காட்டி மேற்செல்லுவேன். 'பன்னிரு பாட்டியல்' என்ற நூல் இதனைப் 'பிள்ளைப்பாட்டு' என்றும், வேறு பாட்டியல் நூல்கள் 'பிள்ளைக்கவி' என்றும் குறிப்பிடும். இது குழந்தையின் பருவத்தைப் பத்துப் பகுதிகளாகப் பிரித்துப் பகுதிக்குப் பத்தாக நூறு பாடல்களில் பாடப் பெறும் ஒரு சிற்றிலக்கியம். தாலப் பருவத்திலுள்ள ஒரு பாடலைக் காண்போம்.

"உருகாக் கல்லும் பனிபோல
வுடைந்து நெகிழ நாரதனார்
உவந்து பாடும் தனியிசையை
ஒப்பில் லாத நான்மறையைப்
பெருகார் வங்கொள் முத்தருளம்
பேணி வழங்கு தனித்துதியைப்
பிரச மலரில் வீற்றிருக்கும்
பிராட்டி யிசைக்கும் நன்மொழியை,
அருகே பாடும் தரங்கத்தை
அமைத்த கரத்தால் நன்கடக்கி
அரிய மோன வடிவாகி
அருள்சேர் வழியில் புனல்பெருக்கிக்
குருகா புரியார் மறைகேட்கும்
கோவே! தாலோ தாலேலோ!
குலவு திருவேங் கடம்மேவு
குரிசில் தாலோ தாலேலோ!"

பாடலைப் பன்முறைப் பாடிப்பாடித் திருவாய் மொழியின் பெருமை இதில் பேசப்படுவதை உணர்ந்து மகிழ்வோமாக.

முத்தப் பருவத்திலுள்ள ஒரு பாடலைச் சுவைத்து மகிழ்வோம்.

"நறைசேர் கமல மாளிகையில்
நவையில் வேத மணிமுடியை
நயவா தரக்கர் புரிகொடுமை
நாச மாக இலங்கையினிற்
சிறைசேர் பிராட்டி ஏற்றத்தைச்
சீரார் கம்பன் வால்மீகி
செப்பிச் செப்பி யுளங்கரையும்
செம்மை நோக்கி யப்புகழை
மறைசேர் ஞானப் பெருமக்கள்
மகிழ்வாற் சூட்டும் பேறெய்தி
மாண்பை யடைய வுளத்தெண்ணி
மதியில் கஞ்சன் வெஞ்சிறையில்
முறைசேர் கனிவோ டவதரித்த
முதல்வா! தருக முத்தமே!
முகில்சேர் தெய்வத் திருமலையாய்
முத்தம் தருக முத்தமே."

இப்பாடலையும் பன்முறை படித்துப் படித்துப் பாட்டின்பத்தின் கொடுமுடியை எட்டிப் பிடிப்போம். ஆசிரியரின் இராமாவதார அநுபவத்தை இதில் கண்டு மகிழலாம்.

"இதிகாச சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால்
சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது"[268]

268. ஸ்ரீவசன பூஷணம்—5 (புருடோத்தம நாயுடு பதிப்பு.)

என்ற ஸ்ரீவசனபூஷண வாக்கியம் இவ்வாசிரியரின் உள்ளத்தில் இப்பாடல் முகிழ்த்தபொழுது குமிழியிட்டிருந்திருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

காலச் சுருக்கம் கருதி 'திருக்கலம்பகத்தில்' மட்டிலும் மூன்று பாடல்களைக் காட்டி அமைவேன். திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அழகிய மணவாளன் மீது 'திருவரங்கக் கலம்பகம்', 'திருவரங்கத்து மாலை', 'திருவரங்கத்தந்தாதி' என்ற மூன்று நூல்களை பாடினார். ஆனால், 'திருவேங்கடத்தின்'மீது 'திருக்கலம்பகம்' பாடவில்லை. ஆயின் 'திருவேங்கடத்தந்தாதி', 'திருவேங்கட மாலை' என்ற இரண்டு நூல்களை மட்டிலும் பாடியதை முன்னர் விளக்கினேன். முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் 'திருவேங்கடக் கலம்பகம்' பாடி இக்குறையை நீக்கினார். இந்த நூலைப் பற்றியும் முன்னர் விரிவாகக் கண்டோம். நம் இராமராசன் ஏழுமலையான்மீது 'திருக் கலம்பகம்' பாடி இக்குறையை மேலும் நிவர்த்தி செய்துள்ளார். இதில் ஒரு பாடலை எடுத்துக் காட்டலாம் எனக் கருதுகின்றேன்.

"திருமகளும் நிலமகளும்
சிறந்திருபால் பொலிந்திருப்பப்
பெருமைதரும் அருள்மடந்தை
பிறங்குமுளத் திடையொளிர
வண்ணமுறும் அடையாகி
வளங்குலவு குடையாகிப்
புண்ணியங்கொள் தெய்வநலப்
புயங்கவர சின்பமுற

வயங்குபெருங் கருணைநிறை
மலர்க்கண்க ளமுதூற்ற
நலங்குலவு மணிமகுடம்
நற்றலைமைப் பொருள்பகரப்
புறவிருளும் அகவிருளும்
புகாப்புனித நிலையத்தே
அருளுருவாய்ப் பொலிந்தோங்கும்
அற்புதமார் பரஞ்சோதி.''

[புயங்க அரசு-பாம்பு அரசு, ஆதிசேடன்]

என்பது திருவேங்கடமுடையானை வருணிக்கும் கொச்சகம்; தலைவியின் கூற்றாக வந்தது. திருவேங்கடமுடையானின் பெருமையைத் தலைவி எடுத்துக் கூறுகின்றாள்.

இனி, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரும் தாழிசைகளைக் காண்போம்.

''குலவுபுகழ் அண்டமெலாம்
கோவேநின் சந்நிதியில்
இலகுதனிச் சிற்றணுவா?
இலைகோணின் கோணையா.

அறிவென்றும் செருக்குடையார்
அகிலமெலாம் திரிந்திடினும்
செறிவுறுநின் றனைக்காணார்;
திகைத்தயர்வார் பிறபகர்வார்.

குன்றாத பேரன்பிற்
குழைவார்தம் இதயத்து
நின்றாயை அரியையென
நிடழ்த்துவரோ அந்தணர்கள்?''

[கோண்—அணுவின் சதகூறு.]

இம்மூன்று தாழிசைகளும் படிப்போரை மனோன்மணீய நாடகத்தில் தமிழ்த்தாய் வணக்கமாக வரும் தாழிசைகளை நினைக்கச் செய்கின்றன. எம்பெருமானின் செருக்கையும் மிடுக்கையும் மிடுக்கான நடையிலமைந்த தாழிசைகள் நினைப்பூட்டுவதையும் கண்டு மகிழலாம்.

கலம்பகத்தின் உறுப்புகளில் ஒன்று 'அம்மானை' என்பது. மூன்று மங்கையர் பந்துகளைக் கொண்டு ஆடும் விளையாட்டு இஃது என்பதை முன்னர் விளக்கியதை நினைவுகூர வேண்டுகிறேன். அங்ஙனம் ஆடுங்கால் பாட்டுடைத் தலைவனது இயல்பினைச் சொல்லிக் கொண்டே ஆடுவார்கள் அந்த மங்கைமார்கள்.

"சேரலர்கோன் போற்றும் திருவேங் கடமுடையான்
பாரினிடை யாண்டும் பரந்துள்ளான் அம்மானை
பாரினிடை யாண்டும் பரந்துள்ளா னாமாயின்
நாரியே எவ்விடத்தும் நான்காணேன் அம்மானை
நான்போனாற் காணலாம் நங்கையே அம்மானை."

[சேரலர்கோன்–குலசேகரர்]

என்ற பாடல் மிக அருமையாக அமைந்துள்ளது. இறைவன் எங்கும் பரந்துள்ளான் (Omnipresence) என்ற கருத்து இதில் நுட்பமாக அமைந்துள்ளமை நோக்கத் தக்கது.

பொதுவாக இந்த ஆசிரியரின் பாடல்களில் ஆழ்வார் பாசுரங்களின் சாயலும் கம்பனின் சொல்வளமும் மிளிர்வதைக் காணலாம். எங்கோ சென்று அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டிய என்னைத் தமிழ்த் துறைக்கு ஈர்த்தவரும், தமிழ்ப்புலமைக்கு எனக்கு ஒரு கலங்கரை விளக்கம்போல் நின்று வழிகாட்டியவருமான பன்மொழிக் குரிசில் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் ஒரு சமயம் என்னிடம், "பெயர் குறிப்பிடாமல் நம்

இராமராசன் பாடல்களை நோக்கினால், அவற்றில் சிந்தாமணி ஆசிரியரின் கற்பனையும் சொல்வளமும் தென்படுகின்றன" என்று கூறியதை மட்டிலும் உங்கட்கு நினைவுறுத்தி மேற்செல்லுவேன்.

## 8. திருவேங்கடவன் மாலை

அன்பர்களே, வைணவ தத்துவப்படி 'உறங்குவான் போல் யோகுசெய்வான்'[269] எம்பெருமான். உலகத்தை உய்விக்கும் பொருட்டுப் பரமபதத்தை விட்டு திருப்பாற் கடலில் கண்வளர்வதுபோல் பாவனை செய்துகொண்டு வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற நான்கு நிலைகளில் நின்று இந்த லீலாவிபூதியின் செயல்களைக் கவனிப்பதாக வைணவ தத்துவம் பேசும்.[270] அங்ஙனம் உறங்கும் எம்பெருமானை எழுப்புவதாகத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஆண்டாளும் ஒருகவி மரபினை ஏற்படுத்தினர். சைவ சமய குரவர்களுள் ஒருவரான மணிவாசகப் பெருமானும் இந்த மரபினை மேற்கொண்டு திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களை அமைத்துள்ளார். இத் தமிழ் மரபினையொட்டியே சற்றேறக் குறைய 600 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த மணவாள மாமுனிகளின் காலத்திலோ அல்லது அவர் காலத்திற்குச் சற்றுப் பின்னரோ வாழ்ந்த ஓர் வைணவ பக்தரால் திருவேங்கடவன்மீது பாடப் பெற்றவை ஸ்ரீ வெங்கடேச ஸுப்ரபாதம், ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்திரம், ஸ்ரீ வெங்கடேச ப்ரபத்தி, ஸ்ரீ வெங்கடேச மங்களாசாஸனம் என்ற நான்கு வடமொழி நூல்கள். இவற்றை அடியொற்றித் தமிழில்

---

269. திருவாய். 5.4:11.
270. தத்துவத் திரயம் - ஈசுவரப் பிரகரணம் - சூத்திரம் 44, 45, 46, 47.

பெயர்க்கப்பெற்றது இத்தொகுப்பு நூல். ஆகவே, இது வழிநூல் வகையைச் சார்கின்றது. இவற்றுள் முதல் நூல் தமிழ் 'திருப்பள்ளி எழுச்சி' மரபினைத் தழுவியதாகும். நம் நாடு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் வாழ்ந்த பாரதியாரும் 'பாரதமாதா திருப்பள்ளிஎழுச்சி' என்ற தலைப்பில் ஐந்து பாடல்களை இயற்றி உறங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களிடம் தேசபக்திக் கனலை எழுப்பினர் என்பதை நாம் அறிவோம். இவர்களுள் தொண்டரடிப் பொடியாழ்வாரும் மணிவாசகப் பெருமானும் பதிகமுறையில் பத்துப் பாடல்களை அருளினர். பாரதியார் ஐந்து பாடல்களையே அமைத்தார். ஸுப்ரபாதம் ஆக்கியவர் இருபத்து மூன்று பாடல்களை இயற்றினர். பாரதியார் தமிழ் மரபினின்றும் விலகினர். ஸுப்ரபாதம் ஆசிரியர் ஒரு கவிமரபினையும் பின்பற்றாது பக்திமரபினையே பற்றுகோடாகக் கொண்டு பாடல்களை அமைத்துக் கொண்டார்.

மேற்குறிப்பிட்ட நான்கு வடமொழி நூல்களை முறையே தழுவி அமைக்கப் பெற்றவை, 'திருவேங்கட மாலை' யில் அடங்கியுள்ள திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி, திருவேங்கடவன் துதி, திருவேங்கடவன் திருவடித் துதி, திருவேங்கடவன் மங்கள வாழ்த்து என்ற நான்கு நூல்களும். வடமொழியிலுள்ள நான்கு நூல்களையும் தமிழ்க் கவிதைகளாக வடித்தெடுத்தவர் என் அரிய நண்பர் திரு. இரா. பத்மநாபன் அவர்கள். இவர் தற்சமயம் காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரி அலுவலகத்தில் முதல்வரின் தனியலுவலராகப் பணியாற்றுபவர். திருவேங்கடவன்பால் எல்லையற்ற பக்தியும் தமிழின்பால் மிக்க ஈடுபாடும் கொண்டவர் என்பதை இருபதாண்டுக்குமேல் இவருடன் கொண்ட நெருங்கிய தொடர்பால் நான் நன்கு அறிவேன். அடக்கமான

பண்பும், குழந்தையின் நெஞ்சுபோல் குழைவான நெஞ்சத்தையும் உடையவர். இவருடைய பக்தியினையும் தமிழ் மரபினைப் போற்றும் பாங்கினையும் நூலெங்கும் காணலாம்.

இத்தொகுப்பு நூலை பத்மவிபூஷண மகாவித்துவான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளின் ஆசியுரை அணி செய்கின்றது. "இன்றெனக்கு நல்விடிவு 'திருவேங்கடமாலை' என் முடிமீதேறிற்று. உவந்தேன். உவப்பைவிட வியப்பே அதிகம். அநாயாசமான கவிதை. உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் கவிதை. ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். பேரின்ப மெய்தினேன். தமிழ்ப் பா நிபந்தனைகட்குக் கட்டுப் பட்டுச் சுவைக்கேடு ஆகாமே ஆக்கியிருக்குமழகு தனிச் சிறப்பு வாய்ந்தது" என்ற சுவாமிகளின் திருவாக்கால் நூலின் சிறப்பினை நன்கு அறியலாம்.

'மொழிபெயர்ப்பு' என்பது ஓர் அரியகலை; இலக்கியப் படைப்புகளில் மொழி பெயர்ப்பு நூலும் ஒருவகை. வழிநூல் வகைகளைக் குறிப்பிடுமிடத்து தொல்காப்பியர் மொழி பெயர்ப்பினை 'அதர்ப்படயாத்தல்' என்று கூறுவர்.[271] மொழிபெயர்ப்பு நூலைப் படிப்போருக்கு 'இஃது ஒரு மொழிபெயர்ப்பு' என்று தோன்றா வண்ணம் அமைதல் வேண்டும். இந்த அரியபண்பினை 'திருவேங்கடவன் மாலை' என்ற தமிழ்க்கவியாக்க நூலில் கண்டு மகிழலாம்.

## (i) திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி:

தமிழகக் குயில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இன்னிசையின் மூலம் வடமொழி

---

271. தொல். பொருள். மரபியல்-நூற்பா, 99

ஸ்ரீவெங்கடேச ஸுப்ரபாதத்தை வானொலி மூலம் செவிமடுக்காத தமிழர்களே இரார் எனலாம். தொண்டரடிப் பொடியாழ்வாரின் 'திருப்பள்ளியெழுச்சி' மணிவாசகப் பெருமானின் 'திருப்பள்ளியெழுச்சி' பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி'ப் பாடல்களை அறிந்தவர்கள் நாம்; இறைவனைத் துயிலெழுப்புவதாகப் பாடும்மரபினை நாம் அறிவோம். அந்த மரபினையொட்டியதே வடமொழி ஸுப்ரபாதமரபும். வடமொழிப் பாசுரங்களை உள்ளம் உருக ஓதியும் பிறர் ஓதுங்கால் நெஞ்சுகுழைந்து ஈடுபட்டும் திளைக்கும் திரு. பத்மநாபன் அவர்களை நான் நேரில் பலமுறைப் பார்த்தவன். சுமார் பத்தாண்டுகட்கு முன்னர் அவரும் நானும் சில நண்பர்களுடன் அதிகாலையில் ஏழுமலையானை வழிபட்டது இன்னும் என் உள்ளத்தில் பசுமையாகவே உள்ளது. இனி மொழி பெயர்ப்பின் நேர்த்தியைக் கண்டு மகிழ்வோம்.

ஏழுமலையானை எழுப்புவதாக அமைந்த பாடல் :

"பத்மே சமித்ர சதபத்ர சுதாலிவர்காः
ஹர்த்தும் ச்ரியம் குவலயஸ்ய நிஜாங்கலக்ஷ்ம்யா
பேரீநிநாதமிய பிப்ரதி தீவ்ரநாதம்
சேஷாத்ரிசேகரவிபோ தவ ஸுப்ரபாதம்."[272]

இதன் தமிழ்க் கவிதையின் வடிவம் இது :

"கதிரவன் தோழியாம் கமல மலரினில்
வதியும் வண்டுகள் வண்கு வளைதன்
கருநிற எழிலைக் காணப் பொறுஅது
அரவணைத் துயிலும் அரியின் அழகிய

272. ஸுப்ரபாதம்-12

கருமை எமக்கே உரிமைஎன் கழறி
உரக்க முரலும் ஓவா முழக்கால்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க.''

*ஸுப்ரபாதத்தில் இன்னொரு பாடல் :*

''ஸ்ரீபத்மநாப புருஷோத்தம வாஸுதேவ
வைகுண்ட மாதவ ஜநார்தந சக்ரபாணே
ஸ்ரீவத்ஸசிஹ்ந சரணகத பாரிஜாத
ஸ்ரீவேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்.''[273]

*இதன் தமிழ்க்கவிதை வடிவம் வருமாறு :*

''பற்ப நாபா! பரபுரு டோத்தமா!
பொற்புடை வாசு தேவனும் புகழுடை
மாதவ! சனர்த்தன! மலர்க்கை ஆதியாய்!
மாதவர் மேவிடும் வைகுந்த பதியே!
திருமறு மார்பா! சரணவான் தருவே,
திருவேங் கடவா! திருக்கண் மலர்க!''

*தொண்டரடிப் பொடியாழ்வார் 'திருப்பள்ளி எழுச்சியில்' பாடல் தோறும் ''அரங்கத்தம்மா பள்ளி எழுந் தருளாயே!'' என்று முடிவதுபோலும், மாணிக்கவாசகர் 'திருப்பள்ளி எழுச்சியில்' பாடல்கள் 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!' என்று இறுவது போலவும், பாரதியின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியில்' ஐந்து பாடல்களும் 'பள்ளி எழுந்தருளாயே!' என்று முடிவது போலவும் 'திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி'ப் பாடல்களும் 'திருவேங்கடவா! திருக்கண் மலர்க !' என்றே இறுகின்றன.*

273. ஸுப்ரபாதம்-22

இந்நூலில் இரண்டு பாடல்கள் புருஷகார பூதையான பெரிய பிராட்டியாரை எழுப்புவதாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்றினைக் காண்போம்.

"மாதஸ் ஸமஸ்த ஜகதாம் மதுகைடபாரே :
வக்ஷோ விஹாரிணி மனோகர திவ்யமூர்த்தே
ஸ்ரீஸ்வாமினி ச்ரிதஜன ப்ரியதான சீலே
ஸ்ரீவெங்கடேச தயிதே தவ ஸுப்ரபாதம்"[274]

இப்பாடல்,

"எல்லா உலகும்ஈன்றஎன் அன்னாய்!
பொல்லா மதுகை டபரைப் போக்கிய
மாயோன் மார்பமர் திருவே! தேவீ!
ஆயே! மனங்கவர் ஆர்எழில் உருவோய்!
அண்டினோர் வேட்பதை அருளிடும் சீலமே!
நல்திரு வேங்கட நாயகீ! கண்விழி!"

என்று தமிழ்க்கவிதை வடிவம் பெறுகின்றது. இதன் அடுத்த பாடல் 'திருமலை நாயகி! திருக்கண் மலர்க!' என்று முடிகின்றது. அப்பனை எழுப்பும் பாடல்களில் அன்னையை எழுப்பும் பாடல்களும் கலந்து வருவது ஆண்டாள் 'திருப்பாவையில்' கையாண்ட மரபினைத் தழுவியதாகும்.[275] வைணவதத்துவப்படி புருஷகாரமாயிருப்பவள் பெரிய பிராட்டியார். இத் தத்துவத்தை மேற்கொண்டே ஆண்டாளின் பாடல் நப்பின்னைப் பிராட்டியை எழுப்புவதாக அமைந்தது. ஸுப்ரபாத ஆசிரியரும் திருமலைநாயகியை எழுப்புவதாகப் பாடல்களை அமைத்தார் என்பது ஈண்டு அறியத் தக்கது. இந்த நூலில் இருபத்தொன்பது பாடல்கள் உள்ளன.

274. ஸுப்ரபாதம்-3
275. திருப்பாவை-18 ('உந்துமதகளிற்றன்')

(ii) திருவேங்கடவன் துதி :

இதுவும் ஓர் அருமையான மொழிபெயர்ப்பு நூலாகும். வடமொழிச் செல்வர்க்கால் தமிழில் தோத்திரப் பாக்கள் ஏராளமாக எழுந்துள்ளன என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றால் அறிவோம். அந்தப் பக்திச் செல்வத்துடன் இந்நூலும் சேர்கின்றது. சான்றாக இரண்டு பாடல்களைக் காண்போம்.

"கமலா குச சூசுக குங்குமதோ
நியதாருணி தாதுல நீலதநோ
கமலாய தலோசன லோகபதே
விஜயீபவ வேங்கடசைலபதே"

என்பது ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்திரத்தின் முதற்பாடல். இதன் தமிழ் மொழிபெயர்ப்பு :

"கமலக் குயமுனைக் குங்குமக் கலப்பால்
நிமலா! நின்கரு நிறமும் சிவக்கும்;
கமலக் கண்ணா! கார்நிற வண்ணா!
உலகின் இறையே! உத்தம! தேவே!
விமலா! வேங்கட நாதா! வெல்க!"

வடமொழிப்பாடல் பாடப்பெற்று வரும் மெட்டமைப்பிலேயே இதனையும் பாடலாம். இன்னொரு பாடலைக் காண்போம்.

"அஹம் தூரதஸ்தே பதாம்போஜயுக்ம
ப்ரணாமேச்சயாகத்ய ஸேவாம் கரோமி
ஸக்ருத்ஸேவயா நித்யஸேவாபலம்த்வம்
ப்ரயச்ச ப்ரயச்ச ப்ரபோ வேங்கடேச."[276]

இதன் தமிழ்மொழி பெயர்ப்பு அருமையாக அமைந்துள்ளது. அதனையும் காண்போம்.

"விருப்பாய் சேய்மை வியன்வழி வந்தே
திருவடித் தாமரை சேவித்து நின்றேன்;
ஒருமுறை உன்தன் காட்சி காணின்
திருவடி தன்னைத் தினமும் காணும்
அரிதினும் அரிதாம் ஆக்கம் கூடும்
அருளினை ஈந்தே, ஆட்கொள்! ஆட்கொள்!"

பாடல் பன்முறை பாடி மகிழத்தக்கது. தேவார மரபினையொட்டி வடமொழியில் பதினொரு பாடல்களால் அமைந்துள்ளது. ஆனால் தேவாரத்தில் திருக்கடைக் காப்புச் செய்யுளில் பாடினவர் பெயர் காணப்படுவது போல் இப்பதிகத்தில் பாடினவர் பெயர் காணப் பெறவில்லை.

## (iii) திருவேங்கடவன் திருவடித்துதி :

'ஸ்ரீவெங்கடேச பிரபத்தி' என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு இது. 'பிரபத்தி' என்ற வடசொல் தமிழில் 'அடைக்கலம்' என்று பொருள்படும்; வடமொழியில் இது 'சரணாகதி' என்றும் வழங்கப்பெறும். திருமங்கையாழ்வாரின் 'திருவெழு கூற்றிருக்கை' சரணாகதி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக ஆழ்வார்களின் திருப்பாசுரங்களின் தத்துவம் சரணாகதியையே அடிப்படையாகக் கொண்டது. அந்த மரபினைப் பரப்பும் ஆசாரியப் பெருந்தகை மணவாள மாமுனிகளின் சீடர்களில் ஒருவர்பாடிய 'ஸ்ரீவெங்கடேச பிரபத்தி' சரணாகதி தத்துவத்தைக் கொண்டிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. இச்சிறுநூல் பதினாறு

---

276. ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்ரம்-பாடல். 10.

பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'திரு வேங்கடவா! திருவடி சரணம்' என்று இறுகின்றது. முதற்பாடல் வைணவதத்துவப்படி 'அகலகில்லேன் இறையும்' என்று அன்பால் இறைவன்திருமார்பில் உறையும் அலர்மேல் மங்கையின் மூலம் எம்பெருமானைச் சரண்புகும் முறையில் அமைந்துள்ளது. அது,

"அன்பார் பகவதீ! அவனியின் அன்னாய்!
உன்பதம் தொழுதேன் உயர்நலத் திருவே!"

என்ற அடிகளால் முடிகின்றது.

"திருவே! உன்தன் திருவடிச் சிலம்பை,
மருவார் மலரால் மறைத்திட் டாலும்
திருவடி மணமே திறமதில் விஞ்சும்." [277]

என்ற அடிகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

"விட்ணுவே பரம்பதப் பொருளென வேதம்
இட்டமாய் ஏத்தும்உன் இணைஆர் அடிகளை
மறைமுடி; அதனையே மாந்தி மகிழும்;
அறைதற்கு அரியஉன் அறைகழல்; அவைதாம்,
அன்புடன் மீண்டும் அடியேன் காண,
அன்புடன் வாக்கை அழகாய்ச் சுட்டிட,
திருவேங் கடம்தனில் திருநிலை கொள்ளும்;
திருவேங் கடவா! திருவடி சரணம்!"

என்ற பாடல் திருவடிகளின் பெருமையைப் பேசுகின்றது. அடுத்த பாடல் சரமசுலோகத்தின் கருத்தை,

"என்னையே நம்புவாய்! ஏதமே வாரா!
என்னையே சரண்அடை! ஏக்கம் கொள்ளேல்!"

---

277. திருவேங்கடவன் திருவடித் துதி-3
278. திருவேங்கடவன் திருவடித்துதி–10

என்று எடுத்தியம்பும் நேர்த்தி நம் உள்ளத்தைத் தொடுகின்றது. இங்ஙனம் பாடல்களின் அருமையையும் பெருமையையும் சொல்லிக் கொண்டே போகலாம்.

## (iv) திருவேங்கடவன் மங்கள வாழ்த்து :

நூல் பதினொன்கு பாடல்களை கொண்டது. ஒவ்வொரு பாடலும் "திருவேங்கடவா! தேவனே! மங்களம்" என்று இறுகின்றது. வடமொழிப் பாடலின் இறுதியடி மட்டிலும் பிராட்டியாரின் சேர்த்தியோடு "ஸ்ரீநிவாஸாய மங்களம்" என்று இறுவதற்கேற்பத் தமிழ்ப் பாடலும் அதற்கேற்ற வடிவம் பெறுகின்றது. இந்நூலில்,

"ஸ்ரீய : காந்தாய கல்யாண
நிதயே நிதயேர்த்திநாம்
ஸ்ரீவெங்கட நிவாஸாய
ஸ்ரீநிவாஸாய மங்களம்"

என்ற வடமொழி முதற்பாடல்,

"மலராள் மணாளா! மங்கல வைப்பே!
நலம்தருள் நாயக! நாடுவோர் நிதியே
திருவேங் கடம்தனில் திருப்பதி கொண்டோய்!
திருமகள் நிலய! தேவனே! மங்களம்."

என்று தமிழ்க் கவிதை வடிவம் கொள்ளுகின்றது.

எம்பெருமான் பரமபதத்தை விட்டு நாம் உய்யும் பொருட்டுத் திருமலையில் கோயில் கொண்டுள்ளார் என்ற கருத்தை ஒரு பாடல் தெரிவிக்கின்றது.

"பரமாம் பதத்தின் பற்றையும் துறந்தோய்
பரமாம்இறைபுட் கரணியின் பாங்கர்

---

279. திருவேங்கடவன் மங்கள வாழ்த்து-9

திருமகள் தன்னொடும் திளைத்து மகிழ்வோய்!
திருமலை தன்னில் திருப்பதி கொள்வோய்!
திருவேங் கடவா! தேவனே! மங்களம்!''

என்ற பாடலில் இதனைக் காணலாம். பொதுவாக இந்த நான்கு வடமொழி நூல்களிலும் ஆழ்வார் பாடல்களின் செல்வாக்கு நிழலிடுகின்றது. வடமொழிப் பயிற்சி இல்லாதவர்கள் தமிழ்க் கவிதை வடிவத்தில் திகழும் 'திருவேங்கடவன்மாலை' என்ற நூலைப் பக்தியுடன் படித்து அநுபவிக்குங்கால் இந்த உண்மை அவர்கள் உள்ளத்தில் பளிச்சென்று தோன்றுவதை அறிவார்கள். இந்தத் தமிழ்ப் பாடல்களின் அருமையை

''சீர்தோறும் தெய்வத்
திருமணக்கும் பாமாலை
யார்வாயும் தேன்பாய்ச்சும்
யாழிசையாய்ப்—பார்போற்றும்
செந்தமிழைப் போலச்
சிறந்தோங்கிப் பாடியவர்
சந்ததமும் வாழ்க
தழைத்து.'' [280]

என்ற இனிய வெண்பாவால் அறிந்து மகிழலாம்.

**இறுவாய் :**

எங்கோ பிறந்து எங்கோ வாழ்ந்து ஓராண்டுப் பருவத்தில் தந்தையைஇழந்து அன்னையின் அரவணைப்பி லிருந்துகொண்டு வளர்ந்து இறையருளால் உயர்கல்வி பெற்றேன். அறிவியல் கல்வியில் அதிகநாட்டங்கொண்டு பயின்றேன். இன்றும் அத்துறையில் உள்ள நாட்டம்

---

280. என் அருமை மாணாக்கர் திரு. ரெ. சிங்கார வடிவேலன் பாடியது. (தேவகோட்டையிலுள்ள கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்று பவர்).

குறையவில்லை. எல்லாமட்டங்களிலும் நல்லாசிரியர்களைப் பெறும் பேறும் கிடைத்தது. பெரிய புதிய போக்குகளின் விவரங்களை அறிய வாய்ப்பு பெருவிடினும், அப்போக்கு களின் பலன்களை ஒரளவு அறிந்து கொண்டுதான் வருகின்றேன். அறிவியல் கருத்துகள் சிறுவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் இவர்களிடையே பரவு வதற்கு அவ்வப்போது சிறுசிறு நூல்கள் எழுதி வருகின்றேன். காரைக்குடி வாழ்வும் திருப்பதி வாழ்வும் இப்பணிக்கு ஒய்வையும் உற்சாகத்தையும் அளித்தன. அது கிடக்க.

இங்ஙனம் அறிவியலில் நாட்டங்கொண்ட என்னைத் தமிழன்னை ஆட்கொண்டாள். 1940லிருந்து பல்லாண்டு களாக அவள் மடியில் கிடந்துகொண்டு கொஞ்சி அவள் அன்பைப் பெற்று வருகின்றேன். இன்னும் அவளுடைய பரந்த செல்வத்தையெல்லாம் பெறும் பேறு பெற்றேன் அல்லேன். அவளுடைய அன்பினுலேயே அறிவியல் நூல் களை எழுத முடிந்தது. அந்நூல்களை அவள் திருவடியி லேயே வைத்து வணங்குகின்றேன்.

வாழ்க்கையில் இறைவன் என்னைப் பல சோதனை கட்கு உட்படுத்தி வருகின்முன். ஆனால், அச்சோதனை களைத் தாக்குப் பிடிக்கும் திராணியையும் எனக்கு அளித் துள்ளான். எந்த இக்கட்டுகளிடையேயும் கடுமையான உழைப்பினை மேற்கொள்ளும் மனநிலையையும் பெற்றி ருப்பது அவனது அருளாலேயாகும். கிட்டத்தட்ட என்னுடைய பதவியின் இறுதிக் காலத்தில் திருப்பதி என்னும் திவ்வியதேசத்தில் வாழும் பேற்றையும் அளித் துள்ளான். இது பெறற்கரியபேறு எனக் கருதுகின்றேன். ஏழுமலையானே "இந்தப் பொழிவுத் தொடர்களின் பொருள்பற்றி "மூன்று உரைகள்" நிகழ்த்துமாறு பணித்ததாகவே கருதுகின்றேன். அவனிட்ட வழக்கை

அன்புடனும் ஆதரத்துடனும் நிறைவேற்றி விட்ட தாகவே நினைக்கின்றேன். குறையிருப்பின் அது என்னுடைய குறையே. ஆயினும், பக்தியிலும் ஆதரத்திலும் இப்பணியை ஆற்றுவதில் குறை இருப்பதாக என் மனம் கருதவில்லை.

இறுதியாக, திருமங்கையாழ்வாரின் இரண்டு பாசுரங்களில் ஆழங்கால் பட்டு இப்பொழிவுத் தொடர்களைத் தலைக்கட்டுகின்றேன்.

"தாயே தந்தைஎன்றும்
தாரமேகிளை மக்கள்என்றும்
நோயே, பட்டொழிந்தேன்
நுன்னைக்காண்பதோ ராசையினல்
வேயேய் பூம்பொழில்சூழ்
விரையார்திரு வேங்கடவா!
நாயேன் வந்தடைந்தேன்
நல்கியாளென்னைக் கொண்டருளே!" [281]

"தெரியேன் பாலகனுய்ப்
பலதீமைகள் செய்துமிட்டேன்
பெரியே னுயினபின்
பிறர்க்கேயுழைத் தேழையானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ்
கனமாமலை வேங்கடவா!
அரியே! வந்தடைந்தேன்
அடியேனை ஆட் கொண்டருளே." [282]

— நூல் முற்றுப் பெற்றது —

281. பெரி. திரு. 1 : 9 : 1
282. பெரி. திரு. 1 : 9 : 7

# பின்னிணைப்பு-1

## பயன்பட்ட நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. அந்தாதிக் கொத்து | | Madras govt. oriental Manuscript Series No. 51. |
| 2. அழகர் கலம்பகம் | | |
| 3. அருணகிரியார் | : | திருப்புகழ் |
| 4. ஆசிரியமாலை | | |
| 5. ஆழ்வார்கள் | : | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் |
| 6. இராகவய்யங்கார், மு | : | ஆராய்ச்சித் தொகுதி |
| 7. இராமராசன், எஸ். கே. | : | திருவேங்கடமுடையான் திருவாயிரம் |
| 8. இளங்கோஅடிகள் | : | சிலப்பதிகாரம் |
| 10. ஐயனரிதனார் | : | புறப்பொருள் வெண்பாமாலை |
| 11. கம்பர் | : | கம்பராமாயணம் |
| 12. கிருஷ்ணவேணி அம்மையார் | : | செம்பொருள் |
| 13. சிவப்பிரகாசர் | : | சீகாளத்திப் புராணம் |
| 14. சுப்பு செட்டியார், ந | : | சோழநாட்டுத் திருப்பதிகள் |
| 15. ” ” | : | பாண்டிநாட்டுத் திருப்பதிகள் |
| 16. ” ” | : | மலைநாட்டுத் திருப்பதிகள் |
| 17. திருமலை-திருப்பதி தேவஸ்தானம் | : | ஸ்ரீவேங்கடச சுப்ரபாதம் |

18. திருமூலர் : திருமந்திரம்
19. திருவள்ளுவர் : திருக்குறள்
20. தொல்காப்பியர் : தொல்காப்பியம் (நச்சினார்க்கினியர் உரை)
21. பகவத்கீதை
22. பத்மநாபன், இரா : திருவேங்கடவன் மாலை
23. பவணந்தி முனிவர் : நன்னூல் (சங்கரநமச்சிவாயர் உரை)
24. பாரதியார் : கவிதைகள்
25. பிங்கலந்தை நிகண்டு
26. பின்பழகிய பெருமாள் சீயர் : ஆறாயிரப்படி குருபரம்பரை
27. பிள்ளை உலகாசிரியர் : தத்துவத்திரயம்
28. பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் : அஷ்டப் பிரபந்தம்
29. பெருந்தேவனார் : பாரதம்
30. புருடோத்தமநாயுடு, பு.ரா : ஈட்டின் தமிழாக்கம்
31. ,, ,, : ஆசாரிய ஹிருதயம்
32. ,, ,, : ஸ்ரீவசனபூஷணம்
33. வீரராகவமுதலியார், முத்தமிழ்க்கவி : திருவேங்கடக் கலம்பகம்
34. வீரராகவ அய்யங்கார் : திருவேங்கடத் தலபுராணம்
35. Krishnaswami Iyenger, S. : A History of Tirupathi
36. Tamil Culture–Vol IX. 1 No. (June—March 1961)

# பின்னிணைப்பு-2

## பொருட் குறிப்பு அகராதி

[எண், பக்க எண்]

### அகர வரிசை

'அகண்ட வேள்வி' - 196
அகநானூறு - 32, 38, 41, 46, 51, 52, 74
அகப்பாட்டு - 33. 43, 45, 46, 49
அகம் - 6, 7, 8, 10, 12, 23, 33, 34, 35, 36, 37, 38, 41, 42, 43, 45, 46, 48, 49, 50, 51, 71, 74.
அகோபிலம் - 72
அண்ணங்கராச்சாரியார், பி. ப. : 277.
அநந்யார் ஹத்துவம் - 128, 254.
அந்தர்யாமித்துவம் - 201.
'அந்தாதித்' தொடர்பு - 213.
அபயகரம் - 268.
அமலனாதிபிரான் - 17.
அயிரி - 49, 53.
அய்யங்கார் - 208
அருணகிரியார் - 81, 267, 269.
அர்ச்சை - 200, 204.
அழகர் கலம்பகம் - 73.
அழகர் மலை - 72, 80.
அழகிய மணவாள தாசர் - 84, 150.
அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் - 138.
அழகிய மணவாளன் - 17.
அறத்தொடு நிலை - 134, 135, 161.
அனந்தபுரம் - 30.
அனந்தாழ்வான் - 144.
அஷ்டப் பிரபந்தம் - 150.
ஆசாரிய ஹிருதயம் - 124, 132.
ஆசிரிய மாலையுடையார் - 80.
ஆண்டாள் - 104.
ஆதனுங்கன் - 32, 39.
ஆத்திரையனார் - 39, 40.
இந்துப்பூர் - 47.

இரட்டையர் - 151.
இராகவய்யங்கார், மு. - 70, 244.
இராகு - 194.
இராசிமண்டலம் - 189.
இராமராசன், எஸ். கே. - 263, 268, 269, 272.
இராமாநுசர் - 61, 71, 143, 145.
இராவணன் - 142.
இராவான் - 143
இலேபாக்சி - 47.
இளங்கிரி - 60, 61, 63.
இளங்கோயில் - 62, 65, 66.
இளங்கோவடிகள் - 18, 21, 22, 75, 78, 79.
இளந்திரையன் - 42.
இறையனார் களவியல் - 130.
இறைவனின் ஐந்து நிலைகள் - 156.
ஈட்டாசிரியர் - 118, 122.
உடன் போக்கு - 135, 136.
உடையவர் - 68, 69, 243.
உஷாபி – 143.
உறையூர் - 14, 16
'ஊரும் பேரும்' - 1.
'ஊர்' - 182.
எட்டுத் தொகை - 32.
எம்பெருமான் திருமேனி – 198.
எருமை குடநாடு - 51, 52.
எருமை நாடு - 50.
எருமை வெளியனார் - 52.
ஏழுமலை – 3
ஏழுமலைகள் - 249.
ஏழுமலையான் - 264.
ஐங்குறு நூறு - 12.
ஐம்புலன் ஆசை – 166.
ஐயனாரிதனார் – 78, 79.
ஒட்டக்கூத்தர் - 15.
ஒருவழித் தணத்தல் – 135.
ஓங்கோல் - 48.


ககர வரிசை


கண்ணனார் – 5.
கடியலூர் உருத்திரங் கண்ணனார் – 38.
கணுபார்த்தி - 41.
'கதம்பம்' - 210.
கம்பநாடர் - 151.
கம்பநாடன் : 80, 88, 91.
கம்பராமாயணம் - 83, 137.
கர்நாடகம் – 49, 51.
கர்நாடக மாநிலம் - 50.
கர் நூல் – 29, 30.
கலம்பகம் - 210, 211.
'கலம்பகப் பயன்' - 213.
கலித்தொகை – 28, 29.
கல்லாடனார் - 35, 46.

கவுந்தியடிகள் - 14.
களப்பிரர் - 33.
கல்லில் ஆத்திரையனார் – 39.
கஜேந்திரன் - 209.
காமம் மிக்க கழிபடர் கிளவி - 101, 221.
காளத்தி - 30.
கிருஷ்ணசாமி அய்யங்கார், எஸ், (டாக்டர்) – 4, 12, 22, 29, 50.
கிருஷ்ணை - 31.
குட்ட நாட்டுத் திருப்புலியூர் – 134
குமரகுருபரர் – 149.
குலசேகரப் பெருமாள் - 63, 75, 78, 96, 238.
குலசேகராழ்வார் - 96.
'குலசேகரன்படி' – 100.
குறுந்தொகை - 12, 25, 28, 46.
குளோப் ஜாமூன் – 87.
கூடூர் - 38.
கைலாயகிரி - 194.
கோதண்டபாணி பிள்ளை, கே. - 18, 60.
கோயில் - 84.

சகர வரிசை

சங்க இலக்கியக் குறிப்பு - 5.
சங்க இலக்கியங்கள் - 2.
சங்க இலக்கியம் - 10.
சங்கப்பாடல் - 25.
சங்க கால வட வேங்கடம் - 55.
சங்க கால வேங்கடம் - 1, 2.
சடகோபர் , 75, 246.
சத்தியபாமை - 208.
சரம சுலோகம் - 109, 122, 126, 127, 283.
சரீர–சரீரி பாவனை 195.
சாத்தியோபாயம் - 130.
சாந்தீபினி முனிவர் - 217.
சாமிநாதய்யர், உ. வே. 249,
சிங்கார வேலன், ரெ. – 285.
சித்திரகூட மலை - 88, 91, 92,
சித்தோபாயம் – 130.
சிலப்பதிகாரம் - 5, 13, 21 28, 73.
சிவப்பிரகாச அடிகள் - 81, 149.
சிறுகாக்கைப் பாடினியார் - 31.
சிறுப்பாணாற்றுப்படை – 26.
சீகாளத்திப் புராணம் - 81.
சீநிவாசன் - 142, 152, 242.
சுவாமி தேசிகன் - 55, 119.
சூடிக்கொடுத்த சுடர்க்கொடி - 101.
சேட அரையன் - 252.
சேதுப் பிள்ளை, ரா. பி. - 1.
சேஷகிரி - 186, 248.
சேஷத்துவம் - 127.
சேஷாத்திரி - 249
சேஷி - 129.

சோழ நாட்டுத் திருப்பதிகள் – 137, 161.
சோழசிங்கபுரம் - 72.
சோளிங்கர் - 72.

ஞகர வரிசை

ஞானவஸ்தைகள் - 130.

தகர வரிசை

தசாவதாரம்—257
தட்சசீலம் - 42
ததிபாண்டன் - 244
தத்துவத்திரயம் – 86, 256
தலைவிப்பாசுரம் - 125
தாய்ப்பாசுரம் – 124
திம்மூரி – 215
திரிவிக்கிரமன் - 122
திருக்கச்சி – 161
திருக்கடன்தல்லை - 161
திருக்கூடிகை - 72
திருக்கண்ணபுரம் - 161
திருக்கண்ணமங்கை - 214
திருக்கண்ணமங்கை மாலை – 215
திருக்குறுங்குடி - 72, 160
திருச்சந்த விருத்தம் – 94
திருநறையூர் – 161
திருநாங்கூர் - 261
திருநாடு - 161
திருநீர்மலை – 72
திருப்பதி - 3, 13, 20, 30
திருப்பதிமலை - 48
திருப்பள்ளி எழுச்சி – 266
திருப்பாணாழ்வார் - 16
திருப்பாவை – 265
திருப்பாற்கடல் - 64, 161
திருப்புலியூர் - 125
திருப்புலியூர் மாயப்பிரான் - 135
திருப்புல்லாணி - 161
திருமதுரை - 109
திருமங்கை - 149
திருமங்கை மன்னன் - 78, 82
திருமங்கையாழ்வார் - 86, 87, 110, 116, 121,
123, 124, 173, 209, 250, 255, 287.
திருமந்திரம் - 59, 126, 129.
திருமலை - 3, 63, 84, 141.
திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தார் - 4.
திருமலையப்பன் - 90
திருமலைநம்பி - 67
திருமலை மான்மியம் - 259
திருமலையொழுகு - 66
திருமழிசைபிரான் - 160
திருமழிசையாழ்வார் – 93, 116, 250, 251
திருமாலிருஞ் சோலை - 72

திருமாலிருஞ் சோலை மலை - 64, 73, 161
திருமூலர் - 59.
திருமுழிக்களம் – 125.
திருமெய்யம் - 72
திருவட்டபுயகரம் - 161
திருவண் வண்டூர் - 132, 133
திருவரங்கம் - 15, 16, 19, 20
திருவரங்கத் தமுதனார் - 83
திருவரங்கப் பெருமான் - 125
திருவாய் மொழி - 56, 96, 117, 176, 206, 255, 250, 270.

திருவேங்கடத் தலபுராணம் - 69, 147
திருவேங்கடத்தந்தாதி - 70, 149, 152
திருவேங்கடத்தான் - 227
திருவேங்கடபுராணம் - 147
திருவேங்கடத்தின் பெருமை - 237
திருவேங்கட நாதனார் - 261
திருவேங்கடமலை - 142, 183, 204, 210, 218, 268,

திருவேங்கடம் - 1, 15, 60, 72, 84, 195, 219, 238, 259
திருவேங்கடமாலை - 149, 181
திருவேங்கடநாதன் பெருமை - 253
திருவேங்கட முடையானின் பெருமை- 197.
திருவேங்கட முடையான்- 210, 218, 223, 224, 236, 241, 242, 243, 245, 247, 263, 264, 268, 269, 273.

திரையன் – 6, 38, 42
திவ்வியகவி - 69, 91, 151, 154, 161, 165, 167, 169. 170, 171, 178, 191, 194, 201, 202, 203, 205, 206, 208, 244, 272.
துங்கபத்திரை - 31, 50.
துரைசாமிப்பிள்ளை, சு. அவ்வை - 41, 50.
துவயமந்திரம் - 123, 126, 127
தேசிகப் பிரபந்தம் - 55
தேவராச வள்ளல் - 248
தேவார மரபு-282
தேவாரம் - 123
தொண்டரடிப் பொடிகள் - 210.
தொண்டரடிப் பொடியாழ்வார் - 267, 274, 276, 279.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள் - 161.
தொண்டைமான் சக்கரவர்த்தி - 69, 217.
தொல்காப்பியம் - 12, 51, 148.
தொல்காப்பியர் - 6, 148, 267.
தோழிப் பாசுரம் - 125.


நகர வரிசை


நக்கீரர் பெருமான் 7. 2
நச்சினார்க்கினியர் - 80, 210.
நஞ்சீயர் - 118, 119.
நம்பெருமாஞ்-150 .
நம்மாழ்வாரின் தத்துவம்-219

நம்மாழ்வார் - 78, 81, 83, 86, 116, 120, 121, 123, 130, 173, 177, 182, 239, 243, 249, 268.
நலாந்தா - 42.
நளகூபர மணிக்கிரீவர்கள் - 112.
நற்றிணை - 28, 46.
நன்னூல் – 52.
நாதமுனிகள் – 151, 152.
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - 83.
நாலாயிரம் - 123.
நியாஸதிலகம் - 119.
நீர்ப்பேர் - 39.
நுங்கன் – 41, 48.
நுங்கராயர் - 41
நைச்சியானுசந்தானம் - 254.

பகர வரிசை

பகவத் காமம் - 221
பகவத் கீதை - 109.
பகவத்விஷய காமம் – 130
பக்தர்களைக் காத்தல் – 204
பக்தி அவியல் - 58.
பக்தி இயக்கம் - 56, 57.
பக்தி உழவன் - 160.
பக்தி சாரர் - 93, 160.
பக்திச் சுவை - 237
படிக்காசுப் புலவர் - 151.
பட்டினப்பாலை - 5, 26.
பதினெண் புராணம் - 258.
பத்துப்பாட்டு - 5.
பத்மநாபன், இரா - 276, 277, 278.
பரகால நாயகி - 124, 134.
பரகாலர் - 124.
பரமபதம் - 198.
பராங்குசநாயகி - 124, 134.
பராங்குசர் - 124.
பராசர பட்டர் - 118, 137.
பரிபாடல் - 24, 73, 74.
பவத்திரி – 38, 41.
பழனியப்ப பிள்ளை, தி. பொ. 261
பனம்பாரனுர் – 47.
பன்னிரண்டு இராசிகள் - 161.
பண்டி நாட்டுத் திருப்பதிகள் - 161.
பாண் பெருமாள் – 17.
பாதவகுப்பு – 154, 155.
பாரதந்திரியம் - 127.
பாரதம் பாடிய பெருந்தேவனுர் - 79
பாரதியார் - 2, 11, 277.
பாரிசாதமரம் – 208.
பிங்கலந்தை - 208
பிரணவம் - 127, 129.
பிரஜ்ஞாவஸ்தைகள் - 130.
பிள்ளை அமுதனுர் - 137.
பிள்ளைத் தமிழ் – 270.

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் - 149, 209, 244, 273.
பின்பழகிய பெருமாள் சீயர் – 19, 67.
பீமன் - 218.
புருடோத்தம நாயுடு - 64, 271.
புருஷகார பூதை - 279.
புருஷகாரம் - 264.
புல்லி - 9, 32, 34, 37, 39, 42, 43, 44, 45.
புறநானூறு - 32, 52.
புறப்பாட்டு - 24, 27.
புறப்பொருள் வெண்பாமாலை - 5, 13, 14.
புறம் - 24, 26, 27, 40.
பூதத்தாழ்வார் - 60, 61,63,86, 91, 172,173,201
பூம்புகார்—17
பெரியவாச்சான்பிள்ளை - 118, 235
பெரியாழ்வார்-66,78,96,97. 173,175,205, 235.
பெருந்தேவனார் பாரதம் - 80
பெரும்பாணாற்றுப்படை—38, 39, 210
பெருமாள் கோவில் - 80, 84.
பெருமாள் திருமொழி - 101.
பேயாழ்வார் - 67, 82, 89 92, 93, 201.
பொய்கையாழ்வார்-68, 89, 109, 116, 173, 176
பொய்கையார் - 78

மகர வரிசை
மகா மேரு - 194.
மகாராயர் - 41.
மகிஷாசுரனார் - 51
மணவாள மாமுனி - 274
மணிவாசகப் பெருமான் - 274, 275, 276.
மதுரைக் கணக்காயனார் - 34.
மதுரைக் காஞ்சி - 74
மலைநாட்டுத் திருப்பதிகள் - 133, 135
மனோன்மணீய நாடகம் – 273
மாங்காட்டு மறையோன்-14,17, 20, 21, 22, 78
மாணிக்கவாசகர் . 279
மாமூலனார் - 8, 9, 35, 36, 38.
"மாலவன் குன்றம்" - 11
'மாலை' - 681
மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மகாவித்துவான் -149, 248, 259.
முதலாழ்வார்கள் - 48, 85, 209.
முதியன் - 40
முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார் - 101
முமுட்சுகள் - 126
முமுட்சுப்படி - 154, 265
மைசூர் - 51
மொழி பெயர்தேஎம் - 12

ர-ல: வரிசை
ரஸகுல்லா - 89
லாஸரஸ், தமிழ்ப் பேராசிரியர் - 1
லாஸரஸ் பெருமாட்டி - 1
லீலா விபூதி – 274

வகர வரிசை

வடவேங்கடமலை - 7
வடவேங்கடம் - 2, 3, 5, 11, 12, 13, 14, 18, 55, 47, 60.
வராகபுராணம் . 260
விசாகப்பட்டினம் - 30
விண்மீன் மண்டலம் - 189
'விருந்து' - 148, 267
வில்லிபாரதம் - 142
வில்லிபுத்தூரார் - 143
விவேக சிந்தாமணி - 58
வீரச்செயல்கள் - 206
வீரநுங்கன் - 41
வீரராகவ சுவாமி அய்யங்கார் - 259
வீரராகவ முதலியார், அந்தகக்கவி - 214
,, முத்தமிழ்க்கவி - 214
வெற்றிச் சிறப்புகள் - 206
வேங்கடத்து அப்பனின் சீர்மை - 240
வேங்கட மாலை - 10, 186, 187, 207.
வேங்கடம் - 13, 14, 27, 48, 55, 56, 61.
வேங்கடத்துமால் - 252.
வேங்கடாசல மான்மியம் - 259.
வேங்கடராஜுலு ரெட்டியார், வே - 275
வைணவ தத்துவம் - 197, 216
ஸ்ரீவசன பூஷணம் - 64, 71
ஸ்ரீவத்சம் - 163
க்ஷேத்திர பாலகர் - 73

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 30 | 8 | கர்ஞடகம் | கர்நாடகம் |
| 43 | 24 | வரட்சி | வறட்சி |
| 45 | 21 | வரண்டி | வறண்டு |
| 49 | 8 | ஓர் அரசுன் | ஓர் அரசன் |
| 78 | 5 | ஐயரிதஞர் | ஐயஞரிதஞர் |
| 79 | 24 | ஐயரிதஞர் | ஐயஞரிதஞர் |
| 82 | 7 | கிவபிராஞுக்கு | சிவபிராஞுக்கு |
| 132 | 4 | திருவண்டூர் | திருவண் வண்டூர் |
| 134 | 23 | மாயற்கல்லால்க் | மாயற் கல்லால் |
| 141 | 13 | உரங்கும் | உறங்கும் |
| 152 | 15 | தனியன(அடிக்குறிப்பு) | தனியன் |
| 197 | 19 | நூலிள்ள | நூலிலுள்ள |
| 203 | 15 | பத்கி—பக்து | பத்து—பக்தி |
| 206 | 160 | எண் உள்ள அடிக் குறிப்பு 161ல் வர வேண்டியது | |
| 211 | 9 | ஆறுகுணங்களைக் | ஆறுகுணங்களை 187 |

# டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

| | |
|---|---|
| தமிழ் பயிற்றும் முறை (மூன்றும் பதிப்பு) | (அச்சில்) |
| அறிவியல் பயிற்றும் முறை (இரண்டாம் பதிப்பு) | 6—00 |
| கல்வி உளவியல் | 6—00 |
| யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல் | 10—00 |

**இலக்கியம் :**

| | |
|---|---|
| கவிஞன் உள்ளம் | (அச்சில் |
| கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி | (அச்சில்) |
| காலமும் கவிஞர்களும் | 3—00 |
| காதல் ஓவியங்கள் | (அச்சில்) |
| அறிவுக்கு விருந்து | 3—50) |
| முத்தொள்ளாயிர விளக்கம் | 7—00 |
| பரணிப் பொழிவுகள் | 4—00 |
| மலைநாட்டுத் திருப்பதிகள் | 5—00 |
| தொண்டை நாட்டுத் திருப்பதிகள் | 6—00 |
| பாண்டி நாட்டுத் திருப்பதிகள் | (அச்சில்) |
| காந்தியடிகள் நெஞ்சு விடுதூது (பதிப்பு) | (அச்சில்) |
| திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் | 12—000 |

**திறனாய்வு :**

| | |
|---|---|
| கவிதையனுபவம் | 10—00 |
| தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை | 14—5 |
| அகத்திணைக் கொள்கைகள் | (அச்சில்) |

அறிவியல் :

| | |
|---|---|
| மானிட உடல் | 5—00 |
| அணுவின் ஆக்கம் | 9—00 |
| இளைஞர் வானொலி | 3—00 |
| அதிசய மின்னணு | 3—00 |
| இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது.) | 3—00 |
| இளைஞர் தொலைக்காட்சி | 3—00 |
| நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது) | 3—00 |
| இல்லற நெறி | 15—00 |
| அணுக்கரு பௌதிகம் (சென்னைப் பல்கலைக் கழகப் பரிசு பெற்றது) | 7—00 |
| அறிவியல் விருந்து | 3—50 |
| அம்புலிப் பயணம் | 4—50 |
| தொலை உலகச் செலவு | (அச்சில்) |
| வாழையடி வாழை | (அச்சில்) |

குறிப்பு: சோழநாட்டுத் திருப்பதிகள் விரைவில் வெளிவரும்.